வெளியீடு—28-10-1980] [Issued—13-1-1981

85/81
1516
26 பிப் 1981

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வியாழக்கிழமை 1980 ஜூலை 17 Thursday 17th July 1980
தொகுதி IV—எண் 3 — Volume IV—No.3.

©
தமிழ்நாடு அரசு—GOVERNMENT OF TAMIL NADU
1980

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort St. George, Madras-600 009

விலை 3.15 காசுகள்] [Price 3.15 Paise

D I
V211,31 N80
N81-4-331
23088

## உள்ளடக்கம்

**17–7–1980**

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள் .. 517—537
   உடுக்குறியிட்ட வினாக்கள்

2. ஒத்திவைப்புத் தீர்மானம் .. 537—548
   அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களது வேலை நிறுத்தம்

3. கவன ஈர்ப்புகள் .. 548—550
   (அ) அடையார் மல்லிகைப்பூ நகரில் ஏற்பட்ட தீ விபத்து
   (ஆ) வடாற்காடு மாவட்டத்தில் அரசாங்கக் கடன் வசூலில் கெடுபிடி 550—552

4. ஒழுங்குப் பிரச்னை ...
   உறுப்பினர்களது விடுதி அறைகளில் ஊட்டப் பெற்ற விதி முறைகள் .. 552—557

5. தகவல் கோரல் ..
   (அ) உறுப்பினர் கொடுத்த அறிவிப்பு .. 557
   (ஆ) மானியக் கோரிக்கைகள் மீதான கொள்கை குறிப்புகள் அனுப்பி வைக்கப்பெறுவது .. 557—558

6. அரசினர் தீர்மானங்கள் ..
   (அ) மதிப்பீட்டுக் குழு—தேர்தல் .. 558
   (ஆ) பொதுக் கணக்குக் குழு—தேர்தல் .. 558—559
   (இ) பொது நிறுவனங்கள் குழு—தேர்தல் .. 559
   (ஈ) உரிமைக் குழு—தேர்தல் .. 559
   (உ) அவைக் குழு—தேர்தல் .. 560

7. அறிவிப்பு
   பேரவைக் குழுக்கள்—தேர்தல் நடைமுறை. 560

8. வரவு—செலவுத் திட்டம் 1980–81 வாக்கெடுப்பு (தொடர்ச்சி)
   (அ) கோரிக்கை எண் 26—கைத்தறியும், நெசவுத் தொழிலும் 561—562
   (ஆ) கோரிக்கை எண் 27—கதர் 562—563
   மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன் 563, 619—626
   திரு. து. புருஷோத்தமன் 563—569
   திரு. ஜி. கிருஷ்ணராஜ் 569—571
   திரு. பி.எம். தங்கவேல்ராஜ் 571—575

| | பக்கங்கள் |
|---|---|
| திரு. சி. கோபால் | 575—579 |
| திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் | 579—586 |
| திரு. ப. வெங்கடசுப்பிரமணியம் | 586—589 |
| திரு. ஏ.சி. சண்முகம் | 589—593 |
| திரு. குமரி அனந்தன் | 593—599 |
| திரு. எம். சின்னசாமி | 599—603 |
| திரு. தி.கா. நல்லப்பன் | 603—605 |
| திரு. ஏ. சாகுல் ஹமீது | 605—609 |
| திரு. ஆ. வெள்ளைச்சாமி | 609—611 |
| திரு. துரைமுருகன் | 611—619 |

9. அரசினர் சட்ட முன்வடிகள்—

(அ) நிலச்சீர் திருத்தத்தங்கள், (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்த சட்டமுன் 1980, (சட்ட மன்றப் பேரவை முன் வடிவு எண். 19/1980)

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. எஸ். டி. சோம சுந்தரம் .. .. .. | 627<br>630—632 |
| திரு. பொ. உத்திராபதி ... | 627—628 |
| திரு. எம். செல்லமுத்து ... | 628—629 |
| திரு. துரைமுருகன் | 629—630 |

(ஆ) இந்து சமய அறக்கட்டளைகள் (திருத்தம்- சிறப்பு விதிதுறைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1980 (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண்-20/1980)

| | |
|---|---|
| மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் .. .. | 632<br>637 639 |
| திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் .. .. | 632 |
| திரு. நா. சுந்தரராஜ் .. ... | 633 |
| திரு. துரைமுருகன் .. | 633—637 |





| | பக்கங்கள் |
|---|---|
| (இ) சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்ட முன்வடிவு, 1980 (எண்-97/1980) ... | |
| மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ... | 640 651<br>653—654 |
| திரு. ப. பொன்னுரங்கம் ... | 640—642 |
| திரு. எல். இளையபெருமாள் ... | 642—644 |
| திரு. என். வரதராஜன் ... | 644 |
| திரு. பொ. உத்திராபதி ... | 645 |
| டாக்டர் கே. சௌரிராஜன் ... | 645—646 |
| திரு. அ. ரகுமான்கான் ... ... | 646—647 |
| 10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் ... | 656 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## வியாழக்கிழமை, 1980 ஜூலை 17

சென்னை செயினட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

எந்தப் பொருள் எந்தக் குணத்தை உடையதாகத் தோன்றினாலும் அந்தப் பொருளின் உண்மையான தன்மையை அறிந்து கொள்வது அறிவுடைமையாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரித்தல்

*வினா எண் 11— திரு. என். எஸ். வி. சித்தன், திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்றினைத் தமிழ்நாடு மின்சார வாரியம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :**

(அ) ஆம்.

(ஆ) அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள ஜெனரல் எலக்டிரிக் நிறுவனத்தாரால் தமிழ்நாட்டின் கடற்கரையில் ஒரு 25 மெகாவாட் கடல் அனல் மின்மாற்று சாதனம் அமைப்பதற்கு திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான செயற்குறிப்பினை 1979 அக்டோபர் திங்களில் தமிழ்நாடு மின்வாரியம் மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மனசாரப் பற்றாக்குறை மிகுந்திருக்கிற தமிழகத்திலே எப்படியாவது மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்ற முயற்சிகள் எடுக்கப்படுவதன் காரணமாக இதுபோன்று கடல் அலையிலிருந்தும், சூரிய ஒளியிலிருந்தும் மின்சாரம் தயாரிக்கப்படுகிற முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். உலகத்தின் வேறு எந்த நாட்டிலேயாவது கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கிற திட்டம் வெற்றிபெற்றிருக்கிறதா? நாம் அதைச் செய்வதற்கு எவ்வளவு செலவு ஆகும்? இந்தத் திட்டம் எப்பொழுது சாத்தியமாகும் என்ற விவரங்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கடலிலே உள்ள வெப்பத்தின் ஏறறத்தாழ்வைப் பயன்படுத்தி மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான செயற்குறிப்பு இருக்கிறது. கடல் அலையிலிருந்து மின்சாரம் பெறுவது அல்ல. அமெரிக்கா, ஜப்பான், பிரான்ஸ் போன்ற நாடுகளிலே இதைத் தீவிரமாக ஆராய்ந்து சோதனைகளையும் நடத்தி வருகிறார்கள். இந்தத் திட்டத்திற்கு ரூபாய் 100 கோடி செலவாகும். அனுமதி தர வேண்டுமென்று மத்திய அரசுக்கு நாம் எழுதியிருக்கிறோம். இன்னும் பதில் வரவில்லை.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கடல் அலையின தட்பவெட்ப வேறுபாடுகளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதுதான் இந்தத் திட்டம் என்று சொன்னதன் காரணமாக, அதோடு தொடர்புடைய ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். மூலக் கேள்வி கடல் அலையில் இருந்து மின் சாரம் தயாரிக்கும் திட்டம்பற்றியது என்பதால் கேட்கிறேன், கடல் அலைகள் பாறைகளிலே மோதுவதால் உண்டாகிற சக்தி அல்லது கடல் அலையை ஒரு இடத்திலிருந்து கீழ்நோக்கிச் செலுத்துவதன் மூலமாக உண்டாகிற சக்தி—உதாரணமாகச் சொல்லப் போனால் கடலிலே இருக்கிற தண்ணீரை அதன் பக்கத்திலே ஒரு பெரிய பள்ளத்திலே விழச்செய்து, அப்படி விழுகிறபோது அதன் மூலமாக ஒரு சக்கரத்தைச் சுழலச் செய்து அந்த சுழற்சி மூலமாக மிசாரம் தயாரிக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அத்தகைய திட்டம் எதுவும் இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் மின்சாரப் பற்றாக்குறையைப் போக்குகிற வகையிலே சிறு சிறு அளவுக்கு மாட்டுச் சாணத்திலிருந்து மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு ஒரு முறை இருந்துவருகிறது....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்கிற திட்டம் பற்றியது. மின்சாரம் பற்றிப் பேசுவது என்றால் நிறையப் பேசிக் கொண்டிருக்கலாம். மாட்டுச் சாணத்திலிருந்து கடல் அலைக்கு தாங்கள் வாருங்கள்.

திரு என். கிட்டப்பா : அது இலகுவாக கிடைக்கிறதே....

மாண்புமிக பேரவைக் தலைவர் : கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிப்பது பற்றிய கேள்வியைக் கேட்டு அதற்கு பதில் அமைச்சர் சொல்லியிருக்கிறார், அதையொட்டியே தான் கேள்வி கேட்கவேண்டும், மின்சாரம் தயாரிப்பது பற்றி பூராவும் விவாதித்துக் கொண்டிருக்க முடியாது.

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, கடல் அலையிலிருந்து மின்சாரம் கிடைப்பதற்கான வாய்ப்பு வசதிகளை ஆராயும் முன்னதாக அணுவின் சக்தியைப் பயன்படுத்தி மின்





மின்சாரம் பெறுகின்ற முறையிலே உள்ள கல்பாக்கம் திட்டம் பூர்த்தியடையாத நிலையிலே உள்ளதே, அதை நிறைவேற்றக் கூடாதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான திட்டத்திற்கும் கல்பாக்கத்திற்கும் என்ன சம்பந்தம்?

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, இப்போது இருக்கக்கூடிய மின்சார உற்பத்தி ஹைடல் ஸ்கீம் என்றும், தர்மல் ஸ்கீம் என்றும் இருக்கிறது, மூன்றாவதாக கடல் அலை மூலமாக தயாரிப்பதற்கான ஸ்கீம் அனுப்பப்பட்டதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

100 கோடி ரூபாய் ஆகும் என்று சொன்னார்கள். நான் தெரிந்துகொள்ள விரும்புவது, அதனுடைய எகனாமிக்ஸ் பற்றியெல்லாம் ஒர்க் அவுட் செய்திருப்பார்கள், ஹைடலுக்கும், தெர்மலுக்கும், இப்பொழுது கொடுத்திருக்கும் புரப்போசலுக்கும் யூனிட்டிற்கான காசு அதிகமாகுமா? அல்லது குறையுமா? இது இலாபகரமாக இருக்குமா என்று கம்பேர் செய்த விவரம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்தத் திட்டம ஒரு ஆராய்ச்சியை அடிப்படையாகக் கொண்ட திட்டம். இது இன்னும் வணிக ரீதியாகப் பயன்படுத்தக்கூடிய அளவிற்கு வளர்ச்சி பெறவில்லை. இப்பொழுதுள்ள நிலவரப்படி இதன் விலை கூடுதலாகத்தான் இருக்கும். ஒரு கிலோவாட் நீர் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு 7,000 ரூபாயிலிருந்து 9,000 ரூபாய் செலவாகும்; அனல் மின்சாரத்திற்கு 4,500 ரூபாயிலிருந்து 6,000 ரூபாய் வரையில் செலவாகும்; ஆனால் இதைப் பொறுத்த வரையில் 25,000 ரூபாயிலிருந்து 40,000 ரூபாய் வரையில் செலவாகும். ஏனென்றால் இது ஆராய்ச்சி அடிப்படையில் இருக்கிறதே தவிர, வணிக ரீதியில் வளரவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, கடலலையில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு 100 கோடி ரூபாய் செலவாகும் என்று திட்டமிடப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்தார்கள். இந்த 100 கோடி ரூபாயில் மாநில அரசின் பங்கு எவ்வளவு இருக்கும் என்று அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 100 கோடி ரூபாய் திட்டம் என்று நாம் போடுவோம். திட்ட ஒதுக்கீடு என்ற வகையில் ஆண்டுத் திட்டம் வரையறுக்கும் பொழுது மத்திய அரசு மொத்தமாக நிதியைத் தருகிறார்கள். இதை மாநில அரசு வாங்கி, எந்த அளவிற்கு மின்சார வாரியத்திற்கு உதவி செய்ய முடியுமோ அதைச் செய்கிறார்கள்

[1980 ஜூலை 17

ஒவ்வொரு திட்டத்திற்கும் மாநில அரசு எவ்வளவு கொடுக்கிறது மத்திய அரசு எவ்வளவு கொடுக்கிறது என்று கணக்கிட முடியாது. இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக ஆக்கிவிட்டால் நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. ஏனென்றால், சூரிய வெப்பத்தைக் கடல் பெற்றுக்கொண்டு, அந்த வெப்பத்தைச் சக்தியாக வைத்துக்கொள்கிறது. பூமியிலே 100—க்கு 70 பங்கு கடல். தமிழகத்தைப் பொறுத்தவரையில் நீண்ட கடற்கரை இருக்கிறது. வெப்ப சக்தியை மின்சார சக்தியாக மாற்றும் முயற்சி வெற்றி பெற்றுவிட்டால், தமிழகத்தை பொறுத்தவரையில் நீர் மின்சாரத்திற்கு நிறைய வாய்ப்பில்லாத சூழ்நிலையில், நிலக்கரியையும் முழு அளவிற்குத் திட்டமிட்டபடி பயன்படுத்த மு யாத சூழ்நிலையில், இது நல்லவாய்ப்பாக இருக்கும்.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, கடல் அலையிலேயிருந்து கடல் நீரிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் முறை இந்தியக் துணைக்கண்டத்தில் வேறு எந்த மாநிலத்திலேயாவது முயற்சி செய்யப்பட்டுள்ளதா? ஆமெனில் அதன் விவரங்கள் என்ன? இப்படிப்பட்ட ஒரு சக்தியை முதலில் கண்டுபிடித்தவர்கள் யார் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, உலகத்திலேயே வளர்ந்த சில நாடுகள்தான் இந்த முறையை ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். இந்தியத் துணைக்கண்டத்தில் என்றும்போல் தமிழகம்தான் வழிகாட்டி.

திரு. இல. பலராமன்: தலைவரவர்களே, இந்த ஆராய்ச்சி புதிய முறையாக இருந்தாலும், தமிழகத்திலுள்ள கடலோரப் பகுதிகளில் எங்கெங்கு சாத்தியம் என்று அறிவிப்பதோடு, இந்த மின்சார உற்பத்தி செய்ய நம்முடைய நாட்டு விஞ்ஞானிகள் மட்டும் போதுமா அல்லது அயல் நாட்டு உதவியும் தேவைப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே' அயல் நாட்டு உதவி நிரம்பத் தேவைப்படுகிறது. இப்படிப்பட்ட மின் உற்பத்திக்கு கடலில் மேல்மட்டத்தில் 26 டிகிரி சென்டிகிரேட் டெம்பரேச்சர் இருக்கவேண்டும். அடிமட்டத்தில் 6 டிகிரி சென்டிகிரேட் டெம்பரேச்சர் இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்த வெப்பத்தைப் பயன்படுத்தமுடியும். இதை, நம்முடைய தமிழகத்தின் கடற்கரையைப் பொறுத்தவரையில், மரக்காணம், கடலூர், குலசேகரப்பட்டணம் ஆகிய மூன்று இடங்கள் பொருத்தமானவை என்று தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவரவர்களே, இந்த திட்டத்திற்கு மத்திய அரசு மறுத்தால் தமிழக அரசே தானே தன்னிச்சையாகத் தொடங்குவதற்கு வழிவகை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1980 ஜூலை 17]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசு மறுத்தால் என்று சொல்லவேண்டிய நிலை இல்லை. ஏனென்றால், ''ஜெனரல் எலக்டிரிக் கம்பெனி''—யைப் பொறுத்தவரையில் அவர்கள்தான் இந்தத் திட்டத்தை அமெரிக்காவில் நடத்துகிறார்கள். ராபர்ட் எ. ஹிண்ட்லே என்பவர் 31—1—80 அன்று மத்திய அரசோடு இதுபற்றி, அவர்கள் அழைப்பின் பேரில் வந்து பேசியிருக்கிறார்கள். மத்திய அரசு சாதகமாகவே முடிவெடுக்கும் என்று நம்புகிறோம். மத்திய அரசு முடியாது என்று சொல்லிவிட்டால் நாம் இதை நிறைவேற்ற முடியாது. ஏனென்றால் 30 இலட்சம் ரூபாய் அன்னியச் செலாவணி ஆகும். அன்னியச் செலாவணியைத் தரவேண்டியது மத்திய அரசு.

[முற்பகல் 9-10]

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, நீண்ட நாட்களாக கடல் அலையிலிருந்து மின்சாரம் எடுப்பதைப்பற்றி தமிழகத்தில் சொல்லிக்கொண்டு வரப்பட்டது. இப்பொழுது இலாபகரமாக அந்தத் திட்டம் இருந்தால், அதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ள முயற்சிக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, குழந்தை பிறக்கட்டும், அதற்குப் பிறகு பெயர் வைக்கலாம்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சார். இந்தத்திட்டம் உலகத்திலே இன்னும் பரிசீலனையிலேதான இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எந்த நாட்டிலேயும் இது வெற்றிகரமாக நடைபெறுவதாகச் சொல்லவில்லை. அப்படி மற்ற 'அட்வான்ஸ்ட் நேஷன்ஸ்' என்று தொழில் துறையிலே, விஞ்ஞான ரீதியிலே உயர்ந்துள்ள நாடுகளே அதைக் கைக்கொள்ளாத நிலையில் நாம் ஏன் இதற்காக ரூ. 100 கோடி செலவு செய்யும் மிகப் பெரிய திட்டத்திலே இறங்க வேண்டும் ? என்னுடைய கேள்வியினுடைய முதல் பகுதி இது.

இரண்டாவது, குமரி அனந்தன் அவர்கள் கேட்ட அந்தக் கேள்வியை ஒட்டியது இது. கன்னியாகுமரிக்குத் தெற்கே, வங்காள விரிகுடாக் கடலும், அரபிக் கடலும் கலக்கின்ற இடத்தில், அடிக்கடி தண்ணீர் There is heavy water current within the sea—

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வங்காள விரிகுடா கடலும், இந்துமகா சமுத்திரமும், அரபிக்கடலும் கலக்கிற இடத்தில்......

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ஆம். கன்னியாகுமரிக்குத் தெற்குப் பகுதியில், அந்த மூன்று கடலும் கலக்கின்ற பகுதியில், மிக அதிகமான வேகத்தில், மிக அதிகமான அழுத்தத்தில் வ்வொரு சீசனுக்கும் சீசனுக்கும்—சீசன்—தண்ணீர் ஒவ்வொரு

பகுதிக்கும் அடித்துச் செல்லப்படுவதால் அந்த 'கரன்ட்' உள்ள பகுதியில் 'டர்பைனை' உள்ளே 'எரக்ஷன்' செய்தால், அதிலிருந்து மின்சாரம் தயாரிக்க லாம் என்று திரு. அப்பாதுரை, மின்சார வாரிய சேர்மனாக இருந்த சமயத்திலே, அது சம்பந்தமாக ஒரு ஆய்வு நடத்தியதாக பத்திரிகையிலே பார்த்தேன். அப்படி ஆய்வு நடத்தியது ஏதாவது அமைச்சருக்குத் தெரியுமா ? அதுபற்றிய விளக்கத்தை அமைச்சரவர்கள் சபைக்குத் தர முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, வளர்ந்த நாடுகளிலே இது இன்னும் ஆராய்ச்சி அடிப்படையிலே இருக்கிறது. நாம் ஏன் இதை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டார்கள். வளர்ந்த நாடுகளில் சில சின்ன யூனிட்டுகள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. நாம் ஏன் இதை மேற்கொள்ள வேண்டுமென்றால், தேவையின் அடிப்படையிலே அதை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையிலே வேறு எந்த வழியும் இல்லை என்பதாலே பல்வேறு முயற்சிகளை நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது,

கடல் அலையிலிருந்து மின்சாரம் தயாரிக்க ஏற்கனவே ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள் தனிக் கேள்வி போட்டால் தகவல் தரலாம்.

திருவில்லிப்புத்தூர் நாச்சியார் கோயில் திருப்பணி

* வினா எண் 12—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவில்லிப்புத்தூர் நாச்சியார்கோயிலில் திருப்பணி மேற்கொள்ளும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம், வீரப்பன் :

(அ) ஆம்.

(ஆ) அருள்மிகு நாச்சியார் கோயில் திருப்பணிக்காக இது வரை ரூ. 2,99,685.76 மதிப்புள்ள வேலைகள் பொதுப்பணித் துறையால் செய்து முடிக்கப்பட்டுள்ளன. இத்திருப்பணியினை முழுமையாக செய்து முடிக்க மேலும் ரூ. 9,40,000 தேவைப் படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கூடிய விரைவில் திருப்பணிக் குழு ஒன்றை நிறுவவும், ஏனைய திருப்பணி வேலைகளைச் செய்து முடிக்கவும் அறநிலையத் துறை ஆணையாளருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் திருப்பணி வேலைக்காக ஒதுக்கிய தொகைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது ராஜகோபுரம், 196 அடி உள்ளது. அதைப் பார்த்தாலே பாவம் தீரும் என்று சொல்வார்கள்......



மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : கேள்விதான். அப்படிப்பட்ட கோபுரம். இது வைஷ்ணவ கோயில் கோபுரமாக இருக்கிற காரணத்தால், திருப்பணிக்குச் செயற்குறிப்புகள் போடப்பட்டு எடுத்துக் கொள்ளப்படாமலிருக்கிறது. (குறுக்கீடு) இந்தக் கோவிலுடைய கோபுரத்தின் அடிச்சுவர்கள் இற்றுப் போய் கீழே விழும் தருவாயில், ஆபத்தான நிலையில் இருக்கிறது. அங்கிருந்த மக்கள் எல்லாம் பயந்து போய், மேற்கு மாம்பலத்திற்குக் குடி வந்து விட்டார்கள். பக்கத்திலே யாவரும் போவது கிடையாது. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்று சொல்வார்கள். இப்பொழுது கோயில் இருக்கும் ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற நிலை வந்துவிட்டது. ஆகவே, அமைச்சரவர்கள் உடனே, ஃபோன் மூலம் உத்தரவுகள் பிறப்பித்து, அதனைக் கவனிக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருப்பணி வேலைகளுக்கு 1964-லே திட்டமிடப்பட்டு, 1969-லே ஆணை பிறப்பிக்கப்பட்டு, இப்பொழுது தான் அந்தக் கோயிலினுடைய அஸ்திவாரத்தைப் பலப்படுத்துகிற வேலை முடிந்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் பயப்படுவது போலில்லாமல், கோயிலினுடைய அஸ்திவாரம் பலப்படுத்தப்பட்டு விட்டதால், கோபுரத்திற்கு இனிமேல் ஆபத்து ஒன்றும் இல்லை. மற்ற திருப்பணிகளை எடுத்து நடத்துவதற்கான காரியங்களில் அறநிலையத் துறை இனிமேல் ஈடுபடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான் : பேரவைத் தலைவர் அவர்களே, பல கிராமங்களில், பெரிய பெரிய பழைய கோவில்கள் எல்லாம் இடிந்த நிலையிலே இருக்கின்றன. அதற்கெல்லாம் திருப்பணி செய்யவேண்டும் என்று அறநிலையத் துறையினருக்கு அந்தக் கிராமத்து மக்கள் அப்ளிகேஷன் கொடுத்தால் அந்தத் திருப்பணிக்கு அரசாங்கம் எவ்வளவு பணம் ஒதுக்கும் என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத ஒன்று என்றாலும், பொதுவான கருத்தைத் தெரிவிக்கிறேன். கிராம கோவில்களுக்கு ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கலாம் என்ற விதி உருவாக்கப் பட்டு, அது மேலும் அதிகம் ஆக்கப்படவேண்டும் என்ற வேண்டுகோள் அறநிலையத் துறைக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அறநிலையத் துறை அதைப் பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே திரு. தாமரைக்கனி அவர்கள் கேட்ட கேள்வியைப் போலவே நானும் திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி கோவில் திருப்பணியைப் பற்றிக் கேட்டிருந்தேன். அது இதில் இடம் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி இடம் பெறவில்லை என்பது பற்றி எல்லாம் இங்கே பேசக்கூடாது. மூலக் கேள்வியை ஒட்டி ஏதாவது இருந்தால் கேளுங்கள்.

திரு. கெ. சொக்கலிங்கம் : இதேபோன்றுதான். கடந்த 2 ஆண்டுகளாக, திருப்பணி வேலைத் துவக்கப்பட்டு அந்த வேலை பாதியிலேயே நிறுத்தப்பட்டிருக்கிறது. இதுபற்றி சென்ற கூட்டத்திலேயே சொல்லி இருக்கிறேன். ராஜகோபுரம் முடிவடையவில்லை. எனவே அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து அந்த ராஜகோபுரத்தை முடித்துத் தருவார்களா, கும்பாபிஷேகத்தையும் நடத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூர் நாச்சியார் கோவில் திருப்பணிக்கு குறித்த விவரங்கள் என் கையிலே இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் திருப்போரூர் கோவிலைப் பற்றிக் கேட்கிறார்கள். அது பற்றித் தனியாக கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துக் கொடுக்கப்படும்.

(திரு. இல. பலராமன் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேட்கப்போவது திருவில்லிபுத்தூர் கோவிலைப் பற்றியதா அல்லது வடார்க்காடு மாவட்டத்தைப் பற்றியதா? இப்படியே கேட்டுக் கொண்டு போனால் தமிழ்நாடு முழுவதும் வந்து விடும்.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, அமைச்சர் பதில் சொல்லும்போது சிறிய கோவில்களுக்கு ஆயிரம் ரூபாய் வழங்குவதாகச் சொன்னார்கள். அந்தத் தொகை, அறநிலையத் துறையால் ஒப்புக்கொள்ளப்பட்ட அந்தக் கோவில்களுக்கு மட்டுமா, அல்லது தனிப்பட்ட ஏழை எளிய மக்கள் தெய்வ பக்தியின் காரணமாக ஏற்படுத்தி வழங்குகின்ற அந்தக் கோவில்களுக்கும் கொடுக்கப்படுமா என்பதை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொல்லிவிட்டேன். இது மூலக்கேள்விக்கு சம்பந்தம் இல்லாத கேள்வி என்று. அவர்கள் தனியாக இது பற்றிக் கேள்வியைக் கேட்டால், விவரத்தை சேகரித்துத் தர வசதியாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். என்றாலும், ஏற்கனவே இருந்து இடிந்து போய் இருக்கிற கிராமக் கோவில்களுக்கும் தருவது என்று அறநிலையத் துறை முடிவெடுத்திருக்கிறது.



## வர்ச நாட்டிற்கு அருகில் கண்ணகிக்கு கோயில் கட்டும் திட்டம்.

* வினா எண் 13.—திரு. இரா. தாமரைக்கனி, திரு. ஆர். டி. கோபாலன், திரு. ப. நெடுமாறன்: மாண்புமிகு செய்தி—அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரை மாவட்டம் கூடலூர் கிராமம் வர்ச நாட்டிற்கு அருகில் கண்ணகிக்கு கோயில் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :

அ) மற்றும் ஆ) சிலப்பதிகார காப்பிய நாயகி கண்ணகியின் நினைவாக எழுப்பப்பெற்ற கோயில் ஒன்று தொன்றுதொட்டு, தமிழ் நாட்டில் மதுரை மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் இருந்து வருகிறது. இக்கோயில் "மங்கல தேவி கோவில்" என்றும் "கண்ணகி கோவில்" என்றும் நீண்டகாலமாக அழைக்கப்பட்டு வருகிறது. பத்தினிக் கோட்டம் என்றழைக்கப்படும் இப்பகுதி, தொன்றுதொட்டு தமிழகத்தின் எல்லைக்குள், மதுரை மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ளது. இருப்பினும் இக்கோயில் தமிழ் நாட்டின் எல்லைக்குள் உள்ளதா ? என்பதைப் பற்றி ஒரு சர்ச்சை சமீபத்தில் எழுப்பப்பட்டுள்ளது. இதற்கு ஒரு தீர்வு காண்பதற்காக மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது. முடிவு தெரிந்த பின் இக்கோயில் திருப்பணிகள் தொடங்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலில் இது தொன்று தொட்டு இருப்பதாகச் சொல்லுகிறார்கள். தொன்றுதொட்டு இருக்கிற அந்தக் கோவிலில் நம்முடைய திருப்பணி வேலைகள் நடந்திருக்கின்றனவா ? அப்படி நடைபெறவில்லை என்றால் அந்தத் திருப்பணி வேலைக்காக அரசு எவ்வளவு ரூபாய் ஒதுக்கத் திட்டம் இட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் பதில் சொல்லும் போது சொன்னார்கள், கோவிலே இன்னும் நம்முடையது என்று முடிவாகவில்லை என்று. கோவிலே நம்முடையது இல்லை என்றால் திருப்பணியை எப்படி நடத்துவது ?

[1980 ஜூலை 17

திரு. இரா. தாமரைக்கனி ; அப்படி அந்தக் கோவில் நமக்கே சொந்தம் என்று வந்த பிறகு எவ்வளவு ரூபாய் அதிலே செலவு செய்ய திட்டம் இடப்பட்டுள்ளது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது நம் கைக்கு வந்த பிறகு முடிவெடுத்துக் கொள்ளலாம்.

[முற்பகல் 9-20]

திரு. ஆர். டி. கோபாலன் : பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் கண்ணகி கோட்டத்தில் முக்கியமான ஆராய்ச்சிக் குறிப்பு கண்டுபிடிக்கப்பட்டதாக தகவல் வந்துள்ளது. அதை ஆராய கல்வெட்டு நிபுணர்களை அனுப்புவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, அது சம்பந்தமான ஆராய்ச்சியில் ஈடுபடுவதற்கும் சரித்திர வரலாறுகளைக் கண்டுபிடிப்பதற்கும் நம்முடைய தொல்பொருள் ஆராய்ச்சி இயக்குனரை அனுப்பி, அவர் பல்வேறு தகவல்களை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்.

திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கண்ணகிக் கோவில் நமக்குச் சொந்தமானது என்பதில் சந்தேகம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இது ஏற்கனவே சேரன், செங்குட்டுவனால் கட்டப்பட்டு, ராஜராஜ சோழனால் சீரமைக்கப்பட்டு, அதற்குப் பின்னால் மதுரையை ஆண்ட சுந்தரபாண்டியன் அவர்களால் சீரமைக்கப்பட்டு, அதற்குப் பின்னால் விஜயநகர மன்னர்களாலும் சீரமைக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, இந்தக் கோயில் தமிழகத்தைச் சேர்ந்தது, தமிழகத்திற்குச் சொந்தமானது என்பதில் சந்தேகம் இல்லை. ஏற்கனவே சென்ற ஆண்டு திட்ட மதிப்பீட்டில் அதைச் சீரமைப்பதற்கு அரசு பணம் ஒதுக்கியிருக்கிறது. ஆகவே, தொடர்ந்து அந்த ஆலயம் தமிழகத்திற்குச் சொந்தமானது என்பதை அறுதி செய்து. மேற்கொண்டு வேலைகளை அரசாங்கம் தொடருமா ?

திரு. இரா. தாமரைக்கனி : என்னுடைய கேள்வியைத்தான் அவர் கேட்கிறார்.



1980 ஜூலை 17]

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. தாமரைக்கனி அவர்கள் இந்த அடிப்படையில் விவரத்தோடு கேள்வி எழுப்பவில்லை. ஆனால் மாண்புமிகு திரு. நெடுமாறன் அவர்கள் அதற்கான இலக்கிய ஆதாரங்களோடு கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அவர்கள் தெரிவித்த இலக்கிய ஆதாரங்களை எல்லாம் தமிழக அரசு வைத்து இருக்கிறது. அதன் தொடர்பாகத்தான் 1975-ல் தொடங்கி, அந்தச் சரித்திர வரலாற்றுச் சிறப்புமிக்க அந்த இடத்தை, தமிழகத்தினுடைய சிறப்புமிக்க இடமாக—அந்தக் கண்ணகிக் கோட்டத்தை மாற்றவேண்டும் என்று அரசு முயற்சி எடுத்தது.

அதற்குப் பிறகு எழுந்த எல்லைப் பிரச்சினையில் இந்த இடம் எங்கே இருக்கிறது என்ற சந்தேகம் எழுப்பப்பட்டு, அது மத்திய அரசு வரைக்கும் போய் இப்போது மத்திய அரசு அவர்களுடைய சர்வே டிபார்ட்மெண்ட்டை அனுப்பி அந்த இடத்தின் எல்லையை ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். இந்த நிலையில்தான் சென்ற ஆண்டு நம்முடைய அரசின் சார்பாக அதை தொல்பொருள் ஆய்வுச் சட்டத்தின்கீழ் பாதுகாக்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவேண்டும் என்று முயற்சி எடுக்கப்பட்டு, சுமார் 70 இலட்சம் ரூபாய் அளவிற்கு பல்வேறு திட்ட வேலைகளுக்கான திட்ட மதிப்பீடுகள் போடப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் ; பேரவைத் தலைவர் அவர்களே: இந்தக் கண்ணகி கோவில் எல்லைப் பிரச்னை சம்பந்தமாக தமிழக அரசு சில மாதங்களுக்கு முன்பு கேரள அரசு அதிகாரிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக, தமிழக அரசு அதிகாரிகளை அனுப்பினார்கள் என்று ஒரு செய்தி பத்திரிகையில் வந்திருந்தது. அப்படி பேச்சுவார்த்தை நடைபெற்றதா? அதன் முடிவு என்ன என்பதை அமைச்சர் அவர்கள் சபைக்குத் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, 1975–ம் ஆண்டில் தொடங்கி 1976–ம் ஆண்டிலே அதிகாரிகள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் அரசு மட்டத்தில், அமைச்சர்கள் மட்டத்தில், பேசி முடிவு எடுக்கப்படவேண்டும் என்ற காரணத்தாலே, மத்திய அரசுக்கு இந்தத் தகவல் தரப்பட்டு, அது இன்னும் முடிவு பெறாத நிலையில் இருக்கிறது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கண்ணகிக் கோவில் தமிழகத்தின் எல்லையிலே தான் இருக்கவேண்டும். அப்படி இருக்கும்போது நம்முடைய எல்லையா, கேரள அரசின் எல்லையா என்கிற சந்தேகம் எப்படி வந்தது? அதற்கான காரணம் என்ன? நாம் அந்தக் கோவிலைப் புதுப்பிக்க நடவடிக்கைகள் எடுத்தபோது, கேரள அரசாங்கம் எதிர்த்ததா? எங்களுடைய எல்லை என்று சொன்னார்களா? இதை அமைச்சர் அவர்கள் தெளிவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் கண்ணகிக் கோட்டம் தமிழக எல்லைக்குள்ளே இருக்கிறது என்பதிலே தமிழக அரசுக்கு எந்தவிதமான சந்தேகமும் இல்லை. அதற்கான சான்றுகள் அனைத்தும் நம்மிடத்தில் இருக்கின்றன. 1883–ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 11–ம் நாள் வெளியிடப்பட்ட ரெவின்யூ போர்ட் அறிக்கையிலே அந்த வண்ணாத்திப்பாறை–ரிசர்வ் காடுகள் என்ற பகுதியில் அமைக்கப்பட்டு இருக்கும் மங்கலதேவி கோவில் என்று வழங்கப்படுகிற கண்ணகி கோட்டத்திற்கு சிலப்பதிகாரத்திலே சிறப்பாக கூறப்பட்டுள்ள சித்திரைப் பௌர்ணமி முழு நிலவு விழாவில் கலந்து கொள்ளப்போகிற கம்பம் பகுதி மக்களுக்கு அந்த ரிசர்வ் காடுகள் வழியாகப் போவதற்கு அனுமதிக்கலாம் என்று அந்தக் காலத்திலேயே 1883ம் ஆண்டிலேயே ஆணை போடப்பட்டு இருக்கிறது. ஆகவே, அது தமிழக அரசுக்குத்தான் சொந்தம் என்பதிலேயோ, தமிழக எல்லைக்குள்ளே தான் இருக்கிறது என்பதிலோ, தமிழக அரசுக்குச் சந்தேகம் வரவில்லை. 1975–ம்



ஆண்டிலே ஒரு கடிதத்தை தமிழக அரசில் இருந்து கேரளா அரசிற்கு நாங்கள் அந்தக் கோவிலைப் புதுப்பிக்கப்போகிறோம் என்று எழுதப்போய் விவகாரம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் தமிழ்நாட்டிற்கு இதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை; ஐயப்பாடும் இல்லை. மிகத் தெளிவான வரைவு படங்கள், இலக்கியச் சான்றுகள் எல்லாம் நம்மிடம் இருக்கின்றன. மதுரை தீப்பற்றியதற்குபிறகு மதுரையிலிருந்து வைகையின் வடகரையிலேயே நடந்து சென்று மேற்கு தொடர்ச்சி மலையின் சுருளி குன்றில் ஏறி நின்றாள். அங்கே மலைவாசிகளும் கண்ணகியைப் பார்த்தார்கள் என்ற இலக்கியக் குறிப்புகளும் வரலாற்றுச் சான்றுகளும் இருக்கின்றன. எனவே அந்தக் கோவில் இன்றைக்கும் நம்முடைய மாநில எல்லையில் தான் இருக்கிறது.

திரு. குமரி அனந்தன் : தலைவரவர்களே, பூம்புகாரிலே காவிரிப்பூம்படடின ஆராய்ச்சியாளர் ஒருவர் இருக்கிறார். அவர் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து கோவலனோடு கண்ணகி மதுரை வரை சென்ற பாதையையும், மதுரையிலிருந்து கண்ணகி தானே இப்போது மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதைப் போலே வைகை வடகரை வழியாகச் சென்ற பாதையையும் கடந்து அங்கிருக்கிற அந்த மங்கலதேவி கோயில் என்றழைக்கப்படும் கண்ணகிக் கோட்டம் வரையில் சென்றிருக்கிறார். அவர் சென்ற நேரத்தில் இலக்கியக் குறிப்புகளையும் ஆதாரங்களையும் கையிலே வைத்துக்கொண்டு, அவைகளோடு அவர் செல்லுகின்ற பாதையையும் ஒப்பிட்டு பதிவு செய்திருக்கிறார். அவர் இப்போதும் காவிரிப்பூம்பட்டினத்தில் இருக்கிறார். கூடலூர் என்று அழைக்கப்படுகிற இடத்தில் நின்று கண்ணகி, ''மதுரையில் கணவனை உயிருடன் காண்பேன்'' என்ற சபதம் எடுத்தாள் ........(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் கேள்வியைக் கேட்க வேண்டும். இலக்கிய ஆராய்ச்சிக்குப் போனால் நேரம் போதாது.

திரு. குமரி அனந்தன் : கூடலூர் என்ற பகுதி கண்ணகி சபதத்தை நிறைவேற்றிக் கணவனை கூடிய இடம். ஆகையால் கூடலூர் என்று பெயர் பெற்றது என்பதாலே அது உறுதியாக அறுதியிட்டுச் சொல்லக்கூடிய அளவுக்கு தமிழ் நாட்டின் எல்லைக்குள்தான் இருக்கிறது என்பதை உறுதிபட சொல்லுகிறார்கள். ஆகவே கூடலூர் என்ற பெயரை வைத்தே

அது தமிழகத்திற்குச் சொந்தம் என்பதற்கு வேறு எந்த சான்றும் தேவையில்லை. அது தமிழ் மண்ணிலே இருக்கிறது என்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்; உறுதி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவரவர்களே, தமிழக அரசு உறுதி செய்திருக்கிறது; உறுதியோடு இருக்கிறது. இது பற்றிய பிரச்சினை விவாதத்திற்கு வருகிறபோது மாண்புமிகு உறுப்பினர் குமரி அனந்தன் அவர்கள் சொன்ன ஆதாரத்தையும் தமிழக அரசு பயன்படுத்தும்.

வாசுதேவநல்லூர் பகுதியில் 'கூட்டு குடிநீர்த்திட்டம்'

* வினா எண். 14 திரு. ரா. கிருஷ்ணன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) வாசுதேவநல்லூர் பகுதியில்' கூட்டு குடிநீர்த்திட்டம்' ஒன்றை நிறைவேற்ற அரசு திட்டமிட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்திற்கு ஆகும் செலவுத்தொகை எவ்வளவு?

(இ) இத்திட்டம் நிறைவேற்ற எல்வளவு காலம் ஆகும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

அ) திட்டமிட்டுள்ளது.

ஆ) இத்திட்டத்தின் ஆய்வுப்பணிகள் மேற்கொள்ளப்பட இருக்கின்றன. இப்பணிகள் முடிவுற்ற பின்னே திட்டத்திற்கான மதிப்பீடு தயார் செய்யப்படும்.

(இ) ஆய்வுப் பணிகள் முடிவுற்ற பிறகே திட்டம் நிறைவேற ஆகும் காலத்தைக் கணக்கிட இயலும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, ஒரு இலட்சம் மக்கள் வாழக்கூடிய 4 பேரூராட்சிகள்—சிவகிரி, ராயகிரி, வாசுதேவநல்லூர், விசுவநாதபேரி—அவைகளை ஒட்டி 10 ஊராட்சிகள் இருக்கின்றன. அங்கே 'சலைன் வாட்டர்' அதிகமாக இருக்கிறது. அங்கிருந்து 5 கிலோ மீட்டர் மேற்கே சென்று, அங்கிருந்து தண்ணீர் கொண்டுவந்தால் இந்த ஒரு இலட்சம் மக்களுக்கு அதை பயன்படுத்த முடியும். ஆகவே, இந்த திட்டத்தை துரிதப்படுத்த தேவையான ஆய்வு செய்வதற்கு ஏற்கெனவே அரசே ஆய்வுசெலவைப் போட்டு, பின்னால் வசூல் செய்துகொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. அந்த அடிப்படையில் ஆய்வுப் பணிகளைத் துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட இருக்கும் ஆய்வு மதிப்பீட்டுத் தொகையை திட்டமதிப்பீட்டுச் செலவில் இணைக்கலாம் என்றும் பின்னால் அரசு ஒப்புதல் உடன்



அனுமதிக்கப்படும்போது இந்தச் செலவுத் தொகையை திரும்ப வாரியத்திற்கு ஒப்படைக்கலாம் என்பதற்கு ஒரு தீர்மானம் போட்டு அனுப்புமாறு இந்த 4 பேரூராட்சிகளையும் வாரியம் கேட்டுக்கொண்டது.

[முற்பகல் 9-30]

அப்படிக் கேட்டுக்கொண்டதின் பேரில் விஸ்வநாதப்பேரியைத் தவிர மற்ற மூன்று பேரூராட்சிகளிடமிருந்தும் தீர்மானம் பெறப்பட்டுள்ளன. ஆனால் விஸ்வநாதப்பேரியிடமிருந்து பதில் வந்த பிறகு உடனடியாக ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக எத்தனைக் கிராமங்கள் பயன்படும்? எவ்வளவு மக்கள் பயனடைவார்கள் என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக வாசுதேவ நல்லூர், ராஜகிரி, சிவகிரி, விஸ்வநாதப்பேரி ஆகிய 4 பேரூராட்சிகளும் அவைகளைச் சார்ந்த சிற்றூர்களும் குடிநீர் வசதி பெறும். அந்த வகையில் கூட்டுக் குடிநீர் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வாரியத்தின் பரிசிலனையில் உள்ளது. மக்கள் தொகை எவ்வளவு, எவ்வளவு தொகை செலவாகும் என்பதெல்லாம் ஆய்வுக்குப் பின்னர்தான் தெரியும். இப்போது வேறு தகவல்கள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : தலைவரவர்களே, இதுபோன்ற கூட்டுக் குடிநீர்த் திட்டம் வறட்சி நிவாரணப் பணி என்ற வகையிலே ஒரு பணி ஆரம்பிக்கப்பட்டு 4 ஆண்டுகள் ஆகிவிட்ட பிறகும் பணி தொடராமல், $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு விட்ட பிறகு இன்றைய தினம் இந்தத் திட்டத்தை குடிநீர் வடிகால் வாரியம் செய்வதா ஊராட்சி ஒன்றியம் செய்வதா என்ற நிலையில் அந்தத் திட்டம் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற குடிநீர் வடிகால் வாரியம் முயற்சி எடுக்குமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, எந்த இடத்தில் இப்படி இருக்கின்றது என்ற தகவலைச் சொல்லி தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம் : தலைவரவர்களே, குடிநீர்த் திட்டத்தைப் பொறுத்தமட்டில் 3 பஞ்சாயத்துக்களிடமிருந்து சம்மதம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். விஸ்வநாதப்பேரியிடமிருந்து மட்டும் இன்னும் தீர்மானம் வந்து சேரவில்லை. ஆகவே அங்கிருந்து ஒப்புதல் பெறப்பட்ட பிறகு ஆய்வு செய்யப்படும் என்று அமைச்சரவர்கள்

[1980 ஜூலை 16

சொன்னார்கள். தற்போது விஸ்வநாதப்பேரி ஊராட்சி மன்றம் கலைக்கப்பட்ட நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. அதற்குத் தேர்தல் எப்போது நடக்கும் என்கின்ற உத்தரவாதம் இல்லை. ஆகவே காலதாமதம் ஏற்படுவதைத் தவிர்க்கின்ற வகையில் மூன்று பஞ்சாயத்துகளிடமிருந்து ஒப்புதல் வரப்பெற்று விட்டதால் அந்த அடிப்படையில் இந்தத் திட்டத்தை துரிதமாக ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, ஸ்பெஷல் ஆபீஸர் தானே தீர்மானத்தை பாஸ் செய்து அப்படி ஒரு கடிதத்தை எழுதலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாகுபுரத்தில் மூடிக்கிடக்கும் தாரங்கதரா கெமிகல்ஸை சேர்ந்த பி. ஆர். சி, தொழில் நிறுவனம்.

* வினா எண். 15

திரு. சி. கேசவ ஆதித்தன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்செந்தூர் தொகுதி ஆறுமுகனேரியில் உள்ள சாகுபுரத்தில் தாரங்கதரா கெமிக்கல்ஸை சேர்ந்த பி.ஆர்.சி. தொழில் நிறுவனம் கடந்த மூன்றாண்டுகளுக்கு மேல் மூடி சுமார் முன்னூறு தொழிலாளர்கள் வேலை இழந்து இருப்பது அரசினருக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) ஆம்.

(ஆ) ஆட்குறைப்பு செய்யப்பட்ட தொழிலாளர்கள், தங்களுக்குச் சேர வேண்டிய இழப்பீடு, மற்ற தொகையினையும் பெற்றுக் கொண்டுள்ளார்கள். அவர்கள் இப்பிரச்சினை குறித்து எந்தத் தொழிற் தகராறும் எழுப்பவில்லை.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, திருச்செந்தூர் தொகுதி ஆறுமுகனேரியில் உள்ள சாகுபுரத்தில் உள்ள தாரங்கதரா கெமிக்கல்ஸ்—ஐச் சேர்ந்த பி. ஆர். சி. தொழில் நிறுவனம் கடந்த மூன்றாண்டு காலமாக மூடப்பட்ட நிலையில் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் பதில் சொல்கின்றபோது இழப்பீடு, மற்ற தொகைகள் பெற்றுக்கொண்டுள்ள காரணத்தால் அங்குள்ள தொழிலாளர்கள் எந்தப் பிரச்சினையும் எழுப்பவில்லை என்று சொன்னார்கள். அந்தத் தொழிற்சாலை தற்போது நடைபெறுகிறதா அல்லது அப்படியே மூடிக்கிடக்கின்றதா? அப்படியானால் அங்கு பணிபுரிந்து வேலையிழந்தவர்களுக்கு வேறு வேலை



1980 ஜூலை 17]

வாய்ப்பு கொடுக்க முடியும் என்ற நிலை இருக்கின்றதா? அவர்களுக்குப் போதுமான நிவாரணம் அத்தனையும் கொடுக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே. 4—2—1978 முதல் அந்தத் தொழில்சாலை இயங்குவது நிறுத்தி வைக்கப்பட்டது. தொழிலாளர்கள் 15—12—1978 முதல் லே ஆஃப் செய்யப்பட்டனர். அதற்கான இழப்பீடு அதாவது லே ஆஃப் காம்பென்சேஷன் கொடுக்கப்பட்டுவிட்டது. இதைத் தொடர்ந்து நிர்வாகம் எல்லாத் தொழிலாளர்களுக்கும் 5—10—79 முதல் 6—5—80 வரை ஆட்குறைப்பு செய்துள்ளனர். அந்தத் தொழிலாளர்கள் தங்களுக்குச் சேர வேண்டிய இழப்பீடு மற்ற தொகைகளையும் பெற்றுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவரவர்களே, அந்த நிறுவனத்தைப் பொறுத்தவரையில் மிக அதிகமான லாபத்தைப் பெறக்கூடிய தொழில் நிறுவனமாகும் அது. அது எதற்காக மூடப்பட்டது? அதை நிவர்த்தி பண்ண அரசாங்கம் என்ன முயற்சியை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே நாப்தால், எரிபொருள், மின்சக்தி ஆகிய அடிப்படை உற்பத்திப் பொருட்களின் விலைஉயர்வு காரணமாக உற்பத்திச் செலவு அதிகரித்தது. மேலும் நிறுவனம் பொருளாதார ரீதியாக லாபகரமாக இயங்கவில்லை. இக்காரணங்களுக்காக தொழிற்சாலை இயங்குவது 4—2—1978 முதல் நிறுத்தப்பட்டுவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிலாளர்கள் வேலை இழந்து பாதிக்கப் பெற்றிருக்கிற காரணத்தினால், அந்தத் தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்துவதற்கு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவாநந்தம்: 'தலைவர் அவர்களே, அந்தத் தொழிற்சாலை நஷ்டத்தில் நடக்கிறது என்பதற்காகத்தான் அதை மூடியிருக்கிறார்கள். அதைப் போய் அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று சொல்வது பரிசீலிக்க வேண்டியது. அப்படி இருந்தாலும் இப்பிரச்னையைக் குறித்து அவர்கள் ஏதும் தொழில் தகராறு எழுப்பவில்லை. ஆயினும் 19—2—80 15—7—1980, 11—4—1980 என்று மூன்று தேதிகள் குறிப்பிட்டு இது பற்றி விவாதிக்க தொழிற்சங்கங்களை அழைத்திருந்த போதிலும், அங்கே உள்ள இரண்டு தொழிற்சங்கங்களுமே பேச்சு வார்த்தையில் கலந்துக் கொள்ளவில்லை, அப்படி அவர்கள் வந்து, பேச்சு வார்த்தையில் கலந்துக் கொள்வார்களேயானால், தொழிற்சாலையை மீண்டும் நடத்துவது பற்றி பரிசீலனை செய்து பார்க்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*கு. க. வி. எண். 22—

தமிழ் இலக்கியத்தில் பட்டப் படிப்பு.

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பரா: —

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து கல்லூரிகளிலும் தமிழ் இலக்கியப் பாடம் (B. A. தமிழ்ப் பட்டப் படிப்பு)தொடங்க அரசு முயற்சி ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தமிழ் இலக்கியத்தில் பட்டப் படிப்பு வகுப்புக்கள் 38 தனியார் கல்லூரிகளிலும், 26 அரசினர் கலைக் கல்லூரிகளிலும் உள்ளன. இது தவிர 1980–81-ல் 7 (ஏழு) தனியார் கல்லூரிகளிலும் 4 (நான்கு) அரசினர் கலைக் கல்லூரிகளிலும் தமிழ் இலக்கியப் பட்டப் படிப்பு துவங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. மற்றும் அப்பட்டப் படிப்பு இல்லாத கல்லூரிகளில் உள்ள இதர வசதிகள், சாத்திய கூறுகள், நிதி வசதிகளைப் பொறுத்து அரசு செயற்படும்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில் அரசாங்க அனுமதி வழங்குவதற்கு விண்ணப்பிக்கும் போது, தமிழ் பட்டப்படிப்பு துவங்குவதை விட்டு, மற்றைய பட்டப் படிப்புகளுக்கு மட்டும் அனுமதி கோரி விண்ணப்பிக்கும் தமிழ் பற்றற்ற கல்லூரி முதல்வர்களை இந்த அரசு தண்டிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் பட்டப் படிப்பைத் தீவிரமாக செயல் படுத்த இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளும்.

திரு. மி. வின்சென்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்லூரிகளில 5 ஆண்டு தமிழ் பட்டப்படிப்பு கட்டாயம் இருந்தாக வேண்டும் என்ற ஆணையை இட அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அது தேவையில்லாத ஒன்று.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, பட்டப்படிப்பு முடித்த எம். ஏ. மாணவர்கள் ஒரு 50 பேர்கள் 4 ஆண்டுக் காலமாக வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர் களுக்கெல்லாம் மேல்நிலைப் பள்ளிகளில் சமூகம், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்களாக நியமித்து வேலைவாய்ப் பளிக்க அரசு முன் வருமா? அதைச் செய்யாமல் வேறு ஆசிரியர்களை போடுவதினால், இவர்கள் நீண்டகாலமாக வேலை யில்லாமல் இருக்கும் நிலை நீடிக்கிறது. ஆகவே அந்தப் பாடங் களுக்கு இவர்களை ஆசிரியர்களாக நியமிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம். தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கு தொடர்பில்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் இந்த யோசனையை அரசு பரிசீலிக்கும்.



திரு. த. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தமிழ் பயிற்றுவிக்க முக்கியத்துவம் கொடுக்கிற இந்த அரசு தமிழ் படித்து பல்லாண்டுக் காலமாக வேலையில்லாது இருக்கிற புலவர்களுக்கு வேலை கொடுக்க முன் வருமா என்று கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு தனிக்கேள்வி போட்டால் விடை தயாரித்துக் கொடுக்கப்படும்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தமிழ் இலக்கியத்தைப் பாடமாக எடுத்துக் கொண்டிருக்கிற மாணவர்களுக்கு அரசு உதவித் தொகை ஏதேனும் வழங்குகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களே விரும்பி படிக்கிறபோது அதற்கென்று விசேஷத் தொகையை அரசு தர வேண்டியது இல்லை.

நொய்யல் ஆறு திட்டம்.

கு.கா.வி. எண். 23—

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) நொய்யல் ஆறு திட்டம் இப்பொழுது எந்த நிலையில் உள்ளது?

(ஆ) உடனடியாக ஆரம்பிக்கும் திட்டம் உள்ளதா?

(இ) ஆம் எனில், அது எப்பொழுது முற்றுப்பெறும்

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ, ஆ, இ) நொய்யல் அணைத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் பயன் பெறுகிற நஞ்சை நிலம் எவ்வளவு? புஞ்சை நிலம் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் கரூர் வட்டத்தில் ஆத்துப்பாளையம் அருகே 235·35 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட அணை ஒன்றும், இரு வாய்க்கால்களும் இந்தத் திட்டத்தில் அடங்குகிறது. இதனால் கரூர் வட்டத்தில் 9,625 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஆயக்கட்டின் ஒரு போக பாசனப் புன்செய் பயிர்களுக்குத் தண்ணீர் அளிக்க இந்தத் திட்டம் வகை செய்கிறது.

[முற்பகல் 9.40.]

திரு. கு. ரமணி : நொய்யல் நதி அதன் ஆரம்ப இடத்திலிருந்து கடைசி வரை கோவை மாவட்டத்தில் ஏராளமான ஏரிகளுக்குத் தண்ணீர் நிரப்பிக்கொடுக்கும்படியான ஒரு சிறந்த காரியத்தை அந்த வற்றாத ஜீவ நதி செய்துகொண்டிருக்கிறது. அதற்கு இந்தத் திட்டம் காரணமாக ஏதாவது இடையூறு ஏற்படுமா? இதனால் அந்தக் குளங்கள் எல்லாம் நிரம்புவதற்கு ஏதாவது குறைகள் ஏற்படுமா? இந்தத் திட்டம் ஆற்றின் குறுக்கே கட்டப்படக்கூடிய அணைக்கட்டுத் திட்டமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பழைய கோவை மாவட்டத்திலே இப்போதைய பெரியார் மாவட்டத்திலே சின்ன முத்தூர் கிராமத்தின் அருகில் இந்த அணை கட்ட உத்தேசம் இப்போது அரசின் ஆய்வில் உள்ளது. இங்கே கட்டவேண்டிய அவசியம் பற்றி தலைமைப் பொறியாளர் இரண்டு மூன்று கருத்துக்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதிலே மிக முக்கியமானது, கீழ்ப்பவானி திட்டத்தின் மூலம் கிடைக்கும் கழிவு நீரை தவிர்த்து நொய்யலாற்றின் தடையில்லாத நீர்ப்பிடிப்பிலிருந்து 867 மி. க. அடி நீர் சாதாரணமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. எட்டு மாத காலம் கிட்டத்தட்ட கிடைக்கும். பவானி கழிவுநீரைப் பயன்படுத்திக் கொள்ள ஒரு வாய்ப்பும் பெரு மழை பெய்கிற காலத்தில் இரண்டு மாதம் பெருவெள்ளம் வரும்போது அந்த நீர் வீணாகிக் கொண்டிருக்கிறது; எனவே அதையும் பயன்படுத்துவதற்காகத்தான் இந்தத் திட்டமே தவிர ஏற்கனவே பயன்பட்டிருக்கக்கூடிய கண்மாய்கள் எந்தளவிற்கும் பாதிப்பிற்கு உள்ளாக்குவதற்கு இந்தத் திட்டம் துணை நிற்காது.

திரு. கு. அ. செங்கோட்டையன் : இத்திட்டத்திற்கான மதி பீட்டுத் தொகை எவ்வளவு? இந்தத் திட்டம் எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ரூ. 534 லட்சம் செலவல் இந்தத் திட்டம் கட்டுவதற்கு இருக்கிறது. தலைமைப் பொறியாளர் ஆய்வு செய்து செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறார். இப்போது அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அரசு முடிவு எடுத்ததும் திட்டப்பணிகள் அதன் வேலைகள் துவங்கப்படும்.

திரு. ஜே. எஸ். இராசு: நீண்ட காலமாகப் பேசப்பட்டு வரும் இத்திட்டம் இன்னும் ஆய்வில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். இந்தத் திட்டத்தின் ஆய்வு மாநில அளவில் மட்டும்தான் இருக்கிறதா? அல்லது எப்போதாவது மத்திய அரசுக்கு இது அனுப்பப்பட்டு அவர்கள் ஏதாவது தங்கள் குறிப்புகள் எழுதி திருப்பி அனுப்பி மீண்டும் அது ஆய்வில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இது மாநில அரசின் ஆய்வில்தான் இருக்கிறது.

திரு. கோவைத்தம்பி: இந்த நொய்யல் ஆற்றுத்திட்டம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் கரூர் பகுதியில் கட்டப்படுகிறது என்று சொன்னால் எங்களைப் போன்றவர்களுக்கு இத்திட்டத்தினால் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். பவானிசாகர் நீர்த்தேக்கத்திலிருந்து எங்களை ஏமாற்றி நொய்யல் ஆற்றில் கரூரில் கட்டப்படுகிற நிலை ஏற்பட்டால் பவானிசாகர் ஆற்றிலிருந்து அவனாசி தாலுகாவிற்கு தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: கீழ் பவானி அணையிலிருந்து வெளியே வருகிற கழிவுநீரைப் பயன்படுத்திக் கொள்வது என்பதும், பருவமழை காலத்தில் அதிகமாக மழை பெய்து வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறபோது அது வீணாகிக் கொண்டிருக்கிறதே என்று அதைப் பயன்படுத்தி கரூர் வட்டத்தில் இத்திட்டத்தின்மூலம் பயன் அளிக்கவேண்டும் என்று நீண்ட காலமாக அப்பகுதி மக்களின் கோரிக்கையை மனதில்கொண்டு இப்போது ஒரு இறுதி முடிவு எடுக்கக்கூடிய கட்டத்திற்கு வந்திருக்கிறோம். மற்றப்படி கீழ் பவானி நீரை அப்பகுதியிலுள்ள மக்களுக்குத்தான் கொடுத்துக்கொண்டு வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. கோ. கிருஷ்ணசாமி: காங்கேயம் தொகுதி சென்னிமலைப் பஞ்சாயத்து யூனியனிலுள்ள ஓடப்பாளையம் ஊரில் சர்வே செய்யப்பட்டது. அந்தத் திட்டம் நிறைவேற்றப் படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மூலக் கேள்வி நொய்யல் ஆறைப் பற்றியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.— ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களது வேலை நிறுத்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ''அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தங்களது 21 அம்ச கோரிக்கைகளுக்காக 15–7–80 முதல் வேலை நிறுத்தம் செய்திருப்பதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்'' என்று கேட்டு

1. திரு. இரெ. இராசமாணிக்கம்,

2. திரு. எஸ். அழகர்சாமி,
3. திரு. ஆர். கருப்பையா,
4. திரு. என். ஏ. பூங்காவனம்,
5. திரு. எம். ஆறுமுகம்,
6. திரு. டி. கே. நல்லப்பன்,
7. திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்,
8. திரு. எஸ். சிவசாமி,
9. திரு. உ. சுப்பிரமணியம்.
10. திரு. எம். அப்பாதுரை,
11. திரு. என். எஸ். வி. சித்தன்,
12. திரு. ப. நெடுமாறன்,
13. திரு. எஸ். ஆண்டித் தேவர்,
14. திரு. மு. அம்பிகாபதி,
15. திரு. கே. எம். தங்கமணி,
16. திரு. ப. பொன்னுரங்கன்,
17. திரு. ஆர். கிருஷ்ணன்,
18. திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்,
19. திரு. அ. இரகுயான்கான்.

ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்துச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. இராமலிங்கம்: பாயிண்ட் ஆப் ஆர்டர். நான் ஏற்கனவே இந்தப் பிரச்னையைப் பற்றி 9 ஆம் தேதியே ரூல் 54லே கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரூல் 54 என்பது கவன ஈர்ப்புத தீர்மானம். இது ரூல 55. ஒத்திவைப்புத் திர்மானம். ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக்கொண்ட பிறகு 54லே கொடுத்தது அடிபட்டு போய்விடுகின்றது என்று அர்த்தம்.

திரு. ஏ. இராமலிங்கம்: மறுக்கப்பட்டது என்று எனக்குத் தகவல் வரவில்லை.

மாண்புமி பேரவைத் தலைவர்; தகவல் வரும்.

திரு. ஏ. இராமலிங்கம்: வந்திருந்தால், நானும் 55லே மாற்றிக் கொடுத்திருப்பேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொடுத்தது 54 விதியின் கீழ். அதற்கு நான் பொறுப்பல்ல. 54 அல்லது 55 விதியின் கீழ் வரவேண்டியது பற்றி முடிவெடுக்க வேண்டியது உறுப்பினர் பொறுப்பு. உங்களுக்கு அந்த வே ம் வரவில்லை, அவ்வளவுதான். நீங்கள்தான் அப்படி எழுதிச் கொடுக்கவேண்டும்.



திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள், 20 ஆண்டுக் காலமாகப் பணியிலே இருந்துவரும் ஆசிரியர்கள் பல்வேறு கோரிக்கைகளை உள்ளடக்கி, அந்த செலக்ஷன் கமிட்டி, போர்டு ஆப் டிரஸ்டீஸ் அவர்களை நிரந்தரமாக்காததாலும், பணி உயர்வு கொடுக்காததாலும் இத்தகைய கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அவ்வப் போது அரசினுடைய சார்பிலே இருக்கின்ற பிரதிநிதிகளும், சிண்டிகேட், போர்டு ஆப் டிரஸ்டீஸ் உறுப்பினர்களும் அவர்களை நிரந்தரம் செய்யவேண்டும் அல்லது பணி உயர்வு செய்ய வேண்டுமென்பதிலே கவனம் செலுத்தவில்லை. யார் யார் தகுதி பெற்றிருக்கிறார்களோ அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்கவில்லை. இந்தக் கமிட்டி அரசாங்கத்தினுடைய விதிகளை எந்த அளவுக்கு அமுல் செய்கிறார்கள், அரசாங்கத் தினுடைய கொள்கைகளை எந்த அளவுக்கு பின்பற்றுகிறார்கள் என்பதை அரசு கவனிக்க வேண்டும்: அப்படி கவனிக்கத் தவறியதன் காரணமாக, இன்றைக்கு மிகப் பெரிய ஆசிரியர் போராட்டம் உருவாகி, அதற்கு அங்குள்ள மாணவர்களும் ஆதரவு கொடுத்து பரீட்சையை பகிஷ்கரிக்கின்ற அளவுக்கு உருவாகியிருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இது அவையினுடைய முக்கியமான பிரச்னையாக இருக்கின்ற காரணத்தினாலே, இதைப்பற்றி கண்டிப்பாக இந்த அவையிலே விவாதித்து முடிவு காணவேண்டும்.

அரசினுடைய ஆணைப்படி அங்கே இருக்கின்ற டியூட்டர்கள், டிமான்ஸ்ரேட்டர்கள் ஏறக்குறைய 20 ஆண்டுகளுக்கு மேலாக, 30 ஆண்டுகளுக்கு மேலாக பணி உயர்வு இல்லாமல், அவர்கள் பணி நிரந்தரம் செய்யப்படாமல் இருக்கிறார்கள். இந்த போர்டு ஆப் செலக்ஷன் கமிட்டியிலே நான் தமிழகத்தின் சார்பாக சுமார் மூன்று ஆண்டு காலம் உறுப்பினராக இருந்தேன். அப்போது இந்தப் பிரச்னையைப் பற்றி பல்வேறு முறை கேட்ட போது, அந்தக் கோரிக்கைகளை அன்றைக்கு ஏற்றுக்கொண்டு, பிறகு பல்வேறு முறையில், பல்வேறு வகையான முறைகளைக் கையாண்டு அவர்கள் பணிகளை நிரந்தரம் செய்யவில்லை.

அது மட்டுமல்ல, இன்றைக்கு வருவாய்த் துறை அமைச்சராக இருக்கின்றவர், இந்த போர்டு ஆப் செலக்ஷன் கமிட்டியிலே மெம்பராக இருந்திருக்கிறார். இந்த டியூட்டர், டெமான்ஸ்ரேட்டர் பதவிகளை மட்டும் அவர்கள் நிரந்தரம் செய்யாமல் இல்லை. மேலும், லெக்சரர், புரபசர் ஆகியோர்களுடைய பணிகளையும் அவர்கள் நிரந்தரம் செய்யாமல் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட கோரிக்கைகளை கவனிக்க வேண்டுமென்று அரசாங்கத்தின் சார்பாகவும், பல்வேறு அமைச்சர்களையும் இந்த ஆசிரியர் குழு வேண்டிக் கொண்டிருக்கிறது. ஆனால், அரசாங்கம் அதை கவனிக்கவில்லை. அந்த கோரிக்கைகளை அந்த கமிட்டியினர் கவனிக்காததன் காரணமாக, அந்தப் பிரச்னை

மிகப் பெரிய ஒரு பிரச்னையாக உருவாகி இருக்கிறது. அங்கே இருக்கின்ற அதிகாரிகள் அதாரடீஸ் என்ன சொல்கிறார்கள் என்றால், யு. ஜி. சி. அடிப்படையில் சில போஸ்டுகளை உருவாக்குகிறோம் என்று சொல்கிறார்கள்.

[முற்பகல் 9-50]

அதற்கு ஐந்தாண்டுகள், பத்தாண்டுகள் என்ற அடிப்படையில் மத்திய அரசு மானியம் தருகிறது. மானியம் கொடுக்கும் காலம் முடிந்த பிறகு பணம் தருவதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஐ. சி. ஏ. ஆர். என்ற ஸ்கீமின் அடிப்படையிலும் ஐந்தாண்டுகளுக்குத்தான் பணம் தருகிறார்கள். ஐந்தாண்டுகளுக்கு தரும் பணத்தை வைத்துக் கொண்டு எப்படி வேலையில் இருப்பவர்களை நிரந்தரம் செய்வது என்று கேட்கிறார்கள். அங்கு என்ஜினியரிங் காலேஜ் இருக்கிறது. அட்வான்ஸ்டு ஸ்டடிஸ் இருக்கிறது. அந்த நிர்வாகத்தை நல்ல முறையில் நடத்த ஸ்டேட் கவர்ன்மென்ட் அதிகமாக மானியத் தொகை கொடுக்கவேண்டும். அந்த முறையில் அரசாங்கம் அதனை சரியான அளவில் கவனிக்கவில்லை. ஆகவேதான் இந்தச் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆசிரியர்கள் கோரிக்கைகளைக் கூறியிருக்கிறார்கள். அங்கு வேலை நிறுத்தத்தின் காரணமாக பதட்டமான சூழ்நிலை நிலவி வருகிறது. ஆகவே, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியர்கள் மட்டும் போராடவில்லை. அங்கிருக்கக்கூடிய மாணவர்களும், 'நான்-டீச்சிங் ஸ்டாப்' என்று சொல்லக்கூடிய பணியாளர்களும் சேர்ந்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இதற்கான அடிப்படைக் காரணம் அங்கிருக்கக்கூடிய பேராசிரியர்கள், ஆசிரியர்கள் போன்றவர்கள் 20 ஆண்டுக் காலம், 25 ஆண்டுக் காலம் பணியில் இருந்தாலும் நிரந்தரம் செய்யப்பட வில்லை. யூனிவர்சிடி கிராண்ட்ஸ் கமிஷன் சிபாரிசுகள்மூன்றுமுறை அவர்களுக்கு நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. சீரான முறையில் அவர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை. அவர்களுக்குச் சரி யான பணிப் பாதுகாப்பு கிடையாது, குடியிருப்பு வசதிகிடையாது என்று பல்வேறு அடிப்படைக் கோரிக்கைகளுக்காக அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அவர்கள் போராடிக் கொண்டிருக் றார்கள். அவற்றுக்குத் தீர்வு காணவேண்டுமென்ற நோக்கத் துடன் வேலை நிறுத்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அங்கிருக்கக்கூடிய தொழிற்சங்க இயக்கங்களும் ஆதரவு தெரிவித்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முக்கியமான இந்தச் சம்பவம் அண்ணாமலைப் பல்கலை கழகத்தில் மட்டுமல்ல, இப்படிப்பட்ட போராட்டம் தமிழகத்தில் இருக்கக்கூடிய மூன்று பல்கலைக் கழகங்களிலும் இந்த நிலைமை



ஏற்படக்கூடும் என்ற நிலையை சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த நோயை ஆரம்பத்தில் தடுக்கும் நோக்கத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடக்கும் இத்தனை கொடுமைகளுக்கும் தீர்வு காணவேண்டும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தமிழக அரசும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தை அரசுடைமையாக்குவதற் கான ஏற்பாட்டைச் செய்யவேண்டுமென்று கேட்டு, இந்தச் இந்தச் சூழ்நிலைகளைப் பற்றி விவாதிப்பதற்கு இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒரு பாரம்பரியம் உள்ள பல்கலைக் கழகம் என்று சொல்லப்படுகிறது. எத்தனையோ பேரறிஞர்களை உருவாக்கி இருக்கிறது. இப்போது நடைபெறும் போராட்டம் நீண்ட கால அடிப்படையில், ஆசிரியர்களுக்கும் நிர்வாகத்தின ருக்கும் இடையில் உள்ள உறவு ஆண்டான்—அடிமை என்ற அடிப்படையில், கொத்தடிமைகளாக ஆசிரியர்கள் நடத்தப் பட்டுவருகிற நிலை இருக்கிறது. இருபத்திமூன்று ஆண்டுகள் ஆகியும் ஆசிரியர் பலர் நிரந்தரமாக்கப்படவில்லை. 420 ஆசிரியர்களில் 222 பேர்தான் நிரந்தரமாக்கப்பட்டிருக்கிறார்கள். பென்ஷன் கிராச்சுவிடி நிராகரிக்கப்படுகின்றன. ரிடையர் ஆன பிறகு கூட கன்பர்மேஷன் ஆகியிருக்கிறது. இறந்தவுடன்கூட கன்பர்மேஷன் ஆகியிருக்கிறது. இந்த அளவுக்கு மிக மோசமான நிர்வாகத்தைக் கொண்டிருக்கிறது. அது தனிப்பட்ட ஒரு குடும்பத்தின் சொத்தாகக் கருதப்படுகிறது. அரசாங்கத்தின் மானியத்தைப் பெற்றிருக்கிறது. யு. ஜி. சி. மூலம் கோடிக்கணக்கான ரூபாயை மானியமாகப் பெற்றிருக்கிறது. அப்படி மானியங்களைப் பெற்றுக்கொண்டு அதை எப்படி தங்களுடைய குடும்பச் சொத்தாக அவர்கள் வைத்துக் கொள்வது எப்படி நியாயமாக இருக்க முடியும்? இதில் ஜாதிப் பிரச்சினை கடுமையாக இருக்கிறது. நியமிக்கப்படும் ஆசிரியர்களும், முக்கியமான பாடங்களைச் சேர்க்கவேண்டுமென்ற முறையும் சாதியின் அடிப்படையில்தான் நடக்கிறது. அரசாங்கத்தின் வரிப்பணம் வீணாகிறது.

கோல்டன் ஜூபிளி நடத்தப்படுகிற நிலையில் அவர்கள் தபால் மூலம் படிக்கிறவர்களிடம் மனுவோடுகூட பிராஸ் பெக்டஸ் என்ற முறையிலே ஒவ்வொரு மாணவரும் அதற்காக 200 ரூபாய் கட்டவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். மொத்தம் 7,000 பேர்கள் படிக்கிறார்கள் என்றால் எவ்வளவு தொகை வசூலாகியிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதைப்போலவே பி.டி.எஸ். கோர்ஸுக்கு, பல் டாக்டர்கள் படிப்பிற்காக, விளம்பரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதற்கு அட்மிஷன் பார்ம் மட்டுமே ஒன்று 50 ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்கிறது. இது உலகத்திலே எந்த நாட்டிலேயாவது உண்டா என்பதைப் பாருங்கள், எத்தனை லட்சம் ரூபாய் இப்படி வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு கணக்கே கிடையாது. தனிப்பட்டவருக்குப் போய்ச் சேருகிறது. இப்படிப்பட்ட மிஸ்மேனேஜ்மெண்ட் நிறைய இருக்கிறது. அங்கே பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன என்றாலும் அந்த வீடுகளிலே மழைக்காலங்களிலே குடை பிடித்துத்தான் இருக்கவேண்டும், அதைப்போலவே சுவர்களைத் தொடமுடியாது, எலக்ட்ரிக் ஷாக் அடிக்கும், இப்படிப்பட்ட குறைபாடுகள் மலிந்து இருக்கின்றன, துணை வேந்தர்கள் நிலைமை என்ன என்றால் துணை வேந்தராக இருந்த சுப்பிரமணிய நாடார் இறந்ததிலே பெரிய சந்தேகம் இருக்கிறது. ஜஸ்டிஸ் சந்திரா ரெட்டி கட்டாயமாக நீக்கப்பட்டதாகத் தெரிகிறது. சிண்டிகேட், செனட் போன்றவைகளில் பலவிதமான ஊழல்கள் நடைபெறுகின்றன. நேரடியாக பேலட் பேப்பர்களை கையிலே வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். இந்த முறைகேடுகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டுமென்ற முறையிலே அரசே இந்தப் பல்கலைக் கழகத்தை டேக் ஓவர் செய்ய வேண்டும். இப்போது போராடிக்கொண்டிருக்கின்ற ஆசிரியர்கள் இந்தக் காரணங்களைச் சொல்கிறார்கள் ஆகவே, இதையெல்லாம் கவனிக்கவேண்டுமென்ற முறையிலே இந்த அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே நடைபெறுகின்ற இந்த வேலை நிறுத்தம் பற்றி இந்த மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் இவ்வளவு அதிகமான உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதிலிருந்தே இது ஒரு முக்கிய பிரச்சினை என்பதும், இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களுடைய கவனத்தையும் கவலையையும் ஈர்க்கக்கூடிய முறையிலே அது இருக்கிறது என்பதும் தெள்ளத் தெளிவாகிறது. குறிப்பாக ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள், மற்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் ஆகியவர்களில் அந்தப் பல்கலைக் கழகத்திலே படித்து பட்டம் பெற்றவர்கள் இருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நிர்வாகத்திற்கும் இடையே ஒரு சுமுகமான நிலைமை இருந்து வரும் நேரத்திலே, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே இப்படி ஏற்பட்டு இருக்கின்ற நிகழ்ச்சிகள் தொடர் நிகழ்ச்சிகள் ஆகிவிடக்கூடாது என்பதிலே நாம் அக்கறையோடு இருக்கிறோம். இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திலே பேசிய அத்தனை உறுப்பினர்களும் போராடுகின்ற ஆசிரியர்கள் தங்களுடைய 25 அம்சக் கோரிக்கையை முன் வைத்துப் பல ஆண்டுகள் கேட்டும்



இதுவரையிலே அவர்களுக்கு பரிகாரம் கிடைக்காத காரணத்தினாலேயே இப்படிப் போராடுகிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப் போராடுகிற ஆசிரியர்களுக்கு ஆதரவாக மாணவர்கள் தேர்வுகளைப் பகிஷ்கரிக்கிறார்கள். அவர்களுக்குத் துணையாக பல்கலைக் கழகத்தின் மற்ற ஊழியர்கள் இருக்கிறார்கள். இப்படி ஒரு பெரிய சூழ்நிலை அங்கே பற்றிக் கொண்டிருக்கிறது. அது வேறு இடங்களுக்குத் தொற்றிக் கொள்ளக்கூடாது என்பதுதான் நமக்கு இருக்கிற கவலையெல்லாம், இந்தப் பல்கலைக் கழகத்திற்கு அரசாங்கம் அப்போது நல்ல நோக்கத்தோடு நிலத்தையெல்லாம் கொடுத்து உருவாக்கியது. ஆனால் இன்றைக்கு அது அந்த நோக்கத்திலிருந்து விலகிக் கொண்டிருக்கிறது என்ற கவலையால்தான் இந்தத் தீர்மானத்தை இங்கே கொடுத்திருக்கிறோம். ஆசிரியர்கள் பலவிதமான போராட்டங்களை நடத்தப் போவதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆகவே இந்த முக்கியமான பொருள்பற்றி விவாதிக்க இந்த அவையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. ப. நெடுமாறன்: தலைவர் அவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நம்முடைய தமிழகத்திலே இருக்கக்கூடிய 'ஒன்லி ரெஸிடென்ஷியல் யுனிவர்சிடி' யாகும். மிகவும் புகழ்வாய்ந்த அமைப்பாக பல்கலைக்கழகமாக இருக்கிற நிலையில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்திருப்பது தமிழகத்திலே இருக்கிற அனைவரும் வருந்தத்தக்கதாகும். ஆசிரியர்களும் மாணவர்களும் அங்கு போராட்டத்திலே ஈடுபடக்கூடிய ஒரு அவல நிலைமை இருப்பதாகத் தெரிகிறது. ஆசிரியர்கள் பல கட்டங்களிலே போராட்டம் நடத்தப் போவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

[முற்பகல் 10-00]

ஜூலை 15 ஆம் தேதி முதல் தேர்வு பகிஷ்கரிப்பு, 18 ஆம் தேதி உண்ணாவிரதம் 21 ஆம் தேதி சென்னையிலே ஊர்வலம், 22 ஆம் தேதி அண்ணா சமாதி முன் உண்ணாவிரதம் என்று அடுக்கடுக்கான திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். ஏற்கனவே இம்மாதம் 8 ஆம்தேதி தொடங்க வேண்டிய தேர்வுகள் கொஞ்சம் கொஞ்சமாக ஒத்திப் போடப்பட்டு 15 ஆம் தேதி ஆரம்பிக்க இருந்து, அதுவும் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஏப்ரல் மாதம் நடத்தப்பட வேண்டிய தேர்வுகள் இந்த மாதம் வரையில் நடத்த முடியாமல், சுமார் 7,000 மாணவர்கள் அவதிக்குள்ளாகக் கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த 7,000 மாணவர்களும் எப்பொழுது தேர்வு எழுதப்போகிறார்கள்? அவர்களுடைய தேர்வு முடிவுகள் எப்பொழுது அறிவிக்கப்பட இருக்கின்றன? உயர் படிப்பிற்குச் செல்பவர்களின் கதி என்ன என்பதை இந்த அவை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்த

நேரத்திலே நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது கடைசியாகக் கிடைத்திருக்கின்ற தகவல், பல்கலைக் கழகத்தை நேற்றிரவு 12 மணிக்கு அடைத்தாகிவிட்டது என்ற தகவலும் வந்திருக்கிறது. ஆகவே, இந்த அவையிலே உள்ள சகல கட்சி உறுப்பினர்களும் இதில் அக்கறை கொண்டிருப்பதால், இதனுடைய அவசரமும் முக்கியத்துவமும் நன்கு தெரியும். ஆகவே, அவையை ஒத்தி வைத்து விவாதித்து, அரசு உடனடியாகத் தலையிட்டு சரியான பரிகாரம் காண வேண்டுமென்று நான் விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆண்டித் தேவர்: பேரவைத் தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், தமிழகத்திலேயே ஒரு தலைசிறந்த பல்கலைக் கழகம் என்று இருந்த நிலை மாறி தனியாருடைய ஒரு நபருடைய உடைமைச் சொத்தாக மாற்றப்பட்டிருக்கிறது. அரசு மானியத்தைப் பெற்றுக்கொண்டாலும், அங்கே இருபதாண்டு காலமாகப் பணியாற்றுபவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உரிமைகள் கிடைக்கவில்லை என்று 400 ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதோடு மாணவர்களும் சேர்ந்து அங்கே போராடுகிறார்கள் என்ற நிலை ஏற்பட்டதற்குப் பின்னால், அந்த மாணவர்கள் இப்பொழுது பரீட்சையிலே கலந்து கொள்ள முடியவில்லை. தமிழகம் முழுவதும் இருக்கின்ற மாணவர்கள் அங்கே படித்துக் கொண்டிருக்கிறார்கள். வருங்காலத்தில் நாட்டை உருவாக்குகின்ற அந்த மாணவர்கள் சென்ற ஏப்ரல் மாதத்தில் தேர்வு எழுதியிருக்க வேண்டும். அவர்கள் இன்னும் தேர்வு எழுதவில்லை. தேர்வுகளை மேற்பார்வை செய்தும், மற்ற வேலைகளைச் செய்யும் கவனிக்க வேண்டிய ஆசிரியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதனால் ஆயிரக்கணக்கான மாணவர்களின் எதிர்கால வாழ்வு பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் தமிழகத்திலுள்ள அத்தனை குடும்பங்களுக்கும் பாதிப்பு ஏற்படும் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருப்பதால் இந்த அவையை ஒத்தி வைத்து, அத்தனை அலுவல்களையும் ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் கழகம் தமது கோரிக்கையினை வலியுறுத்தி அறப் போராட்டம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட முடிவு செய்திருப்பதாக வந்திருக்கின்ற செய்திகளின் பேரில் இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி சங்கம் 21 அம்சக் கோரிக்கைகளைத் தெரிவித்துள்ளது. அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கம் விடுத்துள்ள 21 அம்சக் கோரிக்கைகளில் அரசு ஆணை குறித்த கோரிக்கைகள் சம்பந்தமாகக் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.



கோரிக்கை 1

உரையாளர்களை (Tutors) பதவி உயர்வு செய்தல்:— பட்ட மேற்படிப்புத் தகுதி பெற்ற கல்லூரி உரையாளர்கள் 1–12–1977 தேதியில் 3 ஆண்டுகள் பணி நிறைவேற்றியிருப்பின் அன்னார் தமது துறையல் 1–12–1977 முதல் உதவிப் பேராசிரியர்களாக நியமிக்கப் பெறுவர் என்று அரசாணை கல்வி எண். 613, நாள் 24–[illegible]–1978 ஆணை வெளியிடப்பட்டுள்ளது இச்சலுகை வருங் காலங்களில் பட்ட மேற்படிப்பு தகுதி பெறும் உரையாளர்களுக்கும் பொருந்தும் என்று ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் மேற்படி ஆணைகள் சென்னை, மதுரை காமராசர் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களுக்கும் பொருந்தும் எனவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாணையின்படி அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் உரையாளர்களையும் விரிவுரையாளர்களாக நியமிப்பது அப் பல்கலைக் கழகத்தின் பரிசீலனையில் அடங்கும்.

(2) பல்கலைக் கழகத்தின் விரிவுரையாளர்களுக்கு ரூபாய் 700-1600— என்ற ஊதிய விகிதத்தில் ரூ, 1,100-ல் அடிப்படை சம்பளம் வழங்குதல்.

கல்லூரியில் உள்ள பேராசிரியர்கள் மற்றும் உதவிப் பேராசிரியர்களுக்கு ரூ. 700-40-1,100-50-1,300-இபி-50-1,600 என்ற ஒரே சீரான ஊதிய விகிதம் முதற்கண் அளிக்கப்பட்டிருந்தது. ஆயின் உதவிப் பேராசிரியர்களைக் காட்டிலும் பேராசிரியர்கள் முன்பு அதிக ஊதிய விகிதம் பெற்றுள்ளனர் என்பதைக் கருத்தில் கொண்டு பேராசிரியரின் அடிப்படை ஊதியம் ரூ. 700–1,600 என்ற ஊதிய விகிதத்தில், ரூ. 1,100-ல் துவங்கப்பட வேண்டும் என்று ஆணை வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பல்கலைக் கழக விரிவுரையாளர்களும் தங்களது ஊதியம், ரூ. 700–1,600 ஊதிய விகிதத்தில், ரூ. 1,100–ல் துவங்கப்பட வேண்டுமென்று அரசுக்கு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர். அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் மதுரை காமராசர் பல்கலைக் கழகங்களிலுள்ள அனைத்து விரிவுரையாளர்களுக்கும் ரூ. 700-1,600 என்ற ஊதிய விகிதத்தில் ரூ 1,100-ல் துவங்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையைப் நிதித் துறையுடன் கலந்து ஆலோசிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்.

3. பல்கலைக் கழக மானியக் குழு ஊதிய நிர்ணயத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளை சரிசெய்தல்.—பல்கலைக் கழக மானிய ஊதிய விகிதம் 1-4-1976 முதல் அமுல்படுத்தியும் 1-1-1977 முதல் பணப்பயன் வழங்கியும் 1977 செப்டம்பர் திங்களில் அரசு

முதற்கண் ஆணைகள் பிறப்பித்தது. பின்னர் கல்லூரி ஆசிரியர் மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளின் படி முதற்கண் வழங்கப்பட்ட ஆணைகள் மாற்றப்பட்டு இத் திருத்திய ஊதியங்கள் 1-1-1974 முதல் அமுல்படுத்தியும் 1-1-1977 முதல் பணப்பயன் வழங்கியும் 1978 மார்ச் திங்களில் ஆணைகள் வழங்கப்பட்டன. இத்திருத்திய ஆணைகளை அடுத்து அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் தமது சங்கத்தில் சிலருக்கு இத்திருத்திய ஆணையால் நட்டம் ஏற் படுவதால் அவர்களுக்கு 1-4-1976 முதல் இத்திருத்திய ஊதிய விகிதத்தினை அளிக்குமாறு கோரிக்கை விடுத்தது. இக் கோரிக்கையினைத் தீவிரமாக ஆராய்ந்தபோது 1-1 1974-ல் திருத்திய ஊதிய விகிதத்தினை அமுல்படுத்துவதால் இவ்வாசிரி யர்கள் முந்திய ஊதிய விகிதத்தில் பெற்ற மொத்த ஊதியத்தைக் காட்டிலும் திருத்திய ஊதிய விகிதத்தின்கீழ் அதிகமாகவே பணப் பயன் பெற்றவர் என்பதாலும், 1-4-1976 தேதி முதல் புதிய ஊதியத்தின் கீழ் வர அண்ணாமலைப் பல்கலைக் கழகம் ஒருசில ஆசிரியர்களுக்கு மட்டிலும் அரசு அனுமதி வழங்கினால் இத்தகைய கோரிக்கைகள் பிற கல்லூரி ஆசிரியர்களிடமிருந்து வரக்கூடும் என்பதாலும் இக்கோரிக்கைகளை ஏற்பதில்லை என்று அரசு பல்கலைக் கழகத்திற்குத் தெளிவுபடுத்தியுள்ளது.

4. 5, 6, வீட்டு வாடகைப்படி வழங்குதல்.—அரசு ஊழியர் களுக்கு வழங்கப்பட்டதைப் போன்று அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும் பஞ்சப்படி போன்ற படிகள் வழங்க அரசு அவ்வப்பொழுது மானியம் வழங்கி வந்துள்ளது. தற்பொழுது 1-10-1979 மற்றும் 1-2-1980 ஆகிய தேதி முதல் அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட பஞ்சப்படி அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்களுக்கும் வழங்கி அதற்கான கூடுதல் செலவினத்திற்கான மானியம் வழங்குவது குறித்து பல்கலைக் கழகத்தின் பரிந்துரை அப்பல்கலைக் கழக பதிவாளருடன் கலந்தாலோசிக்கப்பட்டுள்ளது. இதற்கான ஆணைகள் விரைவில் பிறப்பிக்கப்படும்,

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தானியங்கும் (Autonomous) சட்டபூர்வமாக நியமிக்கப்பட்ட கல்விக் கேந்திரமாகும். இப்பல்கலைக் கழகத்தின் ஆசிரியர் பணியா ளர்கள் நியமனம், அவ்வூழியர்களுக்கு ஊதியங்கள் நிர்ணயித் தல் போன்ற எஞ்சியுள்ள 15 கோரிக்கைகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வரம்பிற்கு உட்பட்டவையாகும். எனினும், பிற பல்கலைக் கழகங்களைப் போன்று இப்பல்கலைக் கழகம் செவ்வனே செயலாற்ற அரசு ஒவ்வொரு ஆண்டும் ரூ. 24·59 இலட்சம் மொத்த மானியமாக வழங்கி வருகிறது. இஃதல்லாமலும் பல்கலைக் கழக ஊழியர்களுக்கு அரசு ஊழியரைப் போன்றே வீட்டு வாடகைப்படி போன்ற படிகள் அளிப்பதற்கும் பல்கலைக் கழக மானியக் குழு பரிந்துரைத்த



திருத்திய ஊதிய விகிதங்களை அளிப்பதனால் ஏற்படக் கூடிய கூடுதல் செலவினம் இன்ன பிற திட்டங்களுக்காக மானியங்களும் அரசினால் அவ்வப்பொழுது அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தக் கருத்துக்கள் அரசு தன்னுடைய பங்கினை பொறுப் போடு நிறைவேற்றி வருகிறது என்பதற்கான ஒரு விளக்கமாக அமையும் என்று நான் நம்புகிறேன், இப்படிப்பட்ட சூழ்நிலையில் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆசிரியர்கள் அறப் போராட்டம் என்ற பெயரில், மாணவர்களுடைய எதிர்கால வாழ்க்கையை வெகுவாக பாதிக்கின்ற அளவுக்கு அங்கே வேலை நிறுத்தத்திலே ஈடுபட்டிருப்பது என்பது நம் அனைவராலும் ஆதரிக்கப்பட முடியாத ஒரு சூழ்நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த மாமன்றத்தின் மூலமாக, இன்றைக்கு அறப் போராட்டத்திலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிற ஆசிரியப் பெருமக்களுக்கு நான் விடுகின்ற வேண்டுகோள், எதிர்காலத்தில் மாணவர்களுடைய வாழ்க்கையை வெகுவாகப் பாதிக்கும் என்பதை நிச்சயமாக உணர்ந்திருக்கிற சூழ்நிலையில் இத்தகைய அறப் போராட்டத்தைக் கைவிட்டு, அரசோடோ, அல்லது அதிகாரிகளோடோ, அல்லது பல்கலைக் கழக நிர்வாகத்துடனோ நல்லமுறையிலே பேச்சு வாதத்தை நடத்தி இன்னும் இருக்கிற பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டுமே தவிர, ஆசிரியப் பெருமக்கள் இத்தகைய காரியங்களிலே ஈடுபடக் கூடாது என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்,

மாண்புமிகு உறுப்பினர் செஞ்சி இராமச்சந்திரன் அரசு கவனிக்கவில்லையென்பதைத் தான் அதிகமாக வலியுறுத்தினார். ஆகவே, மற்றவைகளைச் சொல்வதற்கு அவருக்கு விருப்பம் இல்லை என்று நான் கருதுகிறேன். அவருக்குக் குறிப்பிட்டு நான் சொல்லிக் கொள்ள விரும்புவதெல்லாம், இங்கே, பல உறுப்பினர்கள் சொல்லிய கருத்திலேயிருந்து நாங்கள் தெரிந்து கொள்ள வருவது; இப்பொழுது எங்களாலே குறிப்பிடப்பட்ட சில கோரிக்கைகள் தவிர, நீண்டகாலக் கோரிக்கைகள் என்ற பெயரிலே, 23 ஆண்டுகளாகியும் வேலை நிரந்தரமாகவில்லை. ரிட்டையர் ஆனதற்குப் பிறகு வேலை நிரந்தரமாகிறது;

[முற்பகல் 10.10]

இறந்ததற்குப் பின்னாலே வேலை நிரந்தரம் ஆகிறது. இது எவ்வளவு பெரிய கொடுமையான நிகழ்ச்சி என்பதைத்தான் இந்த மாமன்ற உறுப்பினர்கள் இங்கே எடுத்துக் காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் செஞ்சி ராமச்சந்திரன் அவர்கள் குறிப் பிட்டார்கள். போர்ட் ஆப் செலக்‌ஷனிலே இப்போது ரெவின்யு

அமைச்சராக இருக்கிற மாண்புமிகு எஸ். டி. எஸ். அவர்கள் இருந்தார்கள் என்று, அவரும் இருந்தார். அவர்களுக்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் செஞ்சி ராமச்சந்திரனும் இருந்தார். அப்போது தி. மு. க. ஆட்சியிலே இருந்தது. அப்போதே அரசு கவனிக்கவில்லை என்ற கருத்து அவருக்குப் பட்டிருக்குமானால், கவனிக்க வைத்திருக்கலாம், ஆனால் இன்றைக்கு நான் அவருக்கும் இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கும், ஆசிரியப் பெருமக்களுக்கும் மற்றவர்களுக்கும் சொல்ல விரும்புவதெல்லாம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைக் கவனிக்க ஆரம்பித்திருக்கிறது. ஆகவே நாங்கள் நிச்சயமாகக் கவனிப்போம்; இது போன்ற தவறுகள் ஏற்படாத வண்ணம் அரசுக்கு இருக்கின்ற அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்துவோம். ஆகவே யாரும் அதற்காக அச்சப்படத் தேவையில்லை ஐயப்படத்தேவையில்லை. ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் இது குறித்து மேலும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற காரணத்தினால் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவை இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தால் இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## கவன ஈர்ப்புகள்

### (அ) அடையார் மல்லிகைப்பூ நகரில் ஏற்பட்ட தீ பத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மு. அம்பிகாபதி, டி. ஆர். ராஜாராம் நாயுடு, இரா. தாமரைக்கனி ஆகியோர் கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுள் ஒருவர் இதை, வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. மு. அம்பிகாபதி

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை அடையாரில் உள்ள மல்லிகைப்பூ நகரில் 3-7-1980 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் 209 வீடுகள் எரிந்து சாம்பலானது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன.



மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, 3-7-1980 அன்று காலை 9-45 மணியளவில் சென்னை அடையாரில் உள்ள மல்லிகைப்பூ நகரில் ஏற்பட்ட தீ விபத்தில் 55 குடியிருப்புகளும், ஓர் கால்நடை தொழுவமும் பாதிக்கப்பட்டன. உயிர்ச்சேதமோ, கால்நடைச்சேதமோ இல்லை. ஆனால் ஐந்து வயதிற்குட்பட்ட இரு சிறார்களும், 40 வயதான ஒருவரும் இலேசாகக் காயமடைந்தனர். இவர்களுக்கு தக்க மருத்துவ உதவி அளிக்கப்பட்டது. மொத்தச் சேதம் மதிப்பு சுமார் ரூ. 50,000. தீ விபத்திற்கான காரணம் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் அடையாரிலுள்ள ராணி மெய்யம்மை பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் தங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, சென்னை மாநகராட்சியினரால் உணவுப் பொட்டலங்களும் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட 55 குடும்பங்களுக்கு தலா ரூ. 100 வீதம் நிவாரணத் தொகை வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் 5 கிலோ அரிசி, ஒருபுடவை, ஒரு வேஷ்டி வழங்கப்பட்டுள்ளது. வருவாய்த்துறை பலவகை எண். 1647, நாள் 4-7-80-ல் ஆணையிட்டுள்ளபடி மீதமுள்ள ரூ. 100 நிவாரணத் தொகையை வழங்க சென்னை மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

திரு. மு. அம்பிகாபதி:— மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சட்டமன்றக் கூட்டம் தொடங்கியதற்குப் பின்னாலே பெரும்பாலும் நிரம்ப தீ விபத்துக்கள் பற்றிய விவரங்கள் வருகின்றன. மாயவரத்திலே தீ விபத்து, மன்னார்குடியிலே, சென்னையிலே பல இடங்களிலே வீடுகள் எரிந்திருக்கின்றன. ஆகவே குடிசைப் பகுதிகளிலே இந்த தீ பரவுவதைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதோடு, நான் நேற்றைய தினம் கூட உங்களுக்குக் கவனத்திற்குக் கொண்டு வந்தேன். நேற்றைக்கு முன்தினம் கூட பேசினேன்— அவர்களுக்கு அந்த 200 ரூபாய் கொடுக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்களே தவிர, அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டதற்குப் பதில் இல்லை. அவர்களுக்கு மனம் இருக்கிறது. அவர்கள் முதல்வரிடத்தில் பேச இருக்கிறார்கள் போல் இருக்கிறது. எனவே அவர்களுக்கு 500 ரூபாய் வேண்டும் என்று கேட்டேன். நேற்றைய முன் தினம் 500 கேட்டதற்குப் பின்னாலே நேற்று 501 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். எனவே குடிசைகள் எரிந்தால் அதை மாற்றிக் கட்டிக் கொள்ள ரூ. 550 கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விலைவாசிகள் ஏறி இருக்கின்றன. எனவே மாண்புமிகு அமைச்சரிடம் இருந்து காருண்யமிக்க பதிலை எதிர்பார்க்கிறேன். நாங்கள் 200 ரூபாய் கொடுத்திருக்கிறோம் என்ற பதிலை அவர்கள் திரும்பச் சொல்லாமல் இருப்பார்கள் என்றும் எதிர்ப்பார்க்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:— தலைவர் அவர்களே, இதுவரையிலும் 80 ரூபாய்கள்தான் கொடுத்து வந்தார்கள். அதற்குப்பிறகு இப்போது 100 ரூபாய் கொடுக்கப்

பட்டது. அந்த 100 ரூபாயை 200 ரூபாயாக உயர்த்தி, 100 தச விகிதம் உயர்த்தி அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. விலைவாசி இன்றைக்கு 100 சதவிகிதம் அதிகரிக்கவில்லை என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலைமையிலே 200 ரூபாய்கள் தான் கொடுக்கமுடியும் என்று அரசு கருதி அதை உயர்த்தி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மழை காலம் வந்து விட்டது. தீப்பிடித்தது பற்றிய நிகழ்வினைக் குறித்தே கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் வந்து கொண்டு இருக்கின்றன. அதை, மாற்றிக் கொண்டு வேறு பொருள் பற்றி வந்தால் நன்றாக இருக்கும்.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மழை காலம் வந்து விட்டதால் தீப்பிடிப்பது குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வரக்கூடாது என்று சொல்லிரீர்கள். சென்னையைப் பொறுத்த வரையில் எப்போதும் தீப் பிடிக்கும், சென்னையில் இருப்பதைவிட கிராமப்புறங்களில் அதிகமான அளவிற்குக் குடிசைகள் இருந்தாலும், அங்கே யெல்லாம் அடிக்கடி தீப்பிடிப்பது இல்லை. ஆனால் சென்னையில் தான் அடிக்கடி தீப்பிடிக்கிற சம்பவங்கள் ஏற்படுகின்றன. இவைகள் இயற்கையாக கிராமங்களில் ஏற்படுவதுபோல் ஏற்படுவது அல்ல. செயற்கை முறையில் தீப்பிடிப்பவை. சென்னையில் நடப்பதால் அவற்றிற்கு பத்திரிகை விளம்பரமும் கிடைக்கிறது. ஆகவே இந்த தீப்பிடிப்பு சம்பவங்கள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று சொன்னால்—இப்போது கொடுக்கும் ரூ. 200 அதிகம் என்று கருதுகிறேன்—அதை அவர்கள் வாங்கி நல்ல முறையில் பயன்படுத்துவது இல்லை—அந்தப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் கொடுத்து விட்டு, ரூபாய் கொடுப்பதற்கு பதிலாக அரசே அஸ்பெஸ்டாஸ் போட்ட வீடுகள் கட்டிக் கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, தீப்பிடிக்காத வீடுகள் கட்டுவது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

ஆ. வடஆற்காடு மாவட்டத்தில் அரசாங்கக் கடன் வசூல் கெடுபிடி.

திரு. இல. பலராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, "வடஆற்காடு மாவட்டத்தில் கூட்டுறவுத் துறையையும், வருவாய்த்துறையும், கடன்களை வசூல் செய்வதில் கடும் நடவடிக்கை எடுப்பது பற்றிய" அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:—பேரவைத் தலைவர் அவர்களே,



மேற்காணும் பொருள் குறித்து வட ஆற்காடு மாவட்ட ஆட்சியரிடமிருந்தும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடமிருந்தும் விவரங்கள் பெறப்பட்டன.

2. வட ஆற்காடு மாவட்ட ஆட்சியர் வருவாய் அலுவலர்கள் கூட்டத்தில் இதுபற்றி ஆராய்ந்ததில், நிலவரி மற்றும் அரசுகடன் தொகைகள் வசூலிப்பதில் ஜப்தி போன்ற நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை என்பது தெரியவருகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

3. அதேபோல, கவன ஈர்ப்பு அறிவிப்பில் குறிப்பிட்டவாறு அவையில் விவாதத்திற்கு எடுத்துக் கொண்ட கடன் தள்ளுபடி செய்யும் மசோதாவும், வரவு செலவுத் திட்டமும் இருக்கும்போது வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி ஜப்தி நடவடிக்கையோ அல்லது ஏற்கனவே ஜப்தி செய்யப்பட்ட சொத்துக்களை ஏல விற்பனை செய்ய நடவடிக்கையோ எடுக்கவில்லை. நவம்பர் 1978 முதல் ஆகஸ்ட் 1979 வரை தவணை தவறிய கடன் பாக்கி மிகவும் அதிகமாக இருந்ததாலும், சங்கங்களிடமிருந்து வரவேண்டிய தவணை தவறாத கடன் நிலுவையில் குறைவடைய இருந்ததாலும், ரிசர்வ் வங்கியினர் அனுமதித்த கடன்களைப் பெற்று, ஏற்கனவே பெற்ற கடன்களை முறையாக திருப்பிச் செலுத்திய உறுப்பினர்களுக்கு புதிய பயிர்க் கடன்கள் வழங்க இயலவில்லை. தவணை தவறிய கடன்பாக்கிகளைக் குறைக்கும் எண்ணத்துடன் ஜூலை முதல் செப்டம்பர் 1979 வரையில் மிகவும் மோசமான இனங்களில் மட்டும் அசையும் மற்றும் அசையாத சொத்துக்களை ஜப்தி செய்யும் நடவடிக்கையை மிகவும் கவனத்துடன் செய்தது. செப்டம்பர், 1979-க்கு முன்னர் ஜப்தி செய்யப்பட்ட அசையும் மற்றும் அசையாத சொத்துக்களைப் பொறுத்தவரையில், ஜூலை மற்றும் ஆகஸ்ட் 1980-ல் ஏல விற்பனை நடத்தப் போவதாக மே மற்றும் ஜூன் 1980-ல் ஏல விளம்பர அறிக்கைகள் வழங்கப்பட்டன. ஆனால் இதுவரை எந்தவிதமான ஏல விற்பனையும் நடத்தப் பெறவில்லை. கூட்டுறவுச் சங்கங்களுக்கு திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய விவசாயக் கடன்களை ரத்து செய்வது தொடர்பாக அரசு ஆணை வெளி வருவதைப் பொருத்தே மத்தியக் கூட்டுறவு வங்கி ஜப்தி செய்த பொருட்களை ஏல விற்பனை செய்ய முனையும்.

4. தொடர்ந்து தவணை தவறிய கடன் பாக்கி இருந்து வந்ததன் காரணமாக வடாற்காடு மாவட்டத்திலுள்ள வேலூர் மத்திய கூட்டுறவு வங்கி 1979-80 ஆம் ஆண்டில் 2.64 கோடி ரூபாய் மட்டுமே பயிர்க் கடனாக வழங்க முடிந்தது. ஆனால் இதே வங்கி 1976–77-ல் 12.37 கோடி ரூபாய்க்கு பயிர்க் கடன் வழங்கியுள்ளது.

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்து இருக்கிற அறிக்கையில் ஜப்தி, ஏலம் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை என்று கொடுத்துள்ளார்கள். ஆனால் இது போன்ற நிலைகள் பரவலாக இருக்கின்றது. அதன் காரணமாகத்தான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தேன். மேலும் இப்படிப்பட்ட

நிகழ்ச்சிகள் நடக்காத கிராமங்களுக்கும் ஆங்காங்கே அதிகாரிகள் சென்று கெடுபிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார்கள். இதுபோன்று நடவடிக்கைகள் மேலும் ஏற்படாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

வருவாய்த் துறை கடுமையாக இல்லையென்றாலும், கூட்டுறவுத் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மட்டத்தில் இது எப்போதும் இருக்கிறது என்பதை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையின் மூலம் நான் ஒன்றை தெரிவித்து, அது நாட்டு மக்களுக்குப் போய் சேர வேண்டும் என்று விரும்புகிறேன். கூட்டுறவுக் கடன்களை திருப்பிக் கட்டுவதா, இல்லையா என்ற பிரச்னை நாட்டிலே இருக்கிறது. கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்தவரையில் இந்த அரசு இப்போது 50 கோடி, 60 கோடி அளவிற்குத் தள்ளுபடி செய்து இருக்கிறது. அது யார் யாருக்குத் தள்ளுபடி செய்வது என்பதைப் பற்றிய விரிவான முடிவுகளை அரசு எடுத்து வெளிப்படுத்தும்.

ஆனால் அடிப்படை நில வரி, தண்ணீர் தீர்வை இதைக் கட்டுவதற்கு தயங்குவது என்பது கூடாது. அதைத் தள்ளி வைக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை. நான் இதைத் தெரிவிக்கிற காரணம், இந்த அவை மூலம் நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதாகும். அடிப்படை நில வரி, அடிப்படை தண்ணீர் வரி ஆகியவற்றைக் கட்டுவதற்கு நீங்கள் எல்லாம் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். கட்டவேண்டும். வருவாய்த் துறை அதிகாரிகள் இன்றையதினம் இதமாகப் பேசியும், நியாயமாக நடந்தும் அதனை வசூலித்துக்கொண்டு இருக்கிறார்கள். எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நடவடிக்கை எடுக்காமல் இருந்தால், உங்களுக்குத்தான் வரிச் சுமை அதிகமாக இருக்கும். ஆகவே, உடனடியாகக் கட்டி விடுங்கள். தலைவர் அவர்களே, இதனை நான் தங்கள் மூலமாக நாட்டு மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-20)

## 4. ஒழுங்குப் பிரச்னை.

### உறுப்பினர்களது விடுதி அறைகளில் ஒட்டப் பெற்ற விதி முறைகள்.

திரு. ரா. உமாநாத் : சார், பாயிண்ட் ஆஃப் ஆர்டர். நேற்று விசித்திரமான முக்கியமான நிகழ்ச்சி ஆஸ்டலில் நடந்திருக்கிறது. அமீனா வந்து ஜப்தி நோட்டீஸ் ஒட்டுகிற மாதிரி ஒவ்வொரு அங்கத்தினர் அறையிலும் கதவில் ஒரு நோட்டீசை ஒட்டிவிட்டுப் போயிருக்கிறார்கள். அதிலே கி. மு. அழகர்சாமி, அரசுச் செயலர் என்று அடியில் போட்டிருக்கிறது. செக்ரட்டரி என்ற ஹோதாவில் அந்த நோட்டீஸ் ஒட்டப்பட்டிருக்கிறது. அதிலே சட்டமன்ற உறுப்பினர்கள்



விடுதியில் தங்குவோர் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் என்ற தலைப்பில் நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பூராவும் படித்துப் பார்த்தால், இந்த அவையினுடைய சுய கௌரவம் இதில் அடங்கியிருக்கிறது; இல்லை என்றால் இந்த மாதிரி மாட்டர்ஸ் நான் வலியுறுத்த மாட்டேன். அங்கத்தினர்களுக்கு சட்டப்படி இருக்கிற விபர்ட்டீசை இது எரோட் செய்கிறது. அந்த முறையில் இந்த நோட்டீஸ் இருக்கிறது.

We are already governed by the Rules of the House.

ரூல்ஸ் இருக்கிறது. இந்த ரூல்ஸ்படி இந்த நோட்டீஸ் இல்லை. ரூல்சுக்கு மாறாக யாருடைய அதாரிட்டியில் இந்த நோட்டீசை பப்ளிஷ் செய்தார் என்று தெரியவில்லை. உங்களுடைய அதாரிட்டியில் செய்யப்பட்டதா அல்லது செக்ரட்டரியின் அதாரிட்டியில் செய்யப்பட்டதா ? ரூல்சுக்கு மாறாக ஒட்டப்பட்டிருக்கிறது. ரூல்ஸ்-5, சாலரீஸ்

Payment of Salaries Act and Rules framed there under

Rules 5.—Mode of payment of charges : (1) Any charge due by a Member dnucr any of these rules shall be paid....

(a) in the case of continuous stay of not less than thirty days, at the end of the period of every thirty days, and

அதன் படி கடைசியில்தான் 'காஷ்' கொடுக்க வேண்டும்.

(b) in any other case, at the time the Member vacates the room.

ஆகவே, முன்பணம் கொடுக்க வேண்டும் என்பதில் நமக்கு கட்டுப்பாடு இல்லை. ஆனால் நேற்று ஒட்டின நோட்டீசில் வாடகை முன்பணமாக செலுத்தத்தக்கதாகும் என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே நிறைய குறிப்பிட்டிருக்கிறார்கள் என்று நீங்களே சொன்னீர்கள். ஆகவே, அது சம்பந்தப்பட்ட முழு விவரத்தையும் என்னுடைய அறையிலே உட்கார்ந்து விவாதிக்கலாம்.

திரு. ரா. உமாநாத் : இது அவைக்குத் தெரிந்தாக வேண்டும்;

It has become a public Matter.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பிஸ்னஸ் அட்வைசரி கமிட்டியில் எல்லாக் கட்சித் தலைவர்களும் இருக்கிறார்கள். ஆகவே, கமிட்டியில் அவர்களோடு கலந்து பேசலாம்.

திரு. ரா. உமாநாத் : Nobody is above the House. Secretary cannot be above the House.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கருத்தில் மாறுபாடு இல்லை. விடுதி சம்பந்தமாக நிறைய பிரச்சனைகள் இருக்கின்றன; அதை அறையில் வைத்துபேசலாம். அங்கே விரிவாகச் சொல்ல வாய்ப்பு இருக்கிறது.

* டாக்டர். மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்போது இங்கே திரு. உமாநாத் அவர்கள் குறிப்பிடுவது விளம்பரம் ஆகக் கூடாது என்று தாங்கள் விரும்பினாலும் அங்கே ஒட்டப் பட்டிருப்பதை நாளையதினம் பத்திரிக்கையாளர்கள் போட்டோ எடுத்து போட முடியும். எனவே, திரு. உமாநாத் அவர்கள் சொல்லியபடி அது கண்டிக்கத்தக்கது என்று தீர்ப்பு வழங்கி னால்தான் அது எல்லா உறுப்பினர்களின் மரியாதையையும் காப்பாற்றுவதாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை ஏற்கெனவே இருந்த சட்ட திட்டங்கள் தான்.

திரு. ரா. உமாநாத்: உறுப்பினர்கள் முன்பணம் கட்ட வேண்டுமென்று விதி இல்லை.

"at the end of the period of every thirty days" என்பதாக மாதக் கடைசியில் பணம் கொடுக்க வேண்டுமென்பது தான் ரூல். ஆனால் முன்பணம் கொடுக்க வேண்டும் என்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். 2½ ரூபாய் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. 2½ ரூபாய் அல்ல. 2½ பைசா வானாலும் 'ரூல் ஸேய்ஸ் நோ' முன் பணம்.

Who gave him the authority, I want to know.
ஒரு நாள் தங்குவது என்றால் சட்டத்திலே கிளியர் டெஃபனிஷன் இருக்கிறது.

"Days means a period of twenty-four hours beginning at the hour of occupation of accommodation அப்படியானால் நாங்கள் காலை 7 மணிக்கு வந்து தங்கினால் மறுநாள் காலை 7 மணி வரையில் ஒரு நாள். ஆனால் நேற்று ஒட்டிய நோட்டீஸ்படி 'வாடகை வசூல் செய்யும் காரணம் கருதி மதியம் 12 மணி முதல் மறுநாள் மதியம் 12 மணி வரை ஒரு நாள் என்று கணக்கிடப்படும்'" என்று இருக்கிறது.

Who gave him the authority? Let it be anybody, whether it is the Department Secretary or the Assembly Secretary. He cannot treat the Members of this House like this.

இந்த ஹவுஸ் நினைத்த மாதிரி கட்டுப்படும் என்று நீங்கள் நினைத்துவிடக் கூடாது.

Violation of Rules - Master and servants relationship
தாங்கள் அனுமதிக்க முடியாது. செக்ரட்டரி செக்ரட்டரி தான்.



ஹவுஸ் ஆஃப் காமன்ஸிலே செகரட்டரிக்கு டெசிக்னேஷன் என்ன தெரியுமா? க்ளார்க். அதுதான் அங்கே டெசிக்னேஷன். ஆகவே நாம்தான் செகரட்டரி என்று சொல்லிக்கொண்டு ஒரு பெயர் கொடுத்து வைத்திருக்கிறோம். ஆனால் உண்மையில் அந்தப் பொசிஷன் கிளார்க்தான்.

He is subject to the authority of this House
ஆகவே அவர்கள் ஏதோ மாஸ்டர் மாதிரியும் நாம் சர்வன்ட் மாதிரியும் இருக்கின்ற நிலை சரியா? இந்த நோட்டீஸை இவ்வளவு அவசரமாக ஒட்டவேண்டிய அவசியம் என்ன? அவ்வளவு அவசரம் ஏன்? ஹவுஸ் கமிட்டி கான்ஸ்டிட்யூட் பண்ணப்போகிறோம், அதற்குப் பிறகு டிஸ்கஸ் பண்ணலாம் அல்லவா? அல்லது மிகவும் அவசரம் என்றால் பிஸ்னஸ் அட்வைசரி கமிட்டியிலே அதை டிஸ்கஸ் பண்ணலாம் அல்லவா? ஆகவே அதற்குள்ளாக என்ன அவசரம்? இந்த ஹவுஸினுடைய மெம்பர்களை ஒரு ஆஃபீஸர் டீல் பண்ணுவது சரியல்ல என்பது ஒரு விஷயம். நான் அதற்குப் போகவில்லை, ஆகவே தயவு செய்து இதை வாபஸ் வாங்கவேண்டும். அதைக் கண்டிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதை நானும் ஏற்றுக்கொள்கிறேன்.

Let it eb reitified here itsolf.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே,

Responsibility for loss of articles, etc.

என்று சொல்லக்கூடிய 9-வது விதியிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரமணி அவர்களை தயவு செய்து அமரும்படி வேண்டுகிறேன். நான் இது குறித்து செயலாளர் அவர்களைக் கூப்பிட்டுக் கேட்டேன். அவர்களுடைய கவனத்திற்கு வராமல் இது நடந்திருக்கின்றது என்று சொல்லி இருக்கிறார். (கூச்சல், குழப்பம்)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அப்படியானால் சம்பந்தப் பட்ட அந்த அதிகாரியை சஸ்பன்ட் பண்ணி இருக்கிறார்களா? என்ன பண்ணி இருக்கிறார்கள்?

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமாநாத் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் கொண்டு வந்திருக் கின்ற இந்த நிகழ்ச்சி வருந்தத்தக்கூடிய ஒன்றுதான். உறுப்பினர் களின் அறைக் கதவுகளில் ஒட்டுகின்ற அளவுக்கு நிலைமை போவது வருந்துவதற்குரிய ஒன்றுதான். எனவே, தயவு செய்து

அந்த உத்தரவை வாபஸ் பெற்றுக்கொண்டு பிஸினஸ் அட்வைசரி கமிட்டி கூட்டி சரியான விதிமுறைகளை வகுக்கலாம். மேலும் ஹவுஸ் கமிட்டி அமைக்க இருக்கிறோம். அந்தக் கமிட்டியிலும் பரிசீலிக்கலாம் அல்லது அவசரமாக பிஸ்னஸ் அட்வைசரிக் கமிட்டியைக் கூட்டலாம். ஆகவே இந்த நிகழ்ச்சிக்கு நான் வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இதைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மறுபடியும் இதை ஆராயலாம் என்று மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இத்தோடு இந்தப் பிரச்சினையை விட்டுவிடலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, இப்போது இரண்டு தவறுகள் நடைபெற்றிக்கின்றன. அது செயலாளர் அவர்களுடைய பெயரால் ஒட்டப்பட்டிருக்கின்றது. ஆனால் தாங்கள் இப்போது இந்த அவைக்குக் கூறுகிறீர்கள் அது செயலாளர் அவர்களுடைய கவனத்திற்கு வராமல் செய்யப் பட்டிருப்பதாக. ஆக இது செயலாளருக்கும் தெரியாமல் யாரோ ஒரு அதிகாரி இப்படிச் செய்திருக்கிறார்கள். அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ? இதுபோன்று முன்பு பல அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிவிட்டு பிறகு நடவடிக்கைகள் எடுக்கப்படாத நிலைகள் இருந்திருக்கின்றன. ஆகவே அதுபோன்று இல்லாமல், இப்போது உறுதியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ? இப்போது செயலாளர் அவர்களுக்குக் களங்கத்தை உண்டாக்கும் அளவுக்கும் இந்த அவையின் உறுப்பினர்களுக்கு மானபங்கம் ஏற்படுகின்ற அளவுக்கும் செய்யப்பட்டிருக்கின்ற இந்தக் காரியத்திற்கு யார் காரணமாக இருந்தாலும் அந்த அதிகாரி மீது நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலே இந்த நோட்டீஸைப் பொறுத்தவரை பேரவை முன்னவர் அவர்கள் சொன்ன மாதிரி......

திரு. உ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, செயலாளர் அவர்களுக்குத் தெரியாமல் நடந்திருக்கின்றதென்றால், செயலாளர் அவர்களுடைய பெயரால் இந்த நோட்டீஸ் ஒட்டப் பட்டிருப்பது சரியா ? அப்படியானால் ஏமாற்றுவதற்காகத்தான் அவருடைய பெயரால் நடந்திருக்கின்றதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதற்கு முன்னால் இருந்த சபாநாயகர் அவர்கள் எழுதி ஒப்புதல் அளித்துவிட்டுப் போய் இருக்கிறார்கள். அதைத்தான் இப்போது ஒட்டி இருக்கிறார்கள். அவ்வாறு ஒட்டப்பட்ட நோட்டீஸ் வாபஸ் வாங்கப்படுகின்றது. இதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரி மீது நடவடிக்கை எடுக்க





வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள் இது பற்றி முழுவதும் விசாரிக்கப்பெற்று, தவறு யாருடையதாக இருந்தாலும் அவர் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்த அறிவிப்பு

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு கூத்தகுடி சண்முகம் அவர்களை கோர்ட்டுக்கு கட்சித் துண்டு போட்டுக் கொண்டு வரக்கூடாது என்று நீதிபதி சொன்னது சம்பந்தமாகக் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்திற்குன் போகாதீர்கள். நீங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருப் பதாக எனக்கு தகவல் வந்திருக்கிறது. நான் அதை இன்னும் படித்தே பார்க்கவில்லை. உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள் பற்றி பேரவையில் கேட்கக் கூடாது. எனது அறையில் வந்து கேட்க வேண்டும்,

(முற்பகல் 10-30.)

### (ஆ) மானியக் கோரிக்கைகள் மீதான கொள்கைக் குறிப்புகள் அனுப்பி வைக்கப் பெறுவது:

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்திலே மானியக் கோரிக்கை மீது விவாதம் தினமும் நடந்துக் கொண்டிருக்கிறது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிற போது கூட. மானியக் கோரிக்கையின் மீதான அமைச்சரின் கொள்கை விளக்கக் குறிப்பு களை எல்லாம் இரவு 11 மணிக்கு மேல் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். அதற்கு மேல் அந்தக் குறிப்புகளை 12மணி வரையில் படிப்பது மிக கஷ்டமாக இருக்கிறது. என்று குறிப் பிட்டிருக்கிறார். நமது மாண்புமிகு உறுப்பினர் இராஜமாணிக்கம் அவர்கள் கூட அந்தக் குறிப்பு காலம் கடந்து வந்தது என்ற கோபத்தில் கிழித்து எறிந்தார். இன்றைய மானியக் கோரிக்கை யின் மீதான விளக்கக் குறிப்புகள் எல்லாம் நேற்று இரவு இரண்டு மணிக்குத்தான் எனக்கு வந்தன. தொடர்ந்து இங்கே அந்தப் பிரச்சனையை எடுத்துவைத்த பிறகும், தலைவர் அவர்கள் அதற்கான உத்தரவுகளை இட்ட பின்னாலும் இப்படியே தொடர்ந்து நடைபெறுகிறது.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, என் பெயர் எழுப்பப் பெற்றிருப்பதால், நான் சொல்ல வேண்டி வருகிறது. முதலிலே மன்றத்தில் இந்தப் பிரச்னையை நான்தான

எழுப்பினேன். நீங்கள் கூட அப்போதும் எடுத்துச் சொன்னீர்கள், நீங்கள் தான் இந்தச் சபைக்கு தலைவர், முழு பொறுப்பும் உங்களுடையதே. இந்த இடத்தில் உங்கள் வார்த்தைதான் வேத வாக்காக மதிக்கப் பெற வேண்டும். என்றாலும் நீங்கள் சொல்லியே அவர்கள் எதுவும் கேட்கவில்லை என்றால், அவர்கள் அதை மதிக்கவில்லை என்றால் என்ன செய்வது? . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்; மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரது உணர்வுகளையும் நான் புரிந்திருக்கிறேன். ஏற்கனவே அவைகள் முறையாக முன் கூட்டியே வழங்கப் பெற வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. திரும்பவும் முன்போல தொடர்ந்து நடைபெறுவதாக உறுப்பினர்கள் சொல்கிறார்கள். ஆகவே சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்கள் கொள்கை விளக்கக் குறிப்புகளை இரண்டொரு நாள் முன்னதாக உறுப்பினர்களுக்குச் சேரும்படி செய்ய உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

## 6, அரசினர் தீர்மானங்கள்

### (அ) மதிப்பீட்டுக்குழு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதிப்பீடுட்க் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார். மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 210வது விதியின் கீழ் 1980-81ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று: நிறைவேற்றப் பெற்றது.

### (ஆ) பொதுக்கணக்குக் குழு தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுக்கணக்குக் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார். மாண்புமிகு அவை முன்னவர்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 222வது விதியின் கீழ், 1980-81 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும் படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்,''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது,

### (இ) பொது நிறுவனங்கள் குழு-தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொது நிறுவனங்கள் குழுவிற்கு பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் தீர்மானம் கொண்டு வருவார். மாண்புமிகு அவை முன்னவர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே. நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 235-வது விதியின் கீழ், 1980-81 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப் பேரவை தேர்ந்தெடுக்கும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

### (ஈ) உரிமைக் குழு தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழயன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 245-வது விதியின் கீழ்: 1980-81 ஆம் நிதியாண்டுக்குரிய உரிமைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதினான்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தேடுக்கும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பொற்று, நிறைவேற்றப்பெற்றது.

(2) அவைக் குழு தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 288 (1)-வது விதியின் கீழ், 1980-81-ஆம் நிதியாண்டுக்குரிய அவைக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி பதின்மூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத்தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

7. அறிவிப்பு

பேரவைக் குழுக்கள், தேர்தல் நடைமுறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஒற்றை மாற்று வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் மதிப்பீட்டுக் குழு (எஸ்டிமேட்ஸ் கமிட்டி) பொதுக்கணக்குக் குழு (பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி) பொதுநிறுவனங்கள் குழு (பப்ளிக் அண்டர் டேக்கிங்ஸ் கமிட்டி) உரிமைக் குழு (கமிட்டி ஆப் பிரிவிலேஜஸ்) அவைக்குழு (ஹவுஸ்கமிட்டி) ஆகியவற்றிக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத் தாள்களை 1980—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 22ம் நாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3·00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாள் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்புத்தாள்கள் 1980—ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 23-ம் நாள், புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1980—ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 25—ம் நாள், வெள்ளிக் கிழமை பிற்பகல் 3.00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்படவேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின் 1980-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 28—ம் நாள் திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கும் பகல் 1.00 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் சட்டமன்றக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.



8. வரவு செலவுத்திட்டம் 1980-81 வாக்கெடுப்பு-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 26 கைத்தறியும், நெசவுத்தொழிலும்

(ஆ) கோரிக்கை எண் 27 கதர்

கோரிக்கை எண். 26

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரை மேல் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 26— கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ரூ.4,99,30,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவர் அவர்களே, கைத்தறி துணிகளுக்கு கொடுக்கப்படும் தள்ளுபடியை அதிகரித்து துணிகளில் தேக்கத்தை நீக்க தேவையான நிதி ஒதுக்கீடு கோரி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 26— கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,30,000ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

திரு. இல. பலராமன்: தலைவர் அவர்களே, அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் கைத்தறித் துணிகளுக்கு (மத்திய மாநில) அரசுச் சலுகைகளை வழங்க, ஏறிக்கொண்டிருக்கும் நூல் விலைக்கேற்ப துணி விலைகளை நிர்ணயம் செய்து தொழில் நசுங்காமல் பாதுகாக்க வேண்டியதன் அவசியம்பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண்.26— கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,30,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்."

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, மதுரை அங்கையர்கண்ணி சொசைட்டிக்கு மாநில சங்கம் வழங்கப்பட வேண்டிய துணிக்கடன் பாக்கி ரூ.43,000ஐ வழங்காமல் காலம் கடத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 26— கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,30,000-ல் ரூ.100குறைக்க வேண்டும்."

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, பரமக்குடி பகுதியில் சுமார் 40 லட்சம் கைத்தறி துணி தேங்கிக் கிடப்பதை அரசு உடனடியாக வாங்குவது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண்.26— கைத்தறியும் நெசவுத் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.4,99,30,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்.''

கோரிக்கை எண்.27

மாண்புமிகு திரு. எஸ். என், இராசேந்திரன்: தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரை மேல் நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண்.27—கதர் என்ற தலைப்பின் கீழ் ரூ.1,57,91,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. சு. பாலன்: தலைவர் அவர்களே, கதர் உற்பத்தியை மக்களிடையே அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்ற கொள்கையைத் தட்டிக் கழிப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டு தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண். 27 கதர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,57,91,000-ல் ரூ.100 குறைக்கவேண்டும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண். 27- கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,57,91,000—ல் ரூ100 குறைக்க வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன்: தலைவர் அவர்களே, கதர் ஆடைகள் தேவையான அளவு தமிழ்நாட்டில் தயார் செய்யாமல், வெளி மாநிலங்களில் வாங்குவதால் இங்கு வேலைவாய்ப்பு இழக்கும் நிலை ஏற்பட்டிருப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண். 27— கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,57,91,000—ல் ரூ.100 குறைக்க வேண்டும்.



திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

''மானியக் கோரிக்கை எண்.27 கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,57,91,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகளுக்கான விளக்கக் குறிப்புகள் பேரவை முன் வைக்கப்பெற்று இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்லலாம். இறுதியில் நான் பதில் கூறுகிறேன்.

(முற்பகல் 10.40)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது. 3 பில்கள் இருக்கின்றன. இன்றைக்கே 3 பில்களையும் முடித்தாக வேண்டும். அமைச்சர் பதில் சொல்லியாக வேண்டும். ஆகவே பேசுகின்ற உறுப்பினர்கள் நான் ஏற்கனவே கூறியது போல், சுவையாகவும், சுருக்கமாகவும் பேச வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன்; பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறி மானிய கோரிக்கையின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தத் தொழிலிலே பல ஆண்டுகளாக ஈடுபட்டுக் கொண்டிருப்பவர்கள் முக்கியமாக நூல் தட்டுப்பாட்டின் காரணமாகவும். நாள்தோறும் ஏறுகின்ற விலை உயர்வின் காரணமாகவும் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்த அவையிலே பல்வேறு தடவை இதே மானியக் கோரிக்கையின் மீது கருத்துக்களை எடுத்து வைத்திருக்கிறோம். அந்தக் கருத்துக்களையெல்லாம் அரசு இதுவரையிலும் பரிசீலிக்காததால், இதே தட்டுப்பாடு, இதே குறைகள் இந்தத் துறையிலே இருப்பது உள்ளபடியே வேதனைக்குரிய ஒன்றாகும். பொதுவாக நூல் விநியோகிக்கின்ற முறையும், நூல் விலையைக் கட்டுப்படுத்துகின்ற வகையிலும் நாம் கவனித்தாக வேண்டும். நம்முடைய

---

* 3 [563, 689-ம் பக்கத்தில் இணைப்பு I, I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

மாநிலத்திலே உற்பத்தியாகின்ற நூல் நிச்சயமாக நம்முடைய தேவைக்கு அதிகமாக இருப்பதாகச் சொல்கிறார்கள், ஆனால் இன்றைய தினம் நூல் கிடைக்கிறதா என்று சொன்னால், நிச்சய மாக நெசவுத்தொழிலாளர்களுக்கும்; குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அது உரிய முறையிலே, தரமான நூல், நியாயமான விலையிலே கிடைக்கவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாற்றுத்தலைவர் திரு. கோ. விஸ்வநாதன் தலைமை)

பொதுவாக, கூட்டுறவு நூற்பாலைகளிலே உற்பத்தியாகின்ற நூலின் விலை அதிகமாகவும், தனியார் மில்களிலே விற்கின்ற நூல் விலை குறைவாகவும் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை நம் அமைச்சர் அவர்கள் விசாரணை செய்ய வேண்டும் என்றுக் கேட்டுக் கொள்கிறேன். இந்தக் கூட்டுறவு நூற்பாலைகளிலே நூலின் விலையை நிர்ணயம் செய்கின்றவர்கள் அங்குள்ள அதிகாரிகள்தான், ஆனால் தனியார் மில்களிலே விலை குறைவாக இருப்பதற்கு காரணம், இந்த கூட்டுறவு மில்களிலே உள்ள அதிகாரிகள் தனியார் மில்களின் முதலாளிகளோடு சேர்ந்துக்கொண்டு செய்வதால்தான், கூட்டுறவுத் துறையிலே விலை அதிகமாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. இதைக் கவனிக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே, இன்றையதினம் பருத்தியை உற்பத்தி செய்கின்ற விவசாயிக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை. அவர்களுக்கு இந்த கொள்முதல் விலையை அதிகரிக்கவில்லை. முன்பு எப்படி இருந்ததோ அப்படித்தான் இருக்கிறது. ஆனால், நூலின் விலை மட்டும் நாள்தோறும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. கடந்த மூன்று மாதங்களுக்கு முன் அதாவது மே மாதத்தில் 40 ஆம் நம்பர் நூல் 10 ராத்தல் கொண்ட ஒரு கட்டு அன்றைக்கு ரூ.130 ஆக இருந்தது. தற்போது 8 ரூபாய் அதிகமாகி ரூ. 138க்கு விற்கிறது. அதைப் போல் 60 நம்பர் நூல் 10 ராத்தல் கொண்ட ஒரு கட்டு மே மாதத்தில் 194 ரூபாயாக இருந்தது. தற்போது 200 என்ற அளவுக்கு ஏறியிருக்கிறது. அதைப்போல் 80 ஆம் நம்பர் நூல் மே மாதத்தில் 260 ரூபாயாக இருந்தது. தற்போது 272 ரூபாயாக 12 ரூபாய் அதிகமாக விற்கிறது. ஆகவே, இதை தயவு செய்து கவனத்தில் கொண்டு இந்தத துறையிலே இத்தகைய பெருவாரிவான குறைகளை நீக்கினால், இந்தத் துறை மேலும் உயரும் என்பதை நான் இந்த சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த நேரத்தில், கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல்கள் நியாயமான விலையிலே கிடைப்பதற்கு என்ன முயற்சிகளைச் செய்தார்களோ, அதை இந்த சர்க்காரும் செய்ய வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டு கொள்கிறேன்.



சிறந்த லாபகரமான இந்தத் தொழிலை இன்றைய தினம் நம்முடைய சர்க்கார் அப்டேர்ப்பட்ட நூற்பாலை மில்களை, 36 மில்களை தனியார் இடத்திலே இன்றையதினம் விட்டிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்றால், தேர்தலுக்கு முன்பு செய்து கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலே, இப்படிப்பட்ட லாபகரமான தொழிலை அவர்களுக்கு விட்டு விட்டார்களோ, என்னவோ தெரியவில்லை. அப்படி நடத்துகின்ற இந்த தனியார் ஆலைகளிலே, துவக்கப்பட இருக்கின்ற ஆலைகளிலே இந்த நெசவுத் தொழிலிலே ஈடுபட்டுள்ள நெசவாளர் குடும்பங்களைச் சார்ந்தவர்களை அதிலே வேலைக்கு அமர்த்த ஏற்பாடு செய்வார்களா என்று நான் இந்த அரசைக் கேட்க ஆசைப்படுகிறேன்.

நிச்சயமாக அந்த முயற்சியில் ஈடுபட்டாலும் உங்களால் அந்த முயற்சியில் வேற்றி பெற முடியாது என்று கருதுகிறேன், ஏதோ கட்டுப்பாட்டின் கீழ் அந்த முதலாளிகளுக்கு தொழிலை நடத்த அனுமதி தந்திருக்கிறீர்கள். நீங்கள் சொன்ன அந்தக் கோரிக்கைகளை நிச்சயமாக அவர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

இன்றையதினம் கைத்தறித் தொழிலைச் சிறப்பாக நடத்த கோவாப்டெக்ஸ் நிறுவனந்தான் காரணம் என்பதை அறிவோம். அதிலே ஊழல்கள் நிறைய இருக்கின்றன என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். குறிப்பாக, ஏற்றுமதித் துறையில் ஒரு அதிகாரி இருக்கிறார். அவர் தலைமையில் இருக்கும் துறையின் மூலம் வெளிநாடுகளுக்கு இரண்டு லட்சம் மீட்டர் துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. நம்முடைய நாட்டில் இருக்கும் கூட்டுறவு உற்பத்திச் சங்கத்தில் ஆர்டர் கொடுத்து, எல்லாச் சங்கங்களுக்கும் பகிர்ந்து கொடுத்து அதைப் பெற்றுத் தான் ஏற்றுமதி செய்வது வழக்கம். உரிய காலத்தில் அந்த துணிகளை கூட்டுறவு உற்பத்திச் சங்கத்தின் மூலம் பெற முடியாமல் பல வெளிநாட்டு ஏற்றுமதி ஆர்டர்கள் ரத்து செய்யப்பட்டு இன்றையதினம் கிடங்குகளில் கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள கைத்தறித் துணிகள் தேங்கிக் கிடக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு யார் பொறுப்பு என்பதை நிச்சயமாக விசாரிக்க வேண்டும். தனியார் கம்பெனிகள், வட நாட்டில் இருக்கும் பல்வேறு கம்பெனிகள், மகாராணி கம்பெனி, அமால்கமேஷன் கம்பெனி சிறப்பாக வேலை செய்கிறது. அவர்களும் ஏற்றுமதிக்கு ஆர்டர் வாங்கி நம்முடைய நாட்டில் இருக்கும் உற்பத்திச் சங்கத்தில் கொடுத்து உரிய நேரத்தில் ஏற்றுமதி செய்கிறார்கள். அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுவதில்லை. லாபம் கிடைக்கிறது. உரிய காலத்தில் தனியார் ஏற்றுமதி செய்வதால் லாபம் கிடைக்கிறது. இங்கிருக்கும் அதிகாரிகள் அவர்களுக்கு உடந்தையாக இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதைத் தவிர்க்க வேண்டும்.

மற்றொன்று, நம்முடைய கோவாப்டெக்ஸ் நிறுவனத்தின் சார்பாக ஏற்றுமதி செய்ய ரஷ்ய நாட்டிலிருந்து ஒரு ஆர்டர் வாங்கினார்கள். டெரி டவல் ஏற்றுமதி செய்ய வேண்டும் என்று பல கோடி ரூபாய்க்கு ஆர்டர் வாங்கினார்கள், முறையாக அந்த டவலை உற்பத்தி செய்ய கூட்டுறவு உற்பத்தி சங்கங்களுக்குக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால், மதுரையில் இருக்கும் உத்தமன் என்ற தனி நபருக்கு ஆர்டர் கொடுத்து அவர் மூலமாக தயாரிக்கப்பட்ட டவலை ரஷ்யாவுக்கு ஏற்றுமதி செய்ய துறை முடிவு எடுத்தது. ஆனால் குறித்த காலத்தில் அந்த டவல்கள் உற்பத்தி செய்யப்பட்டு வராத காரணத்தினால் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட டெரி டவல்கள் இன்றையதினம் முழுமையாக தேங்கிக் கிடக்கின்றன. தனியாருக்கு ஆர்டர் கொடுக்காமல் கூட்டுறவு உற்பத்திச் சங்கத்திற்கு ஆர்டர் கொடுத்திருந்தால் சரியான நேரத்தில் குறித்த காலத்தில் கிடைத்திருக்கும். குறித்த காலத்தில் சப்ளை செய்யாத காரணத்தால் கோடிக்கணக்கான ரூபாய் பெருமானமுள்ள டெரி டவல்கள் தேங்கிக் கிடக்கின்றன. மதுரையில் மட்டும் ஏழு லட்சம் டவல்கள் தேங்கிக் கிடக்கின்றன. ஒரு டவல் 15 ரூபாய்க்கு மேல் அடக்க விலை ஆகிறது. அவை இன்றையதினம் இந்தியத் துணைக்கண்டம் பூராவும் இருக்கும் விற்பனை நிலையத்தில் பொது விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கிறது. பதினைந்து ரூபாய் அடக்க விலை, அதிலே 20 சதவீதம் தள்ளுபடி கொடுத்து 12 ரூபாய்க்கு விற்கப்படுகிற கேவலமான நிலை இருக்கிறது. இதற்கு பொறுப்பான அதிகாரி மீது மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்கள் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இதனால் இந்தத் துறைக்கு பலகோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

பொதுவாக, கோவாப்டெக்ஸ் நிறுவனம் விற்பனை நிலையங்கள் மூலமாக பணத்தை சம்பாதித்துக் கொண்டிருக்கிறது. ஏற்றுமதித் துறையின் மூலமாக கோவாப்டெக்சுக்கு பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு வருஷ காலம் ஏற்றுமதி துறையை செயல்படாது நிறுத்தி வைத்தால் நிச்சயமாக கோவாப்டெக்ஸ் துறை பல கோடி ரூபாய் லாபம் பெறுகிற துறையாக நிச்சயமாக விளங்கும். ஏற்றுமதி கூடாது என்று சொல்லுகிற கருத்தை உடையவன் நான் அல்ல. முறையாக ஏற்றுமதித் துறை கவனிக்கப்படாமல் அதிகாரிகள் தவறிவிட்டார்கள். அந்தக் குறிப்பிட்ட அதிகாரியை மாற்ற வேண்டும். அவர் எப்படி இருக்கிறார். என்ன வசதி என்பதை நீங்கள் இந்த நோத்தில் கண்டுபிடிக்க வேண்டும். விசாரிக்க வேண்டுமென்று குறிப்பாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.



(முற்பகல் 10.50)

கோஆப்டெக்ஸ் துறை இன்றைக்கு இந்த நிலையிலே இருந்து கொண்டிருக்கிறது. தேங்கிக் கிடக்கிற பல கோடி ரூபாய் துணிகளை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, மழையால் பாதிக்கப் பட்ட மக்களுக்கு அடக்கவிலை மீட்டர் 7 ரூபாய் ஆகிறபோது, அதை 5 ரூபாய்க்கு வாங்கி அந்த மக்களுக்கு விநியோகித்து இருக்கிறது. அதனாலே எவ்வளவு நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இந்தத் துறை சிறந்த நிர்வாகத்தின்கீழ் இருந்தால் இவ்வளவு நட்டம் ஏற்பட் டிருக்காது.

தேங்கிக் கிடக்கிறதுணிகளை விற்பனை செய்கிறபோது புதிதாக நெசவுத் தொழிலாளர்கள் சேர்ந்துள்ள கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள துணிகளும் தேங்கிவிடுகின்றன. இந்தத் துறையை வளரச் செய்வதற்காக ஒரு யோசனையை நான் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய அறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடனே நமமுடைய மாநில அரசின் சார்பிலே வாங்கப்படுகிற துணிகள் எல்லாம் முழுக்க முழுக்க, 100-க்கு 100 விழுக்காடு, கைத்தறித் துணிகளாகவே இருக்க வேண்டுமென்று உத்தரவிட்டு இருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே கலைஞர் ஆட்சியிலேயும் அதைப்போன்ற முறையைப் பின்பற்றினார்கள். இடையிலே ஆளுநர் ஆட்சி ஏற்பட்ட பிறகு அரசு அலுவலகங்களிலே பயன் படுத்துகிற துணிகளில் 50 சதவீதம் கதர் ஆகவும் 50 விழுக்காடு கைத்தறித் துணியாகவும் இருக்க வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். அதற்குப் பிறகு இந்த அரசு வந்து $2\frac{1}{2}$ ஆண்டுக்காலத்திலே, இதைப்பற்றி பல முறைகள் எடுத்துச் சொல்லியும்கூட கைத்தறித் துணியை அரசு அலுவலகங்களுக்கு 100-க்கு 100 விழுக்காடு வாங்கவேண்டுமென்று உத்திரவிடாமல் இருக்கிறார்கள்.

அதைப்போலவே இந்த மாநிலத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களிலே வாங்கப்படுகிற அத்தனை துணிகளும் கைத்தறித் துணிகளாகவே இருக்கவேண்டுமென்று மத்திய சர்க்காரை இந்த அரசு வலியுறுத்த வேண்டும். மத்தியிலே டைரக்டரேட் ஆப் சப்ளைஸ் அன்ட் டிஸ்போஸல்ஸ் என்ற துறை இருக்கிறது. அந்தத் துறையின் மூலமாக இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ள சகல மத்திய சர்க்கார் அலுவலகங்களி லேயும் கைத்தறித் துணிகளை வாங்கச் செய்வதற்கான முயற்சி களைச் செய்யவேண்டும்.

அடுத்து, நம்முடைய மாநிலத்திலே உள்ள மருத்துவ மனைகளிலே பாண்டேஜுக்குக் கண்டிப்பாக கைத்தறித் துணி ளை வாங்க வேண்டுமென்று சொன்னாலும் சில மருத்துவ

மனைகளிலே பான்டேஜுக்கு துணி இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். ஒரு நோயாளி சென்றால், பேண்டேஜ் இல்லை, பிறகு வாருங்கள், கட்டுப் போடுகிறேன் என்று சொல்லக் கூடிய கேவலமான சூழ்நிலை இருக்கிறது. இதுபற்றி பத்திரிகையிலேகூட வந்திருக்கிறது. ஆகவே மருத்துவ மனைகளிலே பேண்டேஜ் துணிக்குத் தட்டுப்பாடு இல்லாமல் கைத்தறித் துணிகளை வாங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும்.

இன்றைய தினம் இந்தத் துறையிலே ஒரு ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆளுங்கட்சியைச் சேர்ந்த ஒருவரைத் தலைவராகப் போட்டிருக்கிறார்கள். இந்தத் துறையிலே நீண்டகாலம் அனுபவம் பெற்றவர், ஒரு பெரியவர், திரு. நாச்சிமுத்து இருக்கிறார். ஆனால் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவரைப் போட்டிருக்கிறார்கள். அவர் ஆலோசனை வழ்ங்கலாமே தவிர இன்றைக்கு அப்படியில்லாமல் திட்டங் களை உருவாக்கி வருகிற நிலைமையிலே அவர் இருக்கிறார். அவர் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே ஒரு காரியத்தைச் செய்திருக்கிறார். ஸ்பெஷல் ஆபீஸராக ஒரு ஐ. ஏ. எஸ். அதிகாரி இருந்தார், அவருக்கு ஒரு பெரிய அறை இருந்தது. இவர் பொறுப்பு ஏற்றவுடன் ஐ.ஏ.எஸ். அதிகாரி இருந்த அந்த அறை வேண்டுமென்று கேட்டு இருக்கிறார். அதற்குப் பிறகு அந்த விஷயம் அமைச்சர்களுக்கு, முதலமைச்சருக்கு போய் இப்போது அந்த அறையைக் காலிசெய்து ஆளுங்கட்சியைச் சேர்ந்த அந்தத் தலைவருக்கு கொடுத்துவிட்டு, அந்த அதிகாரியை வராண்டாவிலே உட்கார வைத்திருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆலோசனைக் குழுத் தலைவர் இப்படி நடந்துக் கொண்டால் இந்தத் துறை உருப்படுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அடுத்து, இந்தத் தொழிலிலே ஈடுபட்டவர்கள் என்னுடைய சைதாப்பேட்டை தொகுதியிலே ஏராளமாக இருக்கிறார்கள். அதைப் போலவே அருப்புக்கோட்டைத் தொகுதியிலே பல்லாயிரக்கணக்கானோர் இருக்கிறார்கள். இராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர், பரமக்குடி, சத்திரப்பட்டி, மதுரை, சின்னாளம்பட்டி, அருப்புக்கோட்டை போன்ற பல இடங்களில் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரத் தொழில் பாதுகாப்பும், ஊதியமும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அந்தத் தொழிலில் ஈடுபட்டு உழைப்பவர்களுக்குக் காசநோய் பீடித்துக்கொள்கிறது. மதுரை மாவட்டம், கொட்டாம்பட்டி என்ற பகுதியில் சத்துணவுத் திட்டம் என்ற திட்டம் பற்றி அறி விக்கப்பட்டுள்ளது. காசநோய் பீடித்த ஏழைகளுக்கு, மதுரை



மாவட்டத்திலே இருக்கின்ற, அதிலும் முதலமைச்சர் அவர்களின் தொகுதியில் இருக்கின்ற நெசவாளர்களுக்குத் துவக்கி வைத்து அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சீபுரத்தில் இருப்பதைப்போல் சைதாப்பேட்டையில் அரசு நூல் விற்பனை நிலையம் ஒன்றை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சைதாப்பேட்டையில் சாயத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

பாலிஸ்டர் கைத்தறித் துணி உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையைச் சைதாப்பேட்டையில் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். முன்பிருந்த கைத்தறித் துறை அமைச்சரிடம் இதுப் பற்றிப் பலமுறை சொல்லியிருக்கிறேன். அவர்கள் பார்க்கிறேன், பரிசீலிக் கிறேன் என்று சொன்னார்கள்.

சைதாப்பேட்டையில் இந்தத் தொழிலில் ஈடுபட்டவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய சாயத் தொழிற்சாலையையும், பாலிஸ்டர் கைத்தறித் துணி உற்பத்தி செய்யும் தொழிற்சாலையையும் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறை வளர்வதற்கு நான் சொன்ன சின்ன யோசனை களைப் புதிதாக வந்திருக்கின்ற அமைச்சரவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. கிருஷ்ணராஜ் : மாண்புமிகு தற்காலிகத் தலைவர் அவர்களே, இங்கு இன்று எனக்குப் பேச வாய்ப்பளித்து உதவி செய்த என்னுடைய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்களுக்கும், சேலம்—1 வது தொகுதி வாக்காளப் பெரு மக்களுக்கும் முதலில் நன்றியைத் தெரிவித்துவிட்டு என்னுடைய உரையினைத் தொடங்குகின்றேன்.

1980—81 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கைத்தறி துறைக்காக நமது மாண்புமிகு நிதியமைச்சரவர்கள் 452 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தது குறித்து நெசவாளர்கள் மகிழ்ச்சி அடைந்திருக்கிறார்கள். மானம் காக்கும் ஆடை நெய்யும் நெசவாளர்களின் மேம்பாட்டுக்காக நமது அரசு எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது. சேலம் மாவட் டத்தில் ஏறக்குறைய 1,50,000 நெசவாளர்கள் இருக்கிறார்கள். இந்தியாவிலேயே அதிகமான நெசவாளர்கள் இருக்கின்ற பகுதி சேலம் பகுதிதான்.

இங்கு Indian Institute of Handloom Technology என்ற கல்லூரி இருக்கிறது. அதில் 24 சீட்டுகள் தமிழ்நாட்டு மாணவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது நம்முடைய சென்ட்ரல் கவர்ன்மெண்டின் உதவியோடு இயங்குகிறது. வாரணாசியில் ஒன்றும், சேலத்தில் ஒன்றும்தான் இருக்கிறது. இந்த இன்ஸ்டிடியூட்டில் குறைந்தபட்சம் 240 மாணவர்களாவது படிப்பதற்கான ஏற்பாடு இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக நெசவாளர் சமூகத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு அங்கே இடம் தர உதவி புரிய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிட்டத்தட்ட 50,000 நெசவாளர்கள் வீடு இல்லாமல் தவிக்கிறார்கள். இதற்கு நிதி ஒதுக்கி ஆவன செய்து கொண்டிருக்கிறது இந்த அரசு.

சுமார் 135 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேக்கம் அடைந்திருப்பதற்குக் காரணம் மாநில அரசு அல்ல; மத்திய அரசுதான் என்பதை நான் இங்கே சொல்கிறேன். முன்பு அவர்கள் ரிபேட் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அதைத் தரவில்லை என்பதுதான் இந்தத் தேக்கம் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் என்று நெசவாளர்கள் சொல்கிறார்கள்.

கைத்தறித் துணிகளை அரசு ஊழியர்கள் அணிய வேண்டுமென்று நமது மாண்புமிகு கைத்தறி அமைச்சர் அவர்கள் ஒரு விழாவில் குறிப்பிட்டிருந்தார்கள். அதனைச் சட்டமாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டும்; கைத்தறித் துணியை அரசுப் பணியாளர்கள் அணிகின்ற வகையில் அதனைச் சட்டமாக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11–00]

நெசவாளர்களுக்கு, 1–7–1970–க்கு முன்பு, 16½% வட்டிக்குக் கடன் வழங்கப்பட்டது. அந்த வட்டியினை தற்பொழுது, 18 % ஆக Tamil Nadu Handloom Finance Corporation வசூலிக்கிறது. என நெசவாளர்கள் வருத்தப்படுகிறார்கள். அந்த வட்டி வீதத்தினைக் குறைக்க மாண்புமிகு அமைச்சவர்கள் ஏற்பாடு செய்ய வேண்குமென்று கேட்டுக்கொள்கிறேன்

ஏற்றுமதிக்கு, கைத்தறித் துணியைத் தைத்துத் தர ரெடிமேட் கார்மென்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸை, காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ் போன்ற வடிவ அமைப்பில், சேலம் மாவட்டத்தில், மற்றும் தமிழ்நாட்டில், கைத்தறி நெசவாளர்கள் இருக்கும் பகுதிகளிலெல்லாம் ஏற்படுத்தி நெசவாளப் பெருங்குடி மக்களை ஆதரிக்கும் அரசைக் கேட்டுக் கொள்கிறேன்; டெல்லியில் அந்த மாதிரி



இருப்பதாகக் கேள்விப்பட்டேன். ஏற்றுமதியை அதிகரிக்க, ரெடிமேட் கார்மென்ட்ஸ் உற்பத்தித் தொழிலை, காட்டேஜ் இன்டஸ்ட்ரீஸ்ஸாக ஆக்கி, அதன்கீழ் கொண்டு வந்தால், நெசவாளப் பெருமக்களில் பலருக்கு வேலை வாய்ப்பு அளிக்க ஏதுவாக இருக்கும்.

நெசவாளர்கள் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு வரும் சமயத்தில்தான் நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சி அநியாயமாகக் கலைக்கப்பட்டது, அந்தச் சட்டத்தை மீண்டும் அமுலுக்குக் கொண்டு வந்து, நெசவாளப் பெருங்குடியினரின் நல்வாழ்வுக்காக, நமது அரசு ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொண்டு, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. பி. எம். தங்கவேல் ராஜ் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, கைத்தறி மற்றும் பஞ்சாலைத் தொழில் திட்டங்களைப் பற்றியும், காதி பற்றியும் பேச வாய்ப்பளித்தமைக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு எனது காங்கிரஸ் கட்சியின் சார்பாக, சில கருத்துக்களை இந்த அவை முன் வைக்க ஆசைப்படுகிறேன். தமிழகத்திலே விவசாயத்திற்கு அடுத்தபடியாக, பெரிய தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்தக் கைத்தறி தொழிலாளர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏறக்குறைய 6 இலட்சம் தொழிலாளர்கள் இந்தக் கைத்தறியை நம்பி தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள் இந்தக் கைத்தறிக்கு, குறிப்பாக, கைத்தறி நெசவாளர்களுக்குப் போதிய அளவு நூல் கிடைப்பதில்லை. கிடைக்கும் நூலும் மிக அதிக விலையிலே கிடைக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், பருத்தி விலை ரூ. 5 என்றால், அதை நூலாக்கி விற்கும்போது, 5 மடங்கு வித்தியாசத்திலே, ரூ. 25 ஆகத் திரும்பி வருகிறது. ஆகவே, பருத்திக்கும் நூலுக்கும் உள்ள வித்தியாசத்தைக் குறைத்து, அந்த நெசவாளர்களுடைய குடும்பத்தையும், அவர்களது சிறார்களையும் காப்பாற்ற இந்த அரசு முன்வர வேண்டும்.

ஏற்கனவே, கைத்தறி நூல், எக்ஸ்-மில் ரேட்டிலே 10% குறைந்த விலையில் கொடுக்கப்பட்டது. ஆனால், அந்த மில் அதிபர்கள் அதனைச் சரியாகக் கொடுக்காததால், கைத்தறி நெசவுத் தொழில் மிகவும் நசிந்து போயிருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மேலும், மில் அதிபர்கள் அதிக இலாபம் சம்பாதிக்கலாம் என்ற எண்ணத்தோடு, மேலும் விலை ஏறலாம் என்று எதிர்பார்த்து, நூலைத் தேக்கி வைத்து, நெசவாளகளுக்குக் கொடுக்காமல் இருப்பதால், அவர்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். மேலும் நெசவாளர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பிரைமரி சொசைட்டிக்கும் கோ-ஆப்

இருக்கிறது. டெக்ஸ் சொசைட்டிக்கும் அதிகமான வித்தியாசம் பிரைமரி சொசைட்டிகளிலே நூலினுடைய விலை, செயலாளர் சம்பளம், நெசவாளர்களுடைய கூலி ஆகியவற்றோடு, பாக்கேஜ் செய்வதற்காகும் செலவு, மற்றும் எஸ்டாபிளிஷ்மென்ட் செலவு என்று அதிகச் செலவுகள் ஆகின்றன.

ஆனால் இந்த கோ-ஆப்டெக்ஸ்காரர்கள் பிரைமரி சொசைட்டியில் இருந்து 9% லாபத்திற்கு வாங்குகிறார்கள். அதை 25%, 30% அதிகவிலை வைத்து கோ-ஆப்டெக்ஸில் விற்கிறார்கள். மேலும் பிரைமரி சொசைட்டியில் இருப்பவர்கள் தங்களிடம் சொந்தப் பணம் இல்லாவிட்டால் சென்ட்ரல் வங்கியில் 9%க்குக் கடன் வாங்கி, அதே 9% லாபம் வைத்து விற்க வேண்டிய நிலை இருப்பதால் அவர்கள் நஷ்டப்படுகிறார்கள். எனவே பிரைமரி சொசைட்டிகள் கோ-ஆப்டெக்சுக்கு விற்கிறபோது குறைந்தபட்சம் 12½ சதவிகிதம் லாபம் வைத்து விலையை உயர்த்த சர்க்கார் ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைச் சார்ந்துள்ள கரூர் நெசவாளர் நிறைந்த பகுதி என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். கரூர் பெட்சீட்டுகள், துணிகள் போன்றவைகள் இந்த நாட்டில் மட்டும் அல்லாமல் வெளிநாடுகளிலும் விற்பனை ஆகிக் கொண்டு இருக்கின்றன. அந்தத் தொகுதியில் 2/17, 2/30 என்ற நூல்கள் அதிகமாக தேவைப்படுகின்றன. ஆனால் அந்த நூல்கள் அதிகம் கிடைப்பதில்லை. அது கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கரூர் நெசவாளர்கள் நிறைந்த பகுதியாகும். அந்தப் பகுதியில் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. கடந்த 22–6–1980 தேதி அன்று பெரும் தீ விபத்து ஏற்பட்டு பலத்த சேதம் அடைந்திருக்கிறது. அது பற்றி இங்கே ஒரு கட்மோஷன் கூட கொடுத்திருக்கிறார்கள். அதற்கு முன்பும் பல முறை இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அங்கே உள்ள விவசாயிகளும் நெசவாளர்களும் மற்றப் பொது மக்களும், அது ஒரு தீய சக்தியின் நாச வேலையாக இருக்குமோ என்று பயப்படுகிறார்கள். கரூரில் மட்டும் ஏன் இப்படிப்பட்ட தீ விபத்துக்கள் நடக்கின்றன என்பதைக் கண்டு பிடிக்கின்ற வகையிலே, அதற்கென ஒரு தனி போலிஸ் படையை அனுப்பி விசாரித்து, அந்தப் பொது மக்கள் பீதி இல்லாமல் வாழ வழி வகை செய்யவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்ற 1978–79, 1979–80 பட்ஜெட்டிலே கூட கூறியிருக்கிறார்கள். நெசவாளர்களுக்கு உடனடியாக வீடுகள் கட்டித் தரப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்போதும் அதற்காக



இந்த அரசு ஆவன செய்யும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள், ஆனால் உண்மையிலேயே நூறு வீடுகள், 200 வீடுகள் கட்டப் போகிறோம் என்ற நிலை இருக்கிறது. அதற்கு அதிக நிதி ஒதுக்கவில்லை. 1962-க்கு முன்னால் காங்கிரஸ் கட்சி ஆட்சியிலே இருந்த சமயத்திலே அதிக நிதி ஒதுக்கி அதிக வீடுகளைக் கட்டிக் கொடுத்தது. அதற்குப் பின்னால் 1967–க்குப் பின்னாலே வந்த எந்த அரசாங்கமும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனவே, அரசாங்கம் அவர்களுக்கு அதிக அளவில் வீடுகளைக் கட்டிக் கொடுத்து அவர்களுக்கு நிரந்தரப் பரிகாரம் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து நெசவாளர்கள் குடும்பங்களுக்கு வசதியாக இருக்கும்படியாக நடமாடும் ஆஸ்பத்திரி ஏற்படுத்தப் போவதாக சென்ற ஆண்டே அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் இன்று வரையிலும் அதை ஏற்படுத்தவில்லை; காசநோயாளிகளில் நெசவாளர்களில் 70 சதவிகிதத்தினர் காச நோயால் பீடிக்கப்பட்டவர்கள் என்று சொல்லிய இந்த அரசாங்கம் அவர்களுக்காக எதுவுமே செய்யவில்லை. செய்யத் தவறிவிட்டது என்பதைச் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் ஒரு முக்கியமான விஷயத்தை இங்கே சொல்ல விரும்புகிறேன். காஞ்சிபுரம் பட்டு நெசவுக்குப் பெயர் போன இடம் என்பது இந்த மன்றத்தில் உள்ள அனைவருக்கும் தெரியும். காஞ்சிபுரம் பட்டு உலகப் பிரசித்தி பெற்றது. அங்கே சுமார் 20 கூட்டுறவு சொசைட்டிகள் இருக்கின்றன. அதிலே மிகவும் செல்வாக்கான சொசைட்டி காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கூட்டுறவு சொசைட்டியாகும். அந்த சொசைட்டியிலேதான் பல ஆண்டுகளாக பல முறைகேடுகள் நடந்திருக்கின்றன. அது குறித்து பல தொழிலாளர்கள், பொது மக்கள் போராட்டம் நடத்தியிருப்பதாக இந்த மன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். கைத்தறி இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் அவர்கள் 24–9–1977லே இந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு எழுதி அனுப்பி உள்ள கடிதத்தில், ஏறக்குறைய 88,556.45 ரூபாய்க்கு உங்கள் சங்கத்தில் முறைகேடுகள் நடந்திருக்கின்றன. அதற்காக ஏன் உங்கள் சங்கத்தைக் கலைக்கக் கூடாது'' என்று அரசாங்கம் நடவடிக்கை எடுத்து 24–9–1979, 30–10–1979 தேதிகளில் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது. ஆனால் இதிலே என்ன ஆச்சரியம் என்றால் மாண்புமிகு கைத்தறித் துறைஅமைச்சர் அவர்களும் அதே கைத்தறி இயக்குநர் அவர்களும் வருகிற 19–7–1980 அன்று நடைபெறவிருக்கும் அந்தச் சங்கத்தின் வெள்ளி விழாவில் கலந்து கொள்ளப் போகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11-10]

ஒரு இலட்ச ரூபாய் அளவிற்கு மோசடி நடந்து இருக்கிறது அந்தச் சொசைட்டியில் என்று அரசாங்கத்தால் கண்டுபிடிக்கப் பட்டு இருந்தும், அந்தத் தொகையை வசூலிக்காமல், அதற்கு நடவடிக்கை எடுக்காமல், அதற்கு மாறுபட்ட வகையில் அந்தச் சங்கத்தின் வெள்ளி விழா 19-7-1980-ல் நடைபெற இருப்பதற்கு அமைச்சர்களும் இயக்குநர் அவர்களும் செல்கிறார்கள் என்றால் அதன் பொருள் என்ன என்று எனக்குப் புரியவில்லை.

அங்கே 75 வீடுகள் இருக்கின்றன. பல்வேறு தொழிற்சங்கத் தைச் சேர்ந்த தொழிலாளர்கள் வசிக்கிறார்கள். ஆனால் ஐ. என். டி. யு.சி. தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்களை மட்டும் காலி செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். அதனால் அவர் களுக்கு எவ்வளவோ கஷ்டங்கள் ஏற்படுகின்றன. அவர்களை வேலையை விட்டும் எடுத்து இருக்கிறார்கள். வீட்டைத்தான் காலி செய்யச் சொல்லிவிட்டீர்கள், வேலையாவது கொடுங்கள் என்று கேட்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான நஷ்டஈடும். கொடுக்கவில்லை. ஆகவே, இந்த அரசு அந்த நெசவாளத் தொழிலாளர்களுக்கு நல்ல ஒரு உதவியைச் செய்ய வேண்டும், ஆனால், அதற்கு சமரச முயற்சிகளை மேற்கொண்டு அந்த நிலைமைகளைத் தவிர்க்க அரசு தவறி விட்டது என்றும், அதனால் அந்தச் சொசைட்டி ஓராண்டு காலமாகச் சரியாக நடக்கவில்லை என்றும், குற்றஞ்சாட்ட விரும்புகிறேன்.

காஞ்சிபுரம் பட்டின் தன்மைக்கும், குவாலிட்டிக்கும் மிகவும் கெட்ட பெயர் ஏற்படும் வகையில் அந்தச் சொசைட்டி நடை பெற்று வருகிறது. தாறுமாறாக அவர்கள் பட்டு நூல் தயாரிக் கிறார்கள். இந்த மாதிரி நிலையில் 19-7-1980 அன்று காஞ்சிபுரம் காமாட்சி பட்டு கூட்டுறவு சங்கம் கொண்டாடும் வெள்ளிவிழா வில் அமைச்சர்கள் கலந்து கொள்வதன் மூலம் அரசே அவர் களுக்கு உதவி செய்யவும் ஊழல் செய்வதற்கு ஒத்தாசை செய் வது போலவும் இருக்கிறது என பலர் நினைக்க இடம் இருக்கிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன்.

இப்போது காதி கிராப்ட்டுக்கு ஒதுக்கியிருக்கும் தொகை போதாது. இன்னும் அங்கே வேலை செய்யும் தொழிலாளர் களுக்கு நல்ல ஊதியம் கிடையாது. அதை உயர்த்திக் கொடுக்க அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்வோதய சங்கம் பற்றி ஒரு வார்த்தை சொல்லி உரையை முடித்துக்கொள்கிறேன். சர்வோதய சங்கம் என்கிற இயக்கம் மாநிலம் பூராவும் பரவி இருக்கிறது. காதி கிராம கைத்தொழில் துறை உதவி செய்கிறது என்று சொன்னாலும், அந்தச் சர்வோதய



சங்கத்தில் உள்ள தொழிலாளர்கள் மிகவும் கஷ்டப்பட்டு வேலை செய்தபோதிலும், அவர்களுக்குப் போதுமான வசதிகளோ, சலுகைகளோ, ஊதியமோ இல்லை. இன்சூரன்ஸ் திட்டம் கிடையாது. ஆகவே, சர்வோதய சங்கம் எந்தெந்த வகையில் செயல்படுகிறது என்பதை ஆராய்ந்து, அதன் தொழிலாளர்களும், ஊழியர்களும் முன்னேற்றம் அடையச் செய்கிற வகையில் பரிந் துரைகளை இந்த அவைமுன் அளிக்க, அரசு ஒரு குழு அமைக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளுக்குக் கொடுக்கப்படும் கடன் சலுகைகள் நெச வாளர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்று கூறி என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(மாண்புமிகு துணைத் தலைவர் தலைமை)

*திரு. சி. கோபால் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர் களே, கைத்தறி நெசவுத் தொழில், கதர்த் தொழில் துறை மீதான மானியக் கோரிக்கைகளிலே கலந்து கொண்டு இந்த அவையிலே என்னுடைய பரிந்துரைகளை நான் சொல்லக்கூடிய அளவுக்கு என்னை ஆளாக்கிய இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்கு முதற்கண் நன்றி தெரிவித்துக் கொண்டு விவாதத்தைத் தொடருகிறேன்.

''கைத் தொழில் ஒன்றைக் கற்றுக்கொள்

கவலை உனக்கு இல்லை ஒத்துக்கொள்''

என்பது ஒரு முதுமொழி.

''செய்யும் தொழில்களில் எல்லாம்

நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை''

என்பது ஒரு வாய்மொழி.

அப்படிப்பட்ட இந்த இரண்டு தொழில்கள் மீது நடை பெறு கின்ற, இந்த மானியக் கோரிக்கைகள் மீது நடைபெறுகின்ற விவாதத்திலே நான் பேசினாலும்கூட தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்த கைத்தொழில் துறையிலும் நெசவுத் தொழில் துறையிலும் ஈடுபட்டிருக்கிறவர்கள் யார் என்பதை இந்த மாமன்றத்தின் முன்பு நான் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

நாடி நரம்புகள் துடிதுடிக்க, வியர்வையைச் சிந்தி, விழிநீரை செந்நீராக்கி, உழைப்பையே சொத்தாக நம்பிக் கொண்டிருப்பவர் கள்தான் இந்த நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. அது மட்டுமல்ல. 1967 ஆம் ஆண்டு நடந்து முடிந்த ஒரு தேர்தலிலே அன்று ஒரு அரசியல் தலைவர் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிற பெண் மணிகள் 4 அணாவுக்கு தங்களுடைய கற்பை விற்க தயங்க

மாட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார். அவர் எந்தக் கருத்திலே சொன்னார் என்பதிலே அக்கரையில்லை. ஆனால் வறுமையிலே உழன்று கிடக்கின்றவர்கள் இந்த நெசவுத் தொழிலாளர்கள்; வறுமையிலே உழன்று கிடக்கின்றவர்கள் இந்த நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. நலிந்து, மெலிந்து, வாழ்க்கையின் வறுமை கோட்டில் துவண்டுகிடக்கின்ற, துன்பகரமான வாழ்க்கைக்குச் சொந்தக்காரர்கள் கைத்தொழில் செய்பவர்கள். அவர்கள்தான் இந்த நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள், அவர்களிடம் உழைப்பு இருக்கிறது; ஆனால் மூலதனம் இல்லை.

பொருளாதாரம் தெரியுமா என்று புரட்சித்தலைவரவர்களைப் பார்த்துக் கேட்டார்கள். பொருளாதாரத்தை நான் படிக்கத் தேவையில்லை; என்னுடைய வாழ்க்கையே ஒரு பொருளாதாரம் என்று சொல்லி, இந்த ஏழை எளிய நெசவாளர்கள் எல்லாம் தங்களுடைய வாழ்க்கை வளம் ஆவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களை நம்பி, இந்த அரசுக் கட்டிலிலே அவரை மீண்டும் அமர்த்தியிருக்கிறார்கள். இதை ஏன் சொல்கிறேன் என்றால், கைத்தறித் துறைக்கு தனி அமைச்சரை ஏற்படுத்தி, அதற்கு முக்கியத்துவம் அளித்து இருக்கிறார் புரட்சித் தலைவர் என்பதை யாரும் மறுக்க முடியாது.

வேலை வாய்ப்புகளைத் தருவதில் வேளாண்மைக்கு அடுத்த முக்கியமான இடத்தைப் பெற்றுள்ள கைத்துறித் துறையை மேம்படுத்துவதற்காக இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளைத் தொடர்ந்து எடுத்து வந்துள்ளது என்பதை யாரும் மறுக்க முடியாது. 1962ஆம் ஆண்டில் நிறுத்தப்பட்ட நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தை மீண்டும் இந்த அரசு புதுப்பித்து இருக்கிறது. கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்களுக்கு 350 வீடுகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று சொன்னால் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த நெசவாளர்களுக்காக துணிகளை தோளிலே தூக்கிக்கொண்டு போய் விற்றார்களே, அந்தப் பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில் இந்த அரசு தொடர்ந்து நடந்து வந்திருக்கிறது; அந்த ஏழை எளிய மக்களுக்காகப் பாடுபட்டு வந்திருக்கிறது என்ற மகத்தான உண்மையை இந்த நாட்டு மக்கள் புரிந்துகொள்வார்கள் என்பதை நாங்கள் கூறிக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.



அது, மட்டுமல்ல. இந்த நெசவாளர்கள் பிரச்சனையைப் பொறுத்த அளவில் நெசவாளர்கள் அனைவரையும் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் ஒன்று சேரச் செய்தால்தான் நெசவுத் தொழில் மேம்பாடு அடையும். ஆனால் இன்றைய சூழ்நிலையில், தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் செயல்பட்டு வந்தாலும் கூட சில குறிப்பிட்டப் பகுதிகளில், குறிப்பாக, சோளிங்கர் தொகுதி போன்ற இடங்களில் மாஸ்டர் வீவர்சிடம் நெசவாளர்கள் நூல் எடுத்து, அவர்களுக்கு அடிமைகளாக இருக்கிற நிலைமை இன்றும் இருந்து கொண்டிருக்கிறது. அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களிலே சேரமுடியாத நிலைமை இருந்துவருகிறது. காரணம் இன்று இருந்துவருகிற கைத்தறி கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் எல்லாம் அங்கே இருக்கிற தலைவர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு இருப்பதால் கட்சி வேறுபாடு இருக்கிற காரணத்தால் ஏழை எளிய மக்களை எல்லாம் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே சேர்த்துக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது, காரணம் தொடர்ந்து 9 ஆண்டுகள், 10 ஆண்டுகள் கூட்டுறவுச் சங்கங்களில் தேர்தலே நடத்தப்படாமல் இருக்கிறது. எப்படி எப்படியோ உள்ளே நுழைந்தவர்கள் எல்லாம் இந்த ஏழை எளிய நெசவாளர் பெருமக்கள் அந்த கூட்டுறவுச் சங்கங்களில் சேர்வதற்குத் தடையாக இருக்கிறார்கள். அவர்களுக்கு உரிமை மறுக்கப்படுகிறது என்ற ஒரு உண்மையை இந்த மாமன்றத்திலே நான் சொல்லியாக வேண்டும்.

[முற்பகல் 11-20]

அதற்குக் காரணம் இந்த அரசல்ல. ஆனால் தேர்தலே நடத்தாமல் தலைவர்கள் என்று ஒரு கட்சிக்குச் சொந்தக்காரர்களை நியமித்து அதன்மூலம் அப்போது இருந்த ஆளும் கட்சிக்காரர்களே பலர் அவ்வாறு இருப்பதன் காரணத்தினால் ஏழை எளியவர்களும், நியாயமான நெசவாளர்களும் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக ஆக்கப்படுவதற்குக் கூட மறுக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தின் முன்னே சொல்லிக்கொள்கிறேன். இவ்வாறு கூட்டுறவுச் சங்கங்கள் சரியாகச் செயல்படவில்லை என்ற காரணத்தைக் காட்டி அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தால் அவற்றை எல்லாம் கலைத்துவிட்டு மீண்டும் ஒரு குழு அமைக்கவேண்டும். அப்படி அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தனி அதிகாரியோ அல்லது குழுவோ அமைக்கவேண்டும் என்ற கருத்தை இந்த மாமன்றத்தின் முன் எடுத்து வைக்க ஆசைப்படுகிறேன்.

அடுத்து நெசவாளர்களுக்கு நியாயவிலையிலே உரிய நேரத்திலே அனைத்தும் கிடைக்கின்ற வகையிலே உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

நெசவாளர்களுக்கு உதவுகின்ற வகையில் புரட்சித்தலைவரின் இந்த அரசு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஏழை எளியவர்கள் பாராட்டுகிறார்கள். பெருமிதம் அடைகிறார்கள். கைத்தறித் துணி மீதான வரிகளை முழுமையாக நீக்கும்படி மத்திய அரசைக் கேட்கவேண்டும் என்று கைத்தறித் துறை அமைச்சரவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். நலிவுற்ற கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்திலே தேங்கிக் கிடக்கின்ற கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்வதற்குரிய வாய்ப்புகளைப் பெருக்குவதன் மூலம் இந்த அரசு நல்லமுறையிலே ஆண்டுக்காண்டு செயல்பட்டு வருகின்றது என்று கைத்தறித் தொழிலாளர்களும், நெசவாளப் பெருமக்களும் மிகச்சிறந்த முறையில் இந்த அரசைப் பாராட்டுகிறார்கள். நெசவாளர்களுக்கு சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டம் ஏற்படவேண்டும். அதே நேரத்திலே வீடு கட்டித் தரும் திட்டத்திற்காக 10 இலட்சம் ரூபாய் இந்த அரசு ஒதுக்கி இருப்பதை நான் மனதாரப் பாராட்டுவதோடு மட்டுமல்லாமல் நெசவாளர் பெருமக்களும் பாராட்டுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் புதிய விற்பனை நிலையங்களைத் திறக்கவும் ஏற்கெனவே இருக்கின்ற நிலையங்களை விஸ்தரிக்கவும் இந்த அரசு பல வழிவகைகளிலே நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் என்னுடைய ஒரு கருத்தை மட்டும் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்திய நாட்டைப் பொறுத்தமட்டில் ஏறக்குறைய 10 இலட்சந்திற்கு மேற்பட்ட மக்கள் இந்த நெசவுத் தொழிலை நம்பி இருக்கிறார்கள். அவர்கள் நலமடைகின்ற வகையிலே அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்களும் சேர்ந்து ஒரு சட்ட வடிவினை அமைத்துத் தரவேண்டும் என்று இந்த மாமன்றத்தின் மூலமாக கேட்டுக் கொள்கிறேன் (மணியடிக்கப்பட்டது).



இன்றையதினம் நெசவுத் தொழிலில் ஏறக்குறைய 10 இலட்சம் மக்களுக்கு மேற்பட்டவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். எதிர்காலத்திலே அந்த எண்ணிக்கை 15 இலட்சமாகக் கூட ஆகலாம். ஆகவே இவ்வளவு பேர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையாகக் கைத்தறித் தொழில் பிரச்சினை இருக்கின்ற காரணத்தால் அரசு சம்பந்தப்பட்ட சில முக்கியமான காரியங்களுக்கெல்லாம் கைத்தறித் துணியைத்தான் உபயோகிக்க வேண்டும் என்று அரசு உத்தரவிடவேண்டும். குறிப்பாக அரசு ஊழியர்கள் கைத்தறித் துணியை பயன்படுத்தவேண்டும் என்ற நிலை வரவேண்டும் இப்போது அரசு ஊழியர்களுக்கு உடைகள் கொடுக்கப்படுகின்றன. அந்த உடைகளை எல்லாம் கைத்தறியாகத்தான் வழங்கவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கவேண்டும். அது போன்று பள்ளிகளிலே உள்ள சிறுவர்களுக்கு சட்டைத்துணிகள் கொடுக்கின்றபோதும் கைத்தறியையே வழங்குவதற்கு எற்பாடு செய்யவேண்டும். இப்படிப்பட்ட கண்டிப்பான அரசினுடைய ஆணைகள் இருந்தால்தான் இந்தத் துறை மேம்பாடு அடையக் கூடிய வழிவகை ஏற்படும் என்று கூறிக்கொண்டு நல்லதொரு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி கூறி இந்த மானியக் கோரிக்கையை வலியுறுத்தி அதை வரவேற்று விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கைத்தறித்துறை மானியத்தின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்வதற்கு நான் முன்வந்திருக்கிறேன்,

முதலிலே ஒரு விஷயம் சொல்ல வேண்டி இருக்கின்றது. அதாவது கடந்த 3 ஆண்டுகளாக இந்தப் புத்தகங்களிலே எழுதப்படுகின்ற வார்த்தைகள் ஒரு சில இடங்களில் மட்டும் சிறிது மாற்றப்பட்டு மற்றவைகள் எல்லாம் அப்படியே ஈ அடித்தான் காப்பி போல திரும்பத் திரும்ப ஒரே மாதிரி வந்துகொண்டிருக்கின்றன. அதாவது சென்ற ஆண்டு இருந்ததை விட இந்த ஆண்டு உற்பத்தியை அதிகரிக்கப்போகிறோம் என்று முன்பு சொல்லப்பட்டிருக்கின்றது. அதேபோன்று இந்தத் தடவையும் சொல்லப்பட்டிருக்கின்றது,

உதாரணமாக, 'தமிழ்நாட்டில் 5.56 லட்சம் கைத்தறிகள் உள்ளன, 30 லட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கிறது' என்றெல்லாம் சொல்லிக்கொண்டு வருகிற இடத்தில், இனி வரக்கூடிய 5 ஆண்டுத் திட்டக் காலத்திலே உற்பத்தியை அதிகரிக்கிற முறையிலே தேசம் பூராவும் உற்பத்தியை அதிகரிப்பதற்கான முறையிலே 3,700 மில்லியன் மீட்டர் துணியை உற்பத்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது ஏற்கெனவே 2,300 என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதை 3,700 ஆக ஆக்கியிருக்கிறீர்கள்.

அதைப்போலவே, தமிழகத்தில் 600 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தி செய்யப்படுகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுவும் வருஷா வருஷம் சொல்வது போல்தான். ஆனால், உற்பத்தியை அதிகரிக்கப்போவதாகச் சொல்லும்போது மேலே 100-ஐக் கூட்டிக்கொண்டு 700 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தி அதிகரிக்க வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறது என்று கூறியிருக்கிறார்கள். இதை எந்தமுறையிலே கணக்கிட்டுச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஏற்கனவே 2,300-லிருந்து, 3,700 ஆக தேசம் பூராவும் உயர்த்தப்படும்போது, கணக்கு 50 சதவீதத்திற்கு மேலாக வருகிறபோது, 600 மில்லியன் மீட்டருக்கு மேல் ஒரு 100-ஐக் கூட்டிக் கொண்டு தமிழகத்தில் 700 மில்லியனுக்கு இலக்கு நிர்ணயிக்கப்பெற்றிருக்கிறது என்று சொல்வது எப்படி சரியாகும். அது சரியல்ல. சரியான கணக்கின்படி 900 மில்லியன் மீட்டராக இலக்கு நிர்ணயிக்கப்பெற்றிருக்க வேண்டும். ஆகவே, இந்த இலக்கு மாற்றப்பெற வேண்டும் என்று சுட்டிக்காட்ட முதற்கண் கடமைப்பட்டிருக்கிறேன்.

இரண்டாவதாக, வளர்ச்சித் திட்டங்களாக பல்வேறு அயிட்டங்களைச் சொல்லிக் கொண்டு வருகிறபோது, எட்டு அம்சத் திட்டத்தைப் பற்றி வருகிறது; அதுவும் எப்போதும் போல் தான் போடப்பட்டிருக்கின்றது. அதிலே எந்தவித



ற்றமும் இல்லை என்றாலும் கூட, அந்த எட்டு அம்சத் ட்டத்திலேதான் ஏதாவது சொல்ல வேண்டியிருக்கிறது ன்பதற்காக, அதிலேயே சில கருத்துகளைச் சொல்லக் டமைப்பட்டிருக்கிறேன்.

அதிலே குறிப்பாக 4-வது அம்சத்திற்கு வருகிறபோது அதிலே "கூட்டுறவுத் துறையின் கீழ் வருகின்ற கைத்தறி, நெசவாளர்களுக்குத் தேவையான இடு பொருட்களான பருத்தி நூல், பட்டு, செயற்கைப்பட்டு, சரிகை, சாயம் மற்றும் ரசாயனப் பொருட்களை நியாயமான விலையில் அளித்தல்" என்று கூறப்பட்டிருக்கிறது. இதுவும் வருஷா வருஷம் சொல்லப்படுவதுதான். ஆனால், எனக்குக் கிடைத்த தகவலின்படி இதிலே சொல்லப்பட்டிருப்பது போல் நியாயமான குறைந்த விலையில் அவைகளைக் கொடுப்பதில்லை. வெளி மில்களில் எந்த விலைக்குக் கிடைக்கிறதோ அந்த விலையைவிட சில இடங்களில் அதிமாகக் கூட நமது கூட்டுறவு பஞ்சாலைகளில் இந்த இடுபொருள்கள் அதிக விலையில் விநியோகிக்கப்படுகிறது என்ற நிலையைச் சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிலேயே இன்னொன்றும் வேறு இடத்தில் சொல்லப்படுகிறது. இப்படி நியாயமான விலையில் குறைவாகக் கொடுப்பதின் காரணமாக கூட்டுறவு பஞ்சாலைக்கு வரவேண்டிய லாபம் கூட குறைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது உண்மை இல்லை. உண்மையில் பார்த்தால், செ[illegible] ஆண்டு, அதாவது 1978 ஆம் ஆண்டிலே இந்தப் பன்னிரண்[illegible] பஞ்சாலைகளிலே கிடைத்த இலாபம் 442.75 லட்சம் என்ற முறையிலே கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், 1979-லே 745.99 ஆக கிட்டத்தட்ட 300 லட்சம் என்று கூட வைத்துக் கொள்ளலாம் —சென்ற ஆண்டைவிடக் கூடுதலாக இலாபம் கிடைத்திருக்கிறது.

இதை ஏன் சொல்லுகிறேன் என்றால், கூட்டுறவுப் பஞ்சாலைகளில் குறைந்த விலையில் பஞ்சு நூல்கள், சரிகைகள், சாயங்கள் எல்லாம் கொடுக்கப் பெற வேண்டும் என்பதைக் கொள்கை அளவில் எடுத்துக் கொண்டாலும் கூட உண்மையில் அப்படிக் குறைந்த விலையில் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே, இதை கவனத்தில் எடுத்துக்கொண்டு, வெளியே மில்களில் கொடுக்கப்படுவதைவிட இவைகளைக் குறைந்த விலையில் கூட்டுறவு பஞ்சாலைகளிலிருந்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக இந்தத் தொழிலைப்

பாதுகாக்க இத்தகைய இடுபொருட்களைக் குறைந்த விலையில் கொடுப்பது மாத்திரம் அல்ல என்று இன்னொன்றும் சொல்லப்பட்டிருக்கிறது. நூற்பு ஆலைகளுக்கு இன்னும் கூட சில இடங்களில் முதலாளிகளைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது. ஆகவே நெசவாளர்களின் சிரமத்தைக் கொஞ்சம் குறைக்க. இரு கூட்டுறவு நூற்பாலைகள் புதிதாக ஆரம்பிக்க உததேசிக்கப் பட்டிருப்பதாக3 சொல்லியிருக்கிறார்கள்.

அப்படி ஆரம்பிக்கப்பெறும் நூற்பாலை பின்தங்கிய பகுதிகளில் ஆரம்பிக்கப்பெற இருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பார்த்தால் எட்டயபுரம் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. இந்த வட்டாரத்தில் பருத்தியும் கிடைக்கிறது. ஆகவே, அந்த இடத்தில் 'பாரதியார் கூட்டுறவு நூற்பாலை' என்ற பெயரில் ஆரம்பிக்க வேண்டும் என்று அந்த வட்டார மக்கள் ஏற்கனவே மனு கொடுத்திருக்கிறார்கள். அதைக் கவனத்திலே எடுத்துக் கொண்டு எட்டயபுரத்திலே பாரதியார் பெயரில் ஒரு கூட்டுறவு நூற்பாலையை ஆரம்பிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக இன்னொன்று. இந்தத் துறையில் பாலிஸ்டர் ரக துணியை நல்ல முறையில் நெசவு செய்கிறார்கள். நல்ல முறையில் அவைகள் விற்பனையும் ஆகின்றன. மக்கள் அதை விரும்புகிறார்கள். அதை மற்ற துணிகளோடு போட்டி போடக் கூடிய அளவிற்கு விற்க, அந்த நூல்களின் வரியைக், குறைக்க வேண்டும் என்று சொல்லி மாநில அரசு மத்திய அரசைக் கேட்டிருப்பதாகச் சொன்னார்கள். இங்கே கொடுக்கப் பட்டிருக்கிற குறிப்பிலும் அது சொல்லப்பட்டிருக்கிறது.

இந்தக் கைத்தறி பாலிஸ்டர் துணிக்கான எக்ஸைஸ் வரியை, ரத்து செய்ய வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டிருப்பதை நான் வரவேற்கிறேன்.

[முற்பகல் 11-30]

மாநில அரசின் சார்பில் நூலுக்கு மூன்று பைசாக்கள் சாயத்திற்கு எட்டு பைசாக்கள் என்று நாம் வரி விதித்திருக்கிறோம். அந்த வரியை ரத்து செய்வதன் மூலம் குறைந்த விலைக்கு நூல் சப்ளை செய்யும் முறையில் உத்தரவாதம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உற்பத்தியைப் பற்றிச் சொல்லும்போது நான்குமுழ வேட்டி வாங்கச் கோ–ஆப்டெக்ஸுக்குச் சென்றால் ரூ. 10.50-ல் இருந்து ரூ. 11 வரை சொல்லப்படுகிறது. ஆனால், ஜனதா வேட்டியைப் பொறுத்தவரையில் ரூ. 4.50ல் இருந்து ரூ.5.50



வரை விலை இருக்கிறது. அதற்குக் காரணம் என்னவென்றால், மத்திய அரசு உதவி கொடுக்கப்படுகிறது அதற்காக. இப்போதுள்ள விலைவாசியின் அடிப்படையில், ஏற்கனவே கொடுத்து வந்த மானியத்தை அதிகப்படுத்த வேண்டும் என்று மாநில அரசு கேட்டிருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். ஜனதா ரக உற்பத்தி இப்போது குறைந்து கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. வேட்டி ரூ. 11-க்கு விற்கப்படுகிற நிலையில் ஜனதா வேஷ்டி ரூ. 5 அல்லது ரூ. 5.50க்குக் கிடைக்கும்போது மக்கள் அதைத்தான் அதிமாக வாங்குகிறார்கள். மக்களின் வாங்கும் சக்தி குறைந்து போயிருப்பதை ஈடுகட்ட ஜனதா ரக துணிகளை வாங்குகிறார்கள். இது ஜனதா சேலைகளுக்கும் பொருந்தும், ஜனதா லுங்கிகளுக்கும் பொருந்தும். ஜனதா ரக உற்பத்தியை அதிகப்படுத்துவதற்குப் பதிலாக அதன் இலக்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1978–79-ல் 140.88 லட்சம் மீட்டர் என்றிருந்தது 1979-80ல் 111.58 லட்சம் என்றளவிற்கு உற்பத்தி குறைக்கப்பட்டிருப்பதாக இதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜனதா ரக உற்பத்தியைக் குறைக்கிற முறையில் இருக்கிறது இது. அது சரியல்ல. ஆகவே ஜனதா ரக உற்பத்தியை அதிகரிக்க வேண்டும், அதற்கான முயற்சியைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது கைத்தறிக்கு போட்டிபோடுவது விசைத்தறி. விசைத்தறி மட்டுமல்ல, மில்களும்தான். எனவே, அந்தப் போட்டியைத் தவிர்க்கும்பொருட்டு சர்க்கார் ஒரு கொள்கையை அறிவித்திருக்கிறார்கள். அந்த முறையில் பார்த்தால் குறிப்பிட்ட ரகங்கள் இந்தத் துறைக்கு என்று ஒதுக்கப் பட்டிருக்கிறது. ஆனால் நடைமுறையில் பல விசைத்தறிகள், பல மில்கள் இந்த உத்தரவை மீறி அவர்கள் இஷ்டம் போல் உற்பத்தி செய்கின்றன. அது சரியல்ல. பல இயக்கங்கள் நடந்த பிறகு அரசு தலையிட்டும் 1978–79ல் 1,300 பேர்கள் இந்த விதியை அல்லது உத்தரவை மீறியிருக்கிறார்கள் என்று அதன் காரணமாக 32 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. 1979–80-ல் 1,600 பேர்கள் இந்த உத்தரவைமீறி 320 வழக்குகள் போடப்பட்டிருக்கின்றன. இந்த முறையில் விதியை அல்லது உத்தரவை மீறிக் கொண்டேயிருக்கிறார்கள். அதற்குக் காரணம் சென்ற ஆண்டும் சொல்லப்பட்டது. அதற்கு முந்திய ஆண்டும் சொல்லப்பட்டது. இப்போதும் சொல்லப்படுகிறது. மத்திய அரசின் உத்தரவு தெளிவாக இல்லை. அதைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று மூன்றாண்டுகளாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால், இதுவரை மத்திய அரசிலிருந்து பதில் வரவில்லை. ஆகவே, திட்டவட்டமாக, கைத்தறிக்கு என்று ஒதுக்கப்பட்ட ரகங்களை வேறு யாரும் உற்பத்தி செய்யக்கூடாது என்று உத்தரவிட்டு அதைக் கடுமையான முறையில் அமுல்படுத்த வேண்டும்.

விசைத்தறியை எடுத்துக்கொண்டால் ஏற்கனவே லைசென்ஸ் வழங்கப்பட்டிருப்பது 28,000-க்குத்தான். ஆனால் லைசென்ஸ் இல்லாமல் 30,000 விசைத்தறிகளுக்கு மேல்இருக்கின்றன. ஆகவே இதை ஒழுங்குபடுத்தும் முறையில் விரைவில் ஒரு முடிவுக்கு வரவேண்டும். அது சம்பந்தமாக மத்திய அரசோடு கலந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

நமது அரசு ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. அரசுத் துறைகளுக்குத் தேவைப்படுகிற துணிகளை 50% கோ-ஆப்டெக்ஸ்ஸிலிருந்து வாங்க வேண்டும் என்று உத்தரவு இருக்கிறது. ஆனால் அப்படிவாங்கப்படுவதில்லை. கோடம்பாக்கம் துணி கூட்டுறவுத் துறையில் உற்பத்தி செய்யப்படுகிறது. தனியார் துறையிலும் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் கோடம்பாக்கம் மாடலை கூட்டுறவுத் துறையில் செய்பவர்களிடம் இருந்து வாங்குவதில்லை. இது குறித்து மதுரையைச் சேர்ந்த கோஆப்டெக்ஸ் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் மகஜர்கள் கொடுத்திருக்கிறார்கள். தனியார்களிடமிருந்துதான் அதிகமாக வாங்கப்படுகிறது. தனியார்கள் கையில் ஸ்டாக் இல்லை. ஆனால் கூட்டுறவுச் சங்கங்களிடம் ஸ்டாக் இருக்கிறது. மதுரையைப் பொறுத்தவரையில் மட்டும் கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் அளவிற்குச் சரக்குகள் தேங்கிக்கிடக்கின்றன. ஏற்கனவே அவர்கள் என்ன விலைக்கு வாங்குகிறார்களோ அந்த விலைக்கு 3% லாபம் வைத்துத்தான் கோஆப்டெக்ஸ் வாங்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆனால் நடைமுறையிலே இதிலே நிர்வாகச் செலவு, மற்றதெல்லாம் இருக்கின்றது என்று சொல்லக்கூடும். ஆகவே, 9% கொடுக்கப்படுவதற்கு பதிலாக 3% கொடுப்பது சரியல்ல. கூட்டுறவுச் சங்கங்களுக்கு வருவாய் வரவேண்டுமென்று சொன்னால், 9% லாபத்தை வைப்பதற்கு அனுமதிக்க வேண்டும். அந்த முறையிலே அவர்களிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே, அரசுத் துறையிலே இருந்து ஒரு உத்தரவு முன்னால்போடப்பட்டிருக்கிறது. அதாவது இராஜபாளையத்தில், சக்கரப்பட்டி, அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் கூட்டுறவு ஸ்தாபனங்கள் அரசாங்கத்திற்குத் தேவையான, மருத்துவத் துறைக்குத் தேவையான குறிப்பிட்ட பாண்டேஜ் துணியை உற்பத்தி செய்ய வேண்டும் என்று அப்போது பொறுப்பிலே இருந்தபோது உத்தரவு போட்டிருக்கிறார்கள். அந்த உத்தரவு சமீபத்திலே மாற்றப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட துணிகளை உற்பத்தி செய்ய வேண்டாம் என்று சமீபத்திலே உத்தரவு போய் இருக்கிறது. ஏற்கனவே நடந்து கொண்டிருந்த அந்தத் தொழில் பாதிக்கப்படுகின்ற முறையிலே செய்வது சரியல்ல. அதற்குப் பதில் அந்த வட்டாரங்களிலே இருந்து உற்பத்திச் செய்யக்கூடிய அந்த துணிகளையெல்லாம் அரசாங்கம் தொடர்ந்து



கொள்முதல் செய்ய உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது) கடைசியாக, விற்பனைக்கு வரும்போது, தமிழ்நாட்டிலே 32 கோடி ரூபாய்க்குத் தேக்கம் இருக்கிறது. அந்தத் தேக்கத்தைப் போக்குவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டும். தூத்துக்குடி துறைமுகம் வழியாக வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டும். அதே நேரத்திலே தேக்கத்தைத் தவிர்க்க ஏற்கனவே ரிபேட் கொடுத்ததைப்போல் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

வாங்குகின்ற பொருள்களுக்கு பிரைமரி சங்கங்களுக்கு கோ-ஆப்டெக்ஸ் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்வதில்லை. அதன் காரணமாக இத்தகைய சங்கங்களிலே பல இடையூறுகள் ஏற்படுகின்றன. வெட்டுத் தீர்மானங்கள் கூட 4, 5 கொடுக்கப் பட்டிருக்கின்றன. குறிப்பாக எடுத்துக்கொண்டால், மதுரையிலே பல கூட்டுறவுச் சங்கங்களுக்கு 50,000, 40,000, 60,000 என்று பாக்கி நிற்கிறது. இந்தப்போக்கு நீடித்தால், கூட்டுறவு சங்கங்கள் எப்படி நல்ல முறையிலே இயங்க முடியும் என்பதை எல்லாம் கவனித்து, அவர்களுக்கு உடனடியாக பட்டுவாடா செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பட்டது). அதற்கான முன் முயற்சிகள் எடுக்கவேண்டும்.

1978-79-லே கொள்முதல் செய்வதற்காக 10 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தோம். ஆனால், இப்போது அதிகப்படியாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று சொல்கின்ற நாம், 1979-80-லே 5 கோடி ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று சொன்னால், அவர்கள் வாங்கிய கடனைத்திருப்பிக் கொடுக்கின்ற முறையிலே பத்துக் கோடிக்குப் பதில் ஐந்து கோடி ஒதுக்கினால், எப்படி நல்ல முறையிலே அவர்களால் கொள்முதல் செய்ய முடியும்? ஆகவே, அவர்களுக்கு 10 கோடியாவது ஒதுக்கித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுப்பது கடமை என்று அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது; சட்டமன்றம் ஏற்றுக் கொண்டிருக்கிறது; நாம் அனைவரும் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். இதற்காக ஒரு சட்டம் கொண்டு வர, இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற முறையிலே அது பொறுக்குக் குழுவிற்குவிடப் பட்டது. பிறகு இந்த அரசு கலைக்கப்பட்டதன் காரணமாக, அந்தச்சட்டம் காலாவதி ஆகிவிட்டது. ஆனால் இப்போது நம் கொள்கை விளக்க அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள், பாது காப்பு கொடுப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும், முறைப்படி செய்யப்படும் என்று. அநேகமாக எல்லா ஜில்லாக்களிலும் சுற்றி, ஒரு அறிக்கை தயாரிக்கப்பட்டது. அப்படி சேகரித்துக் கொடுத்த அந்த விவரங்களை வைத்துக்கொண்டு, அந்தத்

தொழிலாளர்களைப் பாதுகாக்கின்ற முறையிலே உடனடியாக ஒரு சட்டம் கொண்டு வந்து, அதை இந்த அவை முன்னால் சமர்ப்பித்து, அந்தத் தொழிலாளர்களுக்கு உடனடியாகப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

வீடு கட்டுவதற்கு 4,000 ரூபாய் கடனும், ஆயிரம் ரூபாய் மானியமும் கொடுக்கப்படுகிறது. உங்களுக்குத் தெரியும், இன்றைக்கு பொருள்களின் விலை உயர்ந்திருக்கிறது. அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு அவர்களால் நாம் சொல்லக்கூடிய வீட்டை எப்படிக் கட்ட முடியும்? ஆகவே, 4,000 ரூபாய் என்பதற்கு 6,000 ரூபாயைக் கடனாகவும், மேலும் 1,500 ரூபாயை மானியமாகவும் ஆக ரூ.7,500-ஐக்கொடுக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். (மணியடிக்கப்பட்டது.)

சேமிப்பு பாதுகாப்பில் நெசவாளர்கள் 6 பைசா கொடுத்தால், அரசு 3 பைசா தான் கொடுக்கிறது. அதை ஈகுவலாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், பஞ்சாலைக் கூட்டுறவுத் தொழிலில் வேலை செய்கின்ற தொழிலாளர்கள் பல ஆண்டுகள் ஆகியும்கூட இன்னும் பதிவு செய்யப்படாமல் இருக்கிறார்கள். அப்படியில்லாமல், 240 நாட்கள் அவர்கள் தொடர்ந்திருந்தால் பதிவு செய்யப்பட வேண்டும். (மணியடிக்கப்பட்டது).

[முற்பகல் 11–40]

*திரு.ப.வெங்கடசுப்பிரமணியம்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நெசவுத் தொழில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக இந்தியப்பெருநாட்டிலே, குறிப்பாக தமிழகத்திலே செய்யப்பட்டு வருகிற தொழிலாகும். இந்தத் தொழிலுக்குப் போதுமான, கூடுதலான ஆதரவு அளித்தால் சுய வேலை வாய்ப்புத் திட்டம் அதிகரிக்கும். நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்க நல்லதொரு வாய்ப்பு ஏற்படும். இந்தக் கருத்தினைக் கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கையில் விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

அதிலும், குறிப்பாக கூட்டுறவுத் துறையில் தற்போது 60 சதவிகிதம் நெசவாளர்கள் உள்ளனர், அதை 75 சதவிகிதத்திற்கு உயர்த்த நிதிநிலை அறிக்கையில் வழிவகை செய்யப்பட்டிருப்பதைப் பாராட்டுகிறேன். இந்த அறிக்கையில் பக்கம் 4-ல் 1979-80-ஆம் ஆண்டில் 54.22 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது என்றும் 1980-81ஆம் ஆண்டுக்கு 50 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட நான்கு இலட்சத்திற்கு மேல் குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் குறைபாட்டைப் போக்கிக் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்ய கைத்தறித்துறை அமைச்சர் அவர்கள் முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



கூட்டுறவுச் சங்கங்களுக்கு காசுக் கடன் வழங்கும் முறை பற்றி ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். அது கடந்த ஆண்டு உற்பத்தியின் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கிறது. அப்போது இருந்த விலைவாசி நிலவரத்திற்கும் இப்போதுள்ள விலைவாசி நிலவரத்திற்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. ஆகவே, அதற்கேற்ப அந்தக் கடனை வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதற்காக தமிழக அரசு ரிசர்வ் வங்கியோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன்.

இந்த மானியக் கோரிக்கையில் கூட்டுறவு நூற்பாலைகள் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவை செம்மையாக நடைபெறுவதாக அறிகிறேன். அதற்கு என்னுடைய பராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை என்று உள்ளது. அது 60 இலட்சம் ரூபாய் நஷ்டத்தில் நடைபெறுவதாக அறிகிறேன். இன்றுவரை நஷ்டம் நிவர்த்திக்கப்படவில்லை. அந்த நஷ்டத்திற்குக் காரணம்—நிர்வாக இயக்குநர் ஒழுங்காகச் செயல்படுவதில்லை, எப்போதும் காம்ப் சுற்றிக் கொண்டிருக்கிறார் என்பதுதான். அதுபோன்ற அதிகாரியைக் கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கண்டித்து நஷ்டத்தைச் சரிக்கட்ட நடவடிக்கை எடுக்கும்படி காஞ்சித் தொகுதி மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன். காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலையில் முன்பு 100ஆம் நம்பர் 120ஆம் நம்பர் நூல் எல்லாம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தன. தற்போது 40ஆம் நம்பர் நூல் மட்டுந்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க உரையில் கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஜரிகை கமிட்டி பற்றியும் சுத்தமான ஜரிகை வாங்குவது பற்றியும் குறிப்பிட விரும்புகிறேன். ஏற்கனவே காஞ்சிபுரம் நகரத்தின் சங்கத்தின் சார்பில் இந்த ஜரிகை வாங்குவதில் பல குறைபாடுகள் கூறப்பட்டுள்ளன. அந்தக் கமிட்டி முறையாக, ஒழுங்காகச் செயல்படவில்லையென்ற கருத்து எங்கள் பகுதியில் பரவலாக நிலவுகிறது. கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் அதுபற்றி உடனடியாகக் கவனித்து அந்த ஜரிகைக் கமிட்டியை ரத்து செய்து பிரதம சங்கங்களே நேரடியாக ஜரிகையை வாங்கும் ஏற்பாடு ஏற்கனவே இருப்பதைப் போல் அந்த முறையைப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சிபுரத்தில் சிலோன் அகதிகளுக்குக் கூட்டுறவு நூற்பாலைகளில் வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அகதிகளுக்குக் வீட்டு வசதி செய்து கொடுக்க மானியக் கோரிக்கையில் வழி செய்யப்

[திரு. ப். வெங்கடசுப்பிரமணியம்] [1980 ஜூலை 17

படவில்லை. தயவுசெய்து அந்தக் குடும்பதினருக்கு வீட்டு வசதி செய்து கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதற்காக ஒரு வீட்டுக்கு ரூபாய் ஐயாயிரம் கொடுக்க திட்டமிடப்பட்டிருக்கிறது. ஐயாயிரம் ரூபாய் போதுமானதாக இல்லை. ஒரு நெசவாளர் தறி போடும் அளவுக்கு ஒரு வீடு கட்ட வேண்டுமென்றால் குறைந்தது ஏழாயிரம் ரூபாயாவது கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ரிபேட்டுக்காக 1979-80-ல் 350 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது; 1980-81-ல் 250 இலட்சம் ரூபாய்தான் ஒதுக்கப் பட்டுள்ளது. கூடுதலாக ரிபேட் கொடுக்கும் வகையில் கூடுதலான தொகை ஒதுக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

காஞ்சி மாநகரில் ஒரு புராசஸிங் அன்ட் சைசிங் யூனிட்டை, (Processing and sizing plant) ஏற்படுத்தவேண்டும். அங்கே 25,30 சங்கங்கள் உள்ளன. அந்த யூனிட்டுகளை ஆரம்பித்தால் தொழில் சம்பந்தமான வேலைவாய்ப்புகள் உண்டாக வசதி ஏற்படும். அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேவிங்க்ஸ் அன்ட் செக்யூரிட்டி ஸ்கீம் என்று இதிலே போடப்பட்டுள்ளது. அந்தத் திட்டம் நல்ல திட்டம் தான். அந்தத் திட்டத்தினுடைய பைலாவிலே தவறுதலாக ஒரு விதி முறை இருக்கிறது. அதன் காரணமாக அந்தத் திட்டத்தின் நலன்களை நெசவாளர்கள் அனுபவிக்கமுடியாத நிலைமை இருக்கிறது. அத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்திலே வயது வரம்பு நிர்ணயிக்கப்படவில்லை. ஆனால் 5 ஆண்டுக்காலத்திலே திட்டம் வந்தபோது ஏற்கனவே சேர்ந்துவிட்ட நெசவாளர் களுக்கு அதனால் ஏற்பட்ட பலன்களை அனுபவிக்கமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தத் திட்டத்தின் பைலாவை அமைச்சர் அவர்கள் பார்த்து அதை முறையாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

அடுத்து The Tamil Nadu Handloom Workers' (Conditions of Employment and Miscellaneous Provisions) Act, என்ற சட்டம் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே அறிமுகப்படுத்தப் பட்டது. அதை மீண்டும் செலக்ட் கமிட்டிக்கு அனுப்பாமல் நேரடியாகச் சட்டமன்றத்திலே கொண்டுவந்து பாஸ் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஜூலை 17] [திரு. ப. வெங்கட.சுப்பிரமணியம்]

அடுத்து கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் பற்றி நிறையச் சொல்ல வேண்டுமென்று நான் எண்ணியிருந்தாலும் நேரம் அதிகமாக இல்லாத காரணத்தினால் சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன். அந்த நிறுவனம் முறையாகச் செயல்படவில்லை. நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் அங்கே சரக்குகளை உடனே எடுக்க வேண்டுமென்று உத்திரவிட்டிருந்தும்கூட சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அந்தச் சரக்குகளை எடுக்க ஏற்பாடுகளைச் செய்ய வில்லை. எங்கள் பகுதியில் லட்சக்கணக்கான ரூபாய மதிப்புள்ள சரக்குகள் தேங்கியிருந்தாலும்கூட, சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டால், திட்டத்தை வகுத்துக்கொண்டு இருக்கிறோம், வகுத்துக் கொண்டிருக்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர அந்தச் சரக்குகளை எடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவில்லை என்பதை நான் வருத்தத்தோடு இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அதிகாரிகள் நம்முடைய ஆட்சிக்கு முழுமையான ஒத்துழைப்பை வேகமாகக் கொடுக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பவர்லூம்கள் பற்றி இதிலே குறிப்பிடப் பட்டிருக்கிறது. பவர்லூம்கள் எந்த அளவுக்கு வருகின்றனவோ அந்த அளவுக்கு நெசவாளர்களுடைய வாழ்வு நசுக்கப்படுகிறது என்பதை நான் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். ஆகவே இந்த பவர்லூம்களை உடனடியாக ஒழிப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சர் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தமிழ்நாடு சரிகை நிறுவனம் காஞ்சிபுரத்திலே இருக்கிறது. அந்த ஸ்தாபனத்திற்கு வெள்ளி ரகம் சூரத்திலிருந்து வருகிறது, அதற்கு காஞ்சிபுரத்திலே தங்கமுலாம் பூசப்படுகிறது. சூரத்திலிருந்து வருகிற வெள்ளி அவ்வளவு நல்ல தரமானதாக இல்லை, தங்க முலாமும் நல்லதாக இல்லை. அதிலே ஷைனிங், அதாவது பளபளப்பு இல்லை என்பதைத் தெரிவித்து அங்கே அதற்கான ஏற்பாடுகளைச் செய்து அந்தக் குறைபாடுகளைப் போக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ்நாடு சரிகை நிறுவனத்தை ஒரு கூட்டுறவு ஸ்தாபனமாக மாற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்,

*திரு. ஏ. சி. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய மானியத்திலே மிக முக்கியமான மானியமாக வருகிற இந்த நெசவுத் தொழில் மானியத்திலே

பேசுவதற்காக நான் உள்ளபடியே பெருமை அடைகிறேன். விவசாயத்திற்கு அடுத்தபடியாக இந்தத் தொழிலில் தான் தமிழகத்திலே அதிகமானவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. என்னுடைய ஆரணி தொகுதியிலே மட்டும் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற மக்கள் 35 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் இருக்கிறார்கள். புரட்சித் தலைவர் ஆட்சியிலே இவர்களுக்கு மிகவும் பெருமைப்படக்கூடிய முறையிலே நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். வெளி மாநிலத்திற்கும் வெளி நாட்டிற்கும் ஏற்றுமதி செய்த பட்டு சேலைகளின் மூலமாகக் கிடைத்த லட்சக்கணக்கான ரூபாய்கள் மூலம் அந்தத் தொகுதி நெசவாளர்கள் பலன் அடைந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-50]

இந்திய அரசு நிதி உதவியுடன் கைத்தறி வளர்ச்சித் திட்டத்தில்; நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களையும், இரண்டு ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களையும் அமைத்துள்ளது. ஆனால் இதில் ஆரணி சேர்க்கப்படவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு இந்த மன்றத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

1975-76 ஆம் ஆண்டில் கைத்தறியினுடைய விற்பனை 15 கோடி ரூபாயாக இருந்தது. அது புரட்சித் தலைவரவர்களுடைய அரசிலே— 1979-80 ஆம் ஆண்டிலே 36 கோடி ரூபாய்க்கு விற்பனை என்று உயர்ந்துள்ளது. இது பாராட்டுதற்குரிய ஒன்றாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன் புரட்சித் தலைவரவர்கள் தலைமையிலே உள்ள இந்த அரசு கைத்தறி மேம்பாட்டுக்காக மிகவும் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே 5.56 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. இது பத்து இலட்சம் பேர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கிறது. இந்தத் துறையைத் தீவிரப்படுத்தி மேலும் 30 இலட்சம் பேர்கள் வாழ வகை செய்யும் திட்டத்தைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்திய நாட்டின் உற்பத்தி 2,300 மில்லியன் மீட்டர் துணி என்றால், தமிழகத்திலே மட்டும் 600 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தியாகிறது என்றால் அது தமிழகத்திற்குப் பெருமையாகும். அதாவது இந்திய நாட்டில் உற்பத்தியாகும் துணியில் நான்கில் ஒருபாகம் தமிழகத்தில்தான் உற்பத்தியாகிறது என்றால் தமிழகம்தான் அதில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது அதற்கான பாராட்டை தமிழக அரசுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.





கைத்தறித் துணி உற்பத்தியிலே ஈடுபடுகின்ற நெசவாளர்களுக்கு நிரந்தர ஊதியம் தொடர்ந்து கிடைக்க இந்த அரசு பல திட்டங்களைத் தீட்டியிருப்பது பெருமைபடக்கூடிய ஒன்றாகும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நூல் கிடைக்காமல் அவதிப்படும் நெசவாளர்களின் அவல நிலையை மாற்றவும், தேங்கிக் கிடப்பதை ஏற்றுமதி செய்தும் நெசவாளர்களின் துயரைத் துடைத்திட்ட இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கோவாப்டெக்ஸ் நிறுவனம், தமிழ்நாட்டிலே புதிய வேகத்தையும், புதிய எழுச்சியையும், புதிய உத்வேகத்தையும், நல்ல முன்னேற்றத்தையும் கண்டிருக்கிறது. அந்த கோவாப்டெக்ஸ் நிறுவனத்திற்கு தமிழக மக்களின் சார்பாக நான் பாராட்டு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஜெர்மன் போன்ற நாடுகளுக்கு 1979-80 ஆம் ஆண்டில் 2.60 கோடி ரூபாய் மதிப்புள்ள துணி ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. இதற்காகத் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்றுமதியைப்பற்றி ஒரு உறுப்பினரவர்கள் இங்கே குறைபாட்டுச் சொன்னார்கள். அவர்கள் எதற்காக அந்தக் குறைபாட்டைச் சொன்னார்கள் என்று தெரியவில்லை. ஏற்றுமதியைச் சிறிது காலத்திற்கு நிறுத்தி வைக்க வேண்டுமென்று கூடச்சொன்னார்கள். ஆனால் ஏற்றுமதியின் மூலம் தமிழகத்தின் பெருமை நிலைநாட்டப்படக்கூடிய ஒன்றாகும் என்பதை அவருக்கு இந்த மாமன்றத்தின் மூலம் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் மூலம் 5,000 ரூபாய் அளவில் திட்டம் போட்டு, அதில் மாநில அரசு 1,000 ரூபாய் உதவித் தொகையாகவும், 4,000 ரூபாய் வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தால் கடனாகவும் அளிக்கப்பட்டுள்ள இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் நாம் பெருமைப் படாமல் இருக்க முடியாது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1980-81 ஆம் ஆண்டில் 1,650 வீடுகள் கட்டப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் கைலி, துண்டு, பெட்ஷீட், வேட்டி போன்றவைகள் கைத்தறியிலே மட்டும்தான் உற்பத்தியாக வேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும் மற்ற நிறுவனங்கள் மூலம் உற்பத்தியாவதை இந்த அரசு தடை செய்ய வேண்டுமென்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நூலுக்குத் தேவை-டிமான்ட் ஏற்படுகின்ற நேரத்தில் அந்தந்த சொசைட்டிகள், உபரியாக இருக்கும்பொழுது வாங்கி வைத்துக்கொண்டு, டிமான்ட்-தேவை ஏற்படுகின்றபொழுது அதை விநியோகம் செய்தால் எல்லோருக்கும் உதவிகரமாக இருக்கும்.

தனியார் மில்லை அனுமதித்தால் எலக்ஷனுக்கும் அதற்கும் ஏதோ தொடர்பு இருக்கும் என்பதைப்போல ஒரு குற்றச் சாட்டைச் சொன்னார்கள். நான் இந்த மாமன்ற உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏழாண்டுக்காலம் இந்த நாட்டினுடைய ஆட்சியை நீங்கள் நடத்தியிருக்கிறீர்கள். அப்பொழுது பல தனிப்பட்ட நிறுவனங்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். இதுப்போலப் பணத் தொடர்பு வைத்துக்கொண்டு தான் நீங்கள் அந்த அனுமதியை அளித்திருக்கிறீர்களா என்று கேட்க விரும்புகிறேன். ''தான் திருடி அசல் வீட்டுக்காரியை நம்ப மாட்டாள்'' என்று சொல்வதைப்போலத்தான் அந்த உறுப்பினர் சொல்வது இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நெசவாளர்களின் நலன் பாதுகாக்கப்பட வேண்டும், அவர்கள் நோய் நொடி இல்லாமல் வாழ வேண்டும் என்பதற்காகத் தமிழக அரசு எடுக்கின்ற திட்டங்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மத்திய அரசு வர்த்தகத் துணை அமைச்சர் திரு. அன்சாரி அவர்கள் 7-7-80-ஆம் நாளன்று சென்னையில் கூட்டுறவு கைத்தறியாளர்கள் மாநாட்டில் ஒரு கருத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். சேலத்திலும், வாரணாசியிலும் உள்ள கைத்தறித் தொழில் நுட்ப இந்தியக் கழகத்தின் பொறியியல் நிலையங்கள் துவங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். விரைவில் அது துவக்கப்பட வேண்டுமென்று மைய அரசை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

மத்திய அரசு அறிவித்துள்ள தேசிய கைத்தறி அபிவிருத்தி கார்ப்பரேஷனைத் தொடங்கியிருப்பதற்காக தமிழக அரசின் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் 3 ஆண்டுகளில் 214 நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் அமைந்திருப்பது, நெசவாளர்களுடைய குடும்பங்களுக்கு நெசவுத் துறைக்குத் தமிழக அரசு செய்திருக்கிற சாதனையைத்தான் எடுத்துக் காட்டுகிறது. அனைத்திந்திய கைத்தறித்துணி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தினுடைய தலைவர் திரு. பானர்ஜீ அவர்கள் மத்திய அமைச்சர் முன்னாலே ஒரு குறையைச் சொல்லியிருக்கிறார்கள். கைத்தறித் தொழில் பல நெருக்கடிகளுக்கு ஆளாகி வருவதாகவும், கடந்த 3 ஆண்டு காலமாக, மத்திய அரசினால் பல்வேறு இன்னல்களுக்கு



இச்சங்கங்கள் ஆளாகி இருப்பதாகவும் மத்திய அரசு அமைச்சர் எதிரிலேயே சொல்லியிருக்கிறார்கள். இந்த மைய அரசு அந்நிலையைப் போக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கைத்தறி தொழிலாளர்களுக்குச் சட்டப் பாதுகாப்பு அளிப்பதன் மூலம் மூலப் பொருட்களைத் தொடர்ந்து வழங்கி, விற்பனை வசதி செய்து கொடுத்து, தொழில் நுட்ப முறையை உயர்த்தி, உற்பத்தி முன்னேற்றம் கண்டு, தேவையான செயல்முறை வசதி செய்து கொடுக்கும் இந்தத் தமிழக அரசைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மேலும், இந்த ரூ. 5,000 கடன் கொடுக்கும் திட்டம் ஒரு சில இடங்களிலே அதிகாரிகளால் சரியாகச் செயல்படுத்தப் படவில்லையென்ற குறையைச் சொல்ல விரும்புகிறேன், உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இங்கே உட்கார்ந்திருக்கிற பேரவைத் துணைத் தலைவர் தொகுதியிலே, சேரன்மாதேவியிலே, புதுக்குடி, வீரவநல்லூர், கல்லிடைக்குறிச்சி நெசவாளர்களுக்கு வீடு கட்ட கடனும் மானியமும் வழங்கப்பட வில்லை, அதே போன்று, ஆரணி தொகுதியிலே பல இடங்களிலே அப்ளிகேஷன் போட்டு, இன்னும் மக்களுக்குப் பணம் சரிவரப் போய்ச் சேரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நெசவாளர்களுக்கு வீடு கட்டக் கடனும் மானியமும் விரைவில் வழங்கப்பட வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், புதுக்குடியிலே வீடு கட்டி அது மழையால் இடிந்து போயிருக்கிறது. அந்த வீடும் இன்ஷூரன்ஸ் செய்துதான் கட்டப்பட்டிருக்கிறது. இன்ஷூரன்ஸ் கம்பெனி அதற்குப் பணம் தர மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலே இந்த அரசு தலையிட்டு, அந்த ஏழை மக்களுக்கு இந்த நெசவாளர் குடும்பங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இன்ஷூரன்ஸ் திட்டத்தால் நெசவாளர்கள் பயன் அடைகிறார்கள் என்றாலும், இப்போது தருகின்ற ரூ. 500 போதாது என்பதைப் பணிவோடு இந்த மாமன்றத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு கைத்தறி துறை அமைச்சர் பெரிய மனது வைத்து, இந்த ரூபாய் 500 ஐ அதிகப்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த வாய்ப்பை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: அவைத் துணைத் தலைவரவர்களே கைத்தறி, நெசவு, கதர், கிராமத் தொழில்கள் அனைத்து வருகின்ற தமிழக மக்களுடைய நல்வாழ்வைத் தேடுகின்ற இந்த மானியக் கோரிக்கையில் பேசுகின்ற வாய்ப்பு அளித்ததற்கு முதலிலேயே நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன். அரசு கொடுத்திருக்கிற குறிப்புகள் நலிந்தவர்களாக இருந்து கொண்டிருக்கிற நெசவாளர்களுக்கு நல்வாழ்வு கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதை இங்கே

தோற்றுவித்தாலும் இன்னும் பல காரியங்களிலே அவர்களுடைய கவனம் செலுத்தப்படுவதற்கு சில குறிப்புகளையும் சில வேண்டுகோளையும் வைப்பதற்கு உங்கள் அனுமதியைப் பெற்று பேசுகின்றேன். தமிழ்நாடு நெசவாளர்கள், அவர்களை நம்பியிருக்கிற குடும்பம் ஆக மொத்தம் பல இலட்சம் பேர்கள் இருந்தாலும்கூட அவர்களுக்கு வேலை வாய்ப்பு நிரந்தரமாக இல்லாமலிருக்கிறது. சான்றாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாட்டு நெசவாளர்களின் வேலை வாய்ப்புக்கென்றே ஆரம்பிக்கப்பட்ட மத்திய-மாநில அரசுகளின் தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டத்தில் ஈடுபட்டிருக்கிற நெசவாளர்களுக்கு மாதத்திற்கு 10 நாட்கள்தான் வேலை கிடைக்கிறது என்று சொன்னால், மத்திய-மாநில அரசுகள் சேர்ந்து செய்கின்ற நிலையிலேயே 10 நாட்கள்தான் வேலை என்று சொன்னால், மற்ற நெசவாளர்களுக்கு எத்தனை நாட்கள் வேலை கிடைக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதைப் போலவே, கரைபோட்ட வேட்டிகளை கைத்தறிக்கே ஒதுக்க வேண்டுமென்று சொல்கின்ற எண்ணம் மட்டுமல்லாமல், சட்டமே அரசாங்கத்திடமிருந்து பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் விசைத்தறிகள் அவைகளை ஓரளவுக்கு தயாரிப்பதன் மூலம் போட்டியிலே கலந்து கொள்ள முடியாமல், கைத்தறி வேட்டிகள் தேங்குகின்றன. அதனை நெய்கின்றவர்கள் விற்கவில்லையே என்று ஏங்குகின்றனர். இந்த விசைத் தறிகளுடைய போட்டி மட்டுமல்லாமல், சில மில்கள் வெள்ளைத் துணியைத் தயாரித்து ஓரத்திலே கரை போட்டு விற்றுவிடுவதாக ஒரு தகவல் வந்திருப்பதையும் அரசாங்கம் பரிசீலித்து, நெசவாளர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(நண்பகல் 12.00)

நெசவு நெய்வதே ஒரு அதிக நெஞ்சு அழுத்தத்தில் செய்கின்ற ஒரு வேலையாக இருந்தாலும், நெஞ்சு வலியை உற்பத்திப் படுத்துகின்ற ஒரு வேலையாக இருந்தாலும், மொத்த நூல்களைப் பயன்படுத்தி வேலை செய்கின்ற ஜமுக்காளங்கள், பெட்ஷீட்டுகள் போன்ற துணிகளை நெய்கின்ற நெசவாளர்கள் அதிலே அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு எந்த வகையில் பாதுகாப்பு அளிப்பது, நிவாரணம் அளிப்பது என்பதையும் அரசு சிந்திக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கத்தின் கீழே எல்லாக் கைத்தறி நெசவாளர்களையும் கொண்டு வரவேண்டுமென்பது எங்களுடைய உயர் லட்சியம் என்பதற்குப் பாராட்டைத் தெரிவித்து, அதே நேரத்தில் சில கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் என்ற பெயர்களிலே இருக்கின்றனவே அல்லாமல் கூட்டுறவு சங்கங்களே



அல்லாமல் இருப்பதும், சில மாஸ்டர் வீவர்கள் சிலருடைய பெயரிலே எழுதி வைத்துக்கொண்டு அவர்களுடைய பெயர்களிலே நூல்களைவாங்கி, அதிக விலைக்கு விற்றுத் தீர்த்து, ஆனால் துணி உற்பத்தி செய்ததைப்போன்று கணக்கிலே எழுதி வைத்து, நீங்கள் ரிபேட் கொடுக்கின்ற நேரத்திலே, அவர்கள் விற்கப்பட்டதாக 60,000, 70,000 என்று சம்பாதித்துக் கொண்டிருப்பதை இந்த அரசு கவனித்துத் தடுத்து, அரசாங்கம் கொடுக்கின்ற நல்ல பல திட்டங்கள் எல்லாம் நலிந்த நெசவாளிகளுக்குப் போகின்ற வழிவகைகளை நிச்சயமாகக் கண்டாக வேண்டும்.

அதற்குக் காரணமாக அமைவது என்னவென்று சொன்னால், கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தாமல், தள்ளிப் போட்டுக் கொண்டு போவது என்பது தான். கூட்டுறவுச் சங்கங்களுக்கு மிக விரைவில் தேர்தல்கள் நடத்துகிறபோது, அந்தத் தேர்தலிலே வெற்றிபெறக்கூடியவர்கள் கொஞ்சம் அதிகமாக அக்கறை எடுத்துக் கொள்ளக்கூடும் என்ற காரணத்தை இங்கே வைக்க விரும்புகிறேன்.

அதைப்போலவே பெரிய சொசைடிகள் எக்சிபிஷன்ஸ் பொருட்காட்சி சாலைகளில் மட்டும் தங்களுடைய ஸ்டால்களை வைத்து துணிகளை விற்பதற்கு ஏற்பாடுகளைச் செய்துகொண்டு இருக்கிறார்கள். அது நல்ல ஏற்பாடுதான். ஆனால் அந்த பொருட்காட்சியின் உள்ளே அலங்காரங்களை நாங்களே செய்கிறோம், நீங்கள் வாடகை கொடுத்து விடுங்கள் என்று சொல்லி மிக அதிகமான வாடகையை வசூலித்து, சில சங்கங்கள் தங்களுடைய விற்பனையிலே வந்த ஊதியம் அத்தனையையும் வாடகையாகக் கொடுத்ததாகக் குறிப்பிட்டு இருப்பதை அரசாங்கம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

அது போலத்தான், அம்மாப் பேட்டையில் உள்ள நெசவாளர் தொழிற்சங்கம் இருக்கிறதே அந்தக் கூட்டுறவு சங்கம் போன்ற சொசைடிகள் அதிகமான கிளைகள் திறப்பதற்கு முன்வருமேயானால் அரசாங்கம் அவைகளுக்கு உடனடியாக அனுமதி கொடுப்பது நல்லது. அதன் மூலமாக வேலை வாய்ப்பு கிடைக்கும் விற்பனையும் அதிகரிக்கும் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று, நெசவாளர்கள் இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்படுகின்ற போது அவர்களுக்கு ஏற்படுகின்ற துயரங்களை துடைக்கின்ற நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணத்திற்குச் சொல்லப் போனால், தெற்கு வைத்தியநாதபுரம், கியு. 751-ல் சங்கத்தைச் சேர்த்த உறுப்பினர் பெருமாள் அவர்களுக்கு ஒரு இழப்பு

மழைக்காலத்திலே ஏற்பட்டது. அவர் கைத்தறி வைத்திருந்தார். அவர் வீட்டுச் சுவர் இடிந்து விழுந்து, தறி நாசமாகி, துணிகள் எல்லாம் வெள்ளத்திலே மிதந்து கொண்டு சென்ற காரணத் தினாலே அவருக்கு இழப்பு ஏற்பட்டது என்பதை அவர் மனு கொடுத்து, 22–11–79 அன்று ஆய்வாளர் சென்று பார்வையிட்டு இருக்கிறார்கள். பார்வையிட்ட பிறகு வேண்டிய நடவடிக்கையை எடுக்கிறேன் என்று அவர் சொல்லியிருக்கிறார். இன்று வரையில் எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. நான் மீண்டும் நினைவுபடுத்துகிறேன் 21–11–1979 அன்று பார்வை யிட்டதற்குப் பின்னால் இத்தனை மாதங்கள் ஆகியும் அவருக்கு ஈட்டுத் தொகை கிடைக்கவில்லை என்றால், ஒரு ஏழை நெசவாளி அவனுடைய குடும்பம் எப்படி வாழும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்று உங்களை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, துணித் தேக்கம் 50 கோடிக்கு மேல் இருப்பதாகக் கணக்கு தரப்படுகிறது. 50 கோடி ரூபாய்க்கு மேல் துணித் தேக்கம் இருக்கிறது என்று சொன்னால், ஏன் அந்த அளவிற்கு தேங்கிக் கிடக்கிறது என்பதைப் பரிசீலிப்பது தான் இந்த அவையின் கடமை, இந்த அரசின் கடமை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு சங்கங்களிலே 9 சதவீதம் அதிகமாகக் கொடுத்து, துணிகளை கோவாப்டெக்ஸ் வாங்கி, 20 சதவீதத்திலிருந்து 30 சதவீதம் வரைலாபம் வைத்து விற்க வேண்டுமா? ஆகவே, ப்ரைமரி சொசைடிகளுக்கு கோவாப்டெக்ஸ் மூலம் கிடைக்கின்ற லாபம் 9 சதவீதம் என்று சொல்லப்படுகிறது. 9 சதவீதம் லாபத்திற்கு அவர்களிடத்தில் இருந்து வாங்கி, 20சதவீதம் அல்லது 30சதவீதம் அதிகம் வைத்து விற்கிற நேரத்தில் துணி விலையை அதிகப்படுத்தி விற்கிற காரணத்தால் மற்றவர்கள் வாங்குவதற்கு அஞ்சுகிறார்கள் என்பதையும் பார்க்கவேண்டும்.

இரண்டாவது செய்தியாக, பொருட்காட்சிகள் நடக்கின்ற நேரத்தில் மட்டும் இந்தக் கடைகளைத் திறப்பதற்கு பதிலாக கைத்தறித் துணிச் சாலை—கைத்தறி கடைகள் என்று சொல்கிற அளவிற்கு — எப்படி மோட்டார் ஸ்பேர் பார்ட்ஸ் வாங்கப் போகிற 'நேரத்தில்' ஒரே இடத்தில் பல கடைகள் இருக் கின்றனவோ அதே போல கைத்தறி கடைகளும் நிரந்தரமாக ஒரு இடத்தில் வைப்பதற்கான திட்டத்தை அரசு பரிசீலித்தால் நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

அது மட்டுமல்ல, அதிலே பணிபுரிகின்றவர்களுக்கு ஊக்கம் கொடுக்கின்ற வகையில் ஆந்திர மாநில கூட்டுறவுச் சங்கம் அவர்களுக்கு கமிஷன் கொடுத்துக் கொண்டு இருக்கிறது,



அதேபோன்று ஏதாவது ஒரு திட்டத்தை வகுத்து இங்கே விற்பனையிலே ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறவர்கள் அதிகம் விற்பதற்கு உரிய வகையிலே ஊக்கம் கொடுக்க முடியுமா என்பதையும் அரசு சிந்திக்கவேண்டும்.

அடுத்த செய்தியாக இங்கே பனை பொருள் பற்றி இந்த மானியக் கோரிக்கையில் வருகிற காரணத்தாலே, அது கதர் வாரியத்திலே இருக்கிற காரணத்தாலே, இரண்டையும் எடுத்துச் செல்ல விரும்புகிறேன்.

கதர் வாரியத்திலே ஈடுபட்டு இருக்கின்றவர்கள் காந்தி மகானின் திட்டத்தின்படி வேலை வாய்ப்பைக் கொடுக்க வேண்டியவர்கள், பெருமா நல்லூர் போன்ற பகுதிகளில் எல்லாம் வேலை செய்கின்றவர்களுக்கு சரியான ஊதியமே கொடுக்கவில்லை என்ற புகார் வந்து இருக்கிறது. பெருமா நல்லூர்—தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரியம்—67 நபர்களை வேலைக்கு வைத்துக் கொண்டு இருக்கிறது. அவர்களுக்கு ஒரு நாளைக்குக் கொடுக்கின்ற கூலி 2½ ரூ. முதல் 3 ரூ. வரை தான் இருக்கிறது என்பதை உங்களுக்கு வருத்தத் தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆக குறைந்த பட்சம் ரூ.7 கொடுக்க வேண்டும் என்று நமது அரசே ஆணையிட்டு இருக்கிறபோது 3 ரூபாய் கொடுக்கும் நிலை இருக்குமானால், அதுவும் மாதம் முழுவதும் வேலை இல்லை என்று சொல்கிற நிலைமை இருக்குமானால் அது எத்தகைய வகையில் நெசவாளர்களுக்கும், கதர் தத்துவத்திற்கும் பயன்படும் என்பதை-கதர் சித்தாந்தம் என்பது ஏழை எளிய மக்களை வாழ்விப்பதுதான்—எண்ணிப்பார்க்க வேண்டும்.

பனை பொருள்களைப் பொறுத்த வரையில் 47 லட்சம் ரூபாய் அளவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு இருக்கிறது என்று இங்கே குறிப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது. 4 கோடி பனை மரம் இந்த நாட்டிலே இருப்பதாகவும், அதிலே 60 லட்சம் பனை மரங்கள் தான் பயன்பட்டு இருப்பதாகவும், சொல் கிறார்கள். ஆகவே 3 கோடியே 40 லட்சம் பனை மரங்கள் பயன்படாமல் இருக்கின்றன என்கிற தகவலும் நமக்குக் கிடைக்கிறது.

வெறும் 60 லட்சம் பனை மரங்களைப் பயன்படுத்தி, நார் போன்ற பொருள்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப் படுகின்ற பொருள்களை 40 லட்சம் ரூபாய்க்கு வெளிநாட்டுக்கு அனுப்பப்படுகின்றன என்று சொன்னால் மேலும் பல மரங்களை பயன்படுத்துவதன் மூலம் இன்னும் எத்தனை எத்தனை பொருள்களை நாம் வெளிநாட்டுக்கு அனுப்பலாம் என்பதை சிந்திக்கவேண்டும்.

அதிலிருந்து கிடைக்கும் நுங்கு; நுங்குதல் என்றாலேலே குடித்தல் என்று தான் பொருள். ஆக, இள நுங்குகளை எடுத்து, பதப்புடுத்தி, டப்பாக்களில் போட்டு, பாட்டில்களில் போட்டு அடைத்து, வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியுமா என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதைப் போலவே, பனம்பழத்தின் மேலே இருக்கும் சாறை எடுத்து ஜாம் செய்து வெளிநாடுகளுக்கு அனுப்ப முடியுமா என்பதும் பரிசோதனையில் இருப்பதாக நான் அறிகிறேன். அது எந்த அளவிற்கு வெற்றி பெற்றது என்பது தெரியவில்லை.

அதைப் போலத்தான் பனை ஜாம் எடுத்ததற்குப் பின்னாலே அந்தப் பனம் கொட்டையை புதைத்து வைத்து, அது முளைக்கிற போது, நமக்கு இரண்டு லாபம் கிடைக்கிறது. பனம் கிழங்கு ஒன்று கிடைக்கிறது. அவ்வாறு எடுக்கிற போது தவன் என்று சொல்கிற நுங்கைவிட சற்று கடினமாக இருக்கின்ற இனிய பொருள் ஒன்று கிடைக்கிறது. அவற்றை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு நாம் முயற்சிக்கலாம்.

அதோடு கூட பனம் கொட்டையிலிருந்து எண்ணை எடுக்க முடியுமா என்பதும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருவதாக அறிகிறேன். அந்தப் பனம் கொட்டையிலிருந்து எண்ணை எடுக்கும் ஆராய்ச்சி வெற்றி பெறுமானால் ஏழை எளிய மக்கள் ஏராளமாக வாழ்வு பெறுகின்ற சூழ்நிலை உருவாகும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். கதர்-கிராம தொழில் என்று வருகிற காரணத்தால்—காட்டேஜ் அன்ட் வில்லேஜ் இன்டஸ்டீரிஸ்போர்ட் ஏராளமான தொழில்களை பார்வையிட வேண்டிய காரணத்தால், பனைப் பொருள் வாரியம் என்று தனி வாரியம் ஒன்றைக் கொண்டு வந்தால் நாங்கள் எல்லாம் இந்த அரசை வெகுவாகப் பாராட்ட முன் வருவோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் அத்தனைப் பொருள்கள் இருக்கின்றன. அத்தனை காரியங்கள் செய்யப்படவேண்டியிருக்கின்றன.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், பனை வெல்லத்தை எடுத்துக்கொள்ளுங்கள். பனை வெல்லம் உடலுக்கு நல்லது என்று சொல்கிறார்கள். பனை வெல்லத்திலே தான் காப்பி போடவேண்டும் என்று காந்தி மகான் நமக்குக் கட்டளையிட்டார். சுக்கும் மல்லியும், பனை வெல்லமும் போட்டு குடிக்கிற காப்பி மிக நல்ல காப்பி என்றும், உடலுக்கு நல்லது என்றும் சொல்கிறார்கள். உடலுக்குத் தீமை விளைவிக்கும் மற்ற காப்பியைக் குடிப்பதற்குப் பதிலாக காந்தி சொன்ன காந்தி காப்பி என்று அழைக்கும் அந்தச் சுக்கு



காப்பியை போடுவதோடு அல்லாமல், அரசாங்கம் எங்கெங்கே தன்னுடைய அலுவலகங்களை வைத்து இருக்கிறதோ அந்தந்த கேன்டீன்களில் எல்லாம் அந்த மரபுப்பொடி போடுகின்ற காப்பியோடு, இந்த பனை வெல்லக் காப்பி என்று சொல்லப் படுகின்ற, சுக்குக் காப்பி என்று சொல்கிற, காந்தி காப்பி என்று சொல்கிற பனை வெல்லக் காப்பியும் கொடுக்கின்ற ஒரு ஏற்பாட்டை அரசாங்கம் செய்தால், அந்தப் பனை பொருள் அந்தப் பனை வெல்லம் அதிக விலைக்கு விற்று, ஏழை, எளிய மக்கள் நல்வாழ்வு வாழ்வதோடு, அதை அருந்துகின்றவர்களும் நல்ல உடலைப் பெறுவார்கள் என்று உங்களுக்கு நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்,

நான் ஏற்கெனவே பட்ஜெட்டில் பேசுகிறபோது, முதல் முதலிலேயே பேசினேன். குருத்துப் பண்ணை, 4 ஆண்டுக் காலம், 5 ஆண்டுக் காலத்தில் வருகிற அளவிற்கு பனை மரங்களை பண்ணை போலவே, விவசாயப் பண்ணை போலவே, பயிரிட்டு, அந்தக் குருத்துகளை எடுத்து சுவை மிக்க அந்தக் குருத்துகளை எடுத்து அந்நியச் செலவாணி ஈட்டுகின்ற அளவிற்கு செயல்பட வேண்டும் என்று நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

பலபல ஆண்டுகளாக விபத்தில் இறந்துபடுபவர்களுக்கு பல ஆண்டுகாலமாக பணம் கொடுக்கப்படாமல் இருந்து கொண்டு இருக்கிறது. பனை மரத்தில் இருந்து விழுபவர்கள் இறந்து விட்டால் அவர்களுக்கு உடனடியாக நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்பதையும் நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

கைக்குத்தல் அரிசி, பனை வெல்லம் போன்ற பொருள்கள் எல்லாம் நாட்டு மக்கள் நல்ல வகையில் பயன்படுத்துகிற அளவீற்கு நல்ல பிரசாரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பனை ஏறும் தொழிலாளி, நெசவுத் தொழிலாளி இவர்களுக்கு எல்லாம் ஜனதா இன்சூரன்ஸ் திட்டம் நாம் அதிக அளவிற்கு பயன்படுத்தும் நிலைமை ஏற்படுமானால், அவர்களுக்கு துன்பமும், துயரமும், சேதமும், விபத்தும் ஏற்படுகின்றபோது அதிக பலன் கிடைக்கும் என்பதைச் சொல்லி இந்த மானியக் கோரிக்கை மீது எனது கருத்துகளைச் சொல்ல அனுமதி அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன்: வணக்கம்.

(பிற்பகல் 12-10.)

திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த மாமன்றத்தில் கைத்தறித் துறை அமைச்சரவர்களால் தாக்கல் செய்யப்பட்டிருக்கிற கைத்தறி

மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துகளைக் கூறுவதற்கு அனுமதி அளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகப் பொதுமறையைத் தந்த திருவள்ளுவரே நெசவுத் தொழில் செய்துதான் பிழைத்தார் என்பது வரலாறு. கைத்தறித் தொழிலாவது பழம் பெருமை மிக்க தொழில் என்பதும் தமிழ்நாடு இன்றைய தினம் கைத்தறி உற்பத்தியில் இந்தியாவின் மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக இருந்துவருகிறது என்பதும் உள்ளபடியே பாராட்டுக்குரியதாகும்.

நம் நாட்டில் உற்பத்தியாகும் 2,300 மிலி மீட்டர் கைத்தறித் துணியில் நமது தமிழ்நாட்டில் 600 மிலி மீட்டர் கைத்தறித் துணி உற்பத்தியாகிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. அதனால், நமது மாநிலம் மற்ற மாநிலங்களைவிட உற்பத்தியைப் பெருக்கிக் காட்டியிருக்கிறது என்பதை எண்ணும்போது அது உள்ளபடியே நாம் பெருமைப் படத்தக்க ஒன்றாகும்.

கைத்தறித் துணிகள் மீது பொது மக்களுக்கு நாட்டம் குறைந்து, கைத்தறித் துணிகள் தேக்கம் ஏற்பட்டு, அதனால் கைத்தறி நெசவாளர்கள் கஷ்டப்பட்ட நேரத்தில் கைத்தறி துணி மூட்டைகளை தலையிலே சுமந்து, தெருத் தெருவாக விற்றுத்தந்து, அதற்கு ஒரு மகத்துவத்தை ஏற்படுத்தி, கைத்தறி நெசவாளர்களின் கஷ்டத்தைப் போக்கி, அவர்களைக் காப்பாற்றியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். அந்த அண்ணாவின் பெயரால் அவர்களுடைய கொள்கையைச் சொல்லி, இன்று நாட்டு மக்களிடம் ஓட்டு வாங்கி இங்கே வந்திருக்கிற இந்த அரசு கைத்தறி நெசவாளர்களுக்கு பாதுகாப்பாக இருக்கிறது. அதற்காக இந்த அரசை நான் பாராட்டுகிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் மேம்பாட்டிற்காக பல்வேறு நடவடிக்கைகளை இந்த கொள்கைக் குறிப்பிலே அமைச்சரவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள்; அதை நான் பாராட்டுகிறேன். இந்த மானியத்தைப் பொறுத்தவரையில், கைத்தறி நெசவாளர்களின் கவலையைப் போக்கி, அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கின்ற திட்டங்களை இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் தந்திருக்கிறார்கள். அதற்காக இந்த அரசை பாராட்டுகிறேன்.

கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அவர்கள் விலா எலும்பு நோக நாளெல்லாம் வருத்தப்பட்டு தொழில் செய்தாலும் அவர்களுக்கு சட்டப்பாதுகாப்பு இல்லாத அவலநிலை இதுவரையில் இருந்தது. இன்றைக்கு இந்த அரசு அதற்கான சட்டத்தைக் கொண்டு வரும்போது, ஜனநாயகத்திற்கு விரோதமாக, இந்திய அரசியல் சட்டத்திற்கு விரோதமாக எந்தவிதமான முகாந்திரமும் இல்லாமல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசை அன்றைக்கு மத்திய அரசு கலைத்தது; மீண்டும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற அரசாங்கம் கைத்தறி நெசவாளர்களின் கவலையைப் போக்கி, அவர்கள் கண்ணீரை



123088

துடைக்க பாதுகாப்பு சட்டம் கொண்டு வருவோம் என்று கொள்கை விளக்கக் குறிப்பில் கூறியிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன்.

அது மட்டுமல்ல. அதிகமான கைத்தறிகளையும் நெசவாளர்களையும் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவருவது பற்றி கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபோலவே, 1984–85 ஆம் ஆண்டுக்குள்ளாக ஏறத்தாழ 75 சதவிகிதம் நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் கொண்டுவர முடியும் என்று இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்காக இந்த அரசையும், அரசுப் பொறுப்பை ஏற்றிருக்கிற புரட்சித் தலைவரவர்களையும், கைத்தறித் துறை அமைச்சரவர்களையும் நான் பாராட்டுகிறேன்.

அதைப்போல கைத்தறி நெசவாளர்களுக்கு வீட்டுவசதித் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டும். நெசவாளர்கள் இன்றைக்கு வாடகை வீடுகளில் அதுவும் குறைந்த வாடகைக்கு இருந்து கொண்டு கஷ்டப்படுகிறார்கள். சில நேரங்களில் அந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் அவர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். ஆகவே, கைத்தறி நெசவாளர்களைப் பொறுத்தவரையில் சொந்தமாக வீடு கட்ட முடியாத நிலையில் இருக்கிறது. அவர்களுக்கு வீடு கட்டும் திட்டம் இந்த அரசிடம் இருக்கிறது. அதுபற்றி கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால், அதை கொஞ்சம் வேகமாகச் செயல்படுத்த வேண்டும். அதிகப்படியாக வீடுகளைக் கட்டித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரிசன நல வீட்டு வசதி வாரியம் அமைக்கப்பட்டிருப்பதைப் போல கைத்தறி நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க கைத்தறி நெசவாளர் வீட்டு வசதி வாரியம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல என்னுடைய கரூர் தொகுதியை பொறுத்தவரையில், அங்கே உற்பத்தியாகின்ற கைத்தறித் துணிகள், பெட்சீட்கள் இங்கிலாந்து, ரஷியா, ஆஸ்திரேலியா போன்ற வெளிநாடுகளுக்கு எல்லாம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அதன் மூலம் அந்நியச் செலவாணியை அங்கே இருக்கிற வியாபாரிகளும் மற்றவர்களும் இந்த அரசுக்கு ஈட்டித் தருகிறார்கள்.

ஆனால், அதே நேரத்தில் நூல் விலை அதிகரித்து இன்றைக்கு அந்தத் தொழிலிலே சற்று தொய்வு ஏற்பட்டிருக்கிறது. உற்பத்தியாளர்களும், நெசவாளர்களும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நூல் விலையைக் கட்டுப்படுத்திக் குறைக்க வேண்டும். அதனை ஒரே சீராக ஏற்படுத்தி அதன் மூலம் அந்தத் தொழிலுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்று இந்த அரசு மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்களுக்கும், கைத்தறி உற்பத்தியாளர்களுக்கும் இடையிலே தரகர்கள் இருந்துகொண்டு கைத்தறி நெசவாளர்களுக்கு கிடைக்க வேண்டிய லாபத்திலே பங்கு போடுகிறார்கள். எனவே, கைத்தறி உற்பத்தியாளர்களுக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கும் இடையிலே இடைத் தரகர்கள் என்று சொல்லப்படுகின்ற மாஸ்டர் வீவர்கள் இருக்கக் கூடாது என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவரவேண்டும். அந்த சட்டத்தை இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவருவதற்கு முன்வரவேண்டும் என்று நான் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அடிக்கடி தீ விபத்து ஏற்படுகின்றது. அப்போது கைத்தறி மச்சங்கள் எறிந்துபோய் விடுகின்றன. அதனால் உடமையாளர்களுக்கு அதனால் பெருத்த சேதம் ஏற்பட்டு மீண்டும் அந்தத் தொழிலை அவர்களாலே தொடங்குவதற்கு முடியாமல் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்ன செய்வதென்றே புரியாமல் இருக்கிறார்கள். கடந்த 4 மாதத்திற்கு முன்பு கூட ஒரு தீ விபத்து ஏற்பட்டது. தற்போது பத்து நாட்களுக்கு முன்னாலே கூட இரண்டு இடங்களில் தீ விபத்து ஏற்பட்டு அதனாலே கிட்டத்தட்ட 40, 50 கைத்தறி உடமையாளர்களும் பல நூறு கைத்தறி நெசவாளர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே அந்தக் கைத்தறிக் கொட்டகைகளை கண்டிப்பாக இன்சூர் செய்யவேண்டும் என்றும் அதற்கான கட்டணத்தை வசூலிக்கவேண்டும் என்றும் சட்டத்தை இந்தக் கூட்டத் தொடரிலேயே கொண்டுவரவேண்டும் என்றும் மாண்புமிகு அமைச்சரவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு அந்த தீ விபத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்ற கைத்தறி உரிமையாளர்களுக்கு அரசாங்கத்திலே இருந்து 450 ரூபாய் கடன் கொடுக்கிறார்கள். அதிலே 150 ரூபாய் மானியம் என்று சொல்கிறார்கள். ஆனால் அந்தக் கடன்களைக் கொடுப்பதற்கு ஏறத்தாழ 3 மாத காலம், 4 மாத காலம் ஆகிறது. ஆகவே அவர்கள் வேறு வழியில்லாமல் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே உடனடியாக அவர்களுக்கு கடன்களைக் கொடுக்கின்ற வகையில், ஒரு தறிக்கு எவ்வளவு ஆகின்றதோ அவ்வளவும் கொடுக்கின்ற வகையில் உடனடியாக இந்த அரசு ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களில் துணிகள் இன்று அதிகமாகத் தேங்கிக் கிடக்கின்றன. மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்கள் 10 நாட்களுக்கு முன்னாலே என்னுடைய தொகுதிக்கு வந்து எல்லா கூட்டுறவுச் சங்கங்களையும் பார்த்து அங்கே தேங்கிக் கிடக்கின்ற துணிகளையும் பார்த்தார்கள். அப்படித் தேங்கிக் கிடக்கின்ற கைத்தறித் துணிக்கு ரிபேட் கொடுக்க வேண்டும் என்று மத்திய அரசை இந்த அரசு கேட்டுக்கொள்ள வேண்டும். அது குறித்து வலியுறுத்த வேண்டும். அப்போது தான் கூட்டுறவுச் சங்கங்களிலே உற்பத்தியாகும் துணிகள் தேக்கம் இல்லாமல் இருக்கும். அவ்வாறு தேக்கம் இல்லாமல் இருந்தால் தான் கூட்டுறவே நாட்டுயர்வு என்ற தத்துவத்திற்கு நாம்



வழிகாட்டியாக இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று நெசவாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்று இந்த அரசிலே பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொண்டு, அவர்களைப் பாராட்டி எனக்கு வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு அவையின் துணைத் தலைவரவர்களே, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்தக் கைத்தறி மானியக் கோரிக்கையின் பேரில் சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன். செய்யும் தொழிலைச் சீர்தூக்கிப் பார்க்கின், நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை என்று கூறினார்கள். அதே சமயம் ஆணுக்கும் பெண்ணுக்கும் அழகு தருவது ஆடை என்றும் கூறியிருக்கிறார்கள். இன்னொன்றும் கிராமப் புறங்களிலே குறிப்பிடுவார்கள். ஆடை நெய்கிறவன் என்று அடித்துச் சொல் என்று சொல்வார்கள். விவசாயத்திற்கு அடுத்தது கைத்தறி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் ஏறக்குறைய உண்மைதான். 56 இலட்சம் தறிகளைக் கொண்ட அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்கள் சாயம் தோய்த்தல் மற்றும் நெய்தல் போன்ற தொழில்களிலே 30 இலட்சம்பேர் ஈடுபட்டிருக்கின்றார்கள். இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில் கைத்தறி என்பது ஒன்று. தொழிலியல் கூட்டுறவு என்பது மற்றொன்று. மூன்றாவதாக மாஸ்டர் வீவர்ஸ் என்று சொல்லக்கூடியவர்கள் ஒன்றிரண்டு தறி வைத்திருக்கக்கூடியவர்களுக்கு நூலைக் கொடுத்து நெய்யச் செய்து குறைந்த கூலியை அவர்களுக்குக் கொடுக்கின்ற நிலையும் இருக்கின்றது.

[பிற்பகல் 12.20]

இந்த ஆரம்ப கூட்டுறவு நிலையங்களைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய அரசு தரப்பிலிருக்கும் பல்வேறு வங்கிகள் கடன் உதவி அளித்து சிறப்பாக துணி உற்பத்தியாகிறது. அப்படி உற்பத்தியாகும் துணிகளை பிரதம கூட்டுறவுச் சங்கங்களே முழுமையாக எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படி எடுத்துக் கொள்ளும்போது 9½ சதவீதம் லாபம் என்று வைக்காமல், 12 அல்லது 13 சதவீதம் லாபம் வைத்துக்கொடுத்து அந்தத் துணி வகைகள் அனைத்தையும், இந்தக் கூட்டுறவுச் சங்கங்களே வாங்கிக்கொள்ள வேண்டும். காரணம். இந்தப் பிரதம சங்கங்கள் ஒவ்வொன்றிலும் 25 லிருந்து 35 சதவீதம் லாபம் வைத்து விற்கக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அதனால் நெசவுத்

தொழில் முன்னேற வேண்டும் என்ற அடிப்படையில் 12 லிருந்து 15 சதவீதம் லாபம் கொடுத்து நெசவாளர்களிடமிருந்து துணி களை வாங்கிக்கொள்வதோடு அதற்கான தொகை முழுவதும் அவர்களின் சங்கங்களுக்கு உடனடியாகப் போய்ச் சேரக்கூடிய ஒரு நிலைமையையும் உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக, கூட்டுறவுச் சங்கங்களுக்கு வினியோகம் செய்யப்பெறுகிற நூல்வகைகள் அந்தந்த சங்கங்களுக்கு தேவைப் படுகிற முறையில் அவர்களுக்கு உரிய காலத்தில் கிடைப்பதில்லை என்று புகார் இருக்கிறது. 12 கூட்டுறவு ஆலைகளிலிருந்து வினியோகம் செய்யக்கூடிய அந்த நூல்கள் போதவில்லை என்றாலும்கூட, மற்ற ஆலைகளிலிருந்து, வெளியில் உள்ள தனியார் ஆலைகளிலிருந்து, அரசே அந்த நூல்களை கொள்முதல் செய்து நியாயமான விலையில் அவர்களுக்கு உரிய காலத்தில் கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, இந்த கைத்தறிகளில் நெய்யப்பெறுகிற துணிகளின் விலைகளை விட, பவர்லூம் விசைத்தறியிலே குறைந்த உற்பத்தி செலவில் துணிகள் நெய்யப்பெற்று, கைத்தறி துணிகளை விட குறைந்த அளவில் விற்கக்கூடிய சூழ்நிலை இருப்பதினால்தான், இந்த கைத்தறி தொழில் மந்தமாக இருக்கிற நிலை இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே, குறிப்பிட்ட இந்த ரகங்கள் தாம் விசைத்தறியில் நெய்யப்பெற வேண்டும். குறிப்பிட்ட சில ரகங்கள் கைத்தறியில் நெய்யப்பெற வேண்டும் என்ற முறையில் உறுதியான முறையில் அறுதியிட்டு நடவடிக்கை எடுக்க அரசு முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நூல்களை ஆலைகளிலேயே பிளீச்சிங் செய்து இத்தகைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு வினியோகிக்க வேண்டிய நடவடிக்கை ஒன்றினையும் அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நூல்கள் வாங்கப் பெற்று அதற்கான தொகை பிரதம சங்கங்களுக்கு அனுப்பப் பெற்று, அங்கேயிருந்து பல்வேறு சங்கங்களுக்குப் போய்ச் சேரும் போது, அவைகள் ஒழுங்கான முறையில் குறிப்பிட்ட காலத்திற்குள் போய்ச் சேருவதில்லை என்று குறைபாடுகள் இருப்பதாகத் தெரிகிறது. அதிலும் குறிப்பாக எட்டையபுரம், இராஜ பாளையம், சர்க்கரைப்பட்டி, குளித்தலை, பரமக்குடி ஆகிய இடங்களிலுள்ள சங்கங்களுக்கு முறையாகத் தொகை போய்ச் சேருவதில்லை என்று தெரிவித்துக்கொண்டு இக்குறைபாடுகளைப் போக்க அரசு நடவடிக்கை எடுக்க முன் வரவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.



(திரு. யெ. சு. திருவேங்கடம்-மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து. இந்தத் தொழிலாளர்களுக்கு மானியமாக ஆயிரம் ரூபாயும் மற்ற வகைகளில் 4,000 ரூபாயும் என்று போட்டு மொத்தம் 5,000 ரூபாய்க்கு வீட்டு வசதி அமைத்துக் கொள்வதற்காக அவர்களுக்கு வழங்கப்பெற, நிதி ஒதுக்கீடு செய்யப்பெறுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு குடி யிருப்பைக் கட்டுவதற்கு இன்றையதினம் இருக்கும் விலைவாசியில இது நிச்சயமாக முடியாத காரியம். ஆகையினால் 2 ஆயிரம் ரூபாய் அரசு மானியமாகவும், 8,000 ரூபாய் கடனாக. ஏற்கெனவே குறிப்பிட்டிருப்பதைப் போல வீட்டுவசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெற்று, மொத்தத்தில் 10,000 ரூபாய் இருந்தால்தான் கைத்தறித் தொழிலாளர்களுக்கு வீடுகட்டிக் கொள்ள முடியும் என்பதைக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக் கிறேன்.

அடுத்து, கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் பணிபுரிகிற ஊழியர்கள் அரசு ஊழியர்களாக இல்லை என்பதாக ஒரு நிலை இருக்கிறது.

கூட்டுறவுத் துறையில் இருக்கிற அந்தத் தொழிலாளர்களுக்கு அரசாங்கத் தரப்பிலிருந்து சம்பளக் கமிஷன் விகிதாச்சாரப்படி அவர்களுக்கு சம்பளம் கொடுக்கவேண்டும்.

கதர், கிராமத்தொழில் பொறுத்தவரையில் இருபது ஆண்டு களாக அந்தத் தொழிலில் லாபம் அதிகரித்திருப்பதாகச் சொல்லப் படுகிறது. அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர் களுக்கு ஏற்கனவே என்ன வேலை இருந்ததோ அதே வேலைதான் இருக்கிறது. அவர்கள் வேறு வேலைகளுக்கு மாற்றப்படவில்லை.

கதர், கிராமத்தொழிலுக்கு தனித்தனியாக திகாரிகளைப் போட்டு அவர்கள் ஒரேயிடத்தில் இருக்கும் முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு இந்த வாய்ப்பினை அளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

*** திரு. ஏ. சாகுல் ஹமீது :** மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, இந்த கைத்தறியும் நெசவுத் தொழிலும் கதர் என்ற மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று கைத்தறி நெசவுத் தொழிலாளர்களின் வளமற்ற வாழ்க்கையை வளப்படுத்துவதற்காக நல்ல பல திட்டங்களைத் தீட்டுவதற்கு இந்த அரசு செய்திருக்கிற முயற்சியை எங்கள் இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக நான் வரவேற்கிறேன்.

இன்று நெசவாளர்களுக்கு சேமிப்புத் திட்டம் என்று ஒரு திட்டம் இருக்கிறது. அந்த சேமிப்புத் திட்டத்தின்படி அவர்கள் ஆறு காசுகள் போடுவது, மூன்று காசுகள் அரசாங்கம் கொடுப்பது

[திரு. ஏ. சாகுல் ஹமீது] [1980 ஜூலை 17

என்ற இந்த கொள்கை விளக்கக் குறிப்பில் காணப்படுகிறது. இதில் ஆறு காசுகள் நெசவாளர்கள் கொடுக்கிறபோது அரசாங்கம் கொடுககிற மூன்று காசுகளுக்குப் பதிலாக ஆறு காசு அரசாங்கம் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறித் துணி விற்பனை மீதான தள்ளுபடி ஒதுக்கீடு குறைவானதாகும். ஆண்டு முழுவதும் தள்ளுபடி தேவை என்பதை நான் இந்த சமயத்தில் கூறிக்கொள்கிறேன்.

இன்று சிறுபான்மை சமூகத்தினரின் ரம்ஸான் விழா வரப போகிறது. இன்று அந்த நோன்பு காலம் ஆரம்பமாகயிருக்கிறது. எப்படி மற்ற விழாக்களின்போது ரிபேட் கொடுக்கப்படுகிறதோ அதேபோன்று ரம்ஸானுக்கும் ரிபேட் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதேபோன்று கிருத்துவர்கள் சம்பந்தப்பட்ட கிருஸ்துமஸ் போன்றவற்றிற்கும் ரிபேட் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைப் பொறுத்த வரையில், வீடுகட்டும் திட்டத்திற்கு ரூ, 5.000 ஒதுக்கி ரூ. 1,000 மானியம் என்றும், மீதி ரூ. 4000 வீட்டு வசதிக்கழகம் மூலம் கடன் என்றிருக்கிறது. ஆனால் இப்போது வீடு கட்ட இந்தத் தொகை போதாது. ஆகவே அந்தத் தொகையை ரூ. 7,000 என்று உயர்த்தி ரூ. 3,500 மானியமும், ரூ. 3,500 வட்டியில்லாக் கடனாகவும் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். கடையநல்லூர், தென்காசி, புளியங்குடி, சங்கரன் கோவில் போன்ற பகுதிகளில் வீடுகள் கட்டிக்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வெள்ளம், புயல் போன்ற இயற்கை சீற்றங்கள் ஏற்படுகிற போது ரூ. 500 தான் தருவதாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த ரூ. 500 என்பது நெசவாளர்களுக்குப் போதாது. ஆகவே அதை ரூ. 1,000 ஆக உயர்த்தி ரூ. 700 மானியம் ரூ. 300 வட்டியில்லாக்கடன் என்று தருமாறு நான் நெசவாளர்கள் சார்பாக அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கைத்தறி சாமான்களை இழந்தவர்களுக்கு ரூ.125 கொடுப்பது என்பது இத்தொகை குறைவானதாகும். தறிச்சாமான்கள் வாங்குவதற்கு ரூ. 500 ஆவது கொடுக்கவேண்டும்.

மழைக்கால்ங்களில் தறிபோடும் இடங்களில் குழியில் தண்ணீர் தேங்கிவிடுகிறது. ஆகவே நெசவாளர்கள் குழியில் நின்று கொண்டு தொழில் செய்யமுடியாத நிலை இருக்கிறது. மழைக் காலங்களில் தண்ணீர் ஊற்றெடுக்கிற பகுதிகளில் சிமெண்ட்



1980 ஜூலை 17] [திரு. ஏ. சாகுல் ஹமீது]

தொட்டி அமைத்து அதில் இறங்கி நின்று நெசவாளர்கள் வேலை செய்யும் நிலையை ஏற்படுத்த வேண்டும். மழைக்காலங்களில் ஊற்றெடுக்கிற பகுதிகளில் நெசவாளர்கள் குழிகளில் நின்று கொண்டு நெய்யமுடியாத ஒரு நிலை இருக்கிறது. ஆகவே அப்படிப்பட்ட இடங்களில் நெசவாளர்களுக்கு சிமெண்ட் தொட்டி பதித்து அதில் நின்றுகொண்டு பாதுகாப்பாக வேலை செய்ய வழி செய்யவேண்டும். ஒரு சிமெண்ட் தொட்டிக்கு ஏறக் குறைய ரூ. 250 ஆகிறது. அதை இந்த அரசு நெசவாளர்களுக்கு கொடுத்துதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-30]

மேலும், கைத்தறி வளர்ச்சித் திட்டம் என்ற ஒரு நல்ல திட்டத்தை இந்த அரசு கொண்டு வந்திருக்கிறது. அதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில், கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்படி கடையநல்லூரை, மதுரையோடு சேர்த்திருக்கிறார்கள். நெல்லையையும், நாகர்கோயிலையும் சேர்த்து கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் உருவாக்கினால், அது பயனுள்ளதாக அமையும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

மேலும், கடையநல்லூரிலே 7,000 கைத்தறி நெசவாளர்கள் வாழ்கின்றார்கள். கைத்தறி நெசவாளர்கள் குடும்பங்கள் நிரம்ப இருக்கின்ற இடம். கடையநல்லூரிலே டிசைன் சென்டர் ஒன்றும் பூப்போடும் பெட்டிக்கான நெசவுக் கருவி போன்றவைகளை கடையநல்லூர், தென்காசி, புளியங்குடி கூட்டுறவுச் சங்கங்களுக்கும் வழங்கவேண்டும். கடையநல்லூரில் தனியார் துணி நெசவாலை அமைக்க அரசு அனுமதி வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு துணை சபாநாயகர் வழியாக மதிப்பிற்குரிய கைத்தறி அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

கடையநல்லூரைப் பொறுத்த வரையில், நெசவாளர்கள் மீது ஏறக்குறைய 15 வருஷங்களாக வழக்குகள் போடப்பட்டு, அந்த வழக்குகள் இதுவரையிலும் தீர்க்கப்படாமல் இன்னும் இழுத்துக் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. நம்முடைய ரிசர்வ் வங்கியிலே மேலும் வழக்குகள் நடத்துவதிலே பயனில்லை என்று உத்தரவு போட்டும், காவல் துறையிலே புலன் ஆய்வுத்துறை போலீசாரின் நடவடிக்கை காரணமாக இன்றைக்கு 15 வருஷங்களாக நெசவுத் தொழிலாளர்களின் வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. இன்றைக்கு வழக்கு காரணமாக அவர்கள் ஏறக்குறைய 25இலட்சம் ரூபாய்க்கு மேல் செலவிட்டிருக்கிறார்கள். என்றாலும் அந்த வழக்குகள்

இன்னும் முடிந்த பாடில்லை. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கின்ற காரணத்தால், இந்த வழக்குகள் எல்லாம் தீர்க்கப்பட வேண்டுமென்றும், நலிந்த நெசவாளர்களைப் பாதுகாக்க வேண்டுமென்றும் பணிவோடு அமைச்சர் அவர்களையும் இந்த அரசையும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், விவசாயிகளுக்கு அளித்ததுபோன்று நெசவாளி களுக்கும் அளித்திருக்கின்ற தக்காவிக் கடன்களை நீங்கள் வஜா செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இந்த நெசவாளர்கள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாக்கப்பட்டுள்ள தால், அவர்களுக்கு வழங்கப்பட்ட இந்த தக்காவிக் கடன்களை வஜா செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, இன்றைக்கு கூட்டுறவு சங்கங்களுக்கு நல்ல நூல் கிடைப்பதில்லை என்ற புகார்கள் வந்திருக்கின்றன. அப்படி தரமுள்ள நூல்கள் கிடைக்காததன் காரணமாக, நூல்கள் கெட்டுப்போன கழிவு நூல்கள் வழங்கப்படுவதன் காரணமாகக் கூட்டுறவு நெசவாளர் சங்கத் தொழிலாளர்கள் கஷ்டப்படு கிறார்கள். அதனால் சிறந்த முறையிலே உற்பத்தி செய்ய முடிய வில்லை என்று அந்தத் தொழிலாளர்கள் கூறுகிறார்கள். அந்த நிலை வராமல் நல்ல நூல்களையே கூட்டுறவுச் சங்கங்களுக்கு கொடுப்பதற்கு உத்தரவிட வேண்டும்.

அநிலும், இந்தத் தொழிலாளர்கள் காச நோயால் பீடிக்கப் பட்டு, எலும்புக் கூடுபோல் காட்சியளிக்கின்ற பரிதாபகரமான நிலைமை இருக்கிறது. அவர்கள் உடல் நலனை நல்லமுறையிலே பாதுகாக்க வேண்டும். அவர்களுக்கு தனியாக காசநோய் மருத்துவ மனை இல்லையென்றாலும், அரசு மருத்துவ மனைகளில் அவர்களுக்காக தனிப்பிரிவை துவக்கி, இத்தகைய காச நோயால் பீடிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இலவசமாக மருத்துவ வசதிகள் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், எம்.எச். 123 மதுரை கூட்டுறவு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டம் நெசவாளர் சங்கம், கிளை : கடையநல்லூர் சார்பாக 16—6—1980-ம் தேதி மனுகொடுத்துள்ளார்கள். கூட்டுறவு சொசைடிகளுக்கு நல்ல, தரமான நூல்கள் கிடைக்கவில்லை. அப்படி தரவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, இந்த நெசவாளர்கள் கூறுகிறார்கள், இப்படி மோசமான நூலைக் கொடுத்தால், தரமான துணியை, மாஸ்டர் வீவர்களைப் போல் மார்க்கெட்டிற்குத் தேவையான தரமான துணிகளை எங்களால் உற்பத்திசெய்ய முடியாது. என்றுஇந்த நிலையை போக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சொசைடியில் மார்க்கெட்டிங் கமிட்டி அமைக்க பை—லாவை திருத்த வேண்டுமென்று கேட்டிரு



கிறார்கள். மேலும், கிராம கைத்தறி, கதர் திட்டத்திற்கு பாராட்டத்தக்க வகையிலே திட்டங்கள் போட்டிருக்கிற அரசின் அந்த முயற்சியைப் பாராட்டி, இந்த வாய்ப்பினை தந்தமைக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன். நன்றி.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழகத்திலே விவசாயத் தொழிலுக்கு அடுத்தபடியாக மிகப் பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக் கொண்டிருக்கும் தொழிலாக கைத்தறித் தொழில் இருக்கிறது. அதுபற்றிய மானியக் கோரிக்கையின் மீது நடக்கும் விவாதத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நேரம் குறைவு. இப்படிப் பட்ட குறைவான நேரத்தில் நெசவுத் தொழிலில் இருக்கக்கூடிய பிரச்சினைகளை மன்றத்தில் எடுத்து வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

நெசவுத் தொழில் பாதுகாப்பற்ற தொழிலாக இருக்கிறது. நெசவாளர்கள் உற்பத்தி செய்கிற துணிகள் தேங்குகிற நேரத்தில் அவர்கள் தொழில் இல்லாமல் வாடி வதங்குகின்ற, பசியோடு பட்டினியோடு வாடுகின்ற சூழ்நிலை தமிழகத்தில் இருக்கிறது.

தமிழக அரசு கைத்தறி மற்றும் பஞ்சாலை மானியக் கோரிக்கையின்மீது தங்களுடைய கொள்கைத் திட்டத்தை கூறுகிற நேரத்தில் பல்வேறு திட்டங்களை தெளிவாக எடுத்துக்கூறி நெசவாளர் மேம்பாட்டுக்குப் பல திட்டங்களை நடைமுறைப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மேலும் வருகிற ஆண்டுகளில் நல்ல முறையில் திட்டங்களைச் செயல்படுத்தப் போவதாகவும் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். 1984—85 ஆம் ஆண்டுக்குள் 75 விழுக்காட்டுக்கு மேலாக கைத்தறி நெசவாளர்களைக் கூட்டுறவுக்குள் கொண்டு வந்து விடுவோம் என்று கூறியிருப்பது வரவேற்கத்தக்கது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் துணித் தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஷேர் காபிடல் குறைவாக இருக்கிறது. மாநில அரசு பங்காக இந்த ஆண்டு 25 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். தொடக்கக் காலக் கூட்டுறவுச் சங்கங்கள் நல்ல முறையில் பொருளாதாரச் சிக்கல் இல்லாமல் நடைபெற அரசின் ஷேர் காபிடல் அதிகமாக ஒதுக்கப் படவேண்டும். இன்றையதினம் உற்பத்தியாகிற துணிகள் எந்த அளவுக்குத் தேங்கியிருக்கின்றன என்று எனக்கு முன்னால் பேசிய உறுப்பினர்கள் எல்லாம் தெளிவாகக் கூறினார்கள். என்னுடைய தொகுதியில் இருக்கும் சின்னாளப்பட்டியில் பெரும்பான்மையாக 77 விழுக்காடுகளுக்கு மேல் தேங்கியிருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்கள் மேலும் நெசவாளர்களுக்கு தொழில் கொடுக்க முடியாமல் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நெசவாளர் குடும்பங்கள் வாடுகின்றன, பட்டினியால் வதங்குகின்றன. இந்த அரசு இந்த ஆண்டு கூடுதலாக கைத்தறி துணி உற்பத்தி

செய்வதற்காக ஐந்து கோடி ரூபாய்க்கு மேல் ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். உடனடியாக தமிழக அரசு அந்தத் துணிகளைக் கொள்முதல் செய்யவேண்டும்.

இந்தத் தொழிலுக்கு இருக்கின்ற சிரமங்களை களைய வேண்டும். கைத்தறி தொழிலுக்குப் போட்டியாக பவர் லூம்ஸ் இருக்கின்றன. பவர் லூம்சை நடத்துகிறவர்கள் கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகங்களைப் போடுகிறார்கள். இன்னின்ன அளவில் ஜரிகை போட்டு புட்டா துணிகளை கைத்தறியில்தான் தயாரிக்க வேண்டுமென்றிருப்பதையெல்லாம் பவர் லூமில் தயாரிக்கின்ற சூழ்நிலைகள் இருக்கின்றன. பவர் லூமில் எத்தகைய துணிகள் தயாரிக்கப்படுகின்றன என்பதைக் கண்காணிப்பவர்கள் மிகவும் எச்சரிக்கையோடு கண்காணிக்க வேண்டும். அரசு எத்தனை பவர் லூம்களுக்கு அனுமதி அளித்திருக்கிறதோ அதற்கு மேலாக அதிகமான பவர் லூம்கள் ஓடுகின்றன என்று பரவலாக பேசப் படுகிறது. அப்படி அனுமதி இல்லாமல் நடத்தப்படுகின்ற பவர் லூம்களைப் பறிமுதல் செய்யவேண்டும்.

அரசு பலவேறு நூற்பாலைகளை எடுத்து நடத்துகின்றது. அவற்றின் மூலம் தமிழகத்தில் இருக்கும் நெசவாளர் குடும்பங்களுக்கு நூலைக் கொடுக்கவேண்டும். கோவாப்டெக்ஸ் அலுவலகத்திலும் அல்லது விற்பனை நிலையத்திலும் நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து வேலை வாய்ப்பளிக்க வேண்டும். இதிலே உள்ள ஒரு சிக்கல் வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலந்தான் வர வேண்டுமென்று விதி இருக்கிறது. இந்தச் சிக்கல் குறுக்கே இல்லாத நிலையில் அவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்க முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-40]

பொதுவாக, நெசவாளர்களுக்குத்தான் காச நோய் அதிமாக வருகிறது. நெசவாளர்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதிகளிலே காச நோய் மருத்துவ மனைகளைக் கட்டித் தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நெசவாளர் குடும்பங்கள் தொன்றுதொட்டு பொருளாதாரத் துறையிலே பிற்பட்டவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் வறுமையில் வாழ்கிறார்கள், அவர்கள் குடிசையிலே வாழ்கிறார்கள், அவர்களுடைய உற்பத்திப் பொருட்கள் தேங்கி விட்டால் அவர்கள் பட்டினியால் வாடுகிற நிலைமை இருக்கிறது. ஆகவே நெசவாளர்களுடைய குடும்பங்களை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



தமிழகத்தில் இருக்கின்ற நெசவாளர்கள் முன்னேறுவதற்கு எந்த அளவுக்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அந்த அளவுக்கு இந்த அரசு காரியங்களைச் செய்துகொண்டு வருகிறது. அதற்காக என்னுடைய பாராட்டை நான் அரசுக்குத் தெரிவித்துக்கொண்டு இந்த மானியத்தை வரவேற்றுப் பாராட்டி ஆதரித்து முடிக்கிறேன். வணக்கம்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, இந்த மாமன்றத்திலே கைத்தறி, தமிழ்நாடு கிராமத் தொழில்கள் ஆகியவற்றை குறித்து வைக்கப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கைகள் மீது நான் சார்ந்துள்ள திராவிட முன்னேற்ற கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை அவையின் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் நாட்டில் குறிப்பாக இந்த நெசவாளர் சமுதாயம் ஆண்டு தோறும் ஏதாவது ஒரு அவதிக்கு உட்பட்டுக்கொண்டே வந்திருக்கிறது. ஒன்று சரக்கு தேக்கம் இருக்கும் இல்லாவிட்டால் நூல் விலையேற்றம் இருக்கும். இரண்டிலேயும் பாதிக்கப்படுகிற காரணத்தினாலே அவர்கள் பல்வேறு காலங்களிலே பட்டினியால் வாடுகிற சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதைப் போக்குகின்ற முறையிலே தான் அன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகம் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையிலே இயங்கிய காலத்திலேயும் சரி, அதற்குப் பிறகு கலைஞர் அவர்கள் தலைமையிலே இயங்கிய காலத்திலேயும் சரி, அது ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்திருந்த காலத்திலேயும் சரி. அந்த நெசவாளர்களுடைய துயர் துடைக்க பல்வேறு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருந்தது. பேரறிஞர் அண்ணா அவர்களும், நாவலர் அவர்களும், டாக்டர் கலைஞர் அவர்களும் மற்ற முன்னணித் தலைவர்களும் தேங்கியிருந்த கைத்தறி துணியை தலையிலே சுமந்து ஊர்தோறும் விற்றிருக்கிறார்கள். அது அன்றைக்கு ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே மட்டுமல்ல, வந்த பிறகும்கூட அமைச்சர்கள்கூட தோள்மீது கைத்தறித் துணியைத் தூக்கிக்கொண்டு ஊர் ஊராக விற்று அவர்களுக்கு நிவாரணத்தைச் செய்தார்கள். ஒரு தறிக்கு 100 ரூபாய் வீதம் மானியமாகக் கொடுத்து சற்றொப்ப ஒரு கோடி ரூபாயை அவர்களுக்கு மானியமாகவே தந்து கடனை ரத்து செய்திருக்கிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அது மட்டுமல்லாமல், திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிறவர்கள் கூடுமானவரையில் கைத்தறித் துணியை அணிய வேண்டுமென்ற முறையிலே தலைவர்கள் மற்றவர்கள் எல்லோரும் கைத்தறித் துணியை அணிந்து அந்தத் தொழிலுக்கு உதவியாக இருக்கவேண்டுமென்ற முறையிலே நாங்கள் செய்து வந்திருக்கிறோம். ஆனால் இன்றைக்கு வந்திருக்கிற நீங்கள் அதை கைவிட்டுவிட்டீர்கள். மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சட்டையைப் பிடித்துக் காட்டி பாலிஸ்டர் போட்டிருக்கிறேன்

என்று சொல்கிறார்கள் ஆனால் அமைச்சர் அவர்கள் என்ன போட்டிருக்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. கைத்தறித் துணி அணிய வேண்டுமென்பது அண்ணாவின் கொள்கை. அண்ணாயிசம் என்று பேசுகின்ற நீங்கள் கைத்தறித் துணி அணிவதிலேயாவது அவர்களுடைய கொள்கையைக் கடைபிடிக்க வேண்டாமா? முதலமைச்சரிலேயிருந்து கடைசி அமைச்சர் வரையிலும் ஜாம் ஜாம் என்று' சில்க் ஜக, ஜக என்று தான் வருகிறார்களே தவிர, கைத்தறித் துணி அணிவதில்லை. கைத்தறியிலேயே பாலிஸ்டர் வந்திருக்கிறது அதைக்கூட போடலாம், திரு. பலராமன் சொல்கிறார், கதர் கூட போடலாம் என்று, ஆகவே கதரையும் நீங்கள் போடலாம் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்றைக்கு கைத்தறிதுணிக்கு வந்திருக்கிற நிலைமை என்ன என்று பார்த்தால் நூல் விலை ஏறியிருக்கிறது. கொஞ்ச நாட்களுக்கு முன்னாலே 40 ஆம் நம்பர் நூல் கட்டு ஒன்றுக்கு 90 ரூபாயாக விற்றது சற்றொப்ப இன்றைக்கு 139 ரூபாய்க்கு வந்துவிட்டது. ஒரு கட்டுக்கு சாயம் போட 24 ரூபாயாக இருந்தது, இன்றைக்கு 40 ரூபாய்க்கு மேல் வந்து விட்டது. ஆனால் அதே நேரத்திலே துணியினுடைய விலை ஏறியிருக்கிறதா என்று கேட்டால் கிடையாது. எங்களுடைய மாவட்டத்திலே லுங்கி நெசவாளர்களுக்கு 5 ரூபாய் கூலி அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள் கூலி அதிகமாகக் கொடுத்த பிறகும் நிலைமை என்ன என்று கேட்டால் ஒரு லுங்கி ரூபாய் 9-க்கு விற்றது இன்றைக்கு 10 ரூபாய்க்கு வந்திருக்கிறது. ஆகவே அதே ரேஷியோவிலே துணியினுடைய விலை ஏறியதா என்றால் இல்லை. இதனாலே நெசவாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயிகளைப்போல, விவசாயிகளுக்கு அதிகமான சிரமங்கள் எடுத்து கடன்களை எல்லாம் ரத்து செய்திருக்கிறோம் என்று சொல்லி அதற்காக நோபல் பரிசு பெறுகிற அளவுக்கு திட்டங்களை வெளியிட்டு கடைசியிலே இன்றைக்கு ஜப்தி நோட்டீஸ் விட்டுக்கொண்டிருக்கிறார்கள், அது வேறு விவகாரம். இந்த நூல் விலையேற்றத்திற்குத் தக்கபடி துணியின் நிலைமைகள் இருந்துக்கொண்டிருக்கின்றன. இன்றைக்கு இதிலே கூடச் சொல்லியிருக்கிறார்கள். பெரும் பகுதியினர் சொசைடியை நம்பியிருக்கிறார்கள் என்று. ஆனால் சொசைட்டிகளின் நிலைமை என்ன? சொசைட்டிகள் இன்றைக்கு சரக்குகளை அடுக்கி வைத்துக்கொண்டு பேசாமலே முடங்கி போய் இருக்கின்றன. என்ன காரணம்?

முன்பெல்லாம் சொசைட்டிகள் துணிகளைத் தனியாருக்கு விற்கும்பொழுது அவர்களுக்கெல்லாம் ஹோல்சேலில் விற்கும் பொழுது ரிபேட் கொடுப்பார்கள், தள்ளுபடி உண்டு. ஆனால் உங்கள் ஆட்சியிலே என்ன நடந்தது? ஹொல்சேலுக்கு ரிபேட் கிடையாது என்று சொல்லிவிட்டீர்கள். ரீடெயிலுக்கு மட்டும் தான் கொடுப்போம் என்று சொல்கிறீர்கள். ஆகவே, ஹோல் சேலுக்கு ரிபேட் இல்லாத காரணத்தாலே, பல பேங்க் பாசுக்கு ரிபேட் இல்லையென்று சொல்லிவிட்ட காரணத்தாலே துணிகள் தேங்கி கிடக்கின்றன. ஆனால் என்ன சொல்லுகிறீர்கள்? ரீடெயிலாக இருந்தால் தருவோம் என்று சொல்கிறீர்கள். ரீடெயில் சேலுக்கு என்ன வேண்டும்? ஷோ ரூம் வேண்டும். சொசைட்டிகள் எல்லாவற்றிலும் ஷோ ரூம் இருக்கிறதா? ரிமோட் பகுதிகளிலேயெல்லாம் சொசைட்டிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் கொண்டுபோய் எந்த ஷோ ரூமிலே வைத்து எப்படிச் செய்ய முடியும்? அங்கே முடியாது. அந்த ரிபேட்டையாவது எல்லோருக்கும், எவ்வளவு வாங்கினாலும் தருகிறீர்களா? 300 ரூபாய்க்குள் வாங்க வேண்டும். கணவன் மனைவி இருவரும் போகிறார்கள் ; புடவை எடுக்கிறார்கள் 300 ரூபாய்க்கு வந்து விடுகிறது; வேட்டி வாங்குகிறார்கள் 50 ரூபாய் அல்லது 150 ரூபாய்க்கு வந்து விடுகிறது ஆனால் அந்த 300 ரூபாய்க்குத்தான் ரிபேட் உண்டு; இந்த 150 ரூபாய்க்கு கிடையாது. அதாவது புடவைக்கு ரிபேட் உண்டு வட்டிக்கு ரிபேட் கிடையாது. இப்படிப்பட்ட நிலைமைகள்; இருக்கின்றன. 300 ரூபாய் வரையில்தான் ஒரு பில்லிலே ரிபேட் என்று சொல்வது தேவை இல்லாதது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



பல சொசைட்டிகளில் சரக்குகளை வைத்துக்கொள்வதற்கு கோடவுன்கள்கூட இல்லாமல் அவதிப்படுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. இன்றையதினம் கிட்டதட்ட 26 கோடி ரூபாய்க்கு மேலே சொசைட்டிகளில் சரக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. ஆனால் அமைச்சரவர்களும் மற்றவர்களும் கேட்கலாம், உங்களுக்குத் தெரியாதா துரைமுருகன், ஆகையினால்தான், தேங்கியிருக்கின்ற சரக்குகளை, நெசவாளர்களுக்குப் பரிகாரம் அளிக்க வேண்டுமென்பதற்காகத்தான் நாங்கள் இங்கே இருக்கின்ற நம்முடைய கோவாப்டெக்ஸைக் கூப்பிட்டு அந்தச் சரக்குகளை வாங்கச் சொல்லியிருக்கிறோம் என்று சொல்லலாம். கோவாப்டெக்ஸ், சரக்குகளை சொசைட்டிகளிடமிருந்து வாங்குவது உண்டு. அது தாங்களாகவே விரும்பி வாங்குவது. அப்படி வாங்குகின்றபொழுது கிட்டத்தட்ட 9 சதவீதம் இலாபம் சொசைட்டிக்கு இவர்கள் தருவார்கள். ஆனால் இன்றைக்கு என்ன செய்திருக்கிறீர்கள் என்றால் கோவாப்டெக்ஸைக் கூப்பிட்டு நிர்ப்பந்தித்திருக்கிறீர்கள், நீ போய் சொசைட்டியிலே வாங்கு என்று சொல்லி, அவர்கள் எங்களிடத்திலே பணம் இல்லை என்று சொன்னார்கள். அப்படிச் சொன்னதற்குப் பிறகு, "நீ ஏன் கவலைப்படுகிறாய்; நாம் இருக்கப் பயமேன்; என்று சொல்லி, ஐந்து கோடி ரூபாய் கொடுத்து, ரிசர்வ் பேங்க் போலவே நாங்களும் 9 சதவீதத்தில் வட்டிக்கு தருகிறோம் என்று சொல்லி, கோவாப்டெக்ஸை நிர்ப்பந்தித்து வாங்கச் சொன்னீர்கள். அதன் விளைவு என்னவென்றால்,

9 சதவீதம் இலாபம் சொசைடிகளுக்கு கொடுத்த கோவாப் டெக்ஸ்காரர்கள், இன்றைக்கு 3 சதவீதம்தான் கொடுக்கிறார்கள். 6 சதவீதம் சொசைட்டிக்கு அரோகரா என்ற நிலைமை ஏற்பட்டு விட்டது. ஆகவே, இன்றைக்குக் கைத்தறித் துணியை விற்பதற்கு வழி காணுங்கள் என்று சொன்னால் கந்துக்கடை வியாபாரம் வைக்கிறேன் என்று சொல்லி, இன்றைக்கு வட்டிக்குக் கோவாப்டெக்ஸுக்கு நீங்கள் பணம் கொடுக்கிறீர்கள். எனவே இது கைத்தறி இலாக்கா, வியாபாரமா அல்லது கந்துக்கடை வியாபாரமா என்று அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டும். 26 கோடி ரூபாய்க்குத் தேங்கியிருக்கிறது; ஆனால் 5 கோடி ரூபாய் கொடுத்து அதை பர்ச்சேஸ் செய்யுங்கள் என்று சொன்னால் என்ன நிலைமை? அதற்காகத்தான் சொன்னார்கள். யானைப் பசிக்குச் சோளப் பொறி என்று, அப்படிச் சொன்னால் உங்களுக்குக் கோபம் வருகிறது. 26 கோடி ரூபாய்க்குச் சரக்கு தேக்கம் இருக்கிறது; ங்கள் வாங்குவது 5 கோடி ரூபாய்க்கு இன்னும் இருக்கின்ற கிட்டத்தட்ட 21 கோடி ரூபாய் சரக்கு அப்படியே முடங்கியிருக் கின்ற நிலைமைகள் உருவாகியிருக்கின்றன என்பதை நான் சொல்கிறேன்.

சரி, அப்படி சரக்குகளை வாங்கினாலும் கோவாப்டெக்ஸ் காரர்களின் நிலைமை என்ன? இவர்களிடத்திலேயே சரக்கு இல்லையா என்று கேட்டால், கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய்த் துணிகள் தேங்கியிருக்கிறது இவர்களிடத்தில். இந்த 20 கோடி ரூபாய்த் துணி தேங்கியிருப்பது மட்டும் அல்லாமல், இவர்கள் வாங்குவது வேறு சேர்ந்து கொள்கிறது. எல்லாவற்றையும் வைத்துக்கொண்டு அவர்கள் விற்று விட முடியுமா? அவர்கள் விற்க முடியாது. குறைந்த விலையிலே தனியாருக்கு சொசைட்டி கள் விற்பதைப் போல கோவாப்டெக்ஸ்காரர்கள் விற்க முடியுமா? முடியாது. ஏனென்றால் இவர்களுடைய எஸ்டாபிலிஷ்மெண்ட் வேறு. ஆகையினாலே, அதிகமான விலைக்குத்தான் விற்க வேண்டும். எனவே, தனியார், கோவாப்டெக்ஸிலே வாங்க மாட்டார்கள். வாங்கவில்லை என்றால் அதனுடைய விளைவு என்ன? இவர்கள் 10 சதவீதம் தள்ளுபடி செய்ய வேண்டும். எங்கேயிருந்து தள்ளுபடி செய்வார்கள்? சொசைட்டிகள் தள்ளுபடி செய்கிற பொழுது, ரிபேட் கொடுக்கிறபொழுது அரசாங்கம் கொடுத்து விடுகிறது. ஆனால் கோவாப்டெக்ஸ் மூலம் வருகிறபொழுது என்ன செய்ய வேண்டும்? அந்த பத்து சதவீதத்தை அவர்களுடைய 'ஓன் ஃபண்ட்' லேயிருந்துதான் கோவாப்டெக்ஸ் தர வேண்டும். ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன.



இந்த லட்சணத்திலே அதற்கு ஒரு அட்வைசரி கமிட்டி வேறே போட்டிருக்கிறீர்கள். அந்த அட்வைசரி கமிட்டிக்கு ஒரு தலைவர்; அவருக்கு ஒரு கார்; அவருக்கு ஒரு ரூம்; அவருக்கு இத்யாதிகள். அவருக்கு என்ன வேலை? அதைப்பற்றி இதிலே தெரிவித்திருக்கிறீர்களா? நான் இதைப் படிக்கவில்லை; காரணம் நீங்கள் லேட்டாகக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் தெரிவித்திருக்க மாட்டீர்கள் என்று நம்புகிறேன். அந்த அட்வைசரி கமிட்டிக்கு என்னவேலை? எல்லாம் உங்கள் கட்சி யிலேயிருந்துதான் போட்டிருப்பீர்கள். எனக்குத் தெரியும். போடுங்கள்; நாங்கள் வேண்டாமென்று சொல்லவில்லை. அதனாலே ஒன்றும் பெரிதாகக் குடி முழுகிப் போய்விடாது; போட்டால் நல்லது தான். அந்த அட்வைசரி கமிட்டி போட்டிருக் கிறீர்களே, அதற்கு என்ன அதிகாரங்கள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறீர்களா? எதற்கெடுத்தாலும் ஒரு குழு. பட்டு என்றால் அதற்காக ஒரு குழு, செங்கல்பட்டு, அதற்கு ஒரு குழு, முருகம்பட்டு, அதற்கு ஒரு குழு, சாயம் போட ஒரு குழு, இப்படி எதற்கெடுத்தாலும் குழு, குழு. இராஜாஜி அவர்கள் சொன்னார் கள், ஒரு விவகாரத்தைப் பிடிக்கவில்லையென்றால் ஒன்று கல்லைப்போடு; இல்லையென்றால் கமிட்டியையாவது போடு என்று. அதுபோல் எதற்கெடுத்தாலும் ஒரு கமிட்டி. எப்படி யாவது உங்கள் ஆட்களைச் சேர்க்க வேண்டுமென்பதில் இப்படி முழு மூச்சாக ஈடுபட்டிருக்கிறீர்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, இந்த நூலுக்கு, நிலையான, ஸ்திரமான விலையை நிர்ணயிக்கும் வரையில் இந்தக் கைத்தறியின் நிலைமை இப்படித் தான் மேலும் கீழும் போய்க்கொண்டிருக்கும். நூலுக்கு நிலை யான விலையை நிர்ணயம் செய்ய வேண்டுமென்றால் என்ன செய்வது?

[பிற்பகல் 12.50]

முதலிலே, கூட்டுறவு நூற்பாலைகளிலே நூற்கப்படும் நூல் களுக்கு எல்லாம் குறைந்த விலையை—ஒரு விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். அப்படிக் குறைந்த விலையை நூலுக்கு நிர்ணயம் செய்ய வேண்டுமானால், நூலுக்குத் தேவைப்படுகிற பஞ்சுக்கு ஒரு விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். பஞ்சுக்கு யார் விலையை நிர்ணயம் செய்வது? அதற்கு All India Cotton Corporation என்ற போர்ட் இருக்கிறது. அவர்கள் நிர்ணயம் செய்ய வேண்டும். துணைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில், சட்டத்தட்ட 230 ஸ்பின்னிங் மில்கள் இருக்கின்றன. அகில இந்தியாவிலே இருப்பதிலே மூன்றிலே ஒரு பங்கு நம்முடைய

தமிழ் நாட்டிலேயிருக்கிறது. ஆனால், இவ்வளவு இருந்தும் All India Cotton Corporation லே தமிழ்நாட்டிக்கு ஒரு பிரதிநிதித்துவம் கிடையாது. ஆனால் நீங்கள் இதை எல்லாம் கவனிக்க மாட்டீர்கள். எந்தக் கார்ப்பரேஷனாக இருக்கட்டும். அது All India Corporation, All India Cotton Corporation எதுவாக இருந்தாலும் பிரதிநிதித்துவம் கிடையாது. நீங்கள் இதையெல்லாம், விட்டுவிட்டு உயிரோடு இருக்கிற யார் பெயரும் எந்த சொசைட்டியிலும் இருக்கக்கூடாது என்று சொல்கிறீர்கள். எந்தத் தலைவருடைய பெயரும் இருக்கக்கூடாது. எப்படி சொல்ல முடியும் ஒருவர்பெயரை திடீரென்று எப்படி நீங்கள் எடுக்க முடியும். ஒருவர்என் பெயரால் ஒரு சொசைட்டி வைக்கிறார். துரைமுருகன் பட்டு சொசைட்டி என்று வைத்திருக்கிறார். என்னுடைய பெயருக்கே ஒரு 'குட்வில்' இருக்கலாம்.

Every firm name has got a goodwill. It is a valuable one.

ஆனால், அதை மாற்றுங்கள் என்று சொன்னால், பல சொசைட்டிகள் இன்றைக்கு ஜெனரல்பாடியைக் கூட்டி எங்களுக்கு 'குட்வில்' இந்த 'நேம்'தான். அந்த 'நேம்' இல்லாவிட்டால். எங்களுக்கு வியாபாரம் நின்றுவிடும். எங்களால் வியாபாரம் செய்ய முடியாது என்று சொன்னார்கள். பெயரை எடுப்பதிலே இருக்கிறீர்களே தவிர தமிழ்நாட்டிலே 230 மில்களை வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனாலும் அதற்கு ஒரு பிரதிநிதித்துவமும் இல்லை என்று உங்களுக்கு ஏன் தோன்றவில்லை

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: — மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் அவர்கள் தன்னுடைய பெயரிலே கூட ஒரு சொசைட்டி வைக்கலாம், 'குட்வில்' இருக்கும் அதனாலே, நல்ல வியாபாரம் நடக்கும் என்றுகூடச் சொன்னார்கள். உயிரோடு இருப்பவர்களுடைய பெயர்களை வைக்கக்கூடாது என்பதற்குக் காரணம் சில சமயங்களில் பெயர் கூடக் கெட்டு விடுகிறது. அதனாலே பல நிறுவனங்கள் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்பதற்காகத்தான்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: காஞ்சிபுரத்திலே நாவலர் பெயரில் இருக்கிறது, எடுத்து விடுகிறீர்களா.— நாவலர் நெடுஞ்செழியன் பட்டு நெசவாளர் சங்கம்......

திரு. துரைமுருகன்: பெயர் கெட்டுப் போவதில்லை. இதை நிர்ணயம் செய்ய வேண்டியது அந்த சொசைடி மெம்பர்களே தவிர, அமைச்சர் அல்ல. அந்த சொசைடிக்காரன் ஜெனரல் பாடியைக் கூட்டுகிறான். அந்தப் பெயர் இருக்கட்டும் என்று



சொல்கிறான். இன்னும் சொல்லப்போனால், பெயர்களை எடுப்பதிலே நீங்கள் பெயர் எடுத்தவர்கள் என்று நான் அன்றைக்கே சொல்லியிருக்கிறேன். கட்டிடங்களுக்குப் பெயர்களை எடுத்து விடுங்கள் என்று சொன்னீர்கள். இது மாதிரியாக பல குற்றங்களைச் செய்திருக்கிறீர்கள் என்று நான் சரமாரியாகக் குற்றங்கள் சுமத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று நம்முடைய அமைச்சர் புதியவர்; ஆனால், அந்த அமைச்சர் திடீர் என்று ஒன்று சொன்னார். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது, அரசு கார்ப்பரேஷன்களில் எல்லாம், பல்லவன் போக்குவரத்துக் கழகம் போன்ற கழகங்களில் எல்லாம், கைத்தறியிலே காக்கி டிரில்லை தயார் செய்து அவர்களுக்குப் போட வேண்டுமென்று ஒரு சட்டம் போட்டது. கிட்டத்தட்ட ரூ. 4 கோடிக்கான துணியை வாங்கிக் கொண்டு வந்தார்கள். திடீரென்று, அமைச்சரவர்கள் அறிவித்தார்கள், பாலியஸ்டர் துணி—தான் தர வேண்டுமென்று சொன்னார்கள். பாலியஸ்டர் துணி சட்டைக்கு நன்றாக வந்திருந்தது, ஆனால்' கோட்டுக்கு நன்றாக வரவில்லை. அதிலே எப்படி டிரில் பண்ண முடியும். டிரில் பண்ணவே முடியாது. ஆகையினாலே, அதனுடைய காஸ்ட் என்ன என்ற நிலைமை இருக்கிறது. எனவே பாலியஸ்டர் துணியிலே ஷர்ட்டிங் போடலாமே தவிர, டிரில் போட முடியாது.

இன்னும் சொல்லப் போனால், திராவிட முன்னேற்றச் கழக அரசு, அதைக் கார்ப்பரேஷனில் இருக்கிறவர்களுக்கு மட்டும் தான், காக்கி கைத்தறி துணி—போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. போலீஸ்காரர்களுக்கும் மற்றவர்களுக்கும் மட்டுமல்லாமல், இராணுவத்திற்குக் கூட அளிக்கக்கூடிய அளவு நாங்கள் உற்பத்தி செய்கிறோம் என்று அறிவிப்பீர்களானால், உங்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே அதை விட்டுவிட்டு, இருப்பதையும் நீக்குவதற்கான நிலைமையை உருவாக்கக் கூடாது என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, இந்த அறிக்கை முழுமையும் நான் படிக்க முடியவில்லை. 'கோ-ஆப்டெக்ஸ்' விற்பனை நிலையங்கள் தொடர்ந்து நிதி கொடுத்து வருவதால். எல்லா நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் இன்றைக்கு நியாயமான விலையில் தரமான நூல் எப்பொழுதும் கிடைத்து வருகிறது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. எப்பொழுதும் கிடைத்து வருகிறதா என்றால் கிடையாது. ஆனால், நீங்கள் எல்லாம் கோ ஆப்டெக்ஸ் கூட்டுறவு நூற்பாலையில் மட்டும்தானா வாங்குகிறீர்கள் என்றால் கிடையாது. தனியார் ஆலையில் இருந்து, டி. என். சி. யிலிருந்து வாங்குகிறீர்கள். அதற்குப் பிறகு 'சைமா' என்ற ஒன்றிருக்கிறது. அதிலிருந்து வாங்குகிறீர்கள்.

அது மட்டுமல்ல, 10-ஆம் நெம்பர் நூல் என்ற ஒரு நூல். அந்த நூலை எந்தக் கூட்டுறவு நூற்பாலையிலும் நூற்பது கிடையாது. தனிப்பட்ட நூற்பாலைகள்தான் நூற்கின்றன. மேட்டி டிரில்லுக்குத்தான் அது தேவைப்படுகிறது. அவற்றை எல்லாம் தனிப்பட்டவர்களிடத்தில்தான் நீங்கள் வாங்கிக்கொண்டிருக்கிறீர்கள்.

அதுமட்டுமல்ல, தனிப்பட்ட முதலாளிகளிடமிருந்து, மில்களிலிருந்து வாங்கி, அதைக் கூட்டுறவுக்கோ, அல்லது தனிப்பட்ட நெசவாளர்களுக்கோ கொடுக்கிறபொழுது-நீங்கள் என்ன விலைக்கு வாங்கினீர்களோ, அதே விலைக்கு விற்கிறீர்களா என்றால் கிடையாது. அதில், பெரிய 'டிஃபரன்ஸ்' இருக்கிறது. அந்த டிஃபரன்ஸை' அரசாங்கமே கொடுக்கலாம், ரிபேட் கொடுக்கிற மாதிரி. ஆனால் அப்படிக் கொடுப்பது கிடையாது. இந்த வித்தியாசத்தை வாங்குபவர்கள் தலைமையின்மீது சுமத்திவிடுகிறார்கள். எனவே எல்லா நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் நியாயமான விலையில் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்திருக்கிறோம் என்று சொல்வது தேவையில்லாத ஒன்றாகும்.

அடுத்து ஒன்று, இன்றைக்குக் கடனைத் தள்ளுபடி செய்வதிலே பாரத ரத்னா பட்டம் பெற்றது இந்தச் சர்க்கார். ஆகையினாலே, இந்தச் சர்க்காருக்கு ஒன்று சொல்கிறேன், நெசவாளர்கள் பல இடங்களில் நேஷனலைஸ்ட் பாங்குகளில் கடன் வாங்கியிருக்கிறார்கள். அந்தக் கடன்களையெல்லாம் திருப்பிச் செலுத்த முடியாமல் அவர்கள் இன்றைக்கு அவதிப்படுகிறார்கள். அந்தக் கடன்களையெல்லாம் நீங்கள் ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் ஒன்று, ஏற்றுமதியைக் குறித்துச் சொல்கிறேன். பவர் லூம் என்று சொல்லி கைத்தறித் துணியை பவர் லூமிலே நெய்து ஏற்றுமதி பண்ணியதன் விளைவாகத்தான் இன்றைக்கு ஏற்றுமதி பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது நம் எல்லோருக்கும் தெரிந்த விவகாரம். எனவே இவற்றை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வீடு கட்டும் திட்டம். போன முறை நான் இதே மானியத்திலே பேசும்போது கேட்டேன். கைத்தறி நெசவாளர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் குடும்பத்திற்கு ஒருவருக்கு வேலை தரப்படும் என்று சொன்னீர்களே, இது வரையில் அந்தத் திட்டம் அமலாக்கப்பட்டதா? கிடையாது. அதேபோலத்தான் வீடு கட்டும் திட்டம். சொல்லிவிட்டுப் போய்விடுகிறீர்கள், மாங்காய் புளித்ததோ, வாய் புளித்ததோ என்று. வீடு கட்டி கொள்ள ஏழை நெசவாளருக்குப் பணம் கடன் கொடுத்தால் மட்டும் போதாது; நிலத்தை ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். ஏன் என்று சொன்னால் சாதாரண



ஒரு ஏழை நெசவாளி மற்றவர்களுடன் காம்படிஷன் போட்டு எப்படி அந்த நிலத்தை வாங்க முடியும். எனவே நிலத்தை ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு 'ப்ரியாக' கொடுக்க வேண்டும். இலவசமாக வீடுகட்டிக் கொடுக்கவேண்டும், மானியமாக அல்ல. அப்படிப்பட்ட திட்டத்தை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் (மணி அடிக்கப்பட்டது).

அடுத்து காதி. அதைச் சொல்லாவிட்டால் பாராபட்சம் ஆகிவிடும். கதரைப் பற்றி பெரும்பகுதி தெரிந்ததுதான். மில் நூலிலே மற்ற நூலை இடையே விட்டு முழுக்க முழுக்க கதர் என்று சில வேலைகளிலே விற்கப்படுகிறது. இதிலே ஊடு பாவு என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையை உருவாக்கிவிட்டார்கள். அரசாங்கத்திடம் நான் ஒன்றை கேட்கிறேன், கதரை நாங்கள் என்கரேஜ் செய்கிறோம், ஆதரிக்கிறோம் என்று சொன்னால், எத்தனை அம்பர் சர்க்காவை நீங்கள் ஊர் தோறும் ஆரம்பித்து இருக்கிறீர்கள், இருக்கிற அம்பர் சர்க்காவை நீங்கள் மூடிவிட்டீர்கள். நசியாபுரம், சின்னாபுரம் ஈரோட்டிலே பல பகுதிகளில் மூடிவிட்டீர்கள். அம்பர் சர்க்காவை தி. மு. க, ஆட்சிக்காலத்திலேதான் துவக்கப்பட்டது. அவைகளை எல்லாம் நீங்கள் மூடிவிட்டீர்கள். இப்படிப்பட்ட நிலை இருக்கிற காரணத்தினாலேதான் இந்த மானியக்கோரிகையினை பாராட்ட வேண்டிய அவசியம் இல்லை, அதிலே என்ன எழுதியிருக்கிறது என்று படிக்க முடியாத நிலை இருக்கிறது, என்று சொல்லி, இது ஏதோ ஒரு சடங்காக நடைபெறுகிறது என்று சொல்லி, பட்ஜெட்டைப் போலத்தான் இதிலும் ஒன்றும் இல்லை என்று சொல்லி விடைபெறுகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் அவர்கள் நெசவாளர் துயர் துடைப்பதற்காக யாதொரு திட்டமும் இல்லை என்று அவருக்கே உரித்தான பாணியில் கூறி அமர்ந்திருக்கிறார்கள். நாங்கள் போடுகிற திட்டம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களைத் திருப்திப் படுத்துவதற்காக அல்ல, நெசவாளிகள் திருப்தி அடைகிறார்களா என்பதற்காகத்தான் இந்த மானியக் கோரிக்கையை வைத்திருக்கிறோம். பல திட்டங்களை அரசு தீட்டி இருக்கிறது என்பதை அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அறிஞர் அண்ணா அவர்கள் எப்படி நெசவாளர்களின் உயர்வுக்காக பல திட்டங்களைத் தீட்டியும் அவர்களுக்கு நல்ல பல காரியங்களைச் செய்யவேண்டும் என்றும் எண்ணினார்களோ அதைத் தொடர்ந்து புரட்சித் தலைவர் அவர்கள், தமிழகத்தின் விவசாயிகளையும், நெசவாளிகளையும் 'இரு கண்களாகப் பாவித்து எப்படியும் அவர்களுக்கு நன்மைகள் செய்யவேண்டும்

என்றும், அவர்களுடைய வாட்டம் போகவேண்டும் என்றும் பல திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள். நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலையும், நிரந்தரமான ஊதியமும் கொடுக்க வேண்டும் என்ற இரட்டை நோக்கோடு பல திட்டங்களை இந்த அரசு அமுல்படுத்தி வருகின்றது.

இதன் அடிப்படையில் 1984-85 ஆண்டுக்குள் குறைந்தது 75% வரையில் கூட்டுறவு சங்கங்களிலே அவர்களைச் சேர்த்துப் பலன் பெறவைக்க வேண்டும் என்பது இந்த அரசின் நோக்கமாக இருக்கிறது. தமிழ்நாட்டிலே உள்ள 5.56 லட்சம் கைத்தறிகளில் இதுவரையில் 2.45 கைத்தறிகள் கூட்டுறவு இயக்கத்தின் கீழ் ஏறத்தாழ 1052 பிரதம நெசவாளர் சங்கங்களில் அங்கத்தினர்களாக சேர்ந்துள்ளனர்.

[பிற்பகல் 1.00]

1978-79-ல் 993 பிரதம கூட்டுறவு சங்கங்கள் இருந்தன; 1979-80-ல் 1052 என்று உயர்ந்து இருக்கிறது. இந்த நடப்பு ஆண்டில், 1980-81-ல் 1135 என்கிற அளவிற்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கோவாப்டெக்ஸ் நிறுவனத்தைப் பற்றிப் பேசுகிறபோது அதில் நடக்கும் நல்ல காரியங்களைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். சில தனி அதிகாரிகள் செய்யும் தவறுகளையும், நண்பர் புருஷோத்தமன் அவர்கள் சுட்டிக்காட்டியது போல-ஏற்றுமதிக்கு இருக்கும் துண்டுகளை குறைவான விலையில் விற்பனை செய்து இருக்கிறார்கள் என்றும் எடுத்துக் காட்டினார்கள். அந்தத் துண்டுகள் வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்காக தயாரிக்கப்பட்டவை. நானும் 'குறளகம்' சென்றபோது அதைப் பார்த்தேன். அது குறித்து விசாரித்தபோது சொன்னார்கள். வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதற்கு எவ்வளவு தேவையோ அதற்கு அதிகமாக துண்டுகள் இருந்த காரணத்தால், எந்த அளவிற்கு ஏற்றுமதிக்காக நாம் அருமையான வகையில் துண்டுகளைத் தயாரிக்கிறோம் என்று வாயளவில் சொல்வதைவிட, விற்பனை மூலம் அதை சாதாரண மக்களுக்கு தெரியப்படுத்துவது நல்லது என்கிற வகையில் ரிபேட் மூலம் குறைந்த விலையில் அதை விற்றதாகக் காரணம் சொன்னார்கள். ஆகவே, நெசவாளர்கள் உருவாக்கிய துண்டைக் கேவலப்படுத்தவேண்டும் என்ற நிலையில் அந்த விலையைக் குறைத்து விற்கவில்லை என்பதை நான் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்-தலைமை)

கோவாப்டெக்ஸ் நிறுவனம், கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் உற்பத்தி செய்யும் ஏறக்குறைய 50% உற்பத்தியை கொள்முதல் செய்து, 420 கிளைகள் மூலம் விற்பனை செய்து வருகிறது. இந்த நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசு இதுவரையில் 8.53 கோடி



ரூபாய் பங்கு மூலதனமாகக் கொடுத்து இருக்கிறது. நடப்பு ஆண்டில் கைத்தறி துணி தேக்கத்திற்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அந்த கோவாப்டெக்ஸ் நிறுவனத்திற்கு தமிழ்நாடு அரசு 5 கோடி ரூபாய் அளவுக்கு வழிவகைக் கடன் சமீபத்தில் அளித்துள்ளது. 5 கோடி ரூபாய் காணுமா என்று கேட்டார்கள். ஏராளமான கோடி ரூபாய்க்கு துணிகள் தேக்கம் ஏற்பட்டு இருக்கிறபோது, 5 கோடி ரூபாய் அரசு அளித்தால் போதாது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினார்கள். 5 கோடி ரூபாய் சர்க்கார் அளித்து இருக்கிறது என்று சொன்னால் அது கொள்முதல் செய்வது வழியாக நிலுவைகள் இருக்கின்றனவற்றை ஈடுசெய்ய அப்படி அந்தச் சங்கங்களுக்குப் பணம் போய்ச் சேர்ந்தால்-ரொடேஷன் என்று சொல்வார்களே அந்த முறையிலே தேங்கிக் கிடக்கிற துணிகளை உற்பத்தி செய்பவர்களிடமிருந்து இந்த 5கோடி ரூபாயை வைத்துக்கொண்டு வாங்கவும், அதன் மூலம் மேலும் உற்பத்திகள் பெருகவும், விற்பனை பெருகவும் உரிய சூழ்நிலை உருவாகி அனைவரும் பயன்பெறும் வாய்ப்பு இருக்கிறதுஎன்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

1978-79-ல் கோவாப்டெக்ஸ் மூலமாகக் கொள்முதல் செய்யப்பட்டது 27.51 கோடி ரூபாய் என்பது 1979-80-ல் 29 கோடி ரூபாய் என்கிற அளவிற்கு உயர்ந்து, 1980-81-ல் 30 கோடி ரூபாய் அளவிற்கு உயர இருக்கிறது என்பதை நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நெசவாளர்களின் துயர் துடைப்பதோடு அவர்கள் உற்பத்தித் திறனைப் பெருக்கவேண்டும் என்ற அடிப்படையில் கைத்தறித் தொழிலை நவீனப்படுத்த வேண்டும் என்று இந்த அரசு எண்ணி வேகமாக மாறிவரும் மக்கள் ஆதரவை ஈர்க்கவும் ஒவ்வொருவரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவும், நவீன கைத்தறித் துணியை உற்பத்திச் செய்யவும், கைத்தறித் தொழிலை நவீனமாக்க தொழில் நுட்பக் கழகத்தை ஏற்படுத்தி உள்ளோம். இதன் மூலம் நெசவாளர் தறிகளைப் புதுப்பிக்கவும், நவீனப் படுத்தவும், புதிய கைத்தறிகளை வாங்கவும் திட்டம் ஒன்று 1979-80-ஆம் ஆண்டில் அமலாக்கப்பட்டது. இது தவிர இந்தத் தொழிலை நவீனப் படுத்த மாதிரி வடிவமைப்புகள் செய்யப்பட்டு வருகிறது. ஆனால் தரமான கெட்டிச் சாயம் தயாரிக்க சேலம், திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுத்தூர், வேலூர், திருச்சி, கோவை போன்ற இடங்களில் அரசு சாயத் தொழிற்சாலை நிறுவ இருக்கிறது. இக்கெட்டிச் சாய ஆலைகள் நிறுவுவதற்கான மொத்தச் செலவு மதிப்பீடு ரூ. 90 லட்சம். இவற்றில் 4 நவீன சாயத் தொழிற்சாலைகளுக்கான வேலைகள் முற்றிலும் முடிக்கப்பட்டு வேலைகள் தொடங்கும் நிலையில் உள்ளன. மற்ற நவீன ஆலைகள் கூடிய விரைவில் அமைக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்,

கூட்டுறவு நூற்பாலைகள் சம்பந்தமாக தமிழகத்திலுள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகளிலும் 20 முதல் 120 எண் வரையிலான நூல் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்த நூற்பாலைகளை விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ் 9 கூட்டுறவு நூற்பாலைகளில் திட்டப் பணிகள் முடிந்து, விரிவுபடுத்தப்பட்டு, உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. தற்போது 12 கூட்டுறவு நூற்பாலைகளிலும் உள்ள மொத்தத் திறன் 3.14 இலட்சம் கதிர்கள் ஆகும்.

திண்டிவனத்திலுள்ள தென்னாற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை 150 இலட்சம் ரூபாய் செலவில் அதன் கதிர் திறனை 25,000 ஆக உயர்த்தும் திட்டத்தை தற்போது மேற்கொண்டுள்ளார்கள். இது தவிர சேலம் கூட்டுறவு நூற்பாலையிலும், வடாற்காடு கூட்டுறவு நூற்பாலையிலும் 25 000 கதிர் திறனை முறையே 1980-81, 1981-82—ஆம் ஆண்டுகளில் ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சென்னை, நீலகிரி மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில், மாவட்டத்திற்கு ஒரு கூட்டுறவு நூற்பாலை என்ற அடிப்படையில் புதுக்கோட்டை, தர்மபுரி மாவட்டங்களிலும் முறையே ஒரு கூட்டுறவு நூற்பாலை நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு நிதி உதவியுடன் தமிழ்நாடு அரசு 4 தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களை காஞ்சிபுரம், ஈராடு, மதுரை, சேலம் ஆகிய இடங்களிலும் இரண்டு ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களை கரூர், குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களிலும் அமைத்துள்ளது. இந்தத் திட்டங்கள் அனைத்தும் பின்னர் கூட்டுறவுத் திட்டங்களாக மாற்றப்பட்டு, கோவாப்டெக்ஸ் நிறுவனத்தின்கீழ் இணைக்கப்பட்டுள்ளன. மொத்தச் செலவு 464·3 இலட்சம் ரூபாய். அரசால் இதுவரை வழங்கப்பட்ட மொத்த நிதி உதவி 175·46 இலட்சம். 1980-81 ஆம் ஆண்டில் வழங்கப்பட இருக்கும் நிதி உதவி 88·57 இலட்சம். தமிழ்நாட்டில் தனியார் துறையிலுள்ள நெசவாளர்களுக்கு தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் கடன் உதவி அளிக்கிறது. அதன் விவரம்—

1979-80 ஆம் ஆண்டு 75·97 இலட்சம்

1980-81 ஆம் ஆண்டு 79·00 இலட்சம்

இந்தக் கழகத்தின் பங்கு மூலதனத்தோடு நடப்பாண்டில் 30 இலட்சம் ரூபாய் பங்கு மூலதனம் வழங்க அரசு உத்தேசித்திருக்கிறது.

இங்கே பேசிய உறுப்பினர்கள் வீடு கட்ட அரசு ஒதுக்கியிருக்கிற பணம் பற்றாக்குறையாக இருக்கிறது. இதை அறிவித்த காலத்திற்கும் இப்போது கட்ட இருக்கும் காலத்திற்கும் இடையிலே ஏற்பட்டிருக்கிற விலைவாசி உயர்வைக் கருதி, இப்போது விலை உயர்ந்திருக்கிற காரணத்தால் அரசு வீடு கட்டுவதற்கான



தொகையைக் கூடுதலாகக் கொடுக்க வேண்டும் என்று கூறினார்கள் ஏற்கெனவே 1962 வரையில் நெசவாளர்களுக்கு 2,683 வீடுகள் அரசின் உதவியோடு கட்டப்பட்டன. இந்த வீட்டுவசதித் திட்டம் 1962-க்குப் பிறகு கைவிடப்பட்டது என்பது மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரியும். பின்னால், புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகு 1979-80 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு வீடு கட்ட, ஒரு வீட்டுக்கு 5,000 ரூபாய் ஆகும் என்று எதிர்பார்க்கப்பட்டது. தற்கால செலவினம் கூடுதலாக இருப்பதை அரசு பரிசீலனை செய்து, நெசவாளர்களுக்கு எந்தவகையிலும் உதவ வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் 5,000 ரூபாய் என்பதை 6,000 ரூபாய் என்று உயர்த்தியிருக்கிறது. இது 1—3—1980 முதல் நடைமுறைக்கு வருகிறது என்பதை நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அறிவிப்பு நிச்சயமாக நெசவாளர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் என்று கருதுகிறேன். நெசவாளர்கள் மகிழ்ச்சி கொண்டால் இந்த அவையில் இருக்கிற மாண்பமிகு உறுப்பினர்களும் மகிழ்ச்சி கொள்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

[பிற்பகல் 1-10]

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி -என்கிற சொரணம்: தலைவரவர்களே, கடன் தொகையை உயர்த்தி இருக்கிறார்களே, அது மாதிரி மானியத்தையும் உயர்த்தி இருக்கிறார்களா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: அடுத்து, சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி, அதில் நெசவாளர்களிடமிருந்து 7 பைசாவும், சர்க்கார் 3 பைசாவும் சேர்த்து நெசவாளர்கள் இறந்துவிட்டால் இன்சூரன்ஸ் வாயிலாக முன்பு அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய தொகை 500 ரூபாயாகத்தான் இருந்தது, இது உண்மையிலேயே நெசவாளர்களுக்குச் சரியான பாதுகாப்பு இல்லை, இந்தத் தொகை சாலாது என்று இந்த அரசு அனுதாபத்தோடு பரிசீலனை செய்தது. இப்போது அந்த உதவித் தொகையை 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி 1—3—1980-லிருந்து இந்தச் சலுகை நடைமுறைக்கு வருகின்றது என்பதை நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கைத்தறித் துணிகளைப் பதனிட்டுக்கொடுப்பதற்கு பவானிசாகரிலே ஒரு பதனிடும் ஆலை ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது: தமிழ்நாடு தொழி

வளர்ச்சிக் கழகம், கோ-ஆப்-டெக்ஸ், தேசியப் பஞ்சாலை கழகம் ஆகிய 3 நிறுவனங்களும் சேர்ந்து ஜாயின்ட் செக்டாரிலே சுமார் 6 கோடி ரூபாய் செலவில் இந்தப் புதிய பதனிடும் ஆலை சுமார் 1 இலட்சம் மீட்டர் துணியை தினசரி பதனிடும் திறம் கொண்டதாக இருக்கும் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

கைத்தறித் துணிகளில் உள்நாட்டுத் தேவைக்காகவும் குறிப்பாக ஏற்றுமதிக்காகவும் ரெடிமேட் ஆடைகள் தயாரிக்க ஒரு கூட்டுறவு நிறுவனம் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது. இந்த நிறுவனம் கோ-ஆப்-டெக்ஸ் மேற்பார்வையில் ஒரு யூனிட்டாகச் செயல்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் துணிகள் தயாரிக்கின்ற சிறு சொசைட்டிகள் இருக்கின்றனவே, அவைகளை உற்சாகப்படுத்துகின்ற வகையில் ஆண்டு ஒன் க்கு ரூபாய் 5 இலட்சம் வரை துணி உற்பத்தி செய்யும் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிவாரணம் அளிக்கும் வகையில் அச்சங்கங்களின் உற்பத்தி முழுவதையும் கோ-ஆப்-டெக்ஸ் மூலம் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு நிலையான விலையை நூலுக்குக் கொடுப்பதற்கு முயற்சி எடுத்து வருகிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து கதர் கிராமத் தொழில் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். மக்களுக்குத் தேவையான பொருள்கள் எளிதில் கிடைக்கும்படி செய்வதற்காகத்தான் கதர் கிராமத் தொழில் வாரியம் அமைக்கப் பெற்றது. கடந்த ஆண்டில் ரூபாய் 38 கோடி கதர் கிராமத் தொழில் பொருள்களை வாரியம் உற்பத்தி செய்தது, ரூபாய் 42 கோடி மதிப்புள்ள பொருட்களை விற்பனையும் செய்துள்ளது. நடப்பாண்டில் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே 44 கோடி மற்றும் 46 கோடியாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ஏறத்தாழ 4 இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து அவர்களுக்கு நிலையான வாழ்வை அளித்து வருகிறது. இவ்வாரியம் கடந்த 3 ஆண்டுகளில் 70 ஆயிரம் கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளித்துள்ளது. நடப்பாண்டில் மேலும், 35 ஆயிரம் கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளிக்க உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த கிராமத் தொழில் முன்னேற்றத்திற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்ன கருத்துக்களை அரசு பரிசீலிக்கும் என்றும் நான் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். கிராமக் கைத்தொழிலிலே பல பொருள்களை நிச்சயமாக நல்ல முறையிலே வெளிக்கொண்டுவருதற்குரிய சூழ்நிலையை இந்த அரசு அக்கரையோடு



கவனித்து கிராமங்களில் உள்ள அனேகம் பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்குரிய சூழ்நிலையை இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இதுகாறும் இம்மாதிரி 328 நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டு நடப்பு நிதியாண்டில் 130 நிலையங்கள் துவக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு நூற்பு நிலையத்தில் 25 உலோக ராட்டைகளும், இதர உபகரணங்களும் உள்ளன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நிலையத்தில் 32 பேர்களுக்கு—பெரும்பாலும் பெண்களுக்கு—வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. கதர் தரத்தை உயர்த்த நூலின் தரத்தை உயர்த்த வேண்டும். அதற்காகப் பஞ்சுடைக்கும் கருவிகள் கொண்ட 20 நிலையங்கள் நடப்பாண்டில் நிறுவப்பட்டுள்ளன. சோதனை வடிவமைப்புக் கூடம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

பனைத்தொழிலைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் 4 கோடி பனை மரங்கள் உள்ளன. அவற்றில் 2 கோடி பனை மரங்கள் பயன்படுத்த கூடிய வகையில் இருக்கின்றன. ஆனால் இதுவரையில் 60 இலட்சம் மரங்கள்தான் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எஞ்சியுள்ள மரங்களையும் மாண்புமிகு திரு. குமரி அனந்தன் அவர்கள் கூறியதுபோல், பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டுகளில், இரண்டு லட்சம் பயன் தரும் வகையைச் சேர்ந்த பனை விதைகள் கிராமங்களிலே நடப்பெற்றிருக்கின்றன. இதுகாறும் பனை நுங்குகள் மட்டுமே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன. கடந்த ஆண்டில் மட்டும் 40 லட்சம் பெறுமான பனை நுங்குகள் ஏற்றுமதி ஆயின.

அதைப்போலவே வெல்லப்பாகு அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பெற்றுள்ளது. மேலும் அதிக அளவிலே இவ்வெல்லப்பாகு ஏற்றுமதி செய்ய வகை செய்யப்பெற்றுள்ளது.

நாட்டுச் செக்கு எண்ணெய்க்கு மக்களிடையே ஆதரவு நாள் தோறும் அதிகரித்து வருகிறது. தேவைகளுக்கேற்ப உற்பத்தியைப் பெருக்க மின்விசைப் பொருந்திய 10,000 செக்குகளை இத்திட்டக் காலத்திற்குள் புகுத்த வாரியம் திட்டமிட்டுள்ளது. இதுகாறும் 1248 மின்விசைப் பொருத்தப்பெற்ற செக்குகள் வினியோகிக்கப்பெற்றுள்ளன. நடப்பு ஆண்டில் 'டான்சி' நிறுவனத்தால் தயாரிக்கப்பெற்ற ஆயிரம் செக்குகள் வினியோகிக்கப்பெறும். இவ்வகை செக்கு ஒன்று நிறுவுவதால் இரண்டு பேர்களுக்கு நிலையான வேலை வாய்ப்பு கிடைக்கும். செக்கு ஒன்றை நிறுவ கைத்தறி கிராம ஆணைக்குழு ரூபாய் 7500 கடன் உதவியாக அளித்திருக்கிறது. மேற்கொண்டு ரூபாய் 1,500 மானியாக மாநில அரசு ஒருங்கிணைந்த கிராம

[திரு. எஸ். என். இராசேந்திரன்] [1980 ஜூலை 17

வளர்ச்சித் திட்டத்தின் கீழ் முன்னரே அளித்து வருகிறது. இவ்வாறு ஒவ்வொரு கிராமத் தொழிலையும் ஊக்குவிப்பதன் மூலமாக அவைகள் மறு மலர்ச்சி பெற்று, கிராம மக்கள், அதிலும் குறிப்பாக தாய்குலத்திற்கு, வேலை வாய்ப்புகள் அதிகம் ஏற்பட்டு, அதன் மூலம் வளமான வாழ்வுக்கு வழி கோலும் முறைகளில் கதர் கிராமத் தொழில் வாரியம் தன்னால் இயன்ற அளவு செயலாற்றி வருகிறது.

ஆகவே நல்ல பல திட்டங்களை கைத்தறியிலும், கதர் கிராம வாரியத்திலும் கொண்டு வருவதற்காக இந்த மானியக் கோரிக்கைகளை அரசு அளித்திருக்கிறது என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கைகளை ஏற்று அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்களை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், இந்தச் சட்டமன்றத்திலே கைத்தறி தொழிலாளர்களுடைய நலனைப் பாதுகாக்க ஏற்கெனவே ஒரு சட்டம் வந்து, அது பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பப்பெற்றது. அந்த பொறுக்குக் கமிட்டியின் விசாரணை முடிவதற்குள் சட்டமன்றம் கலைக்கப்பெற்று, அந்தச் சட்டம் அப்படியே நின்றுவிட்டது. ஆகவே அவைகளை பரிசீலித்து இந்த கூட்டத் தொடரிலேயே அவைகளைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே தொழிலாளர் நல அமைச்சர் மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள், கைத்தறி தொழிலாளர்களின் நிலையை முறை படுத்தவும், அவர்களுக்குச் சட்ட பூர்வமான பாதுகாப்பு அளிக்கவும் திருத்தப்பெற்ற சட்ட முன் வடிவு ஒன்றினை இச்சட்டமன்றத்தில் கொண்டு வருவதற்கான செயல் குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. இனி வாக்கெடுப்பு

கோரிக்கை எண் 26.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், இல. பலராமன் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், செ. சிவகாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ள பெற்றன.



1980 ஜூலை 17]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"மானியக் கோரிக்கை எண்–26; கைத்தறியும் நெசவுத் தொழிலும்—என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 4,99,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

கோரிக்கை எண்–27.

திருவாளர்கள் சு. பாலன், என். எஸ். வி. சித்தன், ரா. கிருஷ்ணன், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:—

"மானியக் கோரிக்கை எண்-27 கதர் என்ற தலைப்பின் கீழ் அரசுக்கு ரூபாய் 1,57,91,000—க்கு மேற்படாத தொகை வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

[பிற்பகல் 1-20.]

9. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிலச்சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1980)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 19/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்" என்று மொழிகிறேன்.

திரு. பொ. உத்திராபதி: பேரவைத் தலைவர் அவர்களே நமது மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் வட பாதிமங்கலத்தில் இருக்கக் கூடிய கரும்புப் பண்ணைக் கழகத்தை

*1980 ஜூன் 28-ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

[திரு. பொ. உத்திராபதி] [1980 ஜூலை 17

மீண்டும் இரண்டு* ஆண்டு காலம் நீட்டிக்க வேண்டும் என்ற ஒரு சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த கரும்புப் பண்ணைக் கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்தவரையில் ஒரு கூட்டமைப்பில் விவசாய உற்பத்தி செய்யக்கூடிய கருத்துக்களை வரவேற்கிறோம். ஆனால் அதே நேரத்தில் இந்தக் கரும்புப் பண்ணை கழகம் துவங்கிய காலம் முதல் நஷ்டத்திலேயே போய்க் கொண்டிருக்கிறது. இந்த நஷ்டத்தை ஈடு செய்யும்போது—அரசுக்கு இன்றைக்கே நிதிப் பற்றாக்குறை இருப்பதால்—அது அரசுக்கு சிரமமான காரியந் தான். இது அரசுக்கும் தெரியும், குறிப்பாக வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். எனவே நஷ்டமடையாமல் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றுதான் கரும்பை எடுத்தார்களே தவிர விவசாயம் செய்வது பூராவும் நெல்தான். நெல் தான் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்த நிலத்தை அதை நம்பி வாழக்கூடிய அந்தப் பகுதியில் உள்ள தொழிலாளர்களுக்கே கொடுத்து அந்தக் கரும்புப் பண்ணைக் கழகத்தில் பணிபுரியக்கூடியவர்களுக்கெல்லாம் அரசு நிறுவனங்களில் பணிபுரியக்கூடிய சந்தர்ப்பத்தை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இரண்டு ஆண்டுகள் நீட்டித்தாலும் அதில் இருக்கக்கூடிய தொழிலாளிகளுக்கு நேரடியாக கழகம் மூலம் சட்டப்படியான கூலி கிடைப்பதில்லை. அங்குள்ள தொழிலாளர்களுக்கு நியாயமான முறையில் சம்பளம் கிடைப்பதில்லை. ஒரு கான்ட்ராக்டரை வைத்து ஏக்கர் அடிப் படையில் இவ்வளவு விகிதாசாரம் என்று கொடுக்கப்படுகிறது. அவர்களுக்கு நியாயமான முறையில் சம்பளம் கிடைக்கவேண்டும். அதோடு, நிலம் அவர்களுக்கே கிடைக்கவேண்டும். அதே நேரத்தில் அங்கே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்கள் அத்தனை பேர்களையும் பண்ணை ஊழியர்களாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

*திரு. எம். செல்லமுத்து: தலைவர் அவர்களே, ஆரூரான் கரும்புப் பண்ணையில் இருக்கக் கூடிய அந்த நிலங்களையெல்லாம் அந்தப் பண்ணையைக் கலைத்து, அந்தக் கரும்புப் பண்ணையில் இருக்கக்கூடிய சிறிய விவசாயிகளுக்கு அவர்களுக்கு குத்தகைக்கு கொடுத்திருக்கக் கூடிய நிலங்களையெல்லாம் அவர்களுக்கே அளித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு அங்கு உபரியாக இருக்கக்கூடிய நிலங்கள் பூராவையும், நிலச் சீர்திருத்தச் சட்டத்தின் மூலம், அங்குள்ள விவசாயத் தொழிலாளர்களுக்கு, ஏழை மக்களுக்கு அளித்திட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அந்தக் கரும்பு பண்ணையில் வேலை செய்யக்கூடிய 200 ஊழியர்களுக்கு மாற்று வேலையும் அதிலே இருக்கக்கூடிய ஊழியர்களுக்கு நிலங்களை அளிக்கும் முறையில் ஏற்பாடு செய்து அந்த கரும்புப் பண்ணை கார்ப்பரேஷனை கலைத்து விட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1980 ஜூலை 17] [திரு. எம். செல்லமுத்து]

இன்று அந்த நிலத்தில் சாகுபடி செய்யும் விவசாயிகள் அதை நம்பி வாழ்கிறார்கள். கிட்டத்தட்ட ஆறாயிரம் ஏக்கர் சாகுபடி செய்யக்கூடிய அந்த நிலத்திலிருந்து வரக்கூடிய வருமானம் முழுவதும் அரசாங்க நட்டக்கணக்கில் காட்டப்படுகிறது. அதில் பல்வேறு தவறுகள் ஏற்படுகின்றன. அங்கே வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களுக்கு நேரடியாக சம்பளம் வழங்கப்படுவதில்லை. கான்ட்ராக்ட்க்கு விடப்படுகிறது. அந்த கான்ட்ராக்டுகளில் பல ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன, எனவே அது கார்ப்பரேஷனாக இருப்பது நம் அரசுக்கு லாபம் தராது. ஆகவே அதைக் கலைத்துவிட்டு அந்தப் பகுதியில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு அந்த நிலங்களை அளித்து, அதிலே குத்தகைக்கு இருக்கும் குத்தகை விவசாயிகளுக்கு அந்த நிலத்தைத் தர வேண்டும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதா மீது என்னுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். நில உச்சவரம்புச் சட்டத்தின் ஆரம்பத்தில் கரும்பு நிலம், மேய்ச்சல் நிலம் இவற்றிற்குக் கொடுக்கப்பட்ட விதிவிலக்கு 1971 ம் ஆண்டு இந்த மன்றத்தில் அந்த விதிவிலக்கை எடுத்ததன் விளைவாக ஆரூரான் ஷுகர் பாக்டரியை வைத்துக் கொண்டு, மூவாயிரம் ஏக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு ஒரு கரும்பு கார்ப்பரேஷன் அமைத்து அந்த நிலங்களை எல்லாம் நாம் நிர்வகிக்க வேண்டியவர்களாக ஆகிவிட்டோம்.

இதிலே இருக்கிற 769 ஏக்கர் நிலத்தின் குத்தகைக் காலம் 1974-லே முடிந்துவிட்ட காரணத்தினால், அன்றையதினம் இந்த மன்றத்திலே ஒரு மசோதாவைக் கொண்டு வந்து, மேலும் 5 ஆண்டு காலத்திற்கு நீட்டித்துத் தரவேண்டும் என்று அன்றைக்குப் பேசி நீட்டித்து தந்தோம். இன்றையதினம் மீண்டும் அமைச்சர் அவர்கள் அவற்றிற்கு பரிகாரம் காண்பதற்காக மேலும் 2 ஆண்டு காலம் தேவை என்று கேட்டிருக்கிறார்கள். அதை நான் மறுக்கவில்லை. ஆனால், இதிலே முன்னாலே பேசிய அங்கத்தினர்கள் குறிப்பிட்டதுபோல், இதிலே சிறிய சிறிய விவசாயிகள்கூட இருக்கிறார்கள். ஒரு 50 சென்ட், 40 சென்ட், 30 சென்ட் என்று நிலம் வைத்திருப்பவர்கள் 38 பேர்கள் இருக்கிறார்கள். அதே போல் 1 ஏக்கர், 2 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் 85 பேர்கள் இருக்கிறார்கள். இப்படி ஒட்டு மொத்தமாக 166.14 ஏக்கர் நிலம் இப்படிப்பட்ட சிறு விவசாயிகளிடமிருந்து வருகிறது. 2123

ஏக்கர் நிலம் வடபாதி மங்கலத்திடமிருந்து வருகிறது. ஆனால் ஒரு 15 ஆண்டு, 20 ஆண்டுகளாக அன்றைக்கு நிர்ணயித்தபடி எடுத்தார்களோ, ஏக்கருக்கு 120 ரூபாய் என்று குத்தகைக்கு அதே நிலை இன்றைக்கும் இருக்கிறது. எனவே, இத்தகைய சிறு விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

எனவே, இப்படி இப்போது ஒரு சட்டம் கொண்டு வரும் போது இந்த இரண்டு ஆண்டுகள் முடிந்தபிறகு, மேலும் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து 5 ஆண்டுகள் நீடிக்கலாம். இதே நிலையிலே தான் இன்றைக்கு கோயில் நிலத்தை வாடகைக்கு மாதம் 1 ரூபாய் என்று எடுத்துக்கொண்டு, 90 வருஷங்கள் இருந்துகொண்டு வருகின்ற நிலை இருக்கிறது. எனவே, இத்தகைய நிலைமை இருக்கக்கூடாது. எனவே, இத்தகைய சிறு விவசாயிகளின்மீது பச்சாதாபத்தோடு, மனிதாபிமானத் தோடு அவர்கள் குத்தகைத்தொகையை உயர்த்திக் கொடுப்பதற் கான நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

கரும்பு கார்ப்பரேஷன் நஷ்டத்திலே இருப்பதாக சொல்லப் படுகிறது. மதிப்பிற்குரிய உத்திராபதி அவர்கள் குறிப்பிட்டார்கள். 1974-விலே இங்கே இந்த மசோதா வந்தபோது அப்போது அமைச்சர் அவர்கள் அளித்த பதிலில் 15 லட்சம் லாபத்திலே நடைபெறுகின்றது என்று எடுத்துச் சொன்னார்கள். எனவே, இன்றைக்கு அது லாபத்திலே ஓடுகிறதா அல்லது நஷ்டத்திலே ஓடுகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது விளக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் அவர்கள் அந்த நிலத்திலே கரும்பு தேவையில்லை என்று நெல்லைப் பயிரிட்டால், மதிப்பிற்குரிய உத்திராபதி அவர்கள் குறிப்பிட்டது போல் அந்த நிலத்தை அவர்களிடத்தி லேயே கொடுத்துவிடலாம். இதை இந்த அரசு பரிசீலிக்க வேண்டு மென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிற போது, ஆரூரான் சர்க்கரை ஆலை அந்த இடத்திலே கரும்பை பயிர் செய்து கொண்டிருந்தார்கள். கரும்புக்கு கொடுத்த விதி விலக்கை ரத்து செய்கிறபோது அவர்களுக்கு மீண்டும் கரும்பு கொடுக்க வேண்டுமென்பதற்காக பண்ணை ஆரம்பிக்கப்பட்டது என்பது எல்லோருக்கும் தெரியும். இவைகள் எல்லாம் இந்த அவையிலே பல முறை பேசப்பட்டது. எனவே, அதைப் பற்றி விளக்கம் இந்த அவையிலே சொல்லத் தேவையில்லை என்று நான்



சுருக்கமாக சொல்லிவிட்டேன். ஆனால், 1974ஆம் ஆண்டு 6-வது மாதம் 30 ஆம் நாள் (30-6-74) இது முதலிலே கொண்டு வரப் பட்டு, 5 ஆண்டுகள் நீட்டிக்கப்பட்டது. அப்படியானால் 1974-லேயிருந்து இன்றைக்கு 81 அதாவது 30-6-81 வரை இரண்டு ஆண்டுகளுக்கு மேலும் நீட்டிக்கப்பட இருக்கிறது. கடந்த காலத் தையும் மொத்தமாகச் சேர்ந்துப் பார்த்தால் 7 ஆண்டுகள் நீட்டிக்கப்படுகிறது. 5 ஆண்டுகள் முடிந்து விட்டது, இதை அந்த அரசு செய்தது. இது எப்போது முடியும்? 30-6-81-லே முடியும். ஏற்கனவே இப்போது கொஞ்சம் காலமாகி விட்டது. இந்த குறுகிய காலத்தில் அரசு இதைப்பற்றி என்ன செய்வது என்பது பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறது. இதிலே விரைவில் முடிவெடுக்கும்

அருமைச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் துரைமுருகன் சொன்னார். குத்தகைக் கொடுப்பது ரொம்ப குறைவாக இருக்கிறது என்று. இது 74-லே போடப்பட்டது. அதற்குப் பிறகு 6 ஆண்டுகள் ஆகியிருக்கிறது எனவே, இதிலே அவர் சொல்வதிலே நியாயம் கூட இருக்கிறது.

சில பேர்கள் குறைவான நிலத்தை வைத்திருக்கிறார்கள். அதைப் பிரிக்க வேண்டுமென்று சொன்னார்கள். குறைவான நிலத்தை வைத்திருக்கின்றவர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்றாலும், அவர்கள் நிலம் ஒன்றுக்குள் ஒன்று பின்னிப் பின்னி இருப்பதால், அவர்கள் நிலத்தை எடுக்கவேண்டிய கட்டாயத்திலே இருக்கிறோம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதி யோடு சபையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: அரசு விரைவில் ஒரு முடிவு எடுக்க இருக்கிறது. அந்த முடிவு எடுப்பதற்காகத் தான் காலம் கேட்கப்பட்டிருக்கிறது. இது இரண்டு ஆண்டுக்கு அல்ல என்பதையும் அருமைச் சகோதரர் உத்திராபதி அவர் களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். 30-6-81 வரைதான் கேட்கப்பட்டிருக்கிறது. அதற்குள் தீவிரமாக இந்த அரசு ஆலோ சித்து முடிவு எடுக்கும் என்று கூறி இச்சட்ட முன்வடிவை நிறை வேற்றித் தருமாறுகேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவுக்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு, 1980 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1980) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு, நிறைவேற்றப்பெற்றது.

(ஆ) இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1980)

மாண்புமிகு திரு. ஆர்.எம் வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்தம்-சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு ** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'' என்று மொழிகிறேன்.

*திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்ச கால அவகாசம் கேட்டிருக்கிறார்கள். அறநிலையத் துறையைக் கண்காணிக்க கமிட்டிகள் போடப்படுவதற்கு கண்காணிக்கக்கூடிய கமிட்டிகளைச் சேர்ந்தவர்கள் கூட ஊழலிலே மாட்டிவிடு கிறார்கள். கண்காணிக்கும் நபர்களாகப் போடுபவர்களை நல்ல ஆளாகப் பொறுக்கி எடுத்துப் போடவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

---

** 1980 ஜூலை 4 ம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



திரு. நா. சுந்தரராஜ்: பேரவைத் தலைவரவர்களே, இந்து சமய அறக்கட்டளைகள் திருத்தச் சட்ட முன்வடிவை அமைச்சர் அவர்கள் இங்கே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவேண்டு மென்று கோரியிருக்கிறார்கள். அதன் மீது எங்கள் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக் கிறேன். இன்றையதினம் நியமனம் செய்யப்பட்ட பரம்பரை அறங்காவலர் அல்லாதரைப் பொறுத்தவரை பெரும்பான்மை யான கோவில்களில் அனைத்திந்திய அண்ணா தி.மு.க.வைச் சேர்ந்தவர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. அவர்கள் கட்சிக்காரர்களை நியமனம் செய்வதில் ஆட்சேபணை இல்லை. நான் ஒன்றைச் சொல்லியாகவேண்டும்—கடந்த காலத்தில் என்ன தவறு நடந்ததோ அதே தவறைத்தான் நீங்களும் செய்கிறீர்கள். தெய்வ பக்தி. ஒழுக்கம் மிக்கவர்களை, கோவில்களின் தன்மை யைப் பாதுகாக்க வேண்டுமென்பதிலே அக்கறை கொண்டவர் களை, தெய்வாம்சம் பொருந்திய பொருள்களைப் பாதுகாக்க வேண்டுமென்பதிலே அக்கறை கொண்டவர்களை கோவில்களில் அறங்காவலர்களாக நியமிக்கவேண்டும். தங்களுடைய கட்சிக் காரர்களுக்குத்தான் இடம் கொடுக்கவேண்டுமென்ற எண்ணம் இருக்குமானால் தயவு செய்து திருத்திக் கொள்ளுங்கள். அந் தந்தப் பகுதிகளில் இருக்கக் கூடிய பெரிய மனிதர்களை, ஒழுக்கம் உள்ளவர்களை, நியாயம் உணர்ந்தவர்களை நியமனம் செய் யுங்கள். அப்படிப்பட்டவர்களை நியமனம் செய்யுங்கள். அதன் மூலமாக இந்து சமயத்தில் தவறான எண்ணங்கள் உள்ளவர்களைப் புகுத்தாமல் இருக்கலாம் ——நாங்கள் எல்லாம் சீர்திருத்த வாதிகள் என்று ஒரு பக்கத்திலே சொல்லி, கோயில்கள் எங்களுக்கு வேண்டாம், தெய்வங்கள் எங்களுக்கு வேண்டாம், நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளமாட்டோம் என்று சொல்கிறவர் களையெல்லாம் கோயில் டிரஸ்டிகளாக நியமித்தால் அங்கே பூசாரிகளோ அல்லது அர்ச்சகர்களோ திருநீறு கொடுப்பார்களே னால் அதை கீழே தூக்கியெறியக் கூடியவர்கள் எல்லாம் டிரஸ்டி களாக நியமிக்கப்படுகிறார்கள், என்றால் அது இந்துக்களுடைய மனத்தைப் புண்படுத்துவதாக இருக்கிறது —— அந்த மாதிரி இல்லாமல் தெய்வபத்தி மிகுந்தவர்களை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன். தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்திலே வைக்கப்பட்டிருக்கிற மசோதாவின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்பு கிறேன். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமித்திருக்

கிறார்கள். அப்போது ஜனாதிபதி ஆட்சி நாட்டுக்கு வந்தது. அவர்கள் கேடு பய்க்கக்கூடியவர்களை எடுத்துவிடுகிறோம் என்று திட்டத்தைப் போட்டு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். ஆனால் அந்தச் சட்டத்திலே என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னால் "Every vacancy occurring in the Office of non-hereditary trustees shall be filled up within a period of one year from the date of commencement of the said Presicents Act or within such further period not exceeding three years as the State Goveanment may, specify in this behalf by notification. என்பதுதான். ஜனாதிபதி ஆட்சிக் காலத்திலே அறங்காவலர்களை நியமிப்பதிலே ஒரு வருஷ காலம் எடுத்துக்கொண்டார்கள். அதற்குப் பிறகு மாநில சர்க்கார் நினைத்தால் ஒரு மூன்று ஆண்டுக்காலத்திற்கு அந்த கேப்பை மெயின்டெயின் பண்ணித் தள்ளிக்கொண்டே போய் ஆண்டுக்காண்டு தள்ளிவைக்கலாம் என்று சொன்னார்கள். ஜனாதிபதி ஆட்சி சொன்ன அந்தத் தத்துவத்தை இந்த ஆட்சி மறுக்காமல் 3 ஆண்டுக்காலம் எந்த விதமான அறங்காவலரையும் போடாமல் அந்த இடத்தை வெற்றிடத்தை வைத்து விட்டார்கள். வெற்றிடத்தை காற்று நிரப்புவது ஒரு விஞ்ஞானத் தத்துவம் என்று சொல்வார்கள்: இந்த பரம்பரை அறங்காவலர் நியமிப்பதிலே அந்த விஞ்ஞானத் தத்துவம் தோற்றுப்போயிருக்கிறது. அதிலே உங்களுக்கு என்ன கஷ்டம் என்று புரியவில்லை. கிட்டத்தட்ட இரண்டரை ஆண்டுக்காலம் ஆட்சி நடத்தியிருக்கிறீர்கள், உங்களுக்கு என்ன கஷ்டம் இதிலே. பெரிய எலக்‌ஷன் வருகிறதா? கிடையாது. காரணம் என்ன, கட்சிக்கு எலக்‌ஷன் கிடையாது. பஞ்சாயத்துக்களுக்கு எலக்‌ஷன் கிடையாது, சொஸைடிகளுக்கு எலக்‌ஷன் கிடையாது, எல்லாம் நாமினேஷன் தான். இதைப் போடுவதிலே உங்களுக்கு என்ன கஷ்டம்? எத்தனையோ அமைப்பாளர்களைப் போடுகிறீர்கள். இன்றைக்குப் பார்த்தால் கைத்தறிக்கு ஒரு அட்வைசரி கமிட்டி, அமைப்பாளரைப் போடுகிறீர்கள். சொஸைடிக்கு அமைப்பாளரைப் போடுகிறீர்கள், அப்படி இதற்கு இரண்டு அமைப்பாளர்களைப் போடுங்கள். நீங்கள் போடக்கூடாது என்று சொல்லமாட்டேன். உங்கள் கட்சிக்காரர்களையே போடுங்கள், ஏன் என்று கேட்டால்......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் கட்சியிலே தேர்தல் இருக்கிறதா இல்லையா என்பது பற்றி பில்லிலே பேசவேண்டுமா என்பதைப் பற்றி தலைவர் தீர்மானிக்க வேண்டும். அதற்கு நாங்கள் பதில் சொல்லப் போனால் விளைவுகள் சரியாக இருக்காது.



திரு. துரை முருகன்: ஒரு அமைப்பாளரைப் போடுவதாலே ஒன்றுமில்லை. உங்கள் கட்சிக்காரர்களைப் போடுங்கள் என்று திரு. சுந்தரராஜ் சொன்னார்கள். நான் அதிலே மாறுபட்ட கருத்து கொண்டவன் அல்ல. கட்சிக்காரர்கள் அல்லாமல் வேறு யாரைப் போடுவீர்கள், அந்தந்தக் கட்சிக்கு அவரவர்கள் தான் உண்மையாக இருப்பார்கள்- அவர்களைப் போடவேண்டும்....

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்வதற்கு இருக்கிறார் என்றாலும் தயவு செய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பேசினால் நல்லது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன்: முதலமைச்சர் அவர்களுக்கு நான் சொல்வது, ஒரு கட்சிக்காரர் தான் கட்சிக்கு லாயலாக இருப்பார், அவரைப் போடுவதிலே என்ன தவறு என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: கட்சிக்கு நம்பிக்கை உள்ளவர்களாகத் தேர்ந்தெடுத்து யாரையும் நியமிக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்குக் கிடையாது.

திரு. துரை முருகன்: அப்படியென்றால் கோ ஆப்டெக்ஸிலே போட்டு இருக்கிறீர்கள், யாரைப் போட்டிருக்கிறீர்கள்? ஆகவே கட்சிக்காரரைப் போடுவது தப்பு என்று நான் சொல்லவில்லை...

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, தகுதியின் அடிப்படையிலே தான் நாங்கள் நியமிக்கிறோம்.

திரு. துரை முருகன்: அறங்காவலருக்கு என்ன தகுதி அவர்கள் சொன்னார்கள், பக்திமானாக இருக்கவேண்டும் கொட்டை கட்டிக்கொண்டு பட்டை அடித்திருக்கிற எல்லோரும் பக்திமான் ஆகுமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன். பேரவைத், தலைவர் அவர்களே, ஒட்டுமொத்தமாக மத நம்பிக்கையுள்ளவர்களைப் புண்படுத்துவது நமக்கு நல்லதல்ல. இருந்தாலும் பட்டை அடிக்காதவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதைப் பற்றி அவர்களுக்குத் தெரியும்.

திரு. துரை முருகன். அதைத்தான் நான் சொல்கிறேன் பக்திமான்கள் எல்லோரும் யோக்கியர்களும் அல்ல. நாத்திகர்கள் எல்லாம் அயோக்கியர்களும் அல்ல. இதிலேயும் பக்தர்கள்

இருப்பார்கள், அதிலேயும் பக்தர்கள் இருப்பார்கள். ஆனால் நிர்வாகம் கோயிலிலே நடைபெறவேண்டுமென்ற அளவிலேதான் நம் எல்லோருக்கும் ஒட்டுமொத்தமான எண்ணம் இருக்கிறது. அந்த எண்ணத்திலே ஜனாதிபதி ஆட்சியிலே ஒரு ஆண்டு போய், அதற்கு பிறகு உங்கள் ஆட்சியிலே 3 ஆண்டுகள் போய் இன்னும் ஒரு ஆண்டுக்காலம் கேட்கிறீர்கள், அதுவும் போதாது என்று அடுத்த ஆண்டு என்று சொல்வீர்கள், இன்னும் சில குழுக்கள் அமைத்திருக்கிறோம் இன்னும் 5 ஆண்டுக்காலம் வேண்டுமென்று சொல்வீர்கள்.

[பிற்பகல் 1-40]

ஆக, பஞ்சபாண்டவர்கள் வனவாசம் போனபொழுது அஞ்ஞாத வாசம் என்று ஒரு வருஷம் இருந்த மாதிரி இருக்கிறது. என்னைப்பொறுத்தவரையில் நான் சொல்கிறேன், நீங்கள் இப்படியே நீடித்துக்கொண்டு போய் விடுகிறீர்கள். இந்த நாட்டிலே நாம் பேரறிஞர் அண்ணா தலைமையிலும், பெரியார் தலைமையிலும் வந்தவர்களாக இருந்தாலும், பக்திமான்கள், ஆஸ்திகப் பெருமக்களுடைய மனம் புண்படாத வகையில் கோயில்களிலே ஆறுகால பூஜை நைவேத்தியங்கள், திருவுலாக்கள், கும்பாபிஷேகங்கள். குடமுழுக்குகள், பக்திப் பிரவசனங்கள், பாராயணங்கள், தோத்திரங்கள் அஷ்டாவதனங்கள். கர்ம யோகங்கள் தத்துவங்கள் இவையெல்லாம் நாட்டிலே நடைபெற வேண்டாமா? அதற்கு வேண்டிய காரியங்களைச் செய்வதற்காகத்தான்......

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:—பேரவைத் தலைவரவர்களே, அஷ்டாவதானம் என்பது நியமங்களிலே ஒன்று அல்ல,

திரு. துரை முருகன்.—தலைவரவர்களே, ஏதோ ஒன்று அதிலேயும் பக்திமான்கள், அவர்களுக்கு இதெல்லாம் கிடையாதா? சாமியார்கள் சிலபேர் சிரசாசனம் செய்கிறார்கள். அஷ்டாவதானத்திலே இதுவும் ஒன்று சேர்ந்து போய் இருக்கலாம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:— பேரவைத் தலைவரவர்களே, அவர்கள் சொன்னதை மாற்றி, திருத்திக் கொள்வது நல்லது. அது குறிப்பிலே வராமல் இருந்தால்கூட நல்லது. மாமன்ற உறுப்பினர்கள் அஷ்டாவதானம்பற்றிக்கூடத் தெரியாமல் பேசுகிறார்கள் என்று மற்றவர்கள் நினைத்துவிடக் கூடாது.



மாண்புமிகு பேரவைத் தலைவர்.— அஷ்டாவதானம் என்பது வேறு. எட்டு பக்கங்களிலிருந்து கேள்விகள் கேட்க வைத்து, அந்த எட்டுக் கேள்விகளுக்கும் ஒரேடியாகப் பதில் சொல்லக்கூடிய ஆற்றல் மிக்கவருக்குத்தான் அஷ்டாவதானி என்று பெயர். ஆகவே, அஷ்டாவதானம் கோயிலில் செய்வது இல்லை; மற்றதெல்லாம் செய்வது.

திரு. துரை முருகன்.— தலைவரவர்களே எட்டுப் பக்கம் கேள்வி கேட்டு, நடுவிலே உட்கார்ந்து இருக்கிறவனுக்கு எல்லாம் வல்ல இறைவனுடைய திருஞானம் இருந்திருக்க வேண்டுமென்று சொல்கிறார்கள் அல்லவா? ஆகையினாலே சொல்கிறேனே தவிர வேறு அல்ல.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன். பேரவைத் தலைவர் அவர்களே, நேரத்தை வீணாக்க விரும்பவில்லை என்றாலும், மாமன்ற உறுப்பினரவர்கள் சாமர்த்தியமாக பதில் சொல்ல விரும்புகிறார். ஆனால் வெளியே தெரிந்தால் நல்லதில்லை.

திரு. துரை முருகன்.— அறநிலையத்தைப்பற்றிப் பேசி விட்டேன். கொஞ்சம் கோயில்களுக்கு அறங்காவலர்களாக ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் எப்படியோ இந்தக் கோவில்களுக்குப் பரம்பரை அல்லாத அறங்காவலர்களை நியமிக்கவேண்டும் அதோடு அரிசனங்களைப் போடுவதும் விட்டுப்போகாமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, ஓராண்டுக் காலத்திற்குள்ளாவது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன்.

*மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சபையின் முன்னாலே அறிமுகப் படுத்தப்பட்டிருக்கின்ற இந்த சட்டத் திருத்த முன்வடிவு இங்கே இவ்வளவு நேரம் விவாதத்திற்குரியதாகும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. காரணம் கடந்த பத்தாம்தேதியன்றுத் தான் இந்து சமய அறக்கட்டளைகளின் மானியக்கோரிக்கையின் மீது உறுப்பினர்கள் பேசினார்கள்; அதற்குப் பதில் அளித்திருக்கிறேன். அன்றைக்கு காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரவர்கள் இங்கே இல்லையோ என்னவோ தெரியவில்லை, நான் பதில் அளித்த விஷயத்தையே மீண்டும் அவர்கள் இன்றைக்கு எழுப்பியிருக்கின்றார்கள்.

1976-ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல்நாள் குடியரசுத் தலைவர், அன்றைக்கிருந்த அமைப்புகளைக் கலைத்து, மீண்டும் ஒரு ஆண்டுக்குள்ளே நியமனம் செய்யப்பட வேண்டுமென்று அறிவித்தபொழுது, 1977-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் தேதி வரையிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி இல்லை; குடியரசு,

தலைவரின் ஆட்சியே இருந்தும் நியமிக்கப்படவில்லை. ஆகவே அதற்குப் பிறகு முறையாக இரண்டு ஆண்டுகள் 1979-ஆம் ஆண்டு மே 31-ஆம் தேதி வரை. நீட்டிக்கப் பட்டது, அதற்குப் பிறகு நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்ததற்குப்பிறகுற ஏறத்தாழ 6,000 கோயில்களுக்குப் ,பரம்பரை முறை அற்ற அறங்காவலர்கள் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். முன்னாலே சொன்னதைப்போல 25,000 கோவில்களுக்கு நியமிக்கப்பட வேண்டும். அதற்காகத்தான் மீண்டும் ஒரு ஆண்டுக்கால நீட்டிப்பு கேட்கப்பட்டிருக்கிறது.

இந்த அறங்காவலர்களை நியமிப்பதில் நீங்கள் யாரை வேண்டுமானாலும்நியமியுங்கள்; எங்களுக்கு ஆட்சேபணை இல்லை என்று சொல்லிக்கொண்டே, காங்கிரஸ் உறுப்பினர், உங்கள் கட்சிக்காரர்களையே நியமித்துக் கொள்கிறீர்களே என்று சொன்னார்கள், ஆகவே, அதிலேயிருந்து–நீங்கள் யர்ரை வேண்டுமானாலும் நியமியுங்கள் என்று சொல்வதிலேயிருந்து எங்களையும் நியமிக்கலாமே என்கின்ற தொனி அதற்குள்ளே இருப்பதை என்னாலே புரிந்து கொள்ள முடிகிறது.

நான் அன்றைக்கே பதில் சொல்லியிருக்கிறேன். இந்த அரசைப் பொறுத்தவரையில், குறிப்பாக அறநிலையத் துறையில் அறங்காவலர்களாக நியமிப்பதற்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் எந்தக் கட்சிக்காரர்கள் என்பதை எண்ணிப் பா ப்பதில்லை; அது அளவுகோலாக வைத்துக்கொள்ளப்படுவது இல்லை. அவர்கள் எத்தகைய தகுதிவாய்ந்தவர்க்ள்: எவ்வளவு ஒழுங்காக இந்த அறநிலையத்துறையைக் காப்பாற்றுவார்கள்; இந்தச் சொத்துக்களைக் காப்பாற்றுவார்கள் என்பதுதான் நாங்கள் வைத்திருக்கின்ற அளவு கோல். அதன்படித்தான் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறது.

அதிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களும் இருக்கலாம்; காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களும் இருக்கலாம். காங்கிரஸ் கட்சிக்காரர்களையும் நியமித்திருக்கிறோம் என்று நான் சொன்ன பொழுது அன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. சுப்பிரமணியன் அவர்கள், காங்கிரஸ்காரர்கள் என்ன அப்படித் தள்ளி வைக்கப்பட்டவர்களா என்று கேட்டார்கள். இல்லை நீங்கள் ஆளுங்கட்சிக்காரர்களைப் போடுகிறீர்களே என்று சொல்லும்பொழுது ஆளுங்கட்சிக்காரர்கள் என்ன அப்படித் தள்ளி வைக்கப்பட்டவர்களா என்று நான் அப்படி எடுத்துக்கொள்ளவில்லை என்ற பதிலைச் சொன்னேன்.

ஒரு பட்டியல் தருகிறேன், சென்னையிலேயிருந்து. சென்னை கபாலீஸ்வரர் ஆலயத்திற்கு அறங்காவலர் குழுத்தலைவர் கட்சி சார்பற்றவர்; எந்தக் கட்சியையும் சாராதவர். பழனிகோவிலுக்கு நம்முடைய தமிழகத்திலே மிகப்பெரிய முதல்தர வருமானமுள்ள கோயிலின் அறங்காவலர் குழுத்தலைவராக டாக்டர் பட்டம் பெற்ற திருமதி ராதா தியாகராஜன் என்ற ஒரு பெண்மணி, முதன்

அரசினர் சட்ட முன் வடிவகள்



முறையாக நியமிக்கப்பட்டிருக்கிறார், கட்சி சார்பற்றவர். கோவை மாவட்டத்திலே இருக்கிற மருதமலை—பெரிய—வருவாயுள்ளது. முருகன் கோவிலுக்குப் பழுத்த காங்கிரஸ்காரர், திருப்பூர் பழனிச்சாமி கவுண்டர் அறங்காவலர் குழுத் தலைவர் இராமேஸ்வரத்திற்கு அறங்காவலர் குழுத் தலைவர் மறைந்த சேதுபதி இராமநாதபுரம் மன்னர் அவர்களுடைய துணைவியார். அவர் எந்தக் கட்சியும் அல்ல. இப்படியே நான் சொல்லிக் கொண்டே போகமுடியும். மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு அறங்காவலர் குழுத் தலைவர் அநேகமாக திருமயம் உறுப்பினர் திரு. சுந்தரராஜுக்கு மிக நெருங்கிய நண்பர்—திரு. வி. என். சிதம்பரம் அவர்கள். ஆகவே, தமிழகத்திலேயிருக்கிற மிகப் பெரிய கோவில்களுக்கு எப்படி நாங்கள் நியமித்திருக்கிறோம் என்பதிலேயிருந்து இந்த அறநிலையத் துறையை, இந்த அரசும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் எந்த அளவு கண்போல் காப்பாற்றி வருகிறார்கள் என்பதை திரு. துரைமுருகன் அவர்கள் ஏற்கனவே தெரிந்திருந்தால் அவர்கள் சொல்லவில்லை. ஆனாலும், காங்கிரஸ் கட்சி உறுப்பினர் நம்முடைய மாண்புமிகு சுந்தரராஜ் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். அதன்மூலம் இந்த நாடும் தெரிந்து கொள்வதற்காக இந்த விவரத்தை மீண்டும் ஒரு முறை ஒரு வார காலத்திற்குள்ளே தெரிவிக்க வாய்ப்பளித்ததற்காக நன்றி கூறி, இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : "தமிழ்நாடு. 1980 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2,3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு இந்து சமய—அறக் கட்டளைகள் (திருத்தம்—சிறப்பு விதித் துறைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 20/1980) நிறைவேற்றப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

இ. சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு 1980 [சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு (எண். 97/1980.)]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ''1980 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன் வடிவு* சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.17/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'' என்று மொழிகிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சித் தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை ஓராண்டு நீடித்து வைப்பதற்காக அமைச்சரவர்கள் இந்த பில்லைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால், அதற்கு முன்பிருந்த அமைச்சர் 2½ ஆண்டுக்காலமாக, இதைபோல் தள்ளி வைத்து, காலம் கடத்தி வந்தார்கள். அவராவது சில காரணங்களைச் சொன்னார். 'நான் ஆப்ஜக்ட்ஸ் அன்ட் ரீசன்சிலே' பார்க்கிறேன், காரணங்களே இலலை. முன்பு சில காரணங்கள் சொல்லப்பட்டன. என்ன காரணம்? இந்த தேதியில் 21 வயது நிரம்பப் பெற்றவர்களுக்கு வாய்ப்பளிக்க என்று ஒரு காரணம் சொல்லப்படும். அது மட்டுமல்லாமல், வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கு இவ்வளவு காலங்கள் ஆகும் என்று காரணம் சொல்லப்படும். ஆனால், அந்த இரண்டு காரணங்களுமே இல்லை. காரணம் ஜனவரி மாதம் புதிய லிஸ்ட் எடுக்கப்பட்டு, மார்ச் மாதத்திலே சட்டமன்றத் தேர்தலுக்காக வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டு, அந்தப் பட்டியல் இன்னும் இருக்கிறது. அது வட்ட வாரியாகத் தானிருக்கிறது. அமைச்சருக்கு, தெரியுமோ, தெரியாதோ, எனக்குத் தெரியாது. ஆனால், எங்களுக்குத் தெரியும். சென்னையிலேயிருக்கிற காரணத்தால், வட்டவாரியாக இருக்கிறது. ஆனால், இப்பொழுது சொல்லப்படுகின்ற அரசின் கருத்தாகவும், எதிர்த்தரப்பினருடைய கருத்தாகவும் இருக்கிற 18 வயது நிரம்பப்பெற்றுள்ளவருக்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டுமென்ற காரணம் சொல்லப்படுகிறதா என்றால், அதுவும் இல்லை. ஆக எந்தக் காரணமும் இல்லாமல், ஒரு அதிகாரிக்கு, பதவிக்குக் காலத்தை நீடித்துத் தருவதுதான் இந்த மசோதாவினுடைய கருத்தாக இருக்கிறது. இது அர்த்தமற்ற ஒன்றாகவும் இருக்கிறது. அதுவும் ஒரு பிள்ளையை ஒரு மாதிரியும் மற்றொரு பிள்ளையை வேறு ஒரு மாதிரியும் பார்ப்பதைப் போல். மதுரை மாநகராட்சிக்குத் தேர்தலை நடத்தி விட்டு அங்கே மேயரைப்பார்க்கிறோம். ஆனால், இங்கே ஏனோ பார்க்கமுடியவில்லை.

* 1980 ஜூன் 26 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



[பிற்பகல் 1.50]

அது மட்டுமல்ல, சென்னையில் எங்கு பார்த்தாலும் ரோடுகள் எல்லாம் பள்ளாங்குழி விளையாடுவதைப்போல இருக்கிறது. விளக்குக் கம்பங்கள் இருக்கின்றன. ஆனால் விளக்குகள் எரிவது இல்லை. அனைவரும் அவதிப்படுகின்ற நிலை இருக்கிறது. என் தொகுதியில் பல பகுதிகளில் இந்த பப்ளிக் கன்வீனியன்ஸ் என்று கழிவிடங்கள் இருக்கின்றன. நான் மெத்த வருத்தத்தோடு சொல்லிக் கொள்கிறேன். அவைகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. எனக்கு வருகிற டெலிபோன் பில்களில் 75 கார்ப்பரேஷனுக்குப் பண்ணுகிற போன்களினால்தான். பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பில்லின் மீது பேசுவதன் மூலமாக பொது மக்கள் எங்களை எல்லாம் மதிக்கும்படி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு எம்.எல்.ஏ.க்களுக்கும், கவுன்சிலர்களுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. எங்களை சட்டமன்ற உறுப்பினர்களாக மதிக்கவிடுங்கள். அப்படிப்பட்ட அவல நிலை எங்களுக்கு இருக்கிறது. என் தொகுதியிலே உள்ள மீனாட்சி அம்மன் பேட்டை, ஆட்டுத் தொட்டி பகுதி, விநாயகபுரம் போன்ற பகுதிகளிலே எல்லாம் கழிப்பிடங்கள் மிகவும் மோசமாக இருக்கினறன. எனவே எங்கோ போகவேண்டிய கழிவுநீர்கள் இங்கே வருகின்றன. முதலில் விநாயகபுரம் பகுதியிலே உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தேர்தலைப்பற்றி பேசுங்கள். கார்ப்பரேஷன் பற்றி பூராவும் பேசவேண்டும் என்றால் இந்த நேரம் போதாது. இதற்காக முழு விவாதம் தேவை.

திரு. ப. பொன்னுரங்கம் : தேர்தலை ஒட்டித்தான் பேசுகிறேன்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது ரோட்டை பற்றிச் சொன்னீர்கள், கழிப்பிடத்தைப் பற்றிச் சொன்னீர்கள் பள்ளிக்கூடத்தைப் பற்றிச் சொன்னீர்கள். அதற்கப்புறம் டீட்டெயிலாகப் போக ஆரம்பித்தால் நேரமே இருக்காது. இப்போதே 1 மணி ஆகிவிட்டது. உறுப்பினர்களுக்குப் பசி எடுக்கும் என்று நினைக்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட அவல நிலை இருக்கிறது. கழிப்பிடத்திலே இருந்து புழுக்கள் வீட்டுக்குள் வருகின்றன. பட்டில் வந்துவிடுகின்றன. இதை அதிகாரிகள் பார்வையிட வேண்டும் என்று சொல்லுகிறேன். விநாயகபுரத்தில் இருக்கும் கழிப்பிடத்தை எடுத்து விடச் சொல்லி இருக்கிறேன். அப்படிப்பட்ட நிலை இருக்கிறது.

நான் கடந்த ஆண்டு ஒரு நாள் இன்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் லெட்டர்ஸ் டு தி எடிட்டர் காலத்தில் ஒரு நண்பர் எழுதிய கடிதத்தைப் படிக்க நேர்ந்தது; அதில் அவர்கள் அழகாகக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அண்ணா நகரிலே ஒரு அமைச்சர் குடிபோனாராம். அவர் அங்கே போவதற்கு முனபு அந்த பகுதியில் உள்ள ரோடுகள் பள்ளாங்குழி ஆடுவதைப்போல் இருந்ததாம். விளக்கு வசதி கிடையாது, பிளாட்பாரமே கிடையாது என்றும், ஆனால் அமைச்சர் அவர்கள் வந்த பிறகு நல்ல ரோடு வசதி கிடைத்தது என்று அந்த நண்பர் எழுதியிருக்கிறார். ஆகவே ஒவ்வொரு அமைச்சரும் ஒவ்வொரு தொகுதியிலே குடியிருந்தால் நல்லது என்ற கருத்தை கூட சொல்லியிருக்கிறார்கள். என்னுடைய வேண்டுகோள் எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்களே என் தொகுதியில் குடிவரவேண்டும். அப்போதுதான் நல்ல வசதிகன் எல்லாம் வரும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் வசிக்கின்ற பகுதிக்கு போவது என்றால் மிக ஆபத்தாகத்தான் போய்ச்சேர வேண்டும். பல ஆண்டுகளாக அந்தப் பாலம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தமிழ்நாட்டிலே என்னுடைய தெர்குதிதான் முதல் தொகுதி. அந்தத் தொகுதி நன்றாக இருக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்திலேதான் சொல்லுகிறேன். அப்படிப்பட்ட அவல நிலை இருக்கிற காரணத்தால், அருள் கூர்ந்து தேர்தலை நடத்துங்கள். நீங்கள் காரணம் சொல்லாமல் தனி அதிகாரிக்கு நீட்டிப்புத் தருகிறீர்கள். காரணம் சொல்லியே தேர்தலைத் தள்ளி வைத்தீர்கள். காரணம் சொல்லாமல் இருக்கும்போது தாராளமாக தள்ளி வைக்கலாம் என்ற அச்சம் இருக்கிறது. ஆகவே அருள் கூர்ந்து தந்திருக்கிற வாக்குறுதிகளை நிறைவேற்றுகின்ற அளவுக்கு இந்த முறையாவது தேர்தலை குறிப்பிட்ட காலத்திலே விரைவாக, நடத்தி இதற்கு விமோசனம் அளியுங்கள் என்று மெத்தப் பணிவோடு கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

*திரு. எல். இளையபெருமாள் : தலைவர் அவர்களே, இன்று எடுத்துக்கொண்டிருக்கிற விவாதத்தில் மாநகராட்சி 1919 ஆம் ஆண்டு சென்னையிலே ஏற்பட்டதாக இருக்கிறது. ஆனால் சுதந்திரம் பெறுவதற்கு முன்பு கூட, இந்த நாட்டில் கலாசாரம், மதம், இனம் மொழிகளை தெரிந்து, தாழ்த்தப்பட்ட சமுதாயத்து மக்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுப்பதற்காக, அவர்களும் ஓராண்டு காலம் மேயராக வரலாம் என்ற ஒரு பகுதியை உண்டாக்கினார்கள். ஆனால் சுதந்திரம் பெற்ற பிறகு கார்ப்பரேஷன் வந்து இந்த நிலைமை நமக்குக் கொடுக்கப்பட்டது



சுதந்திரத்திற்குப் பிறகும் பகுத்தறிவாளர்களாகிய நாம் அந்தக் கலாசாரத்தை நினைத்துச் செய்யவில்லை என்ற நிலையில் மதுரை இதிலே சம்பந்தப்படாவிட்டாலும் கார்ப்பரேஷன் என்ற நிலையிலேயே அது நின்று விட்டது. இருப்பினும் இங்கே நான் முக்கியமாக சொல்ல வேண்டியது, 21 வயது உள்ளவர்களுக்கு நாம் ஓட்டுரிமை கொடுத்திருக்கிறோம். பிறகு அரசு இப்போது 18 வயது உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கருத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் தேர்தல்களை இன்னும் 6 மாத காலத்தில் நடத்துவோம் என்று முதலமைச்சர் அவர்கள் சில தினங்களுக்கு முன்பாக நம்பிக்கை தெரிவித்தார்கள். ஆனால் இப்போது ஓராண்டு காலம் மீண்டும் கேட்கிறபோது முன்பே 13 ஆண்டு காலம் நாம் சொன்னது போல, 12 ஆண்டுகள் முடிந்து ஓராண்டு வனவாசம் முடிந்து இனிமேலாவது நடக்கும் என்று சொல்லுகின்ற போது, அதிலேயும் சந்தேகம் வருகின்ற அளவுக்கு நாம் பாரதக் கதையை நினைக்கின்ற நிலைமைக்குக் கொண்டு போய் விடாமல் நிச்சயமாக நமது முதலமைச்சர் அவர்கள் ஒரு 6 மாத காலத்திற்குள் அது எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் அதைச் செய்யவேண்டும்.

13 ஆண்டுகள் முடிந்த பிறகு, இன்னும் ஓராண்டு காலத்திற்கு இருப்பதற்கு நான் ஆட்சேபிக்கவில்லை. எங்களுக்குத் தொகுதிக்குப் போனால் மிகவும் தொந்தரவாக இருக்கிறது ஒரு தொகுதியில் சிக்கிக் கொண்டு இருக்கிற காரணத்தால், அந்தத் தொகுதியில் வருகிற எல்லா கார்ப்பரேஷன் டிவிஷன்களில் நடக்கும் அத்தனைக்கும் நாம்தான் செல்ல வேண்டியிருக்கிறது. மாநகராட்சி செய்யத் தவறுகிற காரியங்களுக்குக் கூட நாம் பதில் சொல்ல வேண்டும் என்பது கஷ்டமான காரியமாக இருக்கிறது.

இன்றைக்கு இருக்கும் நிதிநிலைமையில் தொகுதி வாழ் மக்களின் நிலைமை நம்முடைய முதலமைச்சருக்கு என்னை விட நன்றாகத் தெரியும். ஆகவே, அதை இங்கே விவரிப்பது சரியல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் 18 வயது என்று வாக்களிக்கும் உரிமை பெறுவதற்கு வைத்து இருப்பதை எந்த வகையில் நிறைவேற்றப் போகிறீர்கள். 18 வயது ஓட்டர் லிஸ்ட் எப்படி தயாரிக்கப் போகிறீர்கள் என்பது எனக்கு சந்தேசமாக இருக்கிறது. 21 வயது வாக்காளர் பட்டியலை வைத்தே இந்தத் தேர்தலை நடத்தப்போகிறீர்களா என்பதும் எனக்குத் தெரியவில்லை. இந்தச் சந்தேகத்தைப் போக்கினால் நல்லது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கொடுக்கும் சலுகைகள் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கும் கொடுக்கவேண்டும். இந்த நகர மக்கள் 13 ஆண்டு காலம் நரக வேதனை அனுபவித்து விட்டார்கள். இனி பொறுக்க

மாட்டார்கள். நிச்சயமாக அவர்கள் பொறுக்கமாட்டார்கள். ஆகவே, குறிப்பிட்டபடி இந்தத் தேர்தலை நடத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

*திரு என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் விவாதத்தில் இருக்கிற சட்டமுன் வடிவின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன் 1981 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் வரையிலும் மாநகராட்சி மன்றத் தேர்தலை தள்ளி வைக்க அனுமதி கேட்கப்பட்டு இருக்கிறது. இதை அதிக பட்ச காலமாக அரசு கருதி விரைவில் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அமைப்புகள் இல்லாத நேரத்தில் சாதாரணமாக தவறுகள் நடைபெறுவதற்கு ஏராளமாக இடம் இருக்கிறது. அதற்கு ஒரு சிறிய உதாரணத்தைக் கொடுக்க விரும்புகிறேன்.

சென்னையில் ஆயிரம் விளக்குத் தொகுதியில் ஆசான் மெமோரியல் மேல் நிலைப் பள்ளி என்று ஒன்று இருக்கிறது. அந்தப் பள்ளிக்கு விளையாட்டுத் திடல் வேண்டும் என்று பல மாதங்களுக்கு முன்பே அந்தப் பள்ளியைச் சேர்ந்த நிர்வாகிகள் அந்தப் பள்ளிக்குப் பக்கத்திலே இருக்கிற காலியாக உள்ள நிலத்தை கொடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விண்ணப்பித்து இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதியின் பேரில் ஒரு லட்சம் ரூபாய் கட்டியுள்ளார்கள். அதற்கு நில ஆர்ஜித நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. ஆனால் அந்த இடத்தை ஒரு முக்கியமான பிரமுகர் கட்டடம் எழுப்பக் கேட்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர், தேர்தலைப் பற்றி மட்டும் பேசுங்கள். கட்டடம், ரோடு என்று போனால், விவாதம் வளர்ந்து கொண்டே போகும்.

திரு. என். வரதராஜன் : திரு எம்.ஏ.எம் ராமசாமி என்பவர் அந்த இடத்தில் அனுமதியின்றி கட்டடம் கட்டி இருக்கிறார். அந்தப் பெரிய கட்டடம் கட்டுவதால், பள்ளியில் இருந்து போகிற சாக்கடை நீர் பள்ளி அமைப்புகளை சுற்றுப்புற சூழ்நிலையை பாதிக்கிற அளவிற்கு வருகிறது: இப்படிப்பட்ட முறைகேடுகள் ஜனநாயக அமைப்பு இல்லாத காரணத்தால் நடக்கின்றன. ஆகவே, அரசாங்கம் இதிலே துரிதமாக கவனம் செலுத்தி தேர்தல் நடத்தவும், நான் சொன்ன பிரச்னையிலும் கவனம் செலுத்தி அந்தப் பள்ளிக்கு உதவவும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.



(பிற்பகல் 2.00)

திரு. பொ. உத்திராபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த மசோதாவில் மேலும் ஓராண்டு காலத்திற்கு சென்னை மாநகராட்சித் தேர்தலை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஒரு வருஷம் நீட்டிப்பதுபற்றி பிரச்சனை இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் இங்கே இருப்பதால் ஒரு விஷயத்தை அவருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

சட்டசபை கலைக்கப்படுவதற்கு முன்னால், ஆரம்பத்தில் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது நமது முதலமைச்சர் ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதிகாரிகள் எல்லாம சுயேச்சையாக இயங்க வேண்டும்; சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும், யாராக இருந்தாலும் தலையிடக் கூடாது என்று வேண்டுகோள் விடுத்தார்.

ஆனால் இன்றைக்கு நிலைமை என்னவென்றால், இப்போது பஞ்சாயத்து, நகராட்சி எல்லாம் கலைக்கப்பட்ட பிறகு சட்டமன்ற உறுபுபினர்கள் போனாலும்கூட, நாங்கள் போய் ரோடு சரியாக இல்லை, மின்சார விளக்கு எரியவில்லை, குடிதண்ணீர் சரியாக இல்லை என்று சொன்னாலும்கூட, அதிகாரிகள் கவனிப்பது இல்லை. நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, தேர்தல் விரைவில் வரவேண்டும்; அதுவரையில் சட்டமன்ற உறுப்பினர்கள் பி.டி,ஓ., ஆர்.டி.ஓ., மற்றுள்ள அதிகாரிகளிடம் குறைகளை எடுத்துச்சொன்னால் அதைப் போக்குவதற்கு அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்; அதற்கு முதலமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சரவர்களும் ஏற்பாடுசெய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சௌரிராஜன் : தலைவரவர்களே, மாநகராட்சித் தேர்தலை ஓராண்டு காலத்திற்கு ஒத்தி வைப்பதற்காக இந்தச் சட்டத்தை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். சென்னை மாநகராட்சி சட்டத்தின்படி அவர்களுடைய விதிகளுக்கு உட்பட்டு தேர்தலை நடத்தினால் நிச்சயமாக சென்னை மாநகராட்சிக்கு ஒரு நகரத் தந்தை வருவார். அந்த நகரத் தந்தையாகிற வாய்ப்பு குறிப்பாக மைனாரிட்டி கம்யூனிட்டீஸ் என்று சொல்லக்கூடிய சிறுபான்மை மக்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை வரிசைப்படி வருகிறது. கடந்த 1973–ம் ஆண்டுக்கு பிறகு சென்னை மாநகரில் நகரத் தந்தை இல்லாத காரணத்தால், முதலமைச்சருக்கு ஒப்பான பதவி அது 'பாரினர்ஸ்' யாராவது வந்தால் அவர்தான் வரவேற்பார்,

"The first man to invite them into the City of Madras is the Mayor of Madras".

அந்தப் பதவி இந்த சென்னை நகர மக்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக சிறுபான்மை சமுதாயத்திற்கு மரியாதை இல்லாமல் போய்விட்டது என்று குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, 6 மாதத்திற்குள்ளாக இந்த மாநகராட்சித் தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு அ. ரகுமான்கான் : மாண்புமிகு தலைவரவர்களே, சென்னை மாநகராட்சி திருத்தச் சட்டம் 1980 என்ற இந்தச் சட்டத்தின்மீது நான் சார்ந்திருக்கிற கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். நமக்கு எல்லாம் பசியாக இருக்கிறது, உண்மை. ஆனால் நம்முடைய பசியைக் காட்டிலும் மக்கள் பசி முக்கியம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பசி இருக்கட்டும்; பிரச்சனைக்கு வாருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : சென்னை மாநகராட்சித் தேர்தலை நடத்துவதற்கான காலக்கெடுவை 1980 மே 31-ந்தேதியிலிருந்து மேலும் ஓராண்டு நீட்டிப்பதற்காக இந்தத் திருத்தச்சட்டம் வந்திருக்கிறது. சென்னை மாநகராட்சிக்கு உடனே தேர்தலை நடத்தியாக வேண்டும் என்பதிலே இங்கே இருக்கக் கூடிய யாருக்கும் மாறுபட்ட கருத்தில்லை, ஆனால் நான் சொல்ல விரும்புவது இந்த மாநகராட்சித் தேர்தலை நடத்தாமல் தொடர்ந்து நீட்டித்துக்கொண்டு வருவதற்கு சொல்லப்படுகிற காரணம் வேடிக்கையாக இருக்கிறது.

ஒன்றை மட்டும் இங்கே கோடிட்டு காட்ட விரும்புகிறேன். நம்முடைய அருமை நண்பர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் சொன்னதைப்போல சென்னை மாநகராட்சித் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு முதலில் சொன்ன காரணம் 'மஸ்டர் ரோல்' வழக்கு இருக்கிறது என்பது. வழக்கு முடிந்தால்தான் தேர்தலை நடத்த முடியும் என்று சொன்னார்கள். அடுத்து, 21 வயது அடைந்தவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்க்க வேண்டும்; அதற்கு காலதாமதம் ஆகும் ஆகவே தேர்தல் நடத்தவில்லை என்று சொன்னார்கள். அதற்கு அடுத்து, மாநகராட்சி எல்லைகளை எல்லாம் விரிவுபடுத்தி, அந்தப் பகுதிகளையும் இணைத்து கணக்கு எடுக்க வேண்டும்; ஆகவே காலதாமதம் ஆகும் என்று சொன்னார்கள்.

இப்போதுகூட நீங்கள் ஒரு காரணத்தைச் சொல்லியிருக்கலாம். இந்தத் திருத்தச் சட்டத்திற்கு 'ஆப்ஜெக்ட்ஸ் ஆண்ட் ரீசன்ஸ்'-ல் எந்தக் காரணமும் சொல்லப்படவில்லை. ஆனால் ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. ''சென்ற எனது உரையில் குறிப்பிட்டுள்ளபடி, 18 வயது வந்தோர் அனைவரும் உள்ளாட்சி நிறுவனத் தேர்தல்களில் வாக்களிக்க வகை செய்வதற்கான சட்டத் திருத்தம் இந்தக் கூட்டத் தொடரில் அவையின் முன் கொண்டு வரப்படும். இதனையொட்டி புதிய வாக்காளர் பட்டியல்கள் தயாரித்து, அவற்றின் அடிப்படையில் ஆறு மாதங்களுக்குள் எல்லா ஊராட்சி நிறுவனங்களுக்கும், நகராட்சி, மாநகராட்சிகளுக்கும் தேர்தல் நடத்த அரசு முடிவு செய்துள்ளது'' என்று ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். ஆகவேதான் இன்னும் 6 மாதத்திற்கு தள்ளி வைத்திருக்கிறோம் என்ற ஒரு காரணத்தை 'ஆப்ஜெக்ட்ஸ் அண்ட் ரீசன்ஸ்' சில் சொல்லியிருக்கலாம்; ஆனால் சொல்லப்படவில்லை.



குறிப்பாக 18 வயது அடைந்தவர்களுக்கு வாக்குரிமைத் தரப்பட வேண்டுமென்ற கருத்து சொல்லப்படுகிறது. அது வரவேற்கத்தக்கதுதான். இளமை ஊஞ்சலாடுகின்ற இளைஞர்களுக்குக்கூட அந்த வாய்ப்பைக் கொடுக்கலாம், வயது வரம்பை நிர்ணயிப்பதிலே சில நாட்களுக்கு முன்னாள் சுப்ரீம் கோர்ட் ஒரு தீர்ப்பு வழங்கியிருக்கிறது. யார் மேஜர், யார் மைனர் என்று சொல்லும் போது வயதை வைத்து மேஜர் மைனர் என்று முடிவு செய்வது சரியல்ல; தான் செய்யக்கூடிய காரியம் சரியா, தப்பா என்று தெரிந்து கொள்ளக்கூடிய திறன் உள்ளவர்களை மேஜராக ஏற்றுக்கொள்ளலாம்; இதுதான் மேஜருக்கு டெஃபனிஷன்; சுப்ரீம் கோர்ட் கொடுத்திருக்கிறது. வயது இருபத்தி ஒன்றா, பதினெட்டா அல்லது பதினாறா என்பதல்ல என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருக்கிறது, இதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம்.

கேரளாவிலே கூட, மேற்கு வங்காளத்திலே கூட 18 வயது அடைந்தவர்களுக்கெல்லாம் வாக்குரிமை தந்து தேர்தல்கள் எல்லாம் கூட அங்கே நடந்து முடிந்திருக்கின்றன. ஆகவே அதை வரவேற்கவே செய்கிறேன், இந்த நேரத்திலே ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். அதாவது வாக்காளர் பட்டியல்களைத் தயாரிக்கின்றபோது பல தவறுகள் வருகின்றன. சட்டமன்றத் தேர்தலைப் பொறுத்தவரையில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கின்றபோது பல தவறுகள் வருகின்றன. என்னுடைய தொகுதியிலே நடந்த ஒன்றைச் சொல்ல வேண்டி இருக்கிறது. வாக்காளர் பட்டியலில் * * என்பதற்குப் பதிலாக * * என்று போடப்பட்டிருக்கின்றது. இவ்வாறு போடப்பட்டிருப்பது குறித்து மான நஷ்ட வழக்கு கூட போடலாம். அந்த அதிகாரி எவ்வளவு பெரிய தவறைச் செய்திருக்கிறார்கள்? ஆக இப்படிப்பட்ட குறைகளைக் கொண்ட வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே 18 வயது என்று ஆக்குகின்றபோது இதுபோன்ற குறைகள் வராமல் பார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்களுடைய பாடல் ஒன்றை ஒரு சினிமாப்படத்திலே பாடியிருக்கிறார்.

---

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாநகராட்சித் தேர்
தலிலே இருந்து பட்டுக்கோட்டைக்கு ஏன் போகிறீர்கள்?

(கூச்சல், குழப்பம்)

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, மாண்புமிகு
உறுப்பினர் என்ன சொல்ல வருகிறார் என்பதைப் பார்க்க
வேண்டும். அதிலே தப்பாக இருந்தால் தாங்கள் நடவடிக்கை
எடுக்கலாம். அல்லது முதலமைச்சரவர்களும் இங்கே இருக்
கிறார்கள். ஆகவே அவர்கள் பதில் சொல்வதற்கு வாய்ப்பு
இருக்கின்றது. ஆகவே அவர் சொல்வதைத் தப்பா சரியா
என்று..............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் நல்லதைத்
தான் சொல்கிறீர்கள். யாரும் தப்பாகச் சொல்லவில்லை.

(கூச்சல், குழப்பம்)

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, பட்டுக்
கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுடைய பாட்டை
நம்முடைய முதல்வர் அவர்கள் பாடி இருக்கிறார். அது ஒரு
நல்ல பாட்டு, ஒரு நல்ல கருத்தைத்தான் சொல்லி இருக்
கிறார். அதாவது சின்னஞ்சிறு கைகளை நம்பி, ஒரு சரித்திரம்
இருக்குது தம்பி என்று...........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர
வர்களே, தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த
சட்ட முன்வடிவிலே என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அதற்
குள்ளே மட்டும் நின்று பேசினால் நன்றாக இருக்கும்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, மனம் புண்பட
வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. இளைஞர்கள்
இந்தக் கட்சிக்கு தேவை என்பதை வலியுறுத்துவதற்காகத்தான்
சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சர்வ கட்சியினரும்
கூடித்தான் 18 வயது என்று முடிவு செய்வது என்று பேசி இருக்
கிறார்கள். ஆகவே அதைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தால்
எப்படி பொருத்தமுடையதாக இருக்கும். தேர்தல் ஏன்
நடத்தவேண்டும் என்பது பற்றி மட்டும் பேசுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நான் நல்ல
கருத்தைத்தான் சொன்னேன். அடுத்து இப்போது எதற்காகத்
தேர்தல் அவசியம் நடைபெற வேண்டும் என்று சொன்னால் தனி
அதிகாரிகளுடைய ஆதிக்கம் அதிகமாகி வருகின்றது
மாநகராட்சி பணியாளர்களைப் பொறுத்தவரையில் 10 ஆயிரம்



ரூபாய் என்ற குடும்பநலத்திட்டம் எங்களுடைய கலைஞர் முதல்வராக இருந்தபோது கொண்டுவரப்பட்டது. தொழிலாளர் ஒருவர் இறந்துபோனால் 10 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட வேண்டும் என்ற திட்டம் இன்றைக்கு அமலில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வதற்கும் தேர்தலை 6 மாதத்திலே வைக்க வேண்டும் என்பதற்கும் சம்பந்தம் இல்லை ஆகவே தேர்தலை எதற்காக உடனடியாக வைக்க வேண்டும் என்பதை மட்டும் வலியுறுத்திச் சொல்லுங்கள்.

திரு. துரை முருகன் : தலைவரவர்களே, திரு. ரகுமான்கான் அவர்கள் பேசுவது தவறாக இருந்தால் நீங்கள் சபை நடவடிக்கை குறிப்பிலே இருந்து எடுத்துவிடுங்கள். ஆனால்......

(கூச்சல், குழப்பம்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாநகராட்சி பில் சம்பந்தமாகத்தான் பேசவேண்டும். மற்றவைகளைப் பேச வேண்டிய அவசியம் இல்லை.

(பிற்பகல் 2.10)

திரு. துரை முருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நாள் இந்த அவையில் குறிப்பிட்டுச் சொன்னார்கள் இந்த அவையை இடையூறு இல்லாமல் நடத்துவதற்கு ஆளும் கட்சி, எதிர்க்கட்சி ஆகிய இரண்டு தரப்பினருக்கும் சமமான பொறுப்பு இருந்தாலும் ஆளும் கட்சியிலே உள்ளவர்களுக்கு அதிகமான பொறுப்பு உண்டு என்று சொன்னார்கள், ஆகையினால் எதிர்க் கட்சியாக இருந்தாலும், ஆளுங் கட்சியாக இருந்தாலும்....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையை நடத்துவதிலே முழு பொறுப்பும் தலைவராக இருக்கக்கூடிய தங்களையேச் சார்ந்தது. நீங்கள் யாரை பெயர் சொல்லி அழைக்கிறீர்களோ, அவர்கள் தான் பேச வேண்டும். ஒரு உறுப்பினர் பேசுவதிலிருந்து, அவரை அமர்த்தவோ, அல்லது அந்த உரையின் மீது முடிவு எடுக்கவோ தங்களுக்கு மட்டும் தான் முழு உரிமையும் உண்டு. உறுப்பினர்களை பேசச் சொல்வதும், உட்காரச் சொல்வதும் இங்கே நீங்கள் ஒருவராகத்தான் இருக்க முடியும். ஆகவே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் எந்த உறுப்பினரையும் பேச வேண்டும் என்று வலியுறுத்துவதும் கூடாது: அதேப்போல பேச வேண்டாம் என்று மற்றவர்கள் சொல்வதும் கூடாது. உறிப்பினர் அவர்களின் பேச்சை கவனித்து முடிவு எடுக்க வேண்டிய முழு பொறுப்பும் தலைவரின் கையில்தான் இருக்கிறது.

ஆகவே இதில் மற்றவர்கள் தலையிட வேண்டாம். ஆளும் கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, எதிர்க்கட்சி உறுப்பினர்களாக இருந்தாலும் சரி, அவையை நடத்திக் கொண்டு போவதில் அனைவருக்கும் பொறுப்பு உண்டு. ஆளும் கட்சிக்கு அதிகமாகவே உண்டு. இதை நான் அன்றும் சொன்னேன். இன்றும் சொல்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சித் தேர்தல் ஏன் விரைவில் நடத்தப் பெற வேண்டும் என்பதற்கான ஆதாரங்களைத்தான் நான் சுருக்கமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறேனே தவிர சம்பந்தமற்ற முறையில் எதுவும் பேசிக் கொண்டிருக்கவில்லை என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இங்கே உள்ள எல்லா உறுப்பினர்களும் எந்தப் பொருளைப் பற்றியும் மணிக்கணக் காகவும் பேசமுடியும், சுருக்கமாகவும் பேசமுடியும். அத்தகைய ஆற்றல் வாய்ந்தவர்கள்தான். ஆனாலும் மிகச் சுருக்கமாக பேச வேண்டிய நேரம் இது என்றுதான் சொல்கிறேன். அதனால் தான் நீங்கள் பேச அனுமதி கேட்டபோதே சுருக்கமாகப் பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டு அனுமதியளித்தேன்.

திரு. அ. ரகுமான்கான் : அதைப்போலவே இன்றைக்கு என்னுடைய தொகுதியிலே பல்வேறு பிரச்சினைகள் எல்லாம் இருக்கின்றன. அங்கே சாக்கடைகள் தேங்கிக் கிடக்கின்றன. தெருக்களில் அவைகள் பெருக்கெடுத்தோடுகின்றன, சாலைகள் சரியாக இல்லை, தெருவிளக்குகள் எந்தத் தெருவிலும் எரிவது இல்லை, குடிதண்ணீர் வசதிகள் இல்லை. நான் கடந்த சட்ட மன்றக் கூட்டத் தொடரிலே போகிறபோது கூடச் சொன்னேன் 'எதிர்க்கட்சியிலே இருக்கிற நாங்கள் மருமகள்கள் போலவும், ஆளும் கட்சியிலே இருக்கிற முதல்வர் அவர்கள் மாமியார் போலவும் இருக்கிறார்கள். அவர்கள் கொடுமைக்கார மாமியாராக இல்லாமல் நல்ல முறையில் மருமகள்களை பாதுகாக்கிற மாமியாராக இருக்க வேண்டும்'' என்று சொன்னேன்.

அதுபோலவே. இப்போதும் சொல்கிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தொகுதிதானே என்று பாராபட்சம் காட்டாமல் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தொகுதிகளுக்கும் மக்கள் பிரச்னைகளை தீர்த்து வைக்க முயல வேண்டும் என்று அவர்களை கேட்டுக் கோள்கிறேன். நான் என்னுடைய தொகுதியில் கேட்ட இந்தப் பணிகள் நடைபெறவேண்டும் என்று சொன்னால், அதற்கு மாநகராட்சித் தேர்தல் விரைவிலேயே நல்ல முறையில் வந்தால்தான் சீராக நடைபெறும் என்பதற்காகத்தான் இதையும் சால்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து சென்னை நகரிலே வியாசர்பாடியிலே ஒரு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதிலே கலந்துக் கொண்டிருக்கிறார்கள். நமது மாண்புமிகு அமைச்சர் குழந்தைவேலு அவர்களும் கலந்து கொண்டிருக்கிறார். அது மாநகராட்சி ஏற்பாடு செய்திருந்த விழா. அந்த விழாவிலே அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரான திரு. பாலன் அவர்கள் அழைக்கப்பெறவில்லை. இதுமாதிரியே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. நான் முன்னமேயே இந்த பிரச்சினையைப் பற்றி இந்த அவையில் சொல்லியிருக்கிறேன்...

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பாலன் அவர்கள் ஏற்கெனவே எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அவருடைய தொகுதியிலே நடைபெறுகிற விழாவிலே, அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கலந்துக் கொள்வது தான் முறை என்று சொல்லி சென்னை மாநகராட்சி தனி அதிகாரிக்கு தெரிவித்தோம். அவரும் அதை உணர்ந்து வருத்தம் தெரிவித்து திரு. பாலன் அவர்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார். இனி அந்த மாதிரி தவறுகள் நடைபெறாது என்றும் எடுத்து எழுதியிருக்கிறார்.

அதனால் எந்தத் தொகுதியானாலும் அரசாங்கத்தின் சார்பாக எந்த விழா நடைபெற்றாலும், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களை கண்டிப்பாக அழைக்க வேண்டும் என்று எல்லா அலுவலர்களுக்கும், மாநகராட்சி தனி அதிகாரிக்கும் தெரிவிக்கப் பெற்றிருக்கிறது. மாநகராட்சியின் தனி அதிகாரி அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார். ஆகவே இப்போது எழுப்பப்பெற்ற பிரச்னைக்கு ஏற்கெனவே தீர்வு கண்டாகிவிட்டது என்று சொல்லிக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர வர்களே, இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக எதிர்க் கட்சி வரிசையிலே உள்ள திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் பல்வேறு கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள். அவர் பேசுகிற நேரத்தில் வாக்காளர் பட்டியல் * * என்ற பெயர் * * என்று மாறிவிட்டது என்று கோடிட்டு குறிப்பிட்டுச்சொன்னார்கள். நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்வது, * * என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. (கூச்சல்—குழப்பம்)

திரு. வி. கிருஷ்ண மூர்த்தி : Sir, I am raising a point of order I cannot allow this to go on. (கூச்சல்—குழப்பம்)

---

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : பேரவைத் தலைவரவர்களே, இதைப்பற்றி தங்கள் முடிவு என்னவோ அதை வெளியிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : * * என்ற வார்த்தைகள் தேவையில்லை. அமைச்சர் சொன்னதையும் உறுப்பினர் அவர்கள் சொன்னதையும் சேர்த்து எடுத்து விட வேண்டும் என்று உத்தர விடுகிறேன்.

<u>திரு. அ. ரகுமான்கான்</u> : அது வாக்காளர் பட்டியலில் இருக்கிறது. அதை எக்ஸ்பஞ்ச் செய்யலாமா? (கூச்சல்— குழப்பம்)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வாக்காளர் பட்டியலில் ப்ரின்டேர்ஸ் டெவில் என்பது ரெம்ப சாதாரண விஷயம். அதை ஒரு பெரிய பிரச்சினையாக ஆக்கி இருக்கவேண்டியதில்லை. அது மத சம்பந்தமான ஒருவர் பெயர். அது தப்பாக அச்சாகி யிருக்கிறது. தப்பை சுட்டிக்காட்ட வேண்டியதுதான். ஆனால் அந்த வார்த்தையை வைத்து 'பன்' செய்வது ஒரு மதத்தினரைப் புண்படுத்தும் என்று நான் நினைக்கிறேன்.

<u>திரு. துரை முருகன்</u> : திரு. ரகுமான்கான் சொன்னது தவறு என்று பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னால்........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : அது வேண்டாம் என்பதால் தான் அமைச்சர் சொன்னதையும், உறுப்பினர் சொன்னதையும் சேர்த்து அவைக்குறிப்பிலிருந்து நீக்கவேண்டும் என்று நான் ஆணையிட்டிருக்கிறேன். (கூச்சல்— குழப்பம்)

<u>திரு. வி. கிருஷ்ணமூர்த்தி</u> : பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தலைமையில் இந்தச் சபை நல்லமுறையில் நடைபெறவேண்டுமென்று நாங்கள் விரும்புகிறோம். அதேபோல் மற்றவர்களும் விரும்புகிறார்கள் என்று நான் கருதுகிறேன். எங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்கள் பேசும்போது எலக்ட்டோரல் ரோலில் ஏற்பட்டுள்ள தவறை பாயின்ட் அவுட் செய்தார்கள். அது சாதாரணமான விஷயமாக இருக்கலாம் சொல்லியிருக்க வேண்டியதில்லை. சொன்னதனாலும் தவறு இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து முன்மொழிந்து நிறைவேற்றுவதற்குப் பதிலாக இங்கே சட்டமன்றத்தில் * * * * என்று பேசியிருக்கிறார்கள். அப்படிப் பேசுவது முறைதானா? (கூச்சல்—குழப்பம்)

---

(*) மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்</u> : இங்கே * * * * என்று சொல்லப்பெற்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடவேண்டும என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். (கூச்சல்— குழப்பம்)

[பிற்பகல் 2-20]

(இருபக்கங்களிலும் கூச்சல். குழப்பம்)

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் குறிப்பிட்ட ஒரு சொற்றொடர் நீக்கப்பட வேண்டுமென்ற கருத்தின் அடிப்படையிலே, உணர்ச்சியை மதித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதை அடியோடு நீக்க வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள். ஆகவே இதிலே யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அவையிலே இருப்பவர்களை குறிப்பிட்டுச் சொல்லவில்லை. எந்தக் கட்சியையும் குறிப்பிட்டு சொல்லவில்லை. அதுவும் நீக்கப்பட்டுவிட்டது. ஆகவே, அது அவைக் குறிப்பிலே ஏறப்போவதில்லை. பத்திரிகைகளிலேயும் வரப்போவதில்லை. எனவே, அமைச்சர் சொன்னது நீக்கப்பட்டது என்று தலைவர் தெரிவித்த அளவிலே, இந்தப் பிரச்சினை தீர்ந்து விட்டது. எனவே, தயவுசெய்து அமைதியை நிலைநாட்ட வேண்டும்படி கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு</u> : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதா கொண்டு வந்ததன் நோக்கத்தை பலர் புரிந்துகொள்ளவில்லை என்று நினைக்கிறேன். குறிப்பாக, இந்த மசோதா கொண்டு வந்ததன் நோக்கம் எல்லாம் கடந்த 30—5—80 ஆம் தேதியன்று இந்த தமிழ்நாடு குடியரசுத் தலைவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தது. மேலும் நாடாளுமன்ற கூட்டத் தொடர் நடைபெறவில்லை. அப்போது ஆளுநர் அவர்கள் ஒரு அவசரச் சட்டத்தை........

---

(*) மாண்புமிகு பேரவை தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

(கூச்சல், குழப்பம்)

திரு. எல். இளையபெருமாள் : அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். கொண்டு வந்தச்சட்டத்தை புரிந்துகொள்ளவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அது நல்ல வார்த்தை அல்ல. அப்படி சொல்லக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை விளக்க வேண்டுமென்பதற்காக சொல்கிறார்கள். தமிழிலே உட்பொருளுக்குப் போகாதீர்கள்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ளவில்லை என்று நான் சொல்லவில்லை. புரிந்து கொள்ளவில்லை என்ற ஐயப்பாட்டில் சில கருத்துக்களை சொல்லியிருக்கிறார்கள் என்று சொன்னேன். கடந்த 30–5–80 தேதியன்று 5½ ஆண்டு கால கெடு முடிந்து விட்டது. அப்படி முடிந்த காரணத்தினால், தமிழகத்திலே குடியரசுத் தலைவர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காரணத்தினால்; நாடாளுமன்ற கூட்டத் தொடர் இல்லாத காரணத்தினால், தமிழகத்திலே ஆளுநர் ஆட்சியிலே கடந்த 30–5–80 அன்று ஒரு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த அவசரச் சட்டம் ஒரு மசோதாவாக கொண்டு வந்து இங்கே நிறைவேற்றித் தருவதற்காக கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதை இந்த மன்றத்திலே நான் வைத்திருக்கிறேன். ஆனால், இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம் அதை விட்டுவிட்டு, வேறு சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் குறிப்பாக சொல்கிறேன். காரணம், இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே, இதைக் கொண்டு வந்ததன் காரணமே முன்பிருந்த ஆட்சிதான். 1974 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆம் தேதி ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில் 5¼ ஆண்டு காலத்திற்கு மாநகராட்சிப் பொறுப்பை ஒரு தனி அதிகாரிக்கு கொடுக்கப் பட்டது. இந்த 5½ ஆண்டு கால கெடு கடந்த 30–5–80 அன்று முடிந்துவிட்டது. அன்றையதினம் தமிழகத்திலே மக்கள் ஆட்சி இல்லாத காரணத்தினால், ஆளுநர் ஆட்சி இருந்த காரணத்தினால் இந்த அவசரச் சட்டம் கொண்டு வரப்பட்டு ஓராண்டு காலத்திற்கு நீட்டிக்கப்பட்டிருக்கிறது. அந்த அவசரச் சட்டத்தைத் தான் இந்த மசோதாவாக நிறைவேற்றித் தருவதற்கு இந்த மன்றத்திலே வைத்திருக்கிறேன். ஆகவே, இது ஏதோ நம்முடைய ஆட்சி காலத்திலே குறிப்பாக புரட்சித் தலைவர் அவர்கள் கொண்டு வந்தது போலவும், நாங்கள் ஏதோ எப்படியாவது இந்தத் தேர்தலை தள்ளிவைக்கவேண்டும் என்று எண்ணிக் கொண்டிருப்பது போலவும் பல்வேறு கருத்துக்கள் சொல்லப் பட்டன.



ஆனாலும் குறிப்பாக நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வது — 18 வயதானவர்கள் பட்டியலை மாநகராட்சி தனியாகத் தயாரிக்க வேண்டும். அதற்கான கால அவகாசத்தை எடுத்துக் கொண்டு அதற்குரிய பட்டியலைத் தயாரிக்க ஆறு மாத காலம் பிடிக்கும். ஆகவேதான் ஓராண்டு என்று கேட்கப பட்டிருக்கிறது. இதிலே எந்தக் காரணமும் கொடுக்கவில்லை அர்த்தமற்றதாக இருக்கிறது என்று சொன்னார்கள். அர்த்தம் இல்லாமல் இல்லை. அர்த்தம் இருக்கிறது. இந்தச் சட்ட முன வடிவிலேயே இருக்கிறது. ஆகவேதான அவைகளைத் தயவு செய்து திரும்பப் படித்துப் பார்க்குமாறு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்ட முன்வடிவு நல்லெண் ணத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைக் கூறி இந்த மசோதாவை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி —

''1980 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முனவடிவு எண் 17/1980) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1980) சட்டமாக நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன் வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 18–7–80 வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-28 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

[1980 ஜூலை 17

## அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

46. வேலை வாய்ப்பு பயிற்சித் துறையின் சார்நிலைப் பணியின்கீழ் வரும் தொழில் வணிக ஆசிரியர் பதவியினை அரசுத் தேர்வாணைக் கழக வரம்பெல்லைக்குள் கொண்டு வருவது குறித்து தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசுத் தேர்வாணைக் கழக ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளரமைப்பு நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 12–12–1979 ஆம் தேதியிடப்பெற்ற 1334 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

## ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

* 61. கோரிக்கை எண். 20, வேளாண்மைத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1980–81 (தமிழ், ஆங்கிலம்).

* 62. 1979–80 ஆம் ஆண்டில் வேளாண்மைத் துறைக்கான செயல்வினை முறைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

@ 63. கோரிக்கை எண் 26—கைத்தறி மற்றும் பஞ்சாலை பற்றிய கொள்கையும், திட்டங்களும் 1980–81 (தமிழ் ஆங்கிலம்).

@ 64. 1980 81 ஆம் ஆண்டில் கைத்தறி துணி நூல் துறையின் சாதனைத் திட்டம் (தமிழ், ஆங்கிலம்).

@ 65. கோரிக்கை எண். 27—தமிழ்நாடு கதர்—கிராமத் தொழில்கள் வாரியம் பற்றிய கொள்கையும் திட்டங்களும், 1980–81 (தமிழ், ஆங்கிலம்).

* 66. 1979–80 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் ஆய்வுரை (தமிழ், ஆங்கிலம்).

* 67. வேளாண்மைக் குறித்த 3 சிறிய புத்தகங்கள் (வேளாண்மைத் துறையில் வெளியானது) (தமிழ்).

* 15–7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.
@ 16-7-1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப்பெற்றன.



ஜூலை, 25 1980]

இணைப்பு—I

## கைத்தறி மற்றும் பஞ்சாலை கொள்கையும் திட்டங்களும் 1980–81

முன்னுரை :

1, கைத்தறித் தொழிலானது பழங்காலந் தொட்டு இருந்து வரும் கிராமத் தொழிலாகும், அது பொது மக்களின் துணித் தேவைகளை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. இதுதவிர, கைத்தறித் துணியின் ஏற்றுமதிக்கான வாய்ப்பு கணிசமான அளவு உயர்ந்துள்ளது. விவசாயத்திற்கு அடுத்து இத்தொழில் வேலை வாய்ப்பு அளிப்பதில் முன்னணியில் உள்ளது.

2. தமிழ்நாட்டில் 5.56 லட்சம் கைத்தறிகள் உள்ளன. இது சுமார் 10 லட்சம் நெசவாளர்க்கு வேலை வாய்ப்பும் வசதியும் மேலும் இத்தொழிலைச் சார்ந்த 30 லட்சம் பேருக்கு வாழ வழி வசதியும் அளிக்கிறது. நமது மாநிலத்தின் கைத்தறித் தொழில் வளர்ச்சித் திட்டங்கள் யாவும் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்த வேலை வாய்ப்பை அளிக்கும் நோக்கிலேயே செயல் படுத்தப்படுகின்றன. நம் நாட்டில் உற்பத்தியாகும் 2,300 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணியில் நமது மாநிலத்தில் 600 மில்லியன் மீட்டர் துணி உற்பத்தி செய்யப்படுகிறது. தேசிய அளவில் மார்ச் 1985–ம் ஆண்டு இறுதிக்குள் மொத்தம் 3,700 மில்லியன் மீட்டர் கைத்தறித் துணி உற்பத்தி செய்வதற்குத் திட்ட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்ட இலக்கை எட்டும் வகையில் நமது மாநிலத்திலும் கைத்தறித் துணி உற்பத்தியை ஆண்டு ஒன்றுக்கு 700 மில்லியன் மீட்டர்களாக அதிகரிக்கும் வகையில் வளர்ச்சித் திட்டங்கள் செயல்படுத்தப் பட்டு வருகின்றன.

### II கைத்தறித் தொழில் வளர்ச்சித் திட்டம்.

நம் மாநிலத்தின் கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலையும் நிரந்தர ஊதியமும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்னும் நோக்குடன் அரசு கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்றி வருகிறது:

1. அதிகமான கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வர, நெசவாளர்களுக்கு நிதியுதவி அளித்து தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்தினராக்குதல் (1984—85ல் 75 சதவீதம் ஆகுமென எதிர்பார்க்கப்படுகிறது)

2. நலிந்துள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி மற்றும் விற்பனை வசதிகளை அளித்து பராமரித்தல்.

3. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் தலைமைச் சங்கத்தின் பங்கு மூலதனத்தை அதிகப்படுத்தி அவற்றுக்கு விற்பனை வசதி செய்து கொடுத்தல்.

4. கூட்டுறவுத் துறையின் கீழ் வருகின்ற கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான இடு பொருட்களான பருத்தி நூல், பட்டு, செயற்கைப்பட்டு, சரிகை, சாயம் மற்றும் ரசாயனப் பொருட்களை நியாயமான விலையில் அளித்தல்.

5. வடிவமைப்பு (டிசைன்) நிலையங்களை அமைத்தல், நெசவாளர்களுக்குப் பயிற்சியளித்தல், கைத்தறித் தொழில் நுட்ப முறைகளை மாற்றியமைப்பதன் மூலம் கைத்தறிப் பொருட்களின் தரத்தை உயர்த்துதல், பலதிறப்படுத்துதல் ஆகிய திட்டங்களைச் செயற்படுத்துதல்.

6. கைத்தறியில் உற்பத்தியாகும் பருத்தி ரகத் துணிகளுக்கும், செயற்கைப் பட்டு, பாலியஸ்டர் துணி ரகங்களுக்கும் தேவையான செய்முறை வசதிகளைச் செய்து கொடுத்தல்.

7. நாட்டின் அன்னியச் செலாவணியை அதிகரிக்க கைத்தறி துணிகளின் ஏற்றுமதியை அதிகப்படுத்தல்.

8. கைத்தறி நெசவாளர்களின் நல்வாழ்வுக்கென கூட்டுறவு நெசவாளர் பாதுகாப்புத் திட்டம் மற்றும் நெசவாளர் வீட்டு வசதித் திட்டம் போன்ற நலத் திட்டங்களைச் செயல்படுத்துதல்

( )கைத்தறித் தொழிலின் நன்மைக்கென நிறைவேற்றப்படும் திட்டங்கள் பின்வருமாறு :—

(i) அதிக அளவிலான கைத்தறிகளை கூட்டுறவு அமைப்புகளின் கீழ் கொண்டு வருதல்:



கைத்தறித் தொழில் வளர்ச்சிக்கான முன்னேற்ற திட்டங்கள் யாவும் நெசவாளர்களை இடைத்தரகர்கள் சுரண்டாத ஒரு தன்மையினைக் கொண்டதாக இருக்கவேண்டுமென்கிற முறையில் கூட்டுறவு அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. நெசவாளர்களைக் கூட்டுறவு அமைப்பின்கீழ் கொண்டு வருதல் சிறப்புக்கு வழி கோலும் என்ற உண்மையைக் கடந்த இருபதாண்டுகளின் அனுபவம் நமக்கு உணர்த்தியது. மேற்கண்ட கொள்கையில் முழு நம்பிக்கை வைத்து 1985-ம் ஆண்டிற்குள் 75 சதவீத கைத்தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவர இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்திலுள்ள 5.56 இலட்சம் கைத்தறிகளில், 2.40 இலட்சம் கைத்தறிகள், 31—3—1980, வரையில் 1052 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. 1979—80-ல் 20,500 கைத்தறிகள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்க, 20,000 தறிகள் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினராகச் சேருவதற்காக கைத்தறி நெசவாளர்கட்கு வழங்கப் பெறும் பங்கு மூலதனக் கடன் தொகை வகையில் ரூ. 16 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும், 25 புதிய தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதற்காக, அரசு ரூ. 80 இலட்சம் அனுமதித்துள்ளது. 83 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களையும் 30 தொழில் கூட்டுறவுச் சங்கங்களையும் புதிதாக அமைப்பதன் மூலம் 21,500 தறிகளைக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டு வருவதே 1980—81ம் ஆண்டின் திட்டமாகும். 1980—81ம்ஆண்டில் நெசவாளர்களுக்குப் பங்கு மூலதனக் கடன் தொகை வழங்குவதற்கு ரூ. 17 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தொழில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தும் திட்டத்திற்காக 1980—81ம் ஆண்டின் திட்ட ஒதுக்கீடாக ரூ. 146.01 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே உள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பங்குமூலதனத் தொகையை வலுப்படுத்தவென 1979—80 ம் ஆண்டில் ரூ. 20 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. 1980—81ம் ஆண்டிற்காக, "நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் மாநில அரசின் பங்கு" என்ற திட்டத்திற்கென ரூ. 25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, 1979—80-ம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி 93 மில்லியன் மீட்டராக இருந்தது. 1980—81 ஆம் ஆண்டில் உற்பத்தியை 100 மில்லியன் மீட்டராக அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ii) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை. வீதத்தில் நிதி உதவி.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வங்கி வட்டி வீதத்தை விட 2½ சதவிகிதம் குறைந்த வட்டி வீதத்தில் அளிக்கும் ரிசர்வ் வங்கியின் சலுகை வீத நிதியுதவித் திட்டம் 1980-81-ம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுகிறது. 1979-80 ம் ஆண்டில் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தலைமைச் சங்கமாகிய கோ-ஆப்டெக்ஸ்க்கும் ரிசர்வ் வங்கி அனுமதித்துள்ள, மொத்த கடன் வரம்புகளும், தொகையும், 1980-81ம் ஆண்டிற்கு அச்சங்கங்களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ள கடன் வரம்புகளும் வருமாறு:—

(ரூ. கோடியில்)

| | 1979-80 அனுமதிக்கப் பட்டது. | 1980-81 பரிந்துரைக்கப் பட்டது. |
|---|---|---|
| தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் | 16.95 | 22.58 |
| தலைமைச் சங்கம் | 12.00 | 12.00 |

நிதி வழங்கும் வங்கிகள் ரிசர்வ் வங்கியின் 6½ சதவிகிதம் வட்டி வீதத்திலான நிதியை நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் தலைமைச் சங்கத்திற்கும் வழங்க ஏதுவாக இருக்கும் பொருட்டு வட்டி உதவித் தொகையாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு 3 சதவிகிதமும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிக்கு 1 சதவீதமும் வழக்கம்போல் வழங்கப்படும். மேற்கண்ட காரணத்திற்காக 1979-80 ஆம் ஆண்டில் ரூ. 54.22 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மேலும் 1980-81ம் ஆண்டிற்கு ரூ. 50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூட்டுறவு மத்திய வங்கிகளால் வழங்கப்பட்ட நடைமுறை மூலதனக் கடன் வசூலிக்கப்படாததன் விளைவாக ஏற்படும் நஷ்டத்தில் 90 சதவிகிதம் வரை அரசாங்கத்தாலும் மீதமுள்ள தொகை அந்தந்தக் கூட்டுறவு மத்திய வங்கிகளாலும் ஈடுசெய்யப்படுகிறது. 1979-80 ஆம் ஆண்டில் அரசாங்கம் ரூ. 10 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் செலவுத் தொகையாக அனுமதித்துள்ளது. 1980-81 லும் அதே அளவுத் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



III. கைத்தறித் தொழில் நுட்பத்தின் தரத்தை உயர்த்துவதற்கான திட்டம்:

மாறிவரும் மக்களின் ரசனைக்கேற்பவும், நுகர்வோரின் விருப்பத்திற்கு ஏற்பவும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வளர்ந்துவரும் தேவைகளை ஈடு செய்யவும் கைத்தறித் தொழில் புதிய தொழில் உத்திகளைக் கையாள வேண்டும். இதைக் கருத்தில் கொண்டு கைத்தறி நெசவாளர் சங்கங்கள் தறிகளைப் புதுப்பிக்கவும்/நவீனப்படுத்தவும் அல்லது புதிய நவீன கைத்தறிகளை வாங்கவும் ஊக்குவிக்கப்படுகின்றன. இதற்கென 1979-80-ம் ஆண்டில் ரூ. 15.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1980-81-ம் ஆண்டிற்கும் இதே அளவு தொகையாகிய ரூ. 15.50 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கைத்தறியில் புதிய தயாரிப்புகளையும், புதிய மாதிரிகளையும் உருவாக்க இயலும் வண்ணம் கோ-ஆப்டெக்ஸ் மாதிரி வடிவமைப்புப் பணி நிலையங்களை ஏற்படுத்தி வருகிறது. 1977-78-ம் ஆண்டில் ஏற்கெனவே மதுரையில் இது போன்ற "வடிவமைப்பு பணி நிலையம்" ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1979-80 ல் அனுமதிக்கப்பட்ட மற்றொரு வடிவமைப்பு பணி நிலையம் திருச்சியில் அமைக்கப்பட்டு வருகின்றது. இது போன்ற இரண்டு நிலையங்கள் 1980-81-ம் ஆண்டில் ரூ. 7 இலட்சம் செலவில் சேலம் மற்றும் கோவையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

IV கைத்தறித் தொழிலுக்கான இடு பொருள்கள் வழங்குதல்

(அ) பருத்தி நூல்—

இம்மாநிலத்தில் உள்ள 3.14 இலட்சம் கதிர் திறன் கொண்ட 12 கூட்டுறவு நூற்பாலைகள், கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கென திங்களொன்றிற்கு 7,000 பேல்களைக் கொண்ட பல வகையான பருத்தி நூல்களை உற்பத்தி செய்கின்றன. தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), கூட்டுறவு நூற்பு ஆலைகள் உற்பத்தி செய்யும் நூலைக் கொள்முதல் செய்து, 21 நூல் விற்பனை நிலையங்கள் மூலம் மாநில முழுதுமுள்ள 1,052 தொடக்க நெசவாளர்

கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குகிறது. கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்பொரேஷன் ஆலைகளின் உபரிநூலை தனியார் துறையில் உள்ள நெசவாளர்களுக்கு விற்கவென மதுரை, சேலம் ஆகிய இரு இடங்களில் இரண்டு பொது நூல் விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கூட்டுறவு நூற்பாலைகளிலிருந்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம் தொடர்ந்து நூல் கிடைத்து வருவதனால் எல்லாத் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் நியாயமான விலையில் தரமான நூல் எப்போதும் கிடைப்பது உறுதியாயிற்று, 1979 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் நூல்களின் விலையில் அபரிமிதமான ஏற்றம் ஏற்பட்டிருந்தும் கூட்டுறவு நூற்பு ஆலைகள் 1979 ஆம் ஆண்டு மே திங்களில் நிலவி வந்த ஆலை வாயில் விலையிலேயே நூலை விற்பனை செய்தன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு இந்த விலை மிகக் குறைந்த விலையாகும். இவ்வாறு குறையான விலையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, கூட்டுறவு நூற்பாலைகள் நூலை விற்றதனால் அதை இலாபத்தின் ஒரு பகுதியை இழக்க நேரிட்டது. 1979-ம் ஆண்டில் கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்த ரூ. 3370·69 இலட்சம் மதிப்புள்ள 149.36 இலட்சம் கிலோ நூலில் ரூ. 2,791.40 இலட்சம் மதிப்புக்கு 131.12 இலட்சம் கிலோ நூல் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கோ—ஆப்டெக்ஸ் மூலம் விற்பனை செய்யப்பட்டது. கூட்டுறவு நூற்பு ஆலைகள் கோ-ஆப்டெக்சுக்கு நூல் விலையில் அளித்த சலுகையினால் கோ-ஆப்டெக்சுக்கு விலைச் சலுகையாக ரூ. 50.55 இலட்சம் கிடைத்தது; கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினரல்லாத தனியார் துறையில் உள்ள நெசவாளர்களைப் பொறுத்தமட்டில், கைத்தறித் துணி நூல் துறை மேற்கொண்ட நடவடிக்கையினால் கோவையிலுள்ள தென் இந்திய ஆலைகள் சங்கம், தனது சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள ஆலைகள் மூலம் 1979 செப்டம்பர் திங்களில் 3,674 பேல்கள் நூல் நியாயமான விலையில் வழங்க ஏற்பாடு செய்தது. ஆலைகள் தாமே முன் வந்து, குறைந்த விலையில் நூல் விற்பனை செய்ய மத்திய அரசு அறிவித்த திட்டத்தின் மூலம், 1979 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 1980 ஜனவரி திங்கள் வரை மொத்தம் 12,903 பேல் நூல் தனியார் துறை நெசவாளர்கட்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தின் கீழ் தேசிய ஜவுளி கார்ப்பொரேஷன் ஆலைகள்



மற்றும் தென் இந்திய ஆலைகள் உற்பத்தியாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள ஆலைகள் மூலம் நியாய விலையில் விற்பனை செய்யப்பட்டது.

## (ஆ) சுத்தமான பட்டு மற்றும் சரிகை

நமது மாநிலத்தில் தற்போது 11,600 தறிகளைக் கொண்ட 57 பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்களுக்கு மாதம் ஒன்றுக்கு முறையே 14,000 கிலோ கோரா பட்டும் 5,000 மார்க்குகள் சரிகையும் தேவைப்படுகின்றன. இம் மாநிலத்தில் உள்ள அனைத்துப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களும் அவற்றுக்குத் தேவையான கச்சாப் பட்டு நூல் பெரும்பாலும் பெங்களூரிலுள்ள தனியார் நிறுவனங்களிலிருந்தும், சரிகையை சூரத் உற்பத்தியாளர்கள் மூலமும் முன்பு வாங்கி வந்தனர். பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் வாங்கும் ஒரே தரமான பட்டின் விலையில் அதிகமான விலை மாறுபாடுகள் இருந்தன. இதைப் போன்றே சரிகை விலையிலும் ஒரு நிரந்தரத் தன்மை இல்லை. பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நல்ல தரமான பட்டையும், தங்கச் சரிகையும் நியாயமான விலையில் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன், 1978-ம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் மத்திய கச்சாப் பட்டு மற்றும் சரிகைக் கொள்முதல் குழு ஒன்று அமைக்கப்பட்டது. கோ—ஆப்டெக்சின் தனி அலுவலரைத் தலைவராகவும், காஞ்சிபுரம், ஆரணி, திருபுவனம் ஆகிய இடங்களிலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளை அங்கத்தினர்களாகவும் கொண்ட இக்குழு தற்பொழுது நல்ல தரமான பட்டினை நியாயமான விலையில் கொள்முதல் செய்து வருகிறது. தமிழ்நாட்டில் உற்பத்தியாகும் கச்சாப் பட்டினைப் பயன்படுத்த ஊக்குவிக்கும் வகையில், இக்குழு காஞ்சிபுரத்திலுள்ள தமிழ்நாடு கூட்டுறவு பட்டு விற்பனைக் கூட்டமைப்பிலிருந்து அதிக அளவு கச்சாப் பட்டை கொள்முதல் செய்து வருகிறது. அடுத்தபடியாக கர்நாடக பட்டு விற்பனைக் கூட்டமைப்பிலிருந்தும் பட்டு விற்பனை வாரியத்திலிருந்து கச்சாப்பட்டை வாங்க முன்னுரிமை அளிக்கப்படுகிறது. இதைப்போலவே காஞ்சிபுரம் தமிழ்நாடு சரிகை லிமிடெட்டில் உற்பத்தியாகும் சரிகை அனைத்தும் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் பட்டு நெசவாளர் கூட்டுறவுச்

சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. இதற்கு மேல் தேவைப்படும் சரிகை சூரத் சரிகை வியாபாரிகள் சங்கத்தின் மூலம் மத்திய கொள்முதல் குழுவால் வாங்கப்படுகிறது.

**(இ) செயற்கைப் பட்டு இழை:**

செயற்கைப் பட்டு இழை இறக்குமதி கொள்கையை மத்திய அரசு தளர்த்தியுள்ளது. இதற்கிணங்க, ஓ.ஜி.எல், திட்டப்படி கைத்தறி நெசவாளர் சங்கங்களும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும் உண்மையான உபயோகிப்பாளர் என துறையின் சரக அலுவலர்கள் வழங்கும் சான்றிதழின் அடிப்படையில், செயற்கைப் பட்டு இழையை இறக்குமதி செய்ய ஏற்பாடுகள் செய்து வருகின்றன. இதைத் தவிர, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிப்பதற்காக கோ—ஆப்டெக்ஸிற்கு, மாதம் ஒன்றுக்கு 30 டன் அளவு விஸ்கோஸ் செயற்கைப்பட்டு இழை வழங்க தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத்துடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர, தென்னிந்திய விஸ்கோஸ் நிறுவனத்திடமிருந்து மரக்கூழினை பெற்று ரயான் நூலை நூற்றுவரும் பிற மாநிலத்தவரிடமிருந்து வருடத்திற்கு 420 டன் விஸ்கோஸ் செயற்கைப்பட்டு இழையைக் கொள்முதல் செய்து தனியார் துறை நெசவாளர்கட்கு விநியோகம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) சாயப் பொருட்கள் மற்றும் இரசாயனப் பொருட்கள்:**

தனியார் துறையிலிருக்கும் கைத்தறி நெசவாளர்கள், தங்களுக்குத் தேவையான முழு அளவு சாயப் பொருட்களையும் இரசாயனப் பொருட்களையும் வெளிச் சந்தையிலிருந்து பெற்று வருகின்றனர். சொந்தத்தில் சாயச் சாலைகளை வைத்துள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் சிலவும் அவற்றிற்குத் தேவையான சாயம் மற்றும் இரசாயனப் பொருட்களை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்தும் அவர்களது முகவர்களிடமிருந்தும் பெற்று வருகின்றனர். அண்மையில் கோ—ஆப்டெக்ஸ் நிறுவனமும், சாயப் பொருட்களை உள்நாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்று நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குவழங்க ஏற்பாடு செய்துள்ளது. தரமான சாயப் பொருட்களையும் இரசாயனப் பொருட்களையும் நியாயமான விலையில் பெற, கோ ஆப்டெக்ஸ் தனிஅலுவலர், ஈரோட்டில் உள்ள தமிழ்நாடுதுணி



பதனிடும் ஆலையின் மேலாளர் மற்றும் நெசவாளர் கூட்டுறவுச்சங்க பிரதிநிதிகளையும் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு அமைப்பின்கீழ் இயங்கும் நெசவாளர்கட்குத் தேவையான சாயப் பொருட்களையும், இரசாயனப் பொருட்களையும் மொத்த அளவில் வாங்கி தமது விற்பனை நிலையங்கள் மூலமாக வழங்க இக் குழு கருதியுள்ளது.

சாய, இரசாயன பொருட்களைத் தயாரிக்கும் பொருட்டு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், கூட்டுத் துறையில், தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கடலூரில் ''வானவில் சாய இரசாயனப் பொருட்கள் நிறுவனம்'' என்ற ஓர் அமைப்பை நிறுவியுள்ளது. கோ ஆப்டெக்ஸ் நிறுவனம் இந்த அமைப்புக்கு ரூ. 10 இலட்சம் பங்கு மூலதனமாகச் செலுத்தும். இந்த நிறுவனம் உற்பத்தியை ஆரம்பித்தவுடன், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான இரசாயனப் பொருட்கள் கோ ஆப்டெக்ஸ் மூலம் கிடைக்கும்.

**(V) கைத்தறி வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவியளித்தல்.**

மத்திய அரசு நிதி உதவியுடன் தமிழ்நாடு அரசு, நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களை காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், மதுரை ஆகிய இடங்களிலும், கரூர், குறிஞ்சிப்பாடி, ஆகிய இரு இடங்களில் இரண்டு ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களையும் அமைத்துள்ளது. இத் திட்டங்களில் இதுவரை மொத்தம் 12,300 கைத்தறிகள் சேர்க்கப்பட்டுள்ளன 1979–80ஆம் ஆண்டில் ரூ. 7.56 இலட்சம் குறிஞ்சிப்பாடி திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 1980–81–ல் மேலும் 5,700 கைத்தறிகளை இத் திட்டங்களில் சேர்த்து மொத்தம் 18,000 கைத்தறிகளாக அதிகரிக்கப்படும். இத் திட்டத்தின்கீழ் சேலம் மற்றும் மதுரையில் உள்ள தீவிரக் கைத்தறி வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கப்பட வேண்டிய கடன் மற்றும் மானியத் தொகையான ரூ. 88.57 இலட்சத்தை 1980–81–ல் வழங்கக் கருதப்பட்டுள்ளது. முதலில் கைத்தறி அபிவிருத்திக் கழகத்தின் கிளை நிறுவனங்களாக அமைக்கப்பட்ட இத்திட்டங்கள் அனைத்தும் பின்னர் கூட்டுறவுத் திட்டங்களாக மாற்றப்பட்டு, கோ—ஆப்டெக்ஸ் உடன் இணைக்கப்பட்டுள்ளன.

128/160—22

(vi) கைத்தறி தொழிலுக்கு விற்பனை வசதி உதவி.

'கோ ஆப்டெக்ஸ்' என்று அழைக்கப்படும் தமிழ்நாடு மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவுத் தலைமைச் சங்கம், அதனுடன் இணைந்த தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சுமார் 50 சதவிகித உற்பத்திக்கு விற்பனை வசதி செய்து கொடுக்கிறது. 1979–80-ம் ஆண்டில் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி மதிப்பு ரூ. 52 கோடி ஆகும். 1979–80 ஆம் ஆண்டில் ''கோ ஆப்டெக்ஸ்'' நிறுவனம், தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து ரூ.29கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்து ரூ. 35 கோடி அளவிற்கு விற்பனை செய்துள்ளது.

(a) கைத்தறித் துணி விற்பனையின் மீதான தள்ளுபடி.

கைத்தறித் துணி விற்பனையைப் பெருக்குவதற்காக அரசு மேற்கொண்ட பல நடவடிக்கைகளில் நுகர்வோருக்கு கைத்தறித் துணி விற்பனையில் தள்ளுபடிச் சலுகை அளிப்பதும் ஒன்றாகும். கடந்த இரு ஆண்டுகளாக மத்திய அரசு, 30 நாட்களுக்கு 20 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி மத்திய அரசும், மாநில அரசும் சம அளவில் ஏற்றுக் கொள்வது என்ற அடிப்படையில், வழங்கி வருகிறது. இது தவிர, கைத்தறித் துணி விற்பனைக்கு மாநில அரசு 25–லிருந்து 30 நாட்களுக்கு 10 சதவீதம் தள்ளுபடி அளிக்கிறது. 1979–80ஆம் ஆண்டில் தள்ளுபடி வகையில் ரூ. 350 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது இத்திட்டத்தின்கீழ் 1980 81ஆம் ஆண்டிற்கென ரூ. 250 இலட்சம் தற்காலிக நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. எனினும் 1980–81 ஆம் ஆண்டில் இச்செலவினம் ரூ.450 இலட்சம் வரை உயருமென எதிர்பார்க்கப்படுகிறது.

(b) நெசவாளர் கூட்டுறவு தலைமைச் சங்கத்தின் பங்கு மூலதனத்தைப் பெருக்குதல்.

தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை வசதி செய்து கொடுக்க இயலும் வகையில் நெசவாளர் கூட்டுறவுத் தலைமைச் சங்கத்தின் கடன் பெறும் அளவை உயர்த்தும் பொருட்டு 1979–80 ஆம் ஆண்டில் அரசு, கோ–ஆப்டெக்ஸ் பங்கு மூலதனத்தில் ரூ. 2.57 கோடி முதலீடு செய்துள்ளது.



(c) புதிய விற்பனை நிலையங்கள் அமைக்கவும் தற்போது உள் விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தவும் தலைமைச் சங்கத்திற்கு நிதியுதவியளித்தல்.

கோ ஆப்டெக்ஸ், மாநில தலைநகரங்களிலும், முக்கிய நகரங்களிலும் புதிய விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கும், மற்றும் முக்கியமான நகரங்களில் தற்போதுள்ள விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துவதற்குமான திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றது.

இதற்காக 1979–80 ஆம் ஆண்டில் கோ ஆப்டெக்ஸிற்கு ரூ. 56.25 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

(d) வட்டார ஏற்றுமதிக் கிடங்கைக் கட்டுவதற்குத் தலைமைச் சங்கத்திற்கு நிதியுதவி அளித்தல்.

ரூ. 36 இலட்சம் செலவில் சென்னையில் விற்பனைக் காட்சி அரங்குகளுடன் வட்டார ஏற்றுமதி கிடங்கைக் கட்டுவதற்காக கோ ஆப்டெக்ஸுக்கு 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 25.50 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(e) சிறந்த ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டம்.

சிறந்த கைத்தறி ஏற்றுமதியாளர்களுக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின் கீழ் 1979–80 ஆம் ஆண்டில் ரூ.0.09 இலட்சம் செலவிடப்பட்டது.

(vii) பட்டு, செயற்கைப்பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளித்தல்;

பட்டு நெசவாளர் புதிய கூட்டுறவுச்சங்கங்களை அமைக்க பங்கு மூலதனம், நவீன உபகரணங்கள், மரச்சாமான்கள் ஆகியவற்றை வாங்குவதற்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. பட்டுத் துணிகளின் தேவை அதிகரித்து வருவதால் 1980–81 ஆம் ஆண்டில் பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாகத் தொடங்கப்படும். 1979–80 ம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 25 பட்டுநெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபாய் 1.31 இலட்சம் கடனாகவும் மானியமாகவும் செலவிடப்பட்டுள்ளது. 1980–81–ம் ஆண்டிற்கு இத்திட்டத்தின் கீழ் ரூ. 1.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(viii) நலத்திட்டங்கள்:

(a) சேமிப்பு பாதுகாப்புத் திட்டம்

கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனை முன்னிட்டு தமிழ்நாட்டில் கூட்டுறவுக் கைத்தறி நெசவாளர் சேமிப்பு பாதுகாப்புத் திட்டம் என்ற பெயரில் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம், ஆயுள் தொகுப்பு ஈட்டுறுதித் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தின்கீழ் இதுவரையில் சுமார் 66,000 கைத்தறி நெசவாளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இத் திட்டத்தில் சேர்ந்துள்ள ஒவ்வொரு நெசவாளரும் தான் சம்பாதிக்கும் ஒவ்வொரு ரூபாயிலும் 6 காசைச் சந்தாத் தொகையாக கொடுக்கின்றனர். அந்த ஒரு ரூபாய்க்கு அரசு 3 காசு மானியமாக கொடுத்து, அந்த மொத்தச்சேமிப்பு ஒரு தனி நிதிக் கணக்காக வைக்கப்படுகின்றது. இதற்கு 7% வட்டி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் சேர்ந்துள்ள நெசவாளர் ஒருவர் இறந்து போனால் அவரது நியமனதாரர் அவருடைய சேமிப்புக்கணக்கில் உள்ள தொகைக்குச் சமமான தொகையையோ அல்லது குறைந்த பட்சம் ரூ. 500-ஐ ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து பெறுகிறார். -3-1980–லிருந்து இத்தொகையை ரூ. 3000–த்திற்கு உயர்த்த ஆயுள் ஈட்டுறுதிக் கழகம் ஒப்புக் கொண்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 1980–81 ஆம் ஆண்டிற்கு ரூ. 30 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(b) நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டம்

1962–ம் ஆண்டிற்குப் பிறகு நிறுத்தப்பட்டுவிட்ட நெசவாளர் வீட்டு வசதித்திட்டம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு, 1979–80–ம் ஆண்டிலிருந்து மாற்றி அமைக்கப்பட்ட புதிய நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாற்றியமைக்கப்பட்ட நெசவாளர்கள் வீட்டு வசதித் திட்டத்தின்படி வீட்டிற்குரிய மொத்தச்செலவு ரூ. 5000; அதில் மாநில அரசால் ரூ. 1,000 உதவித்தொகையாகவும், மீதியுள்ள ரூ. 4,000 வீட்டு வசதி நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தால் கடனாகவும் அளிக்கப்படுகிறது. கூட்டுறவு அமைப்பின்கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களின் நலனை முன்னிட்டு 1979–80-ம் ஆண்டில் 350 வீடுகள் கட்ட ஏற்கனவே நடவடிக்கைகள்



எடுக்கப்பட்டுள்ளன. 1979–80-ம் ஆண்டில் 350 வீடுகள் கட்ட அரசு மொத்தம் ரூ. 3.50 இலட்சம் உதவித்தொகை அளித்துள்ளது, 1980–81-ம் ஆண்டில் 1,650 வீடுகள் கட்டப்பட வேண்டுமென இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1980–81 ஆம் ஆண்டிற்கு ரூ. 16.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(III) கைத்தறி துணிநூல் துறையின்கீழ் இயங்கும் நிறுவனங்கள்.

கைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்களின் மேம்பாட்டிற்காகவும், வளர்ச்சிக்காகவும் இடுபொருட்கள், மூலப்பொருட்கள் ஆகியவற்றை வழங்குதவற்காகவும், கைத்தறித் தொழிலின் சீரான வளர்ச்சிக்கான அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வதற்காகவும், கூட்டுறவு/பொதுத்துறையில் தமிழக அரசு கைத்தறித் தொழில் பிரிவுகளையும், நிறுவனங்களையும் அமைத்தது. அவைகளில் கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனையில் உதவும்பொருட்டு கோஆப்டெக்ஸும், கூட்டுறவு அமைப்பின் கீழ்வராத நெசவாளர்களுக்கு உதவி செய்யும்பொருட்டு தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகமும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தரமான நூல்களை நியாயமான விலையில் வழங்க கூட்டுறவு நூற்பு ஆலைகளும், ஜரிகை வழங்க தமிழ்நாடு ஜரிகை நிறுவனமும், கைத்தறித் துணிகளைச் செய்முறைப்படுத்துவதற்கென்றே தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் செய்முறைப்படுத்தும் ஆலையும் செயல்பட்டு வருகின்றன. இவை இத்துறையின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தும் நிறுவனங்களாகவும் பணிபுரிகின்றன. இவற்றின் செயல்முறைகளும் வருங்காலத் திட்டங்களும் பின்வருமாறு :

(i) தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் (கோஆப்டெக்ஸ்).

கோஆப்டெக்ஸ் என்று எல்லோராலும் அழைக்கப்படும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம், தலைமைச் சங்கமாகும். இதனுடன், இம்மாநிலத்திலுள்ள நெசவாளர்கள் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இச்சங்கத்தின் பங்கு மூலதனத்தை அதிகப்படுத்துவதற்கு தமிழகஅரசு 1977–78-ம் ஆண்டில் 220 இலட்சமும் 1978

79-ம் ஆண்டில் ரூ.3 கோடியும், 1979-80-ம் ஆண்டில் ரூ. 2.57 கோடியும் முதலீடு செய்துள்ளது. கோஆப்டெக்ஸின் செலுத்திய பங்கு மூலதனம் ரூ. 8.53 கோடி ஆகும். அதில் 31-3-80ஆம் நாளன்றிருந்தவாறு தமிழக அரசு அளித்துள்ள தொகை ரூ. 7-92 கோடி ஆகும். நூல், தூய பட்டு, ஜரிகை, சாயப்பொருட்கள், ரசாயனப் பொருட்கள் போன்ற மூலப் பொருட்களைக் கொள்முதல் செய்து, நெசவாளர் கூட்டுறவுத் தொடக்கச் சங்கங்களுக்கு வழங்குவதும், அவற்றால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறித்துணிகளுக்கு விற்பனை வசதி அளிப்பதும் கோஆப்டெக்ஸின் முக்கிய நோக்கமாகும். 1979-80-ம் ஆண்டின் நடைமுறை மூலதனத் தேவைக்காக, ரிசர்வ் வங்கி, மாநில அரசின் உத்திரவாதத்தின்பேரில் சலுகை வட்டிவீதத்தில் மொத்தம் ரூ. 12 கோடி கோஆப்டெக்சுக்கு ரொக்கக்கடன் வழங்கியுள்ளது.

மூலப்பொருட்களை வழங்குவதற்காக, கோஆப்டெக்ஸ் 21 நூல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. இவற்றின் மூலம் 12 கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்படும் நூல், நெசவாளர்கள் தொடக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. கோஆப்டெக்ஸ்க்குத் தமிழ்நாட்டில் 240 சில்லறை விற்பனை நிலையங்களும், இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களில் 180 விற்பனை நிலையங்களும் உள்ளன இத்துடன் முகவரமைப்பு அடிப்படையில் கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய 126 தனியார் வியாபாரிகளையும் நாட்டின் பல பாகங்களில் நியமித்துள்ளது. கோஆப்டெக்ஸ், 1978-79-ம் ஆண்டில் நெசவாளர் கூட்டுறவுத் தொடக்கச் சங்கங்களிடமிருந்து கைத்தறித் துணிகளை ரூ. 27.51 கோடிக்கு கொள்முதல் செய்து, ரூ. 34.80 கோடிக்கு விற்பனை செய்தது.

1977-78ஆம் ஆண்டில் 18·31 கோடிக்கு கொள்முதல் செய்து ரூ. 23.01 கோடிக்கு விற்பனை செய்தது. 1979 80ஆம் ஆண்டில் ரூ. 29.00 கோடி மதிப்புள்ள கைத்தறித் துணிகளை கோஆப்டெக்ஸ் கொள்முதல் செய்து ரூ. 35.00 கோடிக்கு விற்பனை செய்தது.

கோஆப்டெக்ஸ் தற்போது நெசவாளர் கூட்டுறவுத் தொடக்க சங்கங்களின் 50 சதவீதம் உற்பத்தியைக் கொள்முதல் செய்கிறது. தற்போதைய இதே கொள்முதல் அளவை கோஆப்டெக்ஸ் தொடர்ந்து செய்துவர வேண்டுமெனில், அடுத்துவரும் மூன்றாண்டுகளுக்குள், ஆண்டொன்றுக்கு ரூ. 50கோடி மதிப்புள்ள



கைத்தறித் துணிகளைக் கொள்முதல் செய்ய வேண்டிய நிலையில் அது இருக்க வேண்டும். விசைத்தறித் துணிகள், ஆலைத்துணிகள் ஆகியவற்றின் கடும்போட்டிக்கிடையே கைத்தறி துணிகளை பெருமளவில் விற்பனை செய்வதென்பது சிரமமானதாகும். இப்பணியை நிறைவேற்றுவதற்காக கோஆப்டெக்ஸ், பல திட்டங்களைச் செயற்படுத்திவருகிறது. இதற்காக கோஆப்டெக்ஸ் எடுத்துள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு :

(a) புதிய விற்பனை நிலையங்களைத் திறத்தலும், ஏற்கனவே உள்ளவற்றை நவீனப்படுத்துதலும் :

அடுத்துவரும் மூன்றாண்டுக் காலத்தில் ரூ. 300 இலட்சம் செலவில் 250 புதியவிற்பனை நிலையங்களைத்திறக்கவும் ஏற்கனவே உள்ள 150 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தவும் கருதப் பட்டுள்ளது. அரசிடமிருந்து ரூ. 60 இலட்சம் நிதியுதவி பெற்று, இது வரை 41 புதிய விற்பனை நிலையங்களைத் திறந்துள்ளது; ஏற்கனவே உள்ள 45 விற்பனை நிலையங்களை நவீனப் படுத்தியுள்ளது. மாநில அரசு மூலமாக தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ. 56.25 இலட்சம் நிதியுதவி பெற்று, 1979-80, 1980-81ஆம் ஆண்டுகளில் மேலும் 88 புதிய விற்பனை நிலையங்களைத் திறக்கவும், ஏற்கனவே உள்ள 57 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

(b) மாதிரி வடிவமைப்பு பணி நிலையங்களைத் தொடங்குதல்

புதிய மாதிரிகளை அறிமுகப்படுத்தும் பொருட்டும், மக்களின் தற்போதைய விருப்பங்களுக்கேற்ப கைத்தறிகளில் உற்பத்தியாகும் துணிகளின் ரகங்களில் மாற்றம் செய்யவும், அரசிடமிருந்து ரூ. 3.50 இலட்சம் நிதி உதவிபெற்று, மதுரையில் ஒரு மாதிரி வடிவமைப்புப் பணி நிலையத்தை கோ ஆப்டெக்ஸ் தொடங்கியுள்ளது. 1979-80-ம் ஆண்டில் திருச்சியில் ரூ. 3·50 இலட்சம் செலவில் மாதிரி வடிவமைப்பு பணி நிலையம் ஒன்றை அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இது ரூ. 3.50 இலட்சம் செலவில் திருச்சியில் அமைக்கப்பட்டு வருகிறது. 1980-81ஆம் ஆண்டில் ரூ. 7 இலட்சம் செலவில் மேலும் இரண்டு மாதிரி வடிவமைப்பு நிலையங்கள் சேலத்திலும், கோவையிலும் அமைக்கப்படும்.

[1980 ஜூலை 25

(c) பாலியஸ்டர் துணி உற்பத்தி

1978 ஆம் ஆண்டு தீபாவளியின்போது பாலியஸ்டரில் பிரிண்டெட் சட்டைத் துணிகளை கோ ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தியது. தற்போது, 1,500 தறிகளில் பாலியஸ்டர் பிரிண்டெட், காம்ரிக்ஸ் போன்ற துணி வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. தற்போது ஆண்டொன்றுக்கு இந்த ரகங்களின் உற்பத்தி 10.50 லட்சம் மீட்டர்களாகும்.

(d) ஜனதா துணி உற்பத்தி

ஜனதா ரக வேஷ்டிகள், புடவைகள், லுங்கிகள் முதலியவற்றை உற்பத்தி செய்வதில் சுமார் 10,000 கைத்தறிகள் ஈடுபட்டுள்ளன. 1979–80ஆம் ஆண்டில் 111.58 இலட்சம் சதுர மீட்டர் ஜனதா ரகத் துணிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மக்கள் விரும்பும் ரகங்களை அறிமுகப்படுத்தும்பொருட்டும், மூலப்பொருட்கள் விலையேற்றம், கூலி உயர்வு இவற்றின் காரணமாக ஜனதா ரகங்களுக்கு அளிக்கும் மானியத்தை அதிகப்படுத்தும் பொருட்டும் மத்திய அரசுக்குச் செயற்குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. மத்திய அரசிடமிருந்து ஒப்புதல் பெறும் வகையில் பொருளாதார வகையில் நஷ்டத்தைத் தராத ரகங்கள் மட்டும் ஜனதா ரகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

(e) ஆயத்த ஆடை தயாரிப்புப் பிரிவுகள் :

1979–80-ம் ஆண்டில் சென்னையில் 120 தையல் ஓயந்திரங்கள் கொண்ட ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் பிரிவு ஒன்றை கோஆப்டெக்ஸ் நிறுவியுள்ளது.

(f) ஏற்றுமதி :

கோஆப்டெக்ஸ் ''கோஆப்டெக்ஸ் இன்டர்நேஷனல்'' என்ற பெயரில் ஒரு ஏற்றுமதிப் பிரிவை அமைத்துப் படிப்படியாக ஏற்றுமதியை அபிவிருத்தி செய்துவருகிறது. ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதில் முன்னேற்றம் கண்டிருப்பதுடன், 1979–80ஆம் ஆண்டில் ரூ. 2.60 கோடி மதிப்புள்ள கைத்தறித்துணிகளை ஏற்றுமதி செய்துள்ளது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் கோஆப்டெக்ஸ் கைத்தறித் துணிகள் ஏற்றுமதி ஆண்டுக்கு ரூ. 4 கோடி இலக்கை அடையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



1980 ஜூலை 25]

(g) கடன் விற்பனைத் திட்டம் :

அரசுப் பணியாளருக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் கோஆப்டெக்ஸ் மூலமாகக் கடனில் கைத்தறித் துணி விற்பனை செய்வதை அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கடன் விற்பனைக்கு நல்ல ஆதரவு இருப்பதுடன், இவ்வாண்டில் கடனில் கைத்தறித்துணிகள் விற்பனை ரூ. 8 கோடி அளவிற்கு உயர்ந்துவிட்டது.

(h) கொள்முதல் நடவடிக்கைகள் :

தொடக்க சங்கங்களிடமுள்ள துணித் தேக்கத்தைக் குறைக்கும் பொருட்டு கோஆப்டெக்ஸின் கொள்முதல் நடவடிக்கைகள் சீர்படுத்தப்பட்டுள்ளன. கோஆப்டெக்ஸ் ஒவ்வொரு காலாண்டிற்கும் தேவையான துணி வகைகளை வழங்குவதற்கும் சங்கங்களிடம் முன்பாகவே தேவைக் குறிப்புக் கொடுத்து, அவற்றை சங்கங்கள் உற்பத்தி செய்து தேவைக்குறிப்பில் குறிப்பிட்டுள்ள அளவுக்கு ஆடைகள் வழங்கும்படி செய்துள்ளது. ஆண்டிற்கு ரூ. 5 லட்சம் அல்லது அதற்குக் குறைவான உற்பத்தித் திறனுள்ள சங்கங்களைப் பொருத்தவரையில், அது முழு உற்பத்தியையும் கொள்முதல் செய்து அச்சங்கங்கள் தொடர்ந்து இயங்க உதவி செய்கிறது.

(ii) தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாடு கைத்தறி நிதி உதவி வர்த்தகக்' கழகம் என்பது, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு, கூட்டுறவு அமைப்பின்கீழ் வராத கைத்தறி, விசைத்தறி, உபதொழில்களுக்குத் தொடர்ந்து கடன் நிதி உதவி செய்து வருகிறது. 1978ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தால் வழங்கப்பட்ட கடன் ரூ. 119.30 இலட்சம் ஆகும். 1979ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்தக் கடன் ரூ. 205.97 இலட்சமாகும். தற்போது சலுகை வட்டிவீதத் திட்டத்தின்கீழ் ரூ.1000 வரை 15½ சதவீதம் வட்டிவீதத்தையும், அதற்குமேல் உள்ள கடன்களுக்கு 18½ சதவீதம் வட்டி வீதத்தையும் வசூலித்து வருகிறது. கூட்டுறவு அமைப்பின்கீழ் வராத நெசவாளர்களுக்கு, 1980ஆம் ஆண்டிற்கு ரூ. 850 இலட்சம் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**(iii) கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் :**

இந்திய அரசின் நிதி உதவியுடன் இம்மாநிலத்தில் நான்கு தீவிர கைத்தறி வளர்ச்சித் திட்டங்களையும் இரண்டு ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்களையும் அரசு நிறுவியுள்ளது. நெசவாளர்களுக்கு நூல் வழங்குதல், தறிகள் நிறுவப்படுவதற்கு முன்பும் தறிகள் நிறுவப்பட்ட பின்பும் தேவையான வசதிகளை அளித்தல், கடன் உதவி செய்தல், விற்பனை வசதிகளைச் செய்து கொடுத்தல் ஆகியவற்றை ஒரே அமைப்பின்கீழ் ஏற்படுத்தித் தருவதன் மூலம் ரூ. 300 அளவிற்கு மாத வருமானம் தரக்கூடிய அளவிற்குத் தொடர்ந்து, வேலைவாய்ப்பினை நல்கிடும் வகையில், சிவராமன் குழுவின் பரிந்துரைகளின் படி இத்திட்டங்கள் தொடங்கப்பட்டன.

இத்திட்டங்களுக்கு அரசு அனுமதித்த திட்டச்செலவு, நிதியுதவி ஆகியவை பற்றிய விவரங்கள் பின்வருமாறு :—

| திட்டத்தின் பெயர். | அனுமதியளிக்கப் பட்ட தறிகளின் எண்ணிக்கை. | திட்டத்தின் மொத்தச் செலவு. | அரசினால் வழங்கப் பட்ட நிதி உதவி. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், காஞ்சிபுரம் | 5,000 | 79.45 | 79.45 |
| 2. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், ஈரோடு | 5,000 | 106.00 | 105.80 |
| 3. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், சேலம் | 5,000 | 86.00 | 55.49 |
| 4. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம் மதுரை. | 5,000 | 120.00 | 61.85 |
| 5. ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், கரூர். | 1,000 | 40.75 | 40.75 |
| 6. ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், குறிஞ்சிப் பாடி | 1,000 | 32.12 | 32.12 |
| | 22000 | 464.32 | 375.46 |



இத்திட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளில் சேர்க்கப்பட்ட தறிகள் மற்றும் உற்பத்தி விவரங்கள் வருமாறு ;—

| திட்டத்தின் பெயர். | ஆண்டு இறுதியில் திட்டத்தில் சேர்க்கப்பட்ட தறிகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|
| | 1977 | 1978 | 1979 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், காஞ்சிபுரம் .. | 1,700 | 3,066 | 3,695 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், ஈரோடு .. | 600 | 1,218 | 2,531 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், சேலம் .. | .. | 613 | 1,664 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், மதுரை .. | .. | 586 | 1,441 |
| ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், கரூர் .. | 526 | 701 | 781 |
| ஏற்றுமதி உற்பத்தித் திட்டம் குறிஞ்சிப்பாடி .. | 169 | 703 | 1,222 |
| | 2,995 | 6,887 | 11,334 |

| திட்டத்தின் பெயர். | உற்பத்தி விவரம் உற்பத்தி அளவு இலட்சம் மீட்டரில் | | |
|---|---|---|---|
| | 1977 | 1978 | 1979 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், காஞ்சிபுரம் .. | 5.94 | 10.11 | 20.00 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், ஈரோடு .. | 5.71 | 6.00 | 10.00 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், சேலம் .. | .. | 1.94 | 8.50 |
| கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், மதுரை .. | .. | 1.17 | 5.00 |
| ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், கரூர் .. | 3.40 | 4.10 | 4.00 |
| ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், குறிஞ்சிப்பாடி .. | 0.14 | 1.74 | 4.00 |
| | 15.19 | 25.06 | 51.50 |

ஆறு கைத்தறி வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திலும் 31-3-80 ஆம் நாளன்று 12,300 கைத்தறிகள் சேர்க்கப்பட்டுள்ளன. அடுத்த மூன்று ஆண்டுகளில் இதன் எண்ணிக்கை 22,000 தறிகளாக அதிகரிக்கப்படும். தங்கள் பகுதிகளில் உள்ள வலுவற்ற செயலிழந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தறிகளை ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. தறி உரிமையாளர்களால் கைவிடப்பட்ட நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு, ஈரோடு கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், சென்னிமலை, திருச்செங்கோடு, பவானி மற்றும் திருப்பூர் ஆகிய இடங்களில் துணை நிலையங்களைத் தொடங்கியுள்ளது. மற்ற கைத்தறி வளர்ச்சித் திட்டங்களும் கீழ்க்கண்ட இடங்களில் துணை நிலையங்களைத் தொடங்கியுள்ளன.

| திட்டத்தின் பெயர். | துணை நிலையத்தின் பெயர். |
|---|---|
| 1. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், காஞ்சிபுரம் | 1. பொதட்டூர்பேட்டை<br>2. தக்கோலம்<br>3. பனப்பாக்கம்<br>4. அம்மையார் குப்பம்<br>5. அனகாபுத்தூர் |
| 2. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், ஈரோடு | 1. சென்னிமலை<br>2. திருச்செங்கோடு<br>3. பவானி<br>4. திருப்பூர் |
| 3. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், சேலம். | 1. பாப்பாரப்பட்டி<br>2. புதுச்சத்திரம்<br>3. தொளசம்பட்டி<br>4. வேலகவுண்டம்பட்டி |
| 4. கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டம், மதுரை | 1. நாகர் கோவில்<br>2. கடையநல்லூர் |
| 5. ஏற்றுமதி உற்பத்தித்திட்டம், கரூர் | |
| 6. ஏற்றுமதி உற்பத்தித்திட்டம், குறிஞ்சிப்பாடி. | 1. புவனகிரி<br>2. நடுவீரப்பட்டி<br>3. அன்னியூர்<br>4. திட்டக்குடி<br>5. சிறுப்பாக்கம் |



முதலில் மதுரையில் கூட்டுறவு அடிப்படையில் கைத்தறி வளர்ச்சித் திட்டம் தொடங்கியபொழுது, காஞ்சிபுரம், ஈரோடு, கரூர், சேலம், குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டங்களை செயல்படுத்தும் பணி, தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. கோஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மேம்பட்ட விற்பனை ஏற்பாடுகளையும் இத்திட்டங்களின் நீண்டகால வளர்ச்சியையும் கருத்தில்கொண்டு, அனைத்து கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டங்களையும் கைத்தறி ஏற்றுமதி வளர்ச்சித் திட்டங்களையும் கூட்டுறவுத் திட்டங்களாக மாற்ற முடிவெடுக்கப்பட்டது. இதற்கிணங்க, காஞ்சிபுரம், ஈரோடு, சேலம், குறிஞ்சிப்பாடி ஆகிய கைத்தறி வளர்ச்சித் தீவிர திட்டங்கள் ஏற்கெனவே கூட்டுறவுச் சங்கங்களாக பதிவு செய்யப்பட்டன. கரூர் திட்டமும் கூட்டுறவுத் திட்டமாக பதிவு செய்யப்பட்டு வருகிறது. கூட்டுறவு அமைப்புகளாக இத்திட்டங்கள் மாற்றப்பட்டதைக் கருத்தில்கொண்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் துணி விற்பனைக்கு அரசு வழங்கும் சிறப்புத் தள்ளுபடியைப் பயன்படுத்திக் கொள்வதன் மூலம் இத்திட்டங்கள், உற்பத்தியாகும் கைத்தறித் துணியை தற்போது விற்பனை செய்யலாம். இதனால், பிற தொடக்க நிலை நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களைப் போல், இத்திட்டங்களிலிருந்து கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்து, விற்பனை வசதிகளைச் செய்து கொடுக்க இயலும்.

## (iv) கூட்டுறவு நூற்பு ஆலைகள்.

### (எ) செயல்முறையும், திட்டங்களும் :

இந்த மாநிலத்தில் உள்ள 12 கூட்டுறவு நூற்பு ஆலைகள் 20 ஆம் எண் முதல் 120 ஆம் எண் வரை பல்வேறு ரக நூல்களை உற்பத்தி செய்து வருகின்றன. ரூபாய் 12 கோடி செலவிலான விரிவாக்கத் திட்டத்தை எடுத்துக்கொண்ட ஒன்பது கூட்டுறவு நூற்பாலைகள் திட்டப் பணிகளை முடித்துள்ளன. விரிவாக்கப்

பட்ட உற்பத்திப் பிரிவுகள் உற்பத்தியைத் தொடங்கி விட்டன. தற்போது 12 கூட்டுறவு நூற்பாலைகளின் நிறுவுத்திறன் 3.14 இலட்சம் கதிர்கள் ஆகும். கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த கூட்டுறவு நூற்பு ஆலைகள் செயல் திறன் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(ரூபாய் லட்சத்தில்,)

| | 1977 | 1978 | 1979 |
|---|---|---|---|
| 1. உற்பத்தி (மதிப்பு) | 2778.23 | 3337.17 | 3370.69 |
| 2. விற்பனை (மதிப்பு) | 2728.14 | 3423.56 | 3284.26 |
| 3. மொத்தம் (ஆதாயம்) | 90.41 | 442.75 | 745.99 |
| 4. வட்டி | 123.42 | 142.78 | 142.71 |
| 5. தேய்மானங்கள் | 80.99 | 99.04 | 124.23 |
| 6. நிகரஆதாயம் | (—) 114.00 | (+)200.91 | (+)479.05 |
| 7. பணிக்கமர்த்தப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை. | 8160 | 8794 | 9646 |

இதர நூற்பாலைகளுடன் விரிவாக்கும் திட்டத்தினை மேற்கொள்ளாத தென்ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலை இந்த ஆண்டு ரூ. 1,50 லட்சம் செலவில் 13,760 கதிர்திறனிலிருந்து 25,000 கதிர் திறனாக அதிகரிக்கும் விரிவாக்கும் திட்டத்தினை மேற்கொண்டுள்ளது. இந்த திட்டத்தினை புதுடில்லியிலுள்ள தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக்கழகம் ஏற்கெனவே அங்கீகரித்து தேவையான நிதி உதவியினை தமிழ்நாடு அரசிற்கு வழங்கியுள்ளது. தமிழ்நாடு அரசு ரூ. 51.45 இலட்சத்தை பங்கு மூலதனமாக இந்த நூற்பாலையில் முதலீடு செய்துள்ளது. மேலும் தமிழக அரசு மூலமாக விரிவாக்கும் திட்டத்திற்காக ரூ. 90 இலட்சம் கால கடன் உதவி கோரி இந்திய தொழில் நிதி உதவிக் கழகத்திடம் இந்த நூற்பு ஆலை மனு செய்துள்ளது. இந்த நூற்பாலை இதற்குத் தேவையான இயந்திரங்களுக்கு இயந்திர வினியோகஸ்தர்களுக்கு நிறுவன தேவைக்குறிப்பு ஆணைகளை அனுப்பியுள்ளது. 1980-ம் வருடத்தில் இந்த திட்டத்திற்குத் தேவையான இயந்திரங்கள் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



1979–80-ம் ஆண்டில் கன்னியாகுமரி, தஞ்சாவூர், தென் ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பு ஆலைகளில் ரூ. 24.00 இலட்சம் பங்கு மூலதனமாக அரசினால் முதலீடு செய்யப்பட்டுள்ளது. 160 அகதிகளின் வேலைவாய்ப்பினைக் குறித்த திட்டமும் முடிக்கப்பட்டது. உற்பத்தித் திறனையும் நூல் தரத்தினையும் உயர்த்தும் வகையில் ரூ. 6 கோடி முதலீட்டுச் செலவில் இயந்திரங்கள் நவீனமாக்கும் திட்டத்தினை 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளும் மேற்கொண்டுள்ளன. நவீன மயமாக்கும் திட்டத்தினைச் செயல்படுத்த ரூ.4 கோடி எளிய கடனாக 12 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு பம்பாய் இந்தியத்தொழில் வளர்ச்சி வங்கியினால் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆலைகளுக்கு நவீன மயமாக்கும் திட்டத்தின் கீழ் தேவையான இயந்திரங்களுக்குத் தேவைக் குறிப்புகள் ஏற்கனவே கொடுக்கப்பட்டுள்ளன. இயந்திரங்கள் பெறப்படுவதைப் பொறுத்து நவீனமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

சேலம் கூட்டுறவு நூற்பாலையில் 25,000 கதிர்திறன்களுடைய கூடுதல் பிரிவு ஒன்றை 1980–81-ம் ஆண்டில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1981–82-ல் 25,000 கதிர் திறன்களுடைய கூடுதல் பிரிவு ஒன்றை வடஆற்காடு கூட்டுறவு நூற்பு ஆலையில் நிறுவவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அடுத்து மூன்று ஆண்டுகளுக்குள் தமிழ்நாட்டின் பின் தங்கிய பகுதிகளில் பருத்தி வளர்ப்போருக்கென ஒரு கூட்டுறவு நூற்பு ஆலையும் செயற்கை நூல் உற்பத்தி செய்ய ஒரு கூட்டுறவு ஆலையும் ஆக இரு கூட்டுறவு நூற்பாலைகள் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(பி) சேலம் கைத்தறி பாவு கஞ்சி போடும் இயந்திரம் :

உற்பத்தியை மாற்றியமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக ரூ. 21 இலட்சம் அரசின் நிதிஉதவியுடன் கைத்தறி பாவு, கஞ்சி போடும் இயந்திரம் ஒன்றினை பதப்படுத்தப்பட்ட ஓடல் பாவுகளை கைத்தறிகளுக்கு வழங்கும் வகையில் சேலம் கூட்டுறவு நூற்பாலை நிறுவி வருகிறது. இந்த கைத்தறி பாவு கஞ்சி போடும் பிரிவு கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள தறிகளுக்குத் தேவையான பதனிடப்பட்ட பாவுகளை வழங்கும். இந்தத் திட்டம் விரைவில் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(சி) நவீன சாயச்சாலைகள்:

ரூ. 90 இலட்சம் மொத்தத் திட்டச் செலவில் அரசின் நிதியுதவியுடன் சேலம், திருநெல்வேலி, ஸ்ரீவில்லிப்புத்தூர், வேலூர் திருச்சி, கோவை மற்றும் மதுரை ஆகிய இடங்களில் நவீன சாயச் சாலைகள் நிறுவும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இந்த சாயச்சாலைகள் ஈரோட்டிலுள்ள தமிழ்நாடு கூட்டுறவுத் துணி செய்முறை ஆலையின் கிளைகளாக தற்பொழுது அமைக்கப்பட்ட போதிலும் மேற்படி நவீன சாயச்சாலைகள் அந்தந்த மாவட்டத் திலுள்ள கூட்டுறவு நூற்பு ஆலைகள் வசமே மாற்றப்படும் என்பதே இறுதி நோக்கமாகும். நெசவாளர் கூட்டுறவுச் சங்கங் களுக்குத் தேவையான சாயமிடப்பட்ட நூலை, பலதிறப்படுத்தும் திட்டத்தின் கீழ் கூட்டுறவு நூற்பாலைகளே வழங்கும் வகையில் உள்ள திட்ட நோக்கத்தின் அடிப்படையில் சேலம், வேலூர், ஸ்ரீவில்லிப்புத்தூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளின் கட்டிடத்திலேயே நவீன சாயச்சாலை கள் அமைக்கப்பட்டுள்ளன. அவை தங்களது பணிகளை விரைவில் தொடங்குமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதர சாயச் சாலைகள் 1980-81-ல் முடிக்கப்பட்டு செயல்படத் துவங்கும்.

(v) தமிழ்நாடு ஜரிகை நிறுவனம், காஞ்சிபுரம்.

தமிழ்நாடு ஜரிகை நிறுவனம் சுத்தமான பொன்னிழைகளை தொடர்ந்து உற்பத்தி செய்து கோஆப்டெக்ஸ் மூலமாக அனைத்து பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் விநியோகித்து வருகிறது. மொத்தமுள்ள 20 நூற்பு இயந்திரங்களில் சில தொழில் நுட்பச் சிக்கல்கள் காரணமாக 10 இயந்திரங்கள் மட்டுமே முன்பு இயங்கி வந்தன. அத்தொழில் நுட்பச் சிக்கல்கள் தற்பொழுது தீர்க்கப்பட்டு 20 நூற்பு இயந்திரங்களும் இயங்கி வருகின்றன. கடந்த மூன்று ஆண்டுகளில் ஜரிகை உற்பத்தி விவரங்கள் பின்வருவாறு :—

| வருடம், | உற்பத்தி (மார்க்குகள்), | விற்பனை (மார்க்குகள்), | விற்பனை (மதிப்பு ரூபாய் இலட்சத்தில்), |
|---|---|---|---|
| 1977-78 | 1411 | 1426 | 6.58 |
| 1978-79 | 1640 | 1645 | 9.79 |
| 1979-80 | 2540 | 2387 | 20.39 |





உற்பத்தியைப் பெருக்குவதற்காக 1-12-1979 முதல் இரண்டாவது முறை மாற்றுப்பணி ஆரம்பிக்கப்பட்டு 1979 டிசம்பர் திங்களி லிருந்து மாத உற்பத்தி 150 மார்க்கிலிருந்து 500 மார்க்காக அதிகரித்துள்ளது. மொத்த உற்பத்தியும் கோஆப்டெக்ஸ் மூலமாக பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்கப் படுகிறது.

(vi) தமிழ்நாடு கூட்டுறவு துணி பதனிடும் ஆலை, ஈரோடு

இவ்வாலையில் கீழ்க்காணும் தயாரிப்பு முறைகள் உள்ளன:

1. வெளுப்பாக்குதல், சாயமிடல் :

பலதரப்பட்ட முறைகளின் உற்பத்தித்திறனை சமமாகப் பயன் படுத்தி ஒரு மாதத்திற்கு 5லட்சம் மீட்டர் உற்பத்தியை 10லட்சம் மீட்டருக்கு அதிகப்படுத்த வேண்டி தேசீயக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து ரூ.22.50 இலட்சம் நிதியுதவியுடன் விஸ்தரிப்புத் திட்டம் ஒன்றை செயல்படுத்தியுள்ளது. துணிகளில் அச்சிடும் பிரிவும் (Screen printing) அமைக்கப்பட்டுள்ளது. விரிவாக்கத் திட்டம் முடிவடைந்தவுடன் இதன் மாத செயல் திறன் பின் வருமாறு :—

| | | |
|---|---|---|
| 1. வெளுப்பாக்குதல் | .. | ஒரு மாதத்திற்கு 10 இலட்சம் மீட்டர்கள். |
| 2. சாயமிடுதல் | .. | ஒரு மாதத்திற்கு 5 இலட்சம் மீட்டர்கள். |
| 3. துணிகளில் அச்சிடுதல் | .. | ஒரு மாதத்திற்கு 50,000 மீட்டர்கள். |
| 4. சிட்ட நூல் சாயமிடல் | .. | ஒரு மாதத்திற்கு 250 பேல்கள். |

துணி பதனிடும் ஆலையின் செயல்படுமுறை விவரம் பின் வருமாறு:—

| வருடம். | பதனிடப்பட்ட துணியின் அளவு (மீட்டர் இலட்சத்தில்!) | சாயமிடப்பட்ட நூலின் அளவு (எண்ணிக்கை கட்டுகளில்.) |
|---|---|---|
| 1977-78 | 17.15 | 15,569 |
| 1978-79 | 28.27 | 13,000 |
| 1979-80 | 35.00 | 26,800 |

பல இடங்களிலுள்ள கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் பாலியெஸ்டர் இழை சேர்ந்த துணிகள், சட்டைத் துணிகள், ஷூட்டிங் துணி வகைகள், புடவைகள் போன்றவற்றை உற்பத்தி செய்யத் தொடங்கிவிட்டன. அவைகள் சந்தையில் நல்ல விலைக்கு ஏராளமாக விற்பனையாகின்றன. கைத்தறிகளில் உற்பத்தியாகும் துணிகளை செய்முறைப்படுத்துவதற்கு இப்போது பம்பாய்க்கு அனுப்பப்பட்டு வருகின்றன. இதனால் போக்குவரத்து மற்றும் இதர செலவுகள் அதிகமாகியுள்ளன. எனவே பாலியெஸ்டர் இழை சேர்ந்த துணிகளை செய்முறைப்படுத்த ரூ. 31 இலட்சம் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தும் பிரிவு ஒன்றை அமைப்பதற்குரிய திட்டத்தை ஆலை நிறைவேற்றி வருகிறது. இதற்குத் தேவையான இயந்திரங்களை வாங்குவதற்குரிய ஆணைகள் கொடுக்கப்பட்டு, கட்டிட வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 31–12–80–க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் முடிவடைந்தவுடன் இப்பிரிவில் நாளொன்றுக்கு சுமார் 10,000 மீட்டர் பாலியெஸ்டர் துணிகளை செய்முறைப்படுத்தப்படும்.

### (vii) தமிழ்நாடு துணி ஆலை நிறுவனம்.

புதுக்கோட்டையில் 25,200 நூற்பு கதிர்கள் திறனுள்ள காவேரி நூற்பு நெசவு ஆலையையும், 13,260 நூற்பு கதிர்கள் திறனுள்ள சோமசுந்தரம் சூப்பர் நூற்பு ஆலையையும் தமிழ்நாடு துணி ஆலை நிறுவனம் எடுத்துக் கொண்டு அவற்றை நடத்தி வருகின்றது. மேற்கண்ட ஆலைகளுக்கு தமிழ்நாடு அரசு ரூ.87.71 இலட்சம் நிதியுதவிக்கு உத்தரவாதம் அளித்துள்ளது. கடந்த மூன்று ஆண்டுகளில் இந்த நிறுவனத்தின் செயல்முறை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| வருடம்: | வட்டியும் இதர வருமானங்களும். | வட்டியும் இதர செலவினங்களும். | இலாபம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1977–78 | 42.47 | 39.41 | 3.16 |
| 1978–79 | 36.02 | 33.03 | 2.99 |
| 1979–80 | 14.41 | 8.47 | 5.94 |



12 கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கும் மேற்கண்ட இரு ஆலைகளுக்கும் பஞ்சு வாங்கி விநியோகிக்கும் பொறுப்பை, தமிழ்நாடு துணி ஆலை நிறுவனத்தின் பஞ்சு கொள்முதல் பிரிவு ஏற்று நடத்தி வருகிறது. இந்த ஆலை ரூ. 8.25 இலட்சம் செலவில் பருத்தி நூல் பரிசோதனை செய்யும் பரிசோதனை கூடத்தை கோவையில் அமைத்து வருகிறது. தமிழகத்தில் பிற்பட்ட பகுதிகளான அருப்புக்கோட்டை, ஈரோடு, சிவகிரி, திருச்செங்கோடு, தளவாய்புரம், ஜெயங்கொண்டசோழபுரம், ஐக்கம்பட்டி, சங்கரன்கோயில், ராசிபுரம், குடியாத்தம், தாராபுரம் ஆகிய 10 இடங்களில் ரூ. 175 இலட்சம் மூலதனச் செலவில் விசைத்தறி கூடங்கள் அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது. இவைகள் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 15 கோடி மதிப்புள்ள பல்வகை நவீனரகத்துணிகளை உற்பத்தி செய்து படிப்படியாக முன்னேறி இயந்திர ஆலைகளின் உற்பத்தியுடன் போட்டியிடும் நிலைக்கு உயரும். 1980–81-ம் ஆண்டில் 4 விசைத்தறிக் கூடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

### IV. மூடப்பட்ட துணி ஆலைகளை மீண்டும் திறத்தல்;

பல ஆண்டுகளாகத் தமிழ்நாட்டில் மூடப்பட்டிருந்த 16,365 தொழிலாளர்கள் பணிபுரியும் 10 ஆலைகளுக்கு அரசு வணிக வங்கிகளின் பெயருக்கு உத்திரவாதம் அளித்ததன் காரணமாக இவ்வாலைகள் 1976, 1977–ல் மீண்டும் திறக்கப்பட்டு செயல்படத் தொடங்கின. இவ்வகையில் 10 ஆலைகள் திறக்கப்படுவதற்கு அரசு 304.33 இலட்சத்திற்கு நிதி உத்தரவாதம் அளித்துள்ளது. தமிழ்நாடு, 1969 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள்(தனிவிதிகள்) ட்டத்தின்கீழ் தமிழக அரசு 7 ஆலைகளை நிவாரண நிறுவனங்களாக அறிவித்துள்ளது. அரசு அளித்த உத்திரவாதத்தின் பேரில் திறக்கப்பட்ட ஆலைகள் தாமாகவே தேவையான நிதியை ஈட்ட வேண்டும் என்றும் தொடர்ந்து அரசு உத்தரவாதத்தையோ கடனையோ நம்பி செயல்படக் கூடாது என்றும் அரசு கருதியது. ஆகவே இத்துணி ஆலைகளின், செயல்முறைகள் குறித்தும் அவற்றின் நீண்டகால அடிப்படையில் சீரமைப்பது குறித்தும் ஆய்ந்து உகந்த திட்டங்கள் பரிந்துரைக்கும் பொருட்டுத் தமிழக அரசு, டாக்டர் அழகப்பச் செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரியைச்சேர்ந்த, டாக்டர் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களை தலைவராகக் கொண்ட குழு ஒன்றை அமைத்தது. இக்குழு அரசு உத்தரவாதத்துடன் மீண்டும் திறக்கப்பட்ட இவ்வாலைகளின்

தற்போதைய செயல்முறைகள் பற்றி ஆராய்ந்து தனது பரிவுரைகளை அரசுக்குத் தெரிவித்துள்ளது. அரசு உத்தர வாதத்தின் பேரில் திறக்கப்பட்ட இவ்வாலைகள் கடந்த இரண்டாண்டுகளில் அவற்றின் உற்பத்தியையும் உற்பத்தித் திறனையும் ஆதாய விகிதத்தையும் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக அரசு இவ்வாலைகளுக்கு அளித்த நிதி உத்தர வாதத்தை நிறுத்திவிட முடிவு செய்துள்ளது. பிரகாஷ் ஆலை, ரவீந்திரா ஆலை, கோவை மற்றும் சக்தி ஆலை ஆகியவற்றிற்கு அளித்த நிதி உத்தரவாதம் ஏற்கனவே நிறுத்தி விடப்பட்டது. கோவையிலுள்ள கமலா ஆலைக்கு அளிக்கப்பட்ட உத்தரவாதம் விரைவில் நிறுத்தப்படும். கோவையிலுள்ள ஜனார்த்தனா ஆலை, மது ஆலை ஆகியவற்றைப் பொறுத்தமட்டில் அவற்றிற்கு அளிக்கப்பட்டுள்ள உத்தரவாதத்தை பெயரளவுத் தொகைக்கு மட்டும் உத்தரவாதத்தைத் தொடர்ந்து அளிக்கவும், வெளிக் கடன்காரர்கள் மேற்படி ஆலையின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதைத் தடுக்கும் பொருட்டு தொடர்ந்து கடன் தவணை கால நீடிப்பு அளிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. லோட்டஸ் ஆலைக்கும் கொடுக்கப்பட்டுள்ள அரசு உத்தரவாதத்தை நிறுத்தி விடுவது பற்றி சம்பந்தப்பட்ட வங்கியுடன் கலந்தாலோசிக்கப் பட்டு வருகிறது.

மேலே குறிப்பிட்ட ஆலைகள் தவிர சென்னையில் உள்ள பின்னி நிறுவனத்திற்கும் மதுரையில் உள்ள ஸ்ரீ மீனாட்சி ஆலைக்கும் அரசு உத்தரவாத உதவி அளித்துள்ளது. 1977-ஆம் ஆண்டு அடைமழை மற்றும் வெள்ளத்தினால் பின்னி ஆலை மூடப்பட்ட பொழுது பாரத ஸ்டேட் வங்கி ஒரு கோடி ரூபாய் கடனாக இவ்வாலைக்கு கொடுத்தது. இந்தத் தொகைக்கு அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. மேலும் மாநில அரசும், மத்திய அரசும் இந்தக் கடன் மீதான வட்டியை 3 ஆண்டுகளுக்கு சம விகிதத்தில் கொடுக்க இசைந்துள்ளனர். இந்திய தொழில் அபிவிருத்தி வங்கி இந்நிறுவனத்திற்கு சீரமைப்பு போன்ற திட்டங் களுக்காக ரூ. 3 கோடி கடனுதவி அளித்துள்ளது, இந்தக் கடன் மீதான வட்டியையும் மாநில அரசும் மத்திய அரசும் 3 ஆண்டு களுக்கு சம அளவில் கொடுக்க இசைந்துள்ளன. இந்தியத் தொழில் நிதி உதவிக்கழகம் ஸ்ரீ மீனாட்சி ஆலைக்கு கொடுத்த ரூ. 55 லட்சம் கடனுக்கு மாநில அரசு உத்தரவாதம் அளித்துள்ளது. ஸ்ரீ மீனாட்சி ஆலை சொத்துக்களை மேற் குறிப்பிட்ட கழகத்திற்கு அடமானம் செய்தவுடன் அரசின் உத்தரவாதம் நீங்கிவிடும்.



## V. தனியார் துறையில் துணி தயாரிக்கும் ஆலைகள்/புதிதாக அமைத்தல் தனியார் ஆலைகளை விரிவுபடுத்தல்.

புதிய நூற்பு ஆலைகளை நிறுவுவதற்கு உரிமம் வழங்குவது ரத்து செய்யப்பட்டதன் விளைவாக துணிநூல் ஆணையாளர், புதிய நூற்பாலைகள் நிறுவவும் ஏற்கனவேயுள்ள நூற்பாலைகளை விரிவுபடுத்தவும் சம்பந்தப்பட்ட மாநில அரசின் பரிந்துரையின் பேரில் அனுமதி வழங்குகிறார். இந்திய அரசு உரிமம் வழங்கும் கொள்கையை ரத்து செய்துவிட்டதன் காரணமாக நமது மாநிலத்தில் புதிய நூற்பாலைகள் நிறுவவும் ஏற்கனவே யுள்ள நூற்பாலைகளை விரிவுபடுத்தவும் அதிக தொழிலதிபர்கள் முன் வந்துள்ளனர். பின் தங்கிய பகுதிகளில் புதிய நூற்பாலைகள் நிறுவ ஊக்கமளிப்பது மாநில அரசின் கொள்கையாகும். 1979-ம் ஆண்டு கைத்தறி துணிநூல் இயக்குநர் அலுவலகம் 60 விண்ணப்பங்களுக்கு (19 ஆலைகளை விரிவுபடுத்துவதற்கான விண்ணப்பங்கள், 41 ஆலைகள் புதிதாக நிறுவ விண்ணப்பங்கள்) பரிந்துரைத்து அவற்றைத் துணிநூல் ஆணையாளருக்கு அனுப்பியது. அவற்றில் ஏற்கெனவே உள்ள 16 நூற்பாலைகளை விரிவுபடுத்தவும் 36 நூற்பாலைகளை புதிதாக நிறுவவும் துணிநூல் ஆணையாளர் 1979-ல் அனுமதி வழங்கியுள்ளார். இந்த புதிய நூற்பாலைகளினாலும் விரிவாக்கத் திட்டங்களினாலும் சுமார் 19,000 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

## VI. சட்ட ரீதியான பாதுகாப்பு.

கைத்தறித் தொழிலாளர்களின் வேலை நிலைமைகளை முறைப்படுத்த ''தமிழ்நாடு கைத்தறித் தொழிலாளர்கள் (வேலை நிலைமைகளும் பல்வகை விதித்துறைகளும்)சட்டமுன்வடிவு, 1979' 28-4-79 அன்று சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டது. இச்சட்ட முன் வடிவினை கூட்டு ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்காக சட்ட மன்றம் அனுப்பிவைத்தது. இக்குழு ஏறக்குறைய எல்லா மாவட் டங்களிலும் சுற்றுப்பயணம் செய்து சாட்சியங்களைப் பதிவு செய்தது. ஆனால் சட்ட மன்றம் கலைக்கப்பட்டதின் காரண மாக இக்குழு தனது அறிக்கையை சமர்ப்பிக்க முடியவில்லை. மேற்கண்ட சட்ட முன்வடிவும் காலாவதியாகிவிட்டது. மேற்கண்ட குழுவின் முன், கூறப்பட்ட ஆலோசனைகளையும், மைய அரசு இந்தச் சட்ட முன் வடிவின் மீது கூறியுள்ள கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு திருத்தப்பட்ட சட்ட முன்வடிவு

ஒன்றினை மீண்டும் சட்டமன்றத்தில் கொணரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

முடிவுரை :

மூலப் பொருட்களை தொடர்ந்து வழங்குதல், விற்பனை வசதி செய்து கொடுத்தல், தொழில் நுட்ப முறையை உயர்த்தி உற்பத்தியில் முன்னேற்றம் காணல், தேவையான செய்முறை வசதிகளைச் செய்து கொடுத்தல் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு மாநிலத்தில் செயல்படுத்தப்படும் பல்வேறு கைத்தறி தொழில் வளர்ச்சித் திட்டங்கள் காரணமாக தமிழ்நாட்டில் கைத்தறித் தொழில் பாமர மக்களுடைய துணித் தேவையை நிறைவு செய்வதுடன் கைத்தறி நெசவாளர்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்தும்.



கைத்தறி மற்றும் பஞ்சாலைத் துறையின்கீழ் இயங்கும் சார்பு நிறுவனங்களின் வளர்ச்சி.

| | 1977–78. | 1978–79. | 1979–80. | 1980–81 (எதிர்பார்க்கப்படுதல்). |
|---|---|---|---|---|
| **1. தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்—** | | | | |
| 1. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை .. .. | 946 | 993 | 1052 | 1135 |
| 2. தறிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) .. | 2.07 | 2.19 | 2.40 | 2.62 |
| 3. உற்பத்தி (ரூபாய் இலட்சத்தில்).. | 42,14.55 | 44,85.50 | 52,00.00 | 56,00.00 |
| 4. விற்பனை ( ,, ) | 44,28.12 | 53,42.51 | 60,00.00 | 65,00.00 |
| 5. பயன்படுத்தபபட்டுள்ள நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்). | 14,86.71 | 16,96.71 | 16,95.00 | 22,58.00 |
| **2. கோ-ஆப்டெக்ஸ்—** | | | | |
| 1. கொள்முதல் (ரூபாய் இலட்சத்தில்). | 18,31.00 | 27,51.00 | 29,00.00 | 30,00.00 |
| 2. விற்பனை ( ,, ). | 23,01.00 | 34,80.00 | 35,00.00 | 38,00.00 |
| 3. பயன்படுத்தப்பட்டுள்ள நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்) | 750.00 | 900.00 | 12,00.00 | 13,00.00 |
| **3. கூட்டுறவு நூற்பாலைகள்—** | | | | |
| 1. கதிர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்). | 2.37 | 2.62 | 3.14 | 3.26 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. போட்ட முதலீடு (ரூபாய் இலட்சத்தில்). | 17,14.95 | 20,23.80 | 20,63.27 | 22,50.00 |
| 3. உற்பத்தி ( ,, ). | 27,78.23 | 33,37.17 | 33,70.69 | 35,00.00 |
| 4. விற்பனை ( ,, ). | 27,28.14 | 34,23.56 | 32,84.26 | 36,00.00 |
| 5. பயன்படுத்தப்பட்டுள்ள நடைமுறை மூலதனம் (ரூபாய் இலட்சத்தில்). | 775.00 | 925.00 | 935.00 | 10,00.00 |
| 6. கூட்டுறவு நூற்பாலைகளின் ஆதாயம் .. .. .. | —114.00 | +200.91 | +479.05 | — |
| 7. வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை .. | 8,160 | 8,794 | 9,646 | 9,800 |
| . தமிழ்நாடு கூட்டுறவு துணி செய்முறைப்படுத்தல் ஆலை, ஈரோடு— | | | | |
| துணிகளை வெளுப்பாக்குதலும், சாயமிடுதலும் (இலட்சம் மீட்டரில்). | 17.15 | 28.27 | 35.00 | 40.00 |
| 5. தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி நிறுவனம்— | | | | |
| 1. வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை .. | 1,429 | 1,742 | 2,253 | 2,500 |
| 2. வழங்கப்பட்ட கடன் தொகை (ரூபாய் இலட்சத்தில்). .. .. | 93.37 | 119.30 | 205.97 | 250.00 |
| 6. தமிழ்நாடு ஜரிகை நிறுவனம், காஞ்சிபுரம்— | | | | |
| 1. சரிகை உற்பத்தி (மார்க்குகளில்). | 1411 | 1640 | 2540 | 5000 |
| 2. விற்பனை மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்). | 6.58 | 9.79 | 20.39 | 41.00 |



## இணைப்பு II

(563-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 27.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

கொள்கையும் திட்டங்களும்.

1. கதர் மற்றும் கிராமத் தொழில்களின் வளர்ச்சிக்காக 1960ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் கதர் கிராமத் தொழில் வாரியம் ஏற்படுத்தப்பட்டது. இவ்வாரியத்தின் முக்கிய நோக்கம் கிராமப்புறங்களில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு திட்டமிட்டு தக்க அமைப்பினை ஏற்படுத்தி பயிற்சி அளித்து செயல்படுத்துவதன் மூலம் கிராமப்புறங்களில் அதிக வேலை வாய்ப்பினை ஏற்படுத்துவதாகும்.

2, 1960–61-ம் ஆண்டில் ரூ. 110.53 இலட்சமாக இருந்த கதர் உற்பத்தி 1977–80ஆம் ஆண்டில் ரூ. 519.49 லட்சமாகவும் கதர் விற்பனை மேல்குறிப்பிட்ட ஆண்டுகளில் ரூ. 102.12 இலட்சத்திலிருந்து ரூ. 615.24 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. அவ்வாறே 1960–61ஆம் ஆண்டு ரூ. 277.81 இலட்சம் ஆக இருந்த கிராமப் பொருட்களின் உற்பத்தி 1979–80ஆம் ஆண்டில் ரூ. 3,273.39 இலட்சமாகவும் விற்பனை ரூ. 304.74 இலட்சத்திலிருந்து ரூ. 3,546.28 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. 1979–80ஆம் ஆண்டில் வாரியம் 37,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்தது. இத்தொழிலில் இதுவரை 3,93,592 பேர்கள் வேலை வாய்ப்புப் பெற்று பயன் அடைந்துள்ளார்கள். புதிதாக அலகுகள் தொடங்குவதாலும் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தொழில் புரியும் கைவினைஞர்களுக்கு நிதி உதவியினை உயர்த்தியதாலும் கதர் மற்றும் கிராமத் தொழில்களின் உற்பத்தி 1980–81ஆம் ஆண்டில் முறையே ரூ. 650 இலட்சமாகவும் ரூ. 3709 இலட்சமாகவும் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதே ஆண்டில் விற்பனை முறையே ரூ. 700 லட்சமாகவும் ரூ. 3901 இலட்சமாகவும் இருக்குமென எதிர் பார்க்கப்படுகிறது. 1980–81ஆம் ஆண்டில் மேலும் 35,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 3. கதர் :

துறைப் பிரிவுகள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கதர் உற்பத்தி செய்யப்படுகிறது. கைராட்டை நூல் அம்பர் நூல் ஆகியவற்றை இவ்வாரியத்தின் 78 நூற்பு நிலையங்கள் மூலம் நூற்போரிடமிருந்து அடக்க விலையில் வாங்குகிறது. வாரியம்

1980 ஜூலை 25]

தற்போது 328 கிராமிய நூற்பு நிலையங்களை நடத்தி வருகிறது. ஒவ்வொரு நிலையத்திலும் 32 கைவினைஞர்கள் பெரும்பாலும் பெண்கள் உலோகத்திலான இராட்டைகளை இயக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இவ்வித இராட்டையில் நூற்கும் நூற்பாளர் ஒவ்வொருவருக்கும் ஒரு நாளைக்கு ரூ. 3.50-லிருந்து 4 வரை ஊதியம் பெற இயலும் அவ்வாறு கிராமிய நூற்பு நிலையங்களில் உற்பத்தி செய்து பெறப்பட்ட நூல் இவ் வாரியத்தின் கீழ் இயங்கும் 78 உற்பத்திக் கேந்திரங்களின் வழியாக நெசவாளருக்கு விநியோகம் செய்யப்படுகிறது. ஒரு நெசவாளரின் தின வருவாய் சுமார் ரூ. 12 வரை இருக்கும். இவ்வாரியம் பட்டுநூல் கொள்முதல் செய்து தன்கீழ் இயங்கும் 9 உபகிளை உற்பத்தி அலகுகளின் மூலமாக கதர் பட்டு உற்பத்தி செய்கிறது. 1979–80 ஆம் ஆண்டின் கதர் பட்டு உற்பத்தி ரூ. 109.78 இலட்சங்களாகும். 1980–81ஆம் ஆண்டின் உற்பத்திக் குறியீடு ரூ. 170 இலட்சங்களாகும்.

4. உற்பத்தி செய்யப்பட்ட கதர், வாரியத்தின் இரண்டு சாயச் சலவை அச்சுக் கூடங்களில் முறைப்படுத்தப்படுகிறது. 1979–80 ஆம் ஆண்டுகளில் இவ்வாரியம் ரூ. 15.60 இலட்சம் மதிப்புள்ள ஆயுத்த ஆடைகளை தயாரித்தது. 1979–80 ஆயு ஆண்டில் பண்டிகைக் காலங்களில் ரூ. 89 இலட்சம் மதிப்புள்ள அச்சிட்ட மற்றுய் சாயமிடப்பட்ட கதர்ரணிகள் விற்பனை செய்யப்பட்டது.

5. ஆண்டு முழுவதும் கதர் துணி விற்பனையில் 10 விழுக்காடு கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு தள்ளுபடி அளிக்கிறது. இது தவிர பண்டிகைக் காலங்களில் அனைத்து ரக கதர் விற்பனையில் மேலும் 10 விழுக்காடு தள்ளுபடி அளிக்கிறது. கடந்த 1977 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டிலும் 60 நாட்களுக்கு அளிக்கப்படும். சிறப்புத் தள்ளுபடியைத் தவிர, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, திரு. காமராஜ் போன்ற தலைவர்களின் பிறந்த நாள் விழாக் காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் 15 நாட்களுக்கு சிறப்பு தள்ளுபடியாக 10 விழக்காடு தமிழ் நாடு அரசு அனுமதித்துள்ளது.

6. 1979–80 ஆம் ஆண்டில் 155 விற்பனை நிலையங்களின் மூலமாக ரூ. 615.24 இலட்சம் மதிப்புள்ள கதர் விற்பனை செய்யப்பட்டது நூற்போர், நெசவாளர்கள், நூலைச் சிட்டமிடுவோர், சாயமிடுவோர், வெளுப்போர், தையற்காரர்கள் போன்ற கிட்டதட்ட அரை இலட்சம் பேர்களுக்கு கதர் திட்டங்கள் பகுதி நேர மற்றும் முழு நேர வேலை வாய்ப்பளிக்கின்றன—.

7. 1979–80 ஆம் ஆண்டில் 130 புதிய கிராமிய நூற்பு நிலையங்கள் துவக்க 130 செட் உலோக ராட்டைகள் உற்பத்தி செய்ய கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அனுமதி அளித்துள்ளது.



1980 ஜூலை 25] கிராமத் தொழில்கள.

8. எதுவும் முறையாக பயன்படுத்தப்பட்டால் வீணாவதில்லை என்ற நடைமுறைத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு கிராமத் தொழில் அனைத்து திட்டங்களும் அமைக்கப் பட்டுள்ளன. வீணாவதைத் தடுத்து அவற்றை முழுமையாகப் பயன்படுத்தவும் நாட்டின் நலனை மேம்படுத்தவும் கிராமப் புறத்திலுள்ள கைவினைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்பினை தோற்றுவிக்கவும் கிராமத் தொழில்கள் ஊக்குவிக்கப்படுகின்றன.

9. கதர் கிராமத்தொழில் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட 22 வகையான கிராமத் தொழில்களில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கீழே விவரிக்கப்பட்டுள்ள 14 கிராமத் தொழில்களை வாரியத்தின் துறை பிரிவுகள் கூட்டுறவுத் தொழிற் சங்கங்கள் மூலமாகவும் மற்றும் தனி நபர் கைவினைஞர்களுக்கு நிதி உதவி வழங்கியும் நடத்தி வருகிறது.

(1) பனைத் தொழில்.

(2) செக்கு எண்ணெய்.

(3) கைக்குத்தல் அரிசி மற்றும் தானியங்களையும் பருப்பு வகைகளையும் செய்முறைப்படுத்துதல்.

(4) தோல் தொழில்.

(5) மண்பாண்டம் (செங்கற்கள், ஓடுகள்).

(6) சுண்ணாம்புக்கல் மற்றும் சுண்ணாம்புச் சூளை (காளவாய்)

(7) தேனீ வளர்த்தல்.

(8) தச்சு, கருமார் தொழில்.

(9) பழங்களை பதப்படுத்துதலும் பாதுகாத்தலும்.

(10) கையால் செய்யப்பட்ட காகிதம்.

(11) வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை.

(12) சமையலுக்கு பயன்படாத எண்ணெய், சோப்பு.

(13) நார்த் தொழில்.

(14) பிரம்பு, மூங்கில்.

[1980 ஜூலை 25

10. இவை தவிர தமிழ்நாடு அரசு அங்கீகரித்துள்ள கீழ்கண்ட தொழில்களையும், கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் நிதி உதவி இன்றி இவ்வாரியமே செயல்படுத்துகிறது.

(1) ஊதுபத்தி.

(2) சிகைக்காய்த் தூள்.

(3) பற்பொடி.

(4) நீலகிரித் தைலம்.

11. 1980 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் தேதியில் 163 துறைப் பிரிவுகளும் 3,308 பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு தொழிற் சங்கங்களும் உள்ளன. அவைகளின் மூலம் 1979–80 ஆம் ஆண்டில் ரூ. 3,273.39 இலட்சம் மதிப்புள்ள கிராமப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன. அதே ஆண்டில் விற்பனையின் மதிப்பு சுமார் ரூ. 3,546.28 இலட்சங்களாகும். இதனால் கிராமத் தொழில் துறையில் 3,58,820 பேர்களுக்கு வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டது.

12. அரசு தனது பண்டகப் பொருட்கள் வாங்கும் கொள்கையை திருத்தி அமைத்ததின் பயனாக அரசுத் துறைகள், உள்ளாட்சி மன்றங்கள், நிறுவனங்கள், சட்டப்படி அமைந்த வாரியங்கள் முதலியவற்றிற்குத் தேவையான பொருட்கள் வாரியத்திலிருந்தோ அல்லது அதன் நிதி உதவிப் பெற்ற பிரிவிடமிருந்துதான் வாங்கவேண்டுமென்று ஆணையிட்டதை யொட்டி வாரியத்தின் கீழ் இயங்கும் அலகுகள் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தியைப் பெருக்கிட வாரியம் தக்க நடவடிக்கை எடுத்துள்ளது. அரசு மருத்துவ மனைகளுக்கு தேவைப்படும். ரொட்டியினை விற்பனை செய்ய ஏற்கெனவே, வாரியத்தி கீழ் இயங்கி வந்த கைக்குத்தலரிசி கூட்டுறவு சங்கங்களுக்கு மேலும் நிதி உதவி அளித்து அவற்றின் மூலம் 11 ரொட்டி சுடும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 9 ரொட்டி சுடும் நிலையங்கள் 1980–81-ல் விரைவில் அமைக்கப்பட உள்ளன. ஏற்கெனவே தமிழ் நாட்டிலுள்ள சில மருத்துவ மனைகட்கு ரொட்டி விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. மேலும் வருகிற 2–10–1980-க்குள் தமிழ்நாட்டிலுள்ள எல்லா மருத்துவ மனைகட்கும் தேவையான ரொட்டிகளை விற்பனை செய்ய இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசின் மருத்துவ மனைகள், சிறைச் சாலைகள் முதலிய துறைகளுக்குத் தேவையான பருப்பு வகைகள் விற்பனை செய்ய 10 கூட்டுறவு சங்கங்களுக்கு தேவையான நிதி உதவி அளித்து பருப்பு செய்முறைப்படுத்தும் நிலையங்கள் துவக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாரியத்தின் துறைப் பிரிவுகளின் சோப்பு உற்பத்தி ரூ. 60 லட்சத்திலிருந்து 1979-80–ம் ஆண்டில்



ரூபாய் 108·07 இலட்சங்களாக உயர்த்தப்பட்டுள்ளது கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் நிதி உதவி பெற்று கையால் காகிதம் செய்யும் 5 கூடுதல் அலகுகள் துவக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வலகுகள் 1980–81 ஆம் ஆண்டில் இயங்கத் தொடங்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## 13. பனைத் தொழில்.

தமிழ் நாட்டில் தற்போதுள்ள 4 கோடிக்கு அதிகமாக உள்ள பனை மரங்களில் 2 கோடி பனைமரங்கள் பயன்படுத்த தகுதிவாய்ந்தவையாக இருந்தும் 60 லட்சம் மரங்கள்தான் பயன்படுத்தப்படுகிறது. இப்பனைத் தொழில் சுமார் 2·86 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. வரும் திட்ட காலத்தில் மேலும் இரண்டு கோடி மரங்களை பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 1979–80-ம் ஆண்டில் ரூ. 40 லட்சம் மதிப்புள்ள நார் சம்பந்தப்பட்ட பொருட்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. சென்னை, மதுரை, சேலம், கோயம்புத்தூர் முதலிய இடங்களில் தற்பொழுது செய்யப்படும் பாம் கோலா பானம் தயாரிக்கும் 4 அலகுகள் தவிர 1979–80–ம் ஆண்டில் மேலும் ஒரு அலகு திருச்சியில் துவக்கப்பட்டு மொத்தம் 5 அலகுகள் தற்போது திருப்திகரமாக செயல்படுகின்றன.

## 14. கிராம எண்ணெய் தொழில் (செக்கு)

இத்தொழில் அளிக்கும் வேலை வாய்ப்பினையும் நுகர்வோரின் செக்கெண்ணெய் தேவையையும் கருத்திற் கொண்டு ஆறாவது திட்ட காலத்தில் மேலும் 10,000 மின் விசை செக்குகளை விநியோகிக்கும் பெரியதொரு திட்டத்தை வாரியம் தயாரித்து உள்ளது. இதுவரை 1,278 விசைச் செக்குகள் வழங்கப்பட்டுள்ளன. 1979–80ஆம் ஆண்டில் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவால் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் இவ்வாரியம் 1,000 விசைச் செக்குகளை தயாரிக்கும் பணியை டான்சியிடம் ஒப்படைத்துள்ளது. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவினால் வழங்கப்படும் நிதி உதவி விசை செக்குகள் உற்பத்தி செய்யவும் அவற்றை நிறுவுவதற்கும் போதுமானதாக இல்லை. எனவே, தமிழ்நாடு அரசு ஒருங்கிணைந்த கிராம வளர்ச்சித் திட்ட வட்டாரங்களில் விநியோகிக்கப்படும் ஒவ்வொரு செக்குக்கும் ரூ. 1,500 மான்யமாக அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது.

## 15. சிறப்புத் திட்டங்கள்.

1979–80 ஆம் ஆண்டில் கீழ் விவ்ரிக்கப்பட்டுள்ள திட்டங்களை அரசு இவ்வாரியத்திடம் ஒப்படைத்துள்ளது. இத்திட்டங்கள் வாரியத்தினால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

(i) பழங்குடியினர் மேம்பாட்டு திட்டங்கள்: நூறு பழங்குடியினருக்கு பிரம்பு, மூங்கில், தேனீ வளர்ப்பு தொழில்களில் பயிற்சி அளிக்கவும் அவர்களுக்கு தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்க தேனீ வளர்ப்பு வயலர் பதவியை ஏற்படுத்தவும் மேலும் 10 நபருக்கு கருமார் தொழிலுக்கு வேண்டிய கருவிகள் வழங்கவும் 1979–80–ல் தமிழ்நாடு அரசு ரூ. 1·85 லட்சம் அளித்தது. தேனீ வளர்ப்பில் பயிற்சி பெறுவோருக்கு தேனீப் பெட்டி மற்றும் அதைச் சார்ந்த உபகரணங்கள் வழங்கவும் ஒரு கட்டடம் கட்டவும் மேலும் ரூ. 2·70 லட்சம் 1980-1981ஆம் ஆண்டில் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(ii) மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

1979–80-ல், 150 மலைவாழ் மக்களுக்கு 1,500 தேனீப் பெட்டிகள் மற்றும் இதர கருவிகள் வழங்குவதற்காகவும், 50 நபர்கட்கு 50 தைலம் காய்ச்சி வழங்கும் கருவிகள் விநியோகிக்கவும் ரூ. 2·00 லட்சங்கள் ஒதுக்கியுள்ளது.

(iii) வறட்சிப்பாங்கான பகுதி திட்டங்கள் :

தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் கீழ்க்கண்ட வறட்சிப் பகுதிகள் மேம்பாட்டு திட்டத்தினை செயலாக்க 1979–80 ஆண்டிற்கு ரூ. 35·01 லட்சம் மான்யமாக அரசு அளித்துள்ளது:—

தருமபுரி மாவட்டம் —

| | | (ரூபாய் லட்சத்தில்.) |
|---|---|---|
| பனைமரம் மற்றும் பனை திட்டங்கள் | .. | 11·75 |
| பனை மற்றும் கோரைப்பாய் முதலிய தொழில்களில் வளர்ச்சித் திட்டங்களுக்கு. | | 2·55 |
| மொத்தம் | .. | 14·30 |

இராமநாதபுரம் மாவட்டம்—

| | | |
|---|---|---|
| பனைமரத் தொழிலாளர் நிவாரணத் திட்டம் | .. | 20.71 |
| மொத்தம் | .. | 35.0 |



(iv) கைவினைஞர்களுக்கு குறுகிய காலப் பயிற்சித் திட்டம்:

கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்த கிராமப்புற இளைஞர்களுக்கு பலவித கைத்தொழில்களிலும் குறைந்த கால பயிற்சி அளிக்கும் திட்டத்திற்கு 1979–80ஆம் ஆண்டு அரசு ஒப்புதல் அளித்தது. இத்திட்டத்தின் கீழ் 3,000 கைவினைஞர்களுக்கு வாரியத்தினால் நடத்தப்படும் தொழில்களில் பயிற்சி அளிக்க அரசு ரூ. 8·51 லட்சம் மான்யமாக அனுமதித்தது.

(v) கிராமப்புற கைவினைஞர்களுக்குப் பயிற்சித் திட்டம் :

கிராம கைவினைஞர்களின் தொழில் நுட்ப திறனை அவரவர் தொழிலில் மேற்கொண்டு பயிற்சியளிப்பதன் மூலம் அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கான திட்டத்தின் கீழ் சேலம், நெல்லை மாவட்டங்களிலுள்ள 320 கிராம கைவினைஞர்களுக்கும் பயிற்சி அளிப்பதற்காக ரூ. 1·64 லட்சத்தை வாரியத்திற்கு அரசு அளித்துள்ளது.

(vi) பெண் கைவினைஞர்களுக்கான பயிற்சித் திட்டம் :

சமூக நல திட்டத்தின் கீழ் 250 பெண் கைவினைஞர்களுக்கு மூன்று மாதங்கட்கு தருமபுரி மாவட்டத்தில் பனை ஓலை தயாரிப்பதில் பயிற்சி அளிக்க ரூ. 85,250 மானியமாக அரசு அளித்துள்ளது. பயிற்சிக்குப் பின் இந் நிலையங்கள் உற்பத்தி அலகுகளாக மாற்றப்படும்.

## 16. 1980–81 ஆண்டுக்கான திட்டங்கள்

(i) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் :

1980–81 ஆம் ஆண்டில் கதர் கிராமத் தொழிலின் கீழ்க்கண்ட ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி திட்டப்பணிகளை வாரியம் செயல்படுத்த உள்ளது.

| | (ரூபாய் லட்சம்.) |
|---|---|
| (a) பருத்தி துணியின் தரத்தினை ஆராயவும் வடிவமைப்புகள் தயாரிக்கவும் ஒரு கூடம் நிறுவ. | 2·64 |
| (b) எண்ணெய் மற்றும் சோப்பிற்கு ஒரு இராசயனச் சோதனைச்சாலை நிறுவ. | 0·59 |
| மொத்தம் .. | 3.23 |

**(ii) வாரியத்தின் தொழில் நுட்ப பிரிவினை பலப்படுத்துதல்:**

கைவினைஞர்கள், கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் துறைப் பிரிவுகளுக்கு தகுந்த தொழில் நுட்ப ஆலோசனை வழங்குவதற்காக வாரியத்தின் கீழ் இயங்கும் தொழில் நுட்ப ஆலோசனை பிரிவினை 1980–81 ஆம் ஆண்டில் ரூ. 2·75 இலட்சம் செலவில் பலப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 17. வாரியத்தின் நிதி நிலை.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அரசின் வரவு-செலவு திட்ட அமைப்பினை பின்பற்றி முறையே கதர் நிதி மற்றும் கிராமத் தொழில் நிதி என இரண்டு தலைப்பு கணக்குகளின் கீழ் தனது வரவு-செலவு திட்டங்களை தயாரிக்கிறது.

பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவும் இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி உதவி முறைகளின்படி பல வித திட்டங்களை அமுலாக்கி நடத்த நிதி உதவி அளிக்கிறது. வணிகமுறை அல்லாத இனங்களில் வரவுக்கும் செலவுக்கும் இடையே ஏற்படுகின்ற வித்தியாசத் தொகையினை தமிழக அரசு ஈடு செய்து உதவுகிறது. 1979–80ஆம் ஆண்டின் முடிவாக ஒப்புக் கொள்ளப்பட்ட திட்டங்களுக்காக கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு கீழ்க்கண்ட நிதிகளை ஒதுக்கீத் செய்துள்ளது:—

| (1) | மான்யம். (2) | கடன் (3) |
|---|---|---|
| | (ரூபாய் லட்சத்தில்.) | |
| 1. கதர் .. .. .. | 7.83 | 237.49 |
| 2. கிராமத் தொழில்கள் .. | 46.30 | 212.73 |
| 3. வங்கியின் நிதி உதவி .. | .. | 420.93 |
| மொத்தம் .. | 54.13 | 871.15 |

18. கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவின் நிதியுதவி தவிர, தமிழக அரசினால் வாரியத்திற்கு ஒப்படைக்கப்படும் சிறப்புத் திட்டங்களை செயல் படுத்த தமிழக அரசிடமிருந்துநிதி உதவி இவ்வாரியத்திற்கு கிடைக்கின்றது. தமிழக அரசால் ஒதுக்கப்பட்ட நிதி உதவிகளின், விவரம் வருமாறு:—



| தமிழக அரசிடமிருந்து கிடைக்கும் மானியம் (1) | 1979–80. (2) | 1990–81. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. நிகர செலவின மான்யம்:— | | |
| (i) கதர் நிதி .. .. | 32.69 | 32.45 |
| (ii) கிராமத் தொழில்கள் நிதி மான்யம். | 40.02 | 42·16 |
| (iii) தணிக்கை கட்டண மான்யம். | 12.50 | 12.50 |
| 2. கதர் விற்பனையில் தள்ளுபடி | 45.52 | 60.00 |
| 3. மற்ற சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்த. | 14.79 | 10.80 |
| | 145.52 | 157.91 |

### கோரிக்கை எண் 27 கதர் 1980–81.

### 321. கிராமக் கைத்தொழில்களும், சிறு தொழில்களும்.

**1. திட்டத்தில் சேராதவை:**

| | (ரூபாய்களில்) |
|---|---|
| AA. கதர் வளர்ச்சிக்கு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்—09. உதவி மானியங்கள் | 32,45 000 |
| AB. தணிக்கைக் கட்டணங்கள், செலுத்த தமிழ் நாடு கதர்கிராமத்தொழில்கள் வாரியத்துக்கு மானியங்கள் —09· உதவி மானியங்கள். | 12,50,000 |
| AD. கிராமத் தொழில் நிதிக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மானியங்கள்—09. உதவி மானியங்கள். | 42,16.000 |
| AF பதநீர் இறக்குவோர் துயர் தணிப்பு,மறுவாழ்வுக்காக, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்திற்கு மானியங்கள் 09. உதவி மானியங்கள். | 50,000 |

II. மாநிலத் திட்டம்:

தொழில்கள் வாரியத்திற்கு மானியங்கள்
09. உதவி மானியங்கள்.

| | | |
|---|---|---|
| JC. | கதர்த் துணி விற்பனை மீது தள்ளுபடி—<br>09. உதவி மான்யங்கள். | 60,00,000 |
| JF. | கதர் வளர்ச்சிக்கான புதிய திட்டங்கள்—<br>09. உதவி மானியங்கள். | 6,30,000 |
| AM. | பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம்— | |
| JA. | பழங்குடி மக்களுக்கு தேனீ வளர்க்கும் பெட்டிகள் வழங்குதல்—<br>01. சம்பளங்கள்: 09. உதவி மானியங்கள் | 3,00,000 |

III. மத்திய அரசு பொறுப்பேற்பவை:

| | | |
|---|---|---|
| SB. | நீலகிரி மாவட்டத்தில் தேனீ வளர்ப்பு மேம்பாட்டுக்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துக்கு மானியங்கள்—<br>09. உதவி மானியங்கள். | 75,000 |
| SC. | நீலகிரி மாவட்டத்தில் தைலங்கள் வடிக்கவும் தைலங்கள் வடிக்கும் இயந்திரங்களை வழங்கவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியத்துக்கு மானியங்கள்<br>09. உதவி மானியங்கள். | 25,000 |
| | மொத்தம் .. | 1, 57, 91, 000 |